அமீர் ஐதர் கான்

# தென் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் துவக்கம்

# தென் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் துவக்கம்

**அமீர் ஐதர் கான்**

*தமிழில்*

**அருணானந்த்**

கீழைக்காற்று வெளியீட்டகம்
10, ஔலியா சாகிபு தெரு
எல்லீசு சாலை, சென்னை-600 002.

**சென்னை புக்ஸ்**

Then Inthiyavil Communist Katchiyin Thuvakkam.
Ameer Hyder Khan.

First Published: May 1990.

Laser Composed at Chennai Media & Prints, Madras 2.
Printed at Jupiter Offset Press, Madras 2.

Published by
Chennai Books
6, Thayar Sahib II lane
Madras 600 002.

Rs. 12

தென் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் துவக்கம்
அமீர் ஐதர் கான்

முதல் பதிப்பு: மே 1990

லேசர் ஒளி அச்சுக்கோர்வை: சென்னை மீடியா & பிரிண்ட்ஸ் சென்னை 2.
அச்சு: ஜூப்பிடர் ஆஃப்செட் பிரஸ்.

வெளியீடு:
சென்னை புக்ஸ்
6, தாயார் சாகிப் 2வது சந்து
சென்னை 600 002.

ரு.12

# முன்னுரை

தோழர் அமீர் ஐதர் கான் அவர்களின் இந்த நினைவுக் குறிப்புகளை நமது வாசகர்களுக்கு அளிப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது, பெருமையாகவுமிருக்கிறது. தென் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பை ஏற்படுத்தி, அதை அகில இந்திய கட்சியின் கிளையாக உருப்பெறச் செய்த சாதனையும், பெருமையும், தியாகமும் தோழர் அமீர் ஐதர்கானையே சாரும். அவருடைய முதல் அறிமுகம் எனக்கு 1931 ம் வருடம் கிடைத்தது. பின்னர் 1934லிலும் அவரை இரண்டு முறை சந்தித்து, கட்சி அமைப்பு குறித்த விஷயங்களை விவாதித்து, எனக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை ஓரளவுக்கு நிறைவேற்ற முனைந்தேன், சிறைவாசம் அடக்கு முறைகள், இரண்டாம் உலகப்போர், நாட்டுப் பிரிவினை, நாட்டுச் சுதந்திரம், இந்திய – பாகிஸ்தான் நாடுகளின் தோற்றம்— இவற்றின் விளைவாக ஐதர்கான் பணியாற்றிய நாடும், அரங்கமும் வேறுபட்டதால், அவருடன் சேர்ந்து நாம் பணியாற்ற முடியாமல் போயிற்று. ஆனாலும், இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றிலே தோழர் அமீர் ஐதர்கான் நிர்வகித்த பாத்திரம் என்றுமே நினைவு கூரத்தக்கதாகவும், பின்பற்றக்கூடியதாகவும் இருக்கும். அவர் அந்த காலத்தில் கட்சியை அமைக்க செய்த சேவை ஈடிணையற்றது.

தோழர் அமீர் ஐதர்கான் தற்போது 83 வயதை எட்டி, பாகிஸ்தானிலுள்ள ராவல்பிண்டி பகுதியில் புரட்சி வாழ்க்கை வாழ்ந்து வருகிறார் என்பதறிந்து, அவருக்கு என் இதயங்கனிந்த புரட்சி வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

நவம்பர், 1983. பி.சுந்தரய்யா

## பின்னணி

தோழர் அமீர் ஐதர்கான் அவர்களின் நினைவுக் குறிப்புகள் உங்கள் முன் இருக்கிறது. ஆனால், இது அவர் தென் இந்தியாவில் — குறிப்பாக சென்னையில் கழித்த காலம் சம்பந்தப்பட்டது. அதற்கு முந்தைய அவரது வாழ்க்கைக் குறிப்புகள் நமக்குக் கிடைக்காதது வருந்தத்தக்கது. இன்றைய பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப் பகுதி எங்கே? சென்னை எங்கே, முஸ்லிமான அவர் 'சங்கர்' என்ற புனைப் பெயரில் சென்னையில் பிராமணராக வாழ்ந்தது சாதாரண விஷயமா? அதற்கு முன்பு எப்போதுமே வந்திராத புது இடத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு வித் தூன்றிய கம்யூனிஸ்ட் தலைவர் அவர்! சென்னை அடைவதற்கு முன்னர் அவர் எங்கே, எப்படி வாழ்ந்தார் என்பதைத் தெரிந்துகொள்ளும் பேராவல் எல்லோருக் கும் நிச்சயம் இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

அமீர் ஐதர்கான் சென்னையில் இருந்தபோது அவருக்கு வெளியேயும், சிறைக்குள்ளேயும் நெருங்கிய தோழராக இருந்தவர் 'பாஷ்யம்' என்னும் முதுபெ ரும் தோழர், அவரை நாங்கள் சென்னையில் சந்தித்தோம். அவர் இப்போது 75 வயதைத் தாண்டியவர், அவர் மூலம் ஐதர்கான் பற்றிய சில தகவல்களை திரட்டினோம். ஆனால் அவை விவரமானவையல்ல! இருந்தாலும் அவற்றைக் கூறும்போது பாஷ்யம் அவர்கள் அடைந்த உணர்ச்சிகள் எங்களை வியப்பிலாழ்த் தின. அவர் தந்த தகவல்களைக் கொண்டு அமீர் ஐதர்கானின் துவக்க கால வாழ்க்கையை உங்கள் முன் வைக்கிறோம்.

ஐதர்கான் 1900ம் ஆண்டு பாகிஸ்தானிலுள்ள பஞ்சாபை சேர்ந்த 'கலியன் ஸளியன்' எனும் கிராமத்தில் ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்தார். அவரது குழந்தைப் பருவம் பற்றி அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. சிறு வயதில் படிக்க வேண்டுமென்கிற ஆவல் அவருக்கு அதிகமாகவே இருந்தது. ஆனால் பள்ளிக்கூ டம் இருந்ததோ பத்து மைல் தொலைவில்! தினந்தோறும் அவ்வளவு தூரம் நடந்து சென்று வரவேண்டும். அவருடைய இளம் பாதங்கள் எவ்வளவு துவண்டு போயினவோ. இதே காலத்தில் அவருடைய அண்ணன் தேசிய இயக்க செல்வாக் கால் வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். தன் அண்ணனைத் தேடிக்கொண்டு அமீர் ஐதர்கான் பதினைந்து வயதில் பம்பாய் வந்து சேர்ந்தார். அப்போது அவரிடம் ஒரு சிறு பையும், சொற்பத் தொகை மட்டுமே இருந்தன, ஒரு சில நாட்கள் கெடாமல் இருக்கும்படியான சப்பாத்திகளை சுட்டு எடுத்துக்கொண்டு அவர் பம்பாய்க்கு புறப்பட்டார். பெருநகரான பம்பாய் மாநகரத்திலே அண்ண னைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமான காரியமா? இத்த னைக்கும் அவர் பம்பாய் வந்தாரோ இல்லையோ!

ஐதர்கானின் கையிலிருந்த காசெல்லாம் தீர்ந்துவிட்டது. சப்பாத்திகள் கூட ஊசிப்போய்விட்டன. அவர் பம்பாய் துறைமுகத்திற்கு சென்றார். அங்கே சரக்குக் கப்பலொன்று இரு நாட்களில் இங்கிலாந்து செல்லத் தயாராயிருந்தது. அக்கப்ப லுக்கு சாமான் சுமக்கும் சிறுவர்களின் நட்பை சம்பாதித்துக் கொண்டார் அமீர் ஐதர்கான்!

ஐதர்கான் மற்றவர்களை மிக விரைவாக நண்பர்களாக்கிக் கொண்டு விடு வார். "அவனைக் கடலிலே போட்டு விடப்பா! கடலிலே இருக்கும் மீன்களையும் அவன் கம்யூனிஸ்டுகளாக்கி விடுவான்" என்று தோழர் பாஷ்யம் கூறுகிறார். அவர் அந்த கூலிக்காரச் சிறுவர்களை எந்தளவுக்கு ஈர்த்தாரென்றால். அவர்கள் ஐதர்கானைத் தம்முடனே வந்துவிடும்படி அழைத்தனர்.

ஒரு மேஸ்திரியிடம் அச்சிறுவர்கள் கூலிகள். அந்த மேஸ்திரி கப்பல் முதலாளியிடம் பணம் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு பங்கு போட்டுத்தந்து கொண்டிருந்தார். அதனால் கூலிக்காரச் சிறுவர்களின் எண்ணிக்கை கச்சிதமா கத் தெரிந்திருந்ததது என்றாலும் அமீர் ஐதர்கான் அனுமதியின்றியே கப்பலே றிவிட்டார், இந்த விஷயத்தில் அந்தச் சிறுவர்கள் இவருக்கு உதவி புரிந்தனர். கப்பலுக்குள் ஏறிவிட்டாலும் அவர் சாப்பாடில்லாமல் பட்டினி கிடந்தார். அச்சிறுவர்களுக்குக் கிடைத்ததோ மிகவும் குறைவான சாப்பாடு! அவர்களை எப்படி சாப்பிடத் தரும்படி கேட்பார் ஐதர்கான்? பத்து நாள் தொடர்ந்து பட்டினி கிடந்து வாடி வதங்கிப் போய்விட்டார் அவர். கப்பலில் இருந்த ஒருவர் ஒரு நாள், 'இந்தப் பையன் நாளுக்கு நாள் ஏன் நசிந்து வருகிறான்?' என்று கேட்கப்

போய், உண்மை வெளிப்பட்டது. அவர் இந்தப் பையனுக்கும் கொஞ்சம் உணவு தரத் தொடங்கினார். கப்பல் நடுக்கடலில் இருக்கும்போது விஷயம் தெரிந்து வேறு வழியின்றி மேஸ்திரி ஐதர்கானையும் கூலிக்காரச் சிறுவனாக ஏற்றுக்கொண டார். அவருக்கு ஒரு நாளுக்கு ஆறணா (சுமார் 66 காசு) கூலி தந்தானர். அதில் ஓரணாவை பிச்சைக்காரர்களுக்குத் தர எடுத்து வைப்பார். ஐதர்கானின் சுறுசு றுப்பைக் கண்டு கப்பல் கேப்டனும், மற்றவர்களும் அவரை 'சுண்டெலி' என அழைத்தனர். அந்த மேஸ்திரி கப்பல் முதலாளியிடம் கூலிக்காரச் சிறுவர்களுக் குக்கொடுப்பதற்காக வாங்கும் பணத்தை முழுதும் அவர்களுக்குத் தருவதில்லை. அதிலே ஒரு சிறுவனுக்கு இரண்டரை (12 காசுகள்) வீதம் பிடித்துக் கொண்டு தந்து கொண்டிருந்தார். ஐதர்கான் இந்த அநியாயத்தை அந்த சிறுவர்களுக்கு எடுத்துக் கூறி அவர்களை ஒன்று திரட்டினார்.

கப்பல் இங்கிலாந்தில் ஒரு துறைமுகத்தில் நின்றது. கூலிக்காரச் சிறுவர்கள் எல்லோரும் ஐதர்கான் தலைமையில் வேலைநிறுத்தம் செய்யத் தயாரானார்கள். கப்பல் அங்கிருந்து புறப்படும்போது அச்சிறுவர்கள் கப்பல் ஏறாமல் கரையி லேயே நின்றுவிட்டார்கள். கப்பல் புறப்பட முடியவில்லை. கடைசியில் கப்பல் கேப்டன் வந்து 'என்ன விஷயம்?' எனக் கேட்டார். ஐதர் கானுக்கு ஆங்கிலம் வராது. அரைகுறை பட்லர் இங்கிலீஷில், 'மேஸ்திரி கப்பல் ஏறினால் நாங்கள் ஏறமாட்டோம். அவரில்லாவிட்டால்தான் ஏறுவோம்!' என்று கேப்டனுக்கு புரிய வைத்தார். அதன் பலன், மேஸ்திரி மாற்றப்பட்டார். கூலிக்காரச் சிறுவர் களுக்கு சேர வேண்டிய மீதிப்பணம் கிடைத்தது.

கேப்டனுக்கு ஐதர்கான் மீது தனிப்பற்று ஏற்பட்டது. அவர் அமீரைத் தன்னுடனே வைத்துக்கொண்டு கப்பல் செலுத்தும் நுணுக்கங்களையெல்லாம் கற்றுத் தந்தார். ஐதர்கானும் எல்லாவற்றையும் கற்றுக்கொண்டுவிட்டார்.

அக்கப்பலில் அமீர் அமெரிக்கா சென்றார். அமெரிக்கக் கரையில் இறங்கு வதற்கு முன் அவர் சிவப்பு கழுத்துப் பட்டை ('நெக்டை') அணிந்திருந்ததால், அனைவரும் அவரை 'போல்ஷிவிக்' என்றழைத்தனர். ஐதர்கான் அப்போதுதான் முதன் முதலாக 'போல்ஷ்விக்' என்னும் சொல்லைக் கேட்டார். கப்பலிலிருந்த ஒரு ஐரிஷ் மாலுமி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அரக்கத்தனம் பற்றி அமீருக்கு விவரித்தார். ஏற்கனவே அவரது உள்ளத்தில் உறங்கிக் கிடந்த பிரிட்டிஷ் ஏகாதி பத்திய எதிர்ப்புணர்வு இதனால் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. அமீர் அமெரிக்கக் கரையில் கப்பலிறங்கி ஊருக்குள் வந்தார். புதிய நாடு, புதிய மொழி, புதிய மக்கள்! அவர் அங்கே பத்திரிகைகள் விற்கும் சிறுவனாக வாழ்க்கையை ஆரம்பித்தார். அங்கே வாழ்ந்து வந்த ஒரு சீக்கியக் குடும்பத்துடன் அவருக்கு அறிமுகம் ஏற்பட்டது. அக்குடும்பத்தில் இருவரேதான் இருந்தனர் பாட்டியும் பேத்தியும்! அமீரின் நேர்மையும், சுறுசுறுப்பும் கண்டு மகிழ்ந்து அந்த மூதாட்டி அவருடைய விவரங்களைக் கேட்டறிந்து கொண்டார்.

அம்மூதாட்டி ஐதர்கானை பத்திரிகை போடும் வேலையிலிருந்து நிறுத்தி, மோட்டார் மெக்கானிஸம் கற்றுக்கொள்ள ஒரு பெரிய ஆட்டோமொபைல் தொழிற்சாலையிலே சேர்ப்பித்தார். அங்கே அமீர் ஓராண்டுக்குள்ளேயே தொழி லில் நிபுணரானார். ஆனாலும் அவருக்கு மனநிறைவு ஏற்படவில்லை. 'தரையில் ஓடும் இந்த மோட்டார்களை ஓட்டி என்ன லாபம்? ஆகாயத்தில் பறக்கும் விமா னங்களை அல்லவா ஓட்டவேண்டும்! என எண்ணி ஒரு சிறு விமான ஓட்டி களின் கிளப்பில் சேர்ந்து, மெள்ள சிறிய விமானங்கள் ஓட்டவும் கற்றுக்கொண்டார்.

ஒரு தடவை விமான ஓட்டிச் சிறுவர்களுக்கு ஒரு போட்டி நடத்தப்பட்டது. அதிலே அமீர் தன் சிறு விமானத்தை சிறப்பாக ஓட்டி பார்வையாளர்களின் 'சபாஷ்!' பெற்றார். அவருடைய திறமையை உணர்ந்த அந்த 'ஏவியேஷன் கிளப்' பைச் சேர்ந்தவர்கள் அவருக்கு சிறப்புப் பயிற்சி அளித் தனர். விளைவு, ஐதர்கான் 'பைலட்' ஆகிவிட்டார்.

1919ம் வருடம் அவர் நியூயார்க் நகரில் இருந்தபோது இந்திய சுதந்திரத்திற்கு வீரமாக போராடிய 'கெதர் கட்சி' யின் பிரதிநிதி பாய் ஜகத் சிங்குடன் அறிமுகமானார். முதலிலேயே அவர் 'சுண்டெலி!' சுறுசுறுப்புக்கு கேட்கவேண டுமா, அவர்தன் கப்பல் அனுபவத்தால் 'மெரின் இன்ஜினியரிங்' கில் டிப்ளமா பெற்று, 'எஸ், எஸ்' என்ற கப்பலில் சிறு அதிகாரியாக பணி புரிந்து கொண்டி ருந்தவர் அவ்வேலையை ராஜினாமா செய்து விட்டார்.

அமீர் ஜப்பான் தலைநகர் டோக்கியோ சென்று மற்றொரு இந்திய சுதந்தி ரப் போராட்ட வீரர் ராஸ் பிகாரி போஸைச் சந்தித்தார். அப்போதைக்கே அவர்

நல்ல பேரும் புகழும் அடைந்திருந்தார், ஐதர்கான் டோக்கியோவிலிருந்து திரும்பிவரும்போது ஹாங்காங்கில் ஒரு பிரிட்டிஷ் சி.ஐ.டி. அவரைக் கைது செய்தார். அமெரிக்க மாலுமிகளின் உதவியால் அவர் விடுதலை செய்யப்பட்டார், பிறகு அவர் நியூயார்க் சென்று பேகார்ட் மோட்டார் கார் தொழிற்சாலையில் வேலைக் கமர்ந்தார். அதில் வேலை செய்து கொண்டே அவர் விமானம் ஓட்டுவதில் இன்ஜினியர் டிப்ளமா பெற்று பைலட் ஆனார்.

அமீர் அமெரிக்கன் தொழிலாளர் கட்சியில் உறுப்பினராகி, அதன் சார்பில் மாஸ்கோவிலிருந்த கிழக்கத்திய பாட்டாளிப் பல்கலைக் கழகத்தில் 1926ல் சேர்ந்து அரசியலைப் பயின்றார்.

ஐதர்கான் அன்றைய சர்வதேச கம்யூனிஸ்ட் நிறுவனமான 'கோமின்டர்ன்' உடன் தொடர்பு கொண்டிருந்தார். அப்போது நடந்த விவாதத்தின் போது, 'கோமின்டர்'னில் பணியாற்றிக் கொண்டிருந்த லாஜிவிஸ்கி, "மாஸ்கோவில் இருந்து கொண்டு இந்தியப் புரட்சி செய்யலாமென நினைக்கிறாயா? அதை இந்தியாவிலேதான் ஏற்படுத்த வேண்டும்" என்று ஐதர்கானிடம் கூறினார்.

அதை உணர்ந்துகொண்ட, அவர் 1929ல் பம்பாய் திரும்பி வந்து 'ஜெனரல் மோட்டார்'ஸில் வேலைக்கமர்ந்தார். அங்கே அவருக்கு ஒரு நாள் சம்பளம் இரண்டரை ரூபாய். அது அவருக்கு மிக அதிகமாகப்பட்டது. தன் வயிறு வளர்க்க கால் ரூபாய் போதும். மீதிப் பணத்தையெல்லாம் அவர் கோடிக் கணக்கான ஏழைகளின் வயிற்றை நிரப்பும் பணியில் ஈடுபட்டிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் நிதிக்கு தந்து வந்தார். 1929ல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தொடுத்த மீரட் சதி வழக்கில் ஐதர்கானையும் ஒரு குற்றவாளியாக சேர்க்கப்பட்டாலும், அவர் கைதாகாமல் தப்பிவிட்டார்.

பம்பாயிலிருந்து தென் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதற்காக அவர் கட்சியின் சார்பாக அனுப்பப்பட்டார்.

பின்னர் அவர் அன்றைய இந்திய உப கண்டத்தில் பல வருடம் சிறைகளில் வாடினார். 1939ல் அவரை மீண்டும் பிரிட்டிஷ் அரசு கைது செய்து நாசிக் சிறையிலே அடைத்தது. 1942 ஜூலையிலே விடுதலையான அவர், 1945ல் தனது பிறப்பிடத்திற்கு அருகிலுள்ள ராவல்பிண்டி நகரை அடைந்து, அவர் உயிருள்ள வரை அங்கேயே வாழ்ந்தார்.

ஐதர்கானின் இந்த சுயசரிதையில் முதலிலேயே சுகாசினி' பெயர் வருகிறது. அவர் சென்னையிலிருந்த சீனிவாசன் அவர்களுக்கு அறிமுகக் கடிதம் பம்பாயிலிருந்து கொடுத்தனுப்பினார். அவர் கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் சகோதரி. அவர் அப்போது பம்பாய் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு முக்கிய ஊழியர். ஜெர்மனி வழியாக மாஸ்கோவுடன் கட்சியின் தொடர்பை நிர்வகிப்பது அவரது பணி!

அமீர் 1945ல் ராவல்பிண்டி சென்று, அங்கே தொழிலாளரிடையே சுறுசுறுப்பாக பணியாற்றத் துவங்கினார். ஆனால் 1948 — 61க்கு இடைப்பட்ட ஆண்டுகளில் அவர் சிறையிலோ அல்லது தலைமறைவாகவோ இருக்க நேரிட்டது. எதற்காக? தன் நாட்டு நலன்களுக்கு எதிராக செயல்பட்டதாலா? இல்லை! பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் கடுமையாக வெறுத்து, அவர் இயங்கியதன் விளைவுதான் அது! சுதந்திர பாகிஸ்தான் அரசு அவரை நடத்தியவிதம் அது!

(நமது நாட்டிலும் தோழர் மேஜர் ஜெய்பால் சிங்கும் இதே போல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்ததற்காகவே, அந்த ஏகாதிபத்தியத்தின் ராணுவத்திற்கு 'துரோகம்' இழைத்தற்க்காகவே சுதந்திர இந்திய அரசு கோலோச்சிய காலத்திலேயே பத்தாண்டு தலைமறைவு வாழ்க்கையும், ஓராண்டு சிறை வாழ்கையும் அனுபவிக்க நேர்ந்தது என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்)

இவ்வாறு எத்தனையோ வீரர்களும், தியாகச் செம்மல்களும், உறுதி குலையாத துணிவுடையோடும் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றத்திற்கு வழி வகுத்தனர். இன்று நாடு முழுவதும் கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பரவச்செய்ய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. லட்சக் கணக்கான இளைஞர்களையும், யுவதிகளையும் கம்யூனிஸத்தின் பால் ஈர்க்க வேண்டும். அது மட்டுமல்லாமல், அவர்களை அதன் வெற்றிக்காக பாடுபடும்படிச் செய்ய வேண்டும். அமீர் ஐதர்கான், மேஜர் ஜெய்பால் சிங் போன்ற தியாக மூர்த்திகளின் வாழ்க்கைகளைப் பின்பற்ற வேண்டும். அந்நோக்கத்திலேயே தென் இந்தியாவில் முதன் முதலில் செங்கொடியைப் பறக்க விட்ட அமீர் ஐதர்கானின் நினைவு குறிப்புகளை வாசகர்கள் முன் வைக்கிறோம்.

# நாட்டைத் துறந்து...

1929-ம் ஆண்டு, மார்ச் 20-ம் நாள் இந்தியா பூராவும் தேசபக்தர்கள் பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டார்கள், இது குறித்து பின்னால் சொல்கிறேன். இந்த அடக்குமுறைக்கு எதிராக உலக கம்யூனிஸ்ட் நிறுவனம் (கோமின்டார்ன்) மூலமாக சர்வ தேச ஆதரவு திரட்ட வேண்டிய அவசியம் இருந்தது. இதற்காக நான் கைதாகாமல் தப்பித்துக் கொள்ள வேண்டும். மாஸ்கோவில் எனது கடமைகளை நிறைவேற்றிய பிறகு பம்பாய் நலமாக வந்து சேர்ந்தேன், என்னை யாரும் அடையாளம் காணவில்லை. கம்யூனிஸ்டுகளுக்கெதிராக பிரிட்டிஷ் ஆட்சியாளர் தொடுத்த மீரட் சதி வழக்கில் கைதாகாமல் தலைமறைவாக திரிந்து கொண்டிருந்தேன்.

பம்பாயில் பரேல் ரோடு அருகே ' நகதாரா' என்ற பகுதி இருக்கிறது. அங்குதான் 'ஜே அண்ட் ஜே' மருத்துவ மனையும் இருந்தது. அதற்கருகே கம்பளங்களை சுத்தம் செய்யும், பழுது பார்க்கும் ஒரு கடை இருந்தது. அதை பெஷாவர் நகரைச் சேர்ந்த குலாம் ஜிலானி என்பவர் நடத்தி வந்தார்.

அந்த கடைக்கு சமீபத்திலேயே பஞ்சாபி படகுக்காரர்கள் சிலர் இருந்து வந்தார்கள். அவர்களில் மவுலா தாவூத் என்பவர் ஒரு ஜெர்மன் கப்பலில் சிறிய அதிகாரி. ஜிலானி மூலம் அவருடைய அறிமுகம் கிடைத்து நான் ஒரு கப்பலின் இஞ்சின் அறையிலே வேலையாளாக பணி

செய்தேன். தாவூத் எங்கள் ஊருக்குப் பக்கத்து ஊர்க்காரர்தான்! நான் 1915 ம் வருடத்திலிருந்து 1916 ம் வருட இறுதிவரை கப்பல்களில் 'ஸீமே னா'க வேலை செய்தேன், அப்போதே நான் தாவூதுடன் இரண்டு பிரிட் டிஷ் கப்பல்களில் பணியாற்றினேன்.

இந்த அறிமுகத்தைப் பயன்படுத்திக் கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் பி.ஸி.ஜோஷியை ஜெர்மனி யைச் சேர்ந்த ' ஹாம்பர்க்' நகருக்கு அழைத்துச் செல்லக் கோரினேன். அவரை தன் வேலைக்காரன் வேடத்தில் அழைத்துப் போகுமாறு தாவூ தைக் கோரினேன். இதற்கான திட்டம் தீட்டும் போது ஜிலானி என் பக்கத்திலேயே இருந்தார்.

அந்த ஏற்பாட்டின்படி, தோழர் ஜோஷி தன்னுடைய ' சூட்' டையும் மற்ற பொருட்களையும் ஜிலானியின் கடையில் பத்திரப்படுத்த வேண்டும். அன்றிரவு தாவுத் வந்து தோழர் ஜோஷியைக் கப்பலுக்குள் அழைத்துச் செல்ல வேண்டும். இத்திட்டம் முழுவதையும் ஜிலானி சி.ஐ.டி. இன்ஸ் பெக்டர் சவுத்திரிக்கு சொல்லிவிட்டார். என்னைப் பற்றி ஜலாம் ரசூல் மூலமாக தெரிந்து கொண்டதும் இந்த இன்ஸ்பெக்டர் சவுத்திரியேதான்! அவ்வாறு, தெரிந்து கொண்ட பிறகுதான் என்னையும் 'மீரட் சதி வழக்கில்' ஒரு குற்றவாளியாக சேர்த்துவிட்டார்கள். செய்தி அறிந்த இன்ஸ்பெக்டர் சவுத்திரி தோழர் ஜோஷியைக் கைது செய்ய எல்லா ஏற்பாடுகளும் செய்து வைத்துக்கொண்டார். தாவூத் மூலமாக அனுப்ப ஹாம்பர்க் தோழர்களுக்கு நான் ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தேன். ஹாம்பர்க் தோழர்கள் அதை மாஸ்கோவிலுள்ள ' கோமின்டார்' னுக்கு சேர்ப்பிக்க வேண்டும். இந்த சங்கதியும் சவுத்திரிக்குத் தெரியும். அக்கடிதத்தை தாவூதிடமிருந்து பறித்துக் கொள்ளவும் அவர் முனைந்தார். அவர் இர வோடு இரவாக தனது ஆட்களை வெள்ளை உடைகளில் கப்பலுக்கு அனுப்பி வைத்தார். தாவூத் இதை உணர்ந்ததும் தோழர் ஜோஷியை அழைத்துப் போக ஜிலானியின் கடைக்கு வரவில்லை.

மறுநாள் காலை நான் ஜிலானியின் கடைக்கு எனது நண்பர், மிஸ் ராவை அனுப்பினேன். நான் அருகிலிருந்த ஒரு இராணி தேனீர்க் கடை யிலேயே உட்கார்ந்திருந்தேன். சிறிது நேரத்திலே அவர்களிருவரும் அங்கே வந்தார்கள். நான் ஜிலானியை விசாரித்தேன். அவர் ஏதோ கற்பனைக் கதை கூறவாரம்பித்தார். எனக்கு அவர் மேல் சந்தேகம் தோன்றியது. தாவூத் பணியாற்றிய கப்பல் அலெக்சான்டிரியா துறையில் நங்கூரம் பாய்ச்சி நின்றிருந்தது. நானும், மிஸ்ராவும் அங்கே விரைந் தோம், நான் அங்கிருந்த ஒரு கிடங்கின் பின்னால் மறைந்துக்கொண்டு மிஸ்ராவை கப்பலுக்குள் அனுப்பினேன்.

தோழர் ஜோஷி கப்பலருகே வந்ததும் தாவூத் வர வேண்டாமென்று சைகை செய்யவே, அவர் ' டாக்லாக்' பக்கம் ஓடிச்சென்று துறைமுகத்தி லிருந்து வெளியேறி விட்டார். நாங்களிருவரும் தோழர் ஜோஷியை சந்திக்க அங்கிருந்து உடனே புறப்பட்டோம்.

தோழர் ஜோஷியை சந்தித்தோம். நடந்ததற்கு வருந்த வேண்டாமென் றும் எனக்குப் பலரும் தெரியுமாதலால் மீண்டுமொரு முறை முயற்சிப் போம் என்றோம். நாங்கள் அங்கே பேசிக் கொண்டிருந்தபோதே பம் பாய் துணை போலீஸ் கமிஷனர் வில்ஸன் அங்கே வந்தார். தோழர் ஜோஷியை அசைய வேண்டாமென எச்சரித்தார். எங்கள் மூவரையும் 'வேர் அவுஸ்' அலுவலகத்துக்கு கொண்டு சென்றார். தோழர் ஜோஷியை சோதனையிடுமாறு அவர் கஸ்டம் அதிகாரிகளுக்கு ஆணை

யிட்டார். தோழர் ஜோஷியிடம் 'கோமின்டார்னு' க்கு தோழர் டாங்கே எழுதிய கடிதமொன்று கிடைத்தது. ஆனால் என்னையும், மிஸ்ராவை யும் சோதனையிடவில்லை. எங்களை ஒரு கேள்விகூட கேட்கவில்லை அக்கடிதத்தைப் பறிமுதல் செய்து கொண்டு எங்களை விட்டு விட்டார் கள்.

நாங்கள் ' வேர் அவுஸ்' அலுவலகத்திலிருந்து வெளியே வந்தோம். போலீஸார் ஏதோ பெரிய திட்டம் வைத்துக் கொண்டே எங்களை விட்டுவிட்டார்களென்று கருதினோம். உடனே இவ்விஷயத்தை டாக்டர் சாரிக்கு தெரியப்படுத்த மிஸ்ராவை அனுப்பினேன். டாக்டர் சாரி இந்த செய்தியை மாஸ்கோவிலுள்ள கோமின்டார்னுக்குத் தெரிவிப்பார். அத னால் போதிய முன்னெச்சரிக்கையுடன் இருக்கலாம். நடந்த விஷயத்தை பொறுப்புள்ள மற்ற கட்சித் தோழர்களுக்கும் தெரிவித்து எச்சரிக்கையாக இருக்கச் சொல்லி அனுப்பினோம்.

அன்றைய நிலைமை எனக்கு சரியாகப் புரியவில்லை. அதனால் தான் நான் ஜிலானியின் கடைக்கு சென்றேன். மீரட் சதி வழக்கில் அரசுக்கெட்டாத ஒரு அம்சம் உண்டு. அது நான்தான்! நான் அவர்க ளுக்குக் கிடைக்காததால், என்னைப் பற்றி தெரியாததால் அவர்கள் இருட்டில் தடுமாறிக் கொண்டிருந்தனர். இந்தியாவில் சட்டபூர்வமாக ஏற்பட்டுள்ள அரசாங்கத்தை ஒரு அந்நிய நாட்டுடன் சேர்ந்து நாங்கள் சதி செய்கிறோமென்பது மீரட் சதி வழக்கில் எங்கள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டாகும்.

பம்பாய் மதன்புராவிலிருந்த எனது அறையின் மேல் போலீஸார் படையெடுத்தனர். அங்கிருந்து அவர்கள் மொத்தம் 109 பொருட்களைப் பறிமுதல் செய்தனர். அவைகளில் கோமின்டார்ன் கடிதங்கள் சிலவும், சோஷலிஸம் சம்பந்தப்பட்ட சில புத்தகங்களும் இருந்தன. காரல் வில் லியமிடமிருந்து வந்த ஒரு ரகசியக் கடிதம்கூட இருந்தது. ஆனால் அது கண்ணுக்குப்புலப்படாத மையினால் 'டைப்' செய்யப்பட்டிருந்தது. தந் திச் செய்திகள் அனுப்பும்போது பயன்படுத்த வேண்டிய மொழியைக் குறித்த புத்தகமொன்றும் அவைகளிலே இருந்தது.

(காரல் வில்லியம் ஹாம்பர்க் நகரில் கோமின்டார்ன் பிரதிநிதி. அப்போது இந்தியாவுக்கும், ஜெர்மனித் துறைமுகங்களுக்குமிடையே 'ஹாகன் ஸோயர் லைன்' என்ற கம்பெனி கப்பல் போக்குவரத்தை நடத்திக் கொண்டிருந்தது. அதில் ஏதாவதொரு வேலையைப் பெற்றால் இந்திய மாணவர்களை ஜெர்மனிக்கும், அங்கிருந்து மாஸ்கோவிற்கும் அனுப்பி வைக்கலாமென்னும் திட்டம் காரல் வில்லியமின் திட்டம்தான்.)

போலீஸார் என்னைக் கைது செய்யவில்லை. என்னைவிட பெரிய புள்ளியை சிக்க வைக்க அவர்கள் விரும்புகின்றனர் என்று தோன்றியது. அப்போது பம்பாயில் கோமின்டார்ன் பிரதிநிதியாக ஒருவரும், அவரு டைய மனைவியும் இருந்தனர். அவர்களிருவரும் ரஷியர்களே! குலாம் ஜிலானிக்கு இந்த அறிமுகங்களெல்லாம் தெரியும். பம்பாயில் நான் தலைமறைவாக இருக்கும் இடங்கள் அனைத்தும் தெரியும். நான் அவ ரிடம் அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தேன்.

அந்த காலத்தில் ஜெர்மானிய கப்பல் மாலுமிகள் தடை செய்யப் பட்ட புத்தகங்களையும், கடிதங்களையும் கட்டு கட்டாக எங்களுக்கு கொண்டு வந்து சேர்ப்பித்து வந்தனர். அவர்கள் டாக்டர் சாரியின் முகவரியைக் கேட்பார்கள். அவர்களை டாக்டர் சாரியிடம் கூட்டிப் போவது ஜிலானி தான்: என்னுடைய செயல்களெல்லாம் ஜிலானிக்கு

நன்கு தெரியும். எனது பெயர் போலீஸாரின் கவனத்திலிருப்பது எனக்குத் தெரியுமென்றாலும், என்னைப் பற்றி போலீஸாருக்கு யார் தகவல் தெரிவிக்கின்றனர் என்பது தெரியாது. நானும் எவரையும் சந்தேகிக்கவும் இல்லை.

நான் கால்நடையாகவே ஜிலானியின் கடைக்கு சென்றேன். அவரது தம்பியின் இருப்பிடம் விசாரித்தேன். அவர் பொரைட் சாலையில் ஒரு வீட்டின் மூன்றாவது மாடியில் இருந்து வந்தார். நான் அங்கு போய்ச் சேர்ந்தேன் அது ரம்ஜான் மாதம். ஜிலானியின் தம்பி ஜன்னல் திரைகளையும் மூடி உறங்கிக் கொண்டிருந்தார்.

ரம்ஜான் மாதத்து உண்ணா நோன்புக்குப் பிறகு 'அஃப் தாஹி' உணவருந்த ஜிலானியின் கடையில் வேலை செய்வோர் இருவரும்கூட அங்கு வந்தனர். ஜிலானிக்கும், அவருடைய தம்பிக்கும் அப்போது உறவு சரியாக இல்லாததால், அவர் சாதாரணமாக தம்பியின் இருப்பிடத்திற்கு வருவதில்லை. ஆனால், அன்று வந்தார். அன்றிரவெல்லாம் அங்கேயே தங்கி இருந்து மறுநாள் காலை கடைக்குப் போகும்போது வேலையாட்களையும் தன்னுடன் வருமாறு அழைத்தார். அவர்கள், "நீங்கள் போங்கள்! நாங்கள் பின்னாலேயே வருகிறோம்" என்று சொல்லி அவரை அனுப்பிவிட்டனர். ஜிலானி அங்கிருந்து கிளம்பியதுமே அவருடைய வேலையாட்கள் ஜிலானிக்கு சி.ஐ.டி.களுடன் தொடர்பிருக்கிறதென்கிற அதிர்ச்சியளிக்கும் செய்தியை எனக்குத் தெரிவித்தனர். ஜிலானி அடிக்கடி சந்தித்துப் பேசும் சி.ஐ.டி.யின் அங்க அடையாளங்களை அவர்கள் வர்ணித்தது சி.ஐ.டி இன்ஸ்பெக்டர் சவுத்திரிக்கு சரியாகப் பொருந்தியது. சவுத்திரி ரோடில் தென்பட்டதுமே, ஜிலானி கடையை விட்டு தூரமாகச் சென்று சவுத்திரியுடன் நீண்ட நேரம் பேசிவிட்டு வருவாராம்!

தோழர் பி.ஸி.ஜோஷியை ஹாம்பர்க் அனுப்ப திட்டம் வகுக்கப்பட்ட நாளன்றும் சவுத்திரி அந்தக் கடையின் முன்னால் சென்றார். உடனே ஜிலானியும் கடையிலிருந்து புறப்பட்டுப் போய் நீண்ட நேரத்துக்குப்பின் திரும்பி வந்த விஷயம் எனக்கு ஞாபகம் வந்தது.

அதற்கு முன்புகூட ஒருமுறை ஜெர்மானிய கப்பல் மாலுமிகள் தந்த புத்தகக் கட்டை ஜிலானி எனக்கு தாமதமாக தந்தார். காரணம் கேட்டபோது ஏதோ கட்டுக்கதையொன்றை சொன்னார். தான் புத்தகக் கட்டுடன் டாக்ஸியில் வந்துகொண்டிருந்தபோது, போலீஸார் துரத்தி வந்ததாகவும், அவர்களிடமிருந்து தப்பிக்க டாக்ஸியிலிருந்து குதித்து ஓடிப் போய்விட்டதாகவும், பின்னர் டாக்ஸிக்காரரர் தன்னைத் தேடி வந்து புத்தகக் கட்டை ஒப்படைத்ததாகவும் என்னிடம் கதை அளந்தார். ஆனால், ஜிலானியே அதை சி.ஐ.டி அதிகாரிக்கு தந்திருக்கலாம். புத்தகக்கட்டு அங்கிருந்து திரும்பி வர தாமதமாயிருக்கலாம்.

ஜிலானியின் வேலையாட்கள் மூலம் எனக்கேற்பட்ட கருத்து இது! ஜிலானி துரோகியாக மாறிவிட்டார் என்பதில் எனக்கு ஐயமிருக்கவில்லை.

என்னுடைய பயணப்பை எப்போதும் தயாராக இருக்கும். அதில் ஐரோப்பியர் அணியும் 'சூட்' ஒன்றும், பயணப் பத்திரங்கள் சிலவும், கொஞ்சம் பணமும் இருக்கும். அந்தப் பையை உடனே அனுப்பி வைக்குமாறும் இப்போது தப்பித்துக்கொள்ளா விட்டால் பின் எப்போதுமே தப்பிச் செல்ல முடியாதென்றும் மிஸ்ராவுக்குக் கடிதம் எழுதி ஒரு வேலையாளிடம் கொடுத்தனுப்பினேன்.

ஒரு மணி நேரத்தில் எனது பயணப் பையை எடுத்து கொண்டு

மிஸ்ரா வந்து சேர்ந்தார். அவருக்கு நிலைமையை விளக்கினேன். நான் உடனே இங்கிருந்து சென்றுவிட வேண்டிய அவசியத்தை விவரித்தேன். ஜிலானிக்கு சந்தேகம் ஏற்படா வண்ணம் புறப்பட்டு விட வேண்டும். எனக்குக் காவலாக ஒரு சி.ஐ.டி இருந்தார். அவர் மாடிப் படிக்கட்டுகளில் தூங்கிக் கொண்டிருந்தார். நான் என் செருப்புகளைக் கழற்றி ஒரு கையிலே பிடித்துக்கொண்டு ஓசை செய்யாமல் பையுடன் மாடிப்படிகளில் இறங்கி வந்தேன். அங்கிருந்து 'நவ்யாரா' வரை நடந்தேன். அங்கிருந்து மஜகாவுக்கு ஒரு டாக்ஸியை அமர்த்திக் கொண்டேன். அங்கே ஒரு இராணி தேனீர்க் கடையிலே காலங்கழித்தேன். மறுநாள் கோவாவுக்கு செல்லும் ஒரு சிறு கப்பல் புறப்படும் இடத்திற்கு போய்ச் சேர்ந்தேன். இவ்வாறு ஜிலானி மூலம் சி.ஐ.டி..கள் வீசிய வலையிலிருந்து தற்காலிகமாவது தப்பித்துக் கொண்டேன்.

அடுத்த நாள் காலை நான் பறந்து போன விஷயம் சி.ஐ.டி.களுக்குத் தெரிய வந்தது. கோவாவில் எனக்குத் தெரிந்தவர்களின் விவரம் ஜிலானிக்கும் தெரியும், அவரே அதைப் பற்றி சி.ஐ.டி.களுக்குத் தெரிவித்திருக்கலாம்.

அந்த காலத்தில் கோவாவின் தலைமை நிர்வாக அலுவலகம் ' நவகா' வில் இருந்து வந்தது. மறுநாள் காலை ஒரு நாட்டுப் படகில் நான் ' பாஞ்சிம்' போய்ச் சேர்ந்தேன் அங்கிருந்து நான் செல்ல வேண்டிய இடம் எனக்கு நன்றாகத் தெரியும். பாஞ்சிம்-மர்மகோவாவுக்கிடையே பயணிகளின் படகுகள் போக்குவரத்து நடந்து வந்தது. மர்மகோவாவிலிருந்து பிரிட்டிஷ் இந்தியாவுக்கு அகல ரயில் பாதையும் இருந்தது. நான் அங்கு சென்று ஏதோ ஒரு கப்பலில் ஏறி மாஸ்கோ போய்ச் சேர வேண்டும். ஜிலானி செய்த துரோகம் பற்றி 'கோமின்டார்னைச்' சேர்ந்தவர்களுக்குத் தெரிவித்து, அவருடன் வேறுயாரும் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாதென்று எச்சரிக்க வேண்டும். இதை நான் உடனடியாக செய்தாக வேண்டும்.

நான் ஒரு படகில் 'பாஞ்சிம்' அடைந்தபோது இரு சி.ஐ.டிகள் அதே படகில் ஏறினார்கள். நான் கருப்புக் கண்ணாடியும், தொப்பியும் அணிந்து என் முகத்தை மறைத்துக் கொண்டேன். நான் ஒரு மத்தியதர கோவாவாசி போல் காணப்பட்டேன். என் கையில் ஒரு போர்த்துக்கீசிய மொழி செய்தித்தாள் இருந்தது. இதனால் அவர்கள் என்னை அடையாளம் கண்டுக்கொள்ளவில்லை. சி.ஐ.டி. அதிகாரிகளிருவரும் என் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டனர். அவர்கள் என்னை கோவாவைச் சேர்ந்தவனா? என்று விசாரித்தனர். 'ஆம்' என்றேன். 'என்ன தொழில் செய்கிறீர்கள்?' என்று கேட்டனர் 'வியாபாரம்' என்றேன் ' நீங்கள் கோவாவுக்கு முதல் முறை வருகிறீர்களா? என்று வினவினேன். 'ஆமாம்' என்றனர் அவர்கள். 'ஏன் இங்கே வந்தீர்கள்?' என்று நான் கேட்க, கோவாவில் உள்ள பிரிட்டிஷ் துணைத் தூதுவருக்கு ஒரு கடிதம் கொண்டு வந்து தந்ததாகவும், 'பாஞ்சி'மில் ஒரு தகவலை விசாரிக்க சென்று கொண்டிருப்பதாகவும் அவர்கள் கூறினார்கள்.

கையில் பணத்தை எடுத்துத் தயாராக வைத்துக் கொண்டேன் சேர வேண்டிய இடத்தை அடைந்ததுமே படகுக்காரனுக்கு பணத்தை செலுத்திவிட்டு, 'ஜட்டி'க்கருகே விரைந்து சென்று, ஒரு டாக்ஸியில் ஏறி ஊருக்குள் போனேன். என்னுடைய தங்குமிடம் யாருக்கும் தெரியாமலிருக்க முன்னதாகவே டாக்ஸியிலிருந்து இறங்கி நடந்தேன். அன்றிரவு நன்றாக உறங்கினேன்.

அடுத்த நாள் காலை என் பயணப் பையை எடுத்துக்கொண்டு துறைமுகத்தில் ஜனநடமாட்டமில்லாத இடத்தை அடைந்தேன். அங்கே தண்ணீர் இல்லை. நிறைய சகதி இருந்தது. பக்கத்திலிருந்த படகுக்கார னைக் கூவி அழைத்தேன். அவன் என்னைத் தன் முதுகிலே ஏற்றிக் கொண்டு சகதியைத் தாண்ட வைத்தான். நான் 'சூட்' டும் 'பூட்' டும் போட்டுக் கொண்டேன். வழியில் தென்பட்டவர்களைக் கேட்டு ரயில் நிலையத்திற்கு போய்ச் சேர்ந்து, சென்னைக்கு மூன்றாம் வகுப்பு டிக்கெட் டொன்று வாங்கிக் கொண்டேன். ரயிலில் கோவாவைச் சேர்ந்த ஒருவர் அறிமுகமானார். அவர் கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள போர்த்துகீசிய காலனி நாட்டுக்குச் செல்ல, சென்னைத் துறைமுகத்தில் கப்பலேற வந்து கொண்டிருந்தார். அவர் கப்பலுக்காகக் காத்திருக்கும் நேரத்தில் சென் னையில் எங்கே தங்கப் போகிறாரென்று கேட்டுத் தெரிந்துக் கொண் டேன். சென்னை செண்டிரல் ரயிலடிக்கருகே கோவாக்காரர் நடத்தும் ஓட்டலொன்றில் தங்கப்போவதாக அவர் சொன்னார். சென்னை போய்ச் சேர்ந்த பிறகு நானும் அவருடனேயே கோவாக்காரரின் ஓட்ட லில் தங்கினேன். பிரெஞ்சு இந்தோ சீனா கப்பல் வழியில் பயணம் செய்யும் ஒரு கப்பலின் 'டெக்'கில் பிரயாணம் செய்வதற்கு எனக்கு டிக்கட் கிடைத்தது. அந்த டிக்கட் பயணத்திறகு மட்டுமேயாகும். கப்பலில் உணவு பரிமாறப்படமாட்டாது. எப்படியோ, இந்தியாவிலிருந்து தப்பித் துப் போக எனக்கு ஒரு வழி கிடைத்தது. கப்பல் வந்தது. நான் என் பையை 'டெக்' கில் முன் பகுதியில் வைத்து விட்டு, 'பர்ஸரி' டம் என் டிக்கட்டைத் தரச் சென்றேன். 'பர்ஸர்' தான் கப்பல் அதிகாரி. அவர் டிக்கட் பெற்றுக் கொண்டு ' இனி போகலாம்' என்று அலட்சியமாக சைகை காட்டினார். அப்போது அவரருகே குள்ளமாக ஒற்றை நாடிப் பேர்வழி ஒருவர் இருந்தார். அவர் மூன்றாம் வகுப்பு ' கேபின்' பயணி, அதே கப்பலில் கவிஞர் ரவீந்திர நாத் தாகூரும் பயணம் செய்துக் கொண்டிருந்தார். அவரது குழுவில் பேராசிரியர் சக்ரவர்த்தியும், அவ ரது டேனிஷ் மனைவியும்கூட இருந்தார்கள், அப்போது தாகூர் உடல் நலமில்லாமலிருந்ததால், அவர் பெரும்பாலும் கப்பலின் முன் பகுதியில் ' பிரிட்ஜ் டெக்'கின் கீழே நாற்காலியில் சாய்ந்திருந்தார், அவருடைய செயலாளர் அடிக்கடி தாகூருடன் பேச மேலே செல்லும் போதெல்லாம் 'டெக்'கிலுள்ள எங்களைப் பார்த்துக் கொண்டே போவார். அவர் ஆபோர்ட் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. படித்தவர். ஒரு நாள் அவர் சற்று நேரம் எங்கள் முன் நின்றார். நான் அவரைக் கண்டு கொள்ளவில்லை. அவரே என்னருகில் வந்து," உங்களுக்கு ஆங்கிலம் தெரியுமா?" என்று கேட்டார் கொஞ்சம் கொஞ்சம் வரும் என்றேன், "வியாபார விஷயமாக பிரயாணம் செய்கிறீர்களா?" என்று மீண்டும் வினவினார். 'ஆமாம்' என்று சுருக்கமாக பதிலளித்தேன். அப்போதைக்கு அவர் மவுனமா கச் சென்றுவிட்டாலும், என்னைப் பற்றி அவருக்கு ஐயம் தோன்றி விட்டது. எங்கள் கப்பல் கொலம்பியாவைக் கடந்துவிட்டது. இப் போது பிரிட்டிஷாரின் அதிகாரம் செல்லுபடியாகாத பகுதியில் சென் றுக் கொண்டிருந்தது. அன்று 'பர்ஸர்' அலுவலகத்தில் நான் கண்ட அந்த நோஞ்சான் ஆசாமியும் ஒரு நாளிரவு என்னிடம் வந்தார். அவ ருக்கும் என் மேல் சந்தேகம். ' அவர் தன்னைத்தானே அறிமுகம் செய்து கொண்டார். அவர் தன் பெயர் 'லால்' என்றும், லாகூரில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்தவரென்றும், ஏதோ ஒரு ஜெர்மன் பல்கலைக் கழகத் தில் பொருளாதாரத்தில் 'டாக்டர்' பட்டம் பெற்றவரென்றும் கூறினார்.

உலகப் போருக்குப் பிந்தைய ஜெர்மனியின் பொருளாதாரசமூக நிலைமையை ஆராய்வதாகவும் சொன்னார். கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் சகோதரர் வீரேந்திர நாத் சட்டோபாத்யாயாவைத் தனக்கு தெரியுமென்றும் கூறிக் கொண்டார். ஆப்கான் 'பாஸ்போர்ட்' வைத்துக் கொண்டு வெளிநாடுகளில் பயணம் செய்துக்கொண்டிருந்த சுதந்திரப் போராட்ட வீரர் ராஜா மகேந்திர பிரதாப்பும் தனக்குத் தெரியுமென்றார். நானும் மகேந்திர பிரதாப்பை மாஸ்கோவில் இருமுறை சந்தித்தேன். அவரைப் பற்றிய வேடிக்கைக் கதைகள் பலவற்றை லால் கூறினார். எனக்கும் அப்படிப்பட்டவை சில தெரியும்.

தன்னிடம் நல்ல பிரதி எடுக்கும் 'சைக்ளோ ஸ்டைல்' இயந்திரம் உள்ளதாக லால் தெரிவித்தார். பகத்சிங்கின் 'நவஜவான் பாரத் சபா'வின் துண்டுப் பிரசுரங்களையெல்லாம் அதிலேயே பிரதிகள் எடுத்ததாகவும் அவர் சொன்னார். ஆனால் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் கைது செய்யப்பட்ட பிறகு தப்பித்து வர வேண்டியதாகிவிட்டது என்றும் அவர் கூறினார். அவர் சென்னை வந்து தன்னிடமிருந்த பணத்தையெல்லாம் போட்டு வெர்ஸெயில்ஸுக்கு ஒரு மூன்றாம் வகுப்பு கப்பல் டிக்கட் வாங்கிக் கொண்டாராம். வெர்ஸெயில்ஸுக்கு எப்படிப் போவதோ, அங்கே எங்கே தங்குவதோ, என்ன செய்வதோ – ஒன்றுமே புரியவில்லை என்று அங்கலாய்த்துக் கொண்டார் லால். வெர்ஸெயில்ஸிலிருந்து ஹாம்பர்குக்கு டிக்கட் வாங்கித் தருவதாக நான் அவருக்கு வாக்குறுதி அளித்துவிட்டேன். என்னிடமும் அதிகமாகப் பணமொன்றும் இல்லை. அவர் ஒரு கம்யூனிஸ்டும் அல்ல. அவருடன் எனக்கு முந்தைய அறிமுகமும் இல்லை. ஆனாலும் அவருக்கு உதவிடத் தயாரானேன். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராடும் எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டுமென்பது என் எண்ணம். இந்தியச் சிறைச்சாலைகளில் நான் இருந்தவரை மற்ற அரசியல் கைதிகளுக்கும் வசதிகள் செய்துத் தர வேண்டுமென சிறை அதிகாரிகளை எதிர்த்து நான் தீவிரமாகப் போராட்டம் நடத்தியிருக்கிறேன். ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரர்களுக்கு – அவர்கள் எந்த கட்சியையும், குழுவையும் சேர்ந்தவர்களாயினும் – ஒத்துழைப்பு தர வேண்டியது கடமையாகக் கருதியிருந்தேன்.

ஒவ்வொரு இரவும் லால் நான் இருந்த பகுதிக்கு வந்தார். நாங்களிருவரும் இந்திய சுதந்திரப் போராட்டம் பற்றி விவாதித்தோம். உலக கம்யூனிஸ்ட் நிறுவனம் – கோமின்டார்ன்–பற்றியும் பேசுவோம். 'டெக்' பயணிகளில் சிலர் பாண்டிச்சேரியைச் சேர்ந்தவர்கள். சிலர் 'ஜபோதி'க்காரர்கள். அவ்விரண்டும் அப்போது பிரெஞ்சு காலனிப் பகுதிகள். பயணிகளில் ஒரு சீக்கியருமிருந்தார். அவர் பிரேசில் நாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார். படிப்பும், நாகரீகமும் அதிகமில்லாத இந்த சாதாரண மக்களிடம் நான் மிக அன்பாக நடந்துக் கொண்டேன். அவர்களுக்கு என் மேல் எவ்வித சந்தேகமும் ஏற்படாமல் பார்த்துக் கொண்டேன். கப்பல் சூயஸ் கால்வாயைக் கடந்தது. பயங்கரமான குளிர் காற்று வீசத் தொடங்கியது. 1930ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் கடலும் மிகவும் கொந்தளிப்பாக இருந்தது. கப்பலின் மேற்பகுதியான 'டெக்'கில் எங்களால் இருக்கவே முடியவில்லை. கப்பலின் முன் பகுதியில் உலோகத் தகடுகளால் அமைக்கப்பட்ட சிறு சிறு அறைகள் இருந்தன. அவை பிரெஞ்சு ஏகாதிபத்தியப் படைகளைக் கொண்டு செல்வதற்காக கட்டப்பட்டவையாகும். திருப்புப் பயணத்தில் அவை காலியாக வந்துக் கொண்

டிருந்தன. அன்றிரவு புயலும் வீச இருந்தது. அப்போது பயங்கரமான கடலலை வீச்சில் 'டெக்' தெப்பமாக நனைந்துவிடும். ஆகவே 'டெக்'கில் பயணிகள் இருப்பது அபாயகரமானதாகும். நான் உடனே 'டெக்' பயணிகள் அனைவரையும் ஓரிடத்தில் கூட்டினேன். ஆங்கிலம், அரபி, பிரெஞ்சு மொழிச் சொற்களைப் பயன்படுத்தினேன். சைகைகள் செய்து நடித்துக் காட்டினேன். எப்படியோ, ஒருவாறாக அன்றிரவு நாங்கள் எதிர்க்கொள்ள வேண்டிய அபாயத்தை புரியவைத்தேன். நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து கப்பலின் பிரதான அதிகாரியைச் சந்தித்துப் பேச வேண்டுமென்றேன். அனைவரும் ஒப்புக்கொண்ட பின்னர் அதிகாரியைப் பார்த்தோம். அவர் நாங்களெல்லோரும் 'டெக்'கில் பயணம் செய்வதற்கு மட்டுமே டிக்கட் வாங்கியிருப்பதால், தான் ஒன்றும் செய்ய முடியாதென்று கைவிரித்துவிட்டார். அப்போது சாப்பாட்டு வேளை நெருங்கிக் கொண்டிருந்தது. முதல் வகுப்புப் பயணிகள் உணவு விடுதிக்கு ஒரு சிறு வராந்தா வழியாகச் செல்ல வேண்டும். அங்கே நான் 'டெக்' பயணிகள் அனைவரையும் முதல் வகுப்புப் பயணிகள் உணவு விடுதிக்குப் போக முடியாமல் – வழி இல்லாமல் – உட்கார வைத்துவிட்டேன், முதல் வகுப்புப் பயணிகள் ஒரு மோசமான நிலைமையை எதிர்கொள்ள நேரக் கூடாதென கப்பல் அதிகாரி விரும்பினார். நானோ காலியாக இருக்கும் அறைகளில் 'டெக்' பயணிகளை தங்கவிடாவிட்டால் முதல் வகுப்புப் பயணிகளை உணவருந்தவிடக் கூடாதென்ற உறுதியில் இருந்தேன். சக பயணிகளையும் உறுதியாக நிற்குமாறு வேண்டினேன். "இங்கிருந்து உடனே போய்விடுங்கள்!" என்று கப்பல் அதிகாரி பிரெஞ்சு மொழியில் கத்தினார். "அங்கே குளிர் நடுங்குகிறது" என்று நாங்களும் பதிலுக்குக் கத்தினோம். கடைசியில் வேறு வழியில்லாமல் அதிகாரி எங்களுக்காக அவ்வறைகளைத் திறந்துவிட்டார். அவற்றில் ஏற்கனவே வைக்கோல் மெத்தைகள் இருந்தன. நாங்கள் வெர்ஸெயில்ஸ் வரை அவ்வறைகளிலேயே இருந்து கொண்டு பயணம் செய்தோம். இந்த வெற்றிக்காக சக பயணிகளெல்லோரும் என்னைப் பாராட்டினர். ஆனால் அவர்களுடைய ஒன்றுபட்ட சக்தியால்தான் இவ்வெற்றியை பெற முடிந்தது என்றேன் நான். கப்பலின் ஒரு இஞ்சின் பழுதாகிவிட்டதால் ஒரே இஞ்சினோடு கப்பல் சென்றதால் மெதுவாகவே போக முடிந்தது. வெர்ஸெயில்ஸுக்கு காலையில் சேர வேண்டிய கப்பல் மாலையில்தான் போய்ச் சேர்ந்தது. அந்தக் காலத்தில் பிரெஞ்சு துறைமுகத்திலிருந்து 'இங்கிலீஷ் சான'லுக்கு ஒரு ரயில் பயணிகளைக் கொண்டு சென்றது. ஆனால் அன்று இங்கிலாந்து செல்லும் பயணிகள் தாமதமாக வந்து சேர்ந்தனர்.

கப்பல் துறையில் நங்கூரம் பாய்ச்சிய அடுத்த வினாடியே அதிகாரிகள் கப்பலுக்குள்ளேயே வந்துவிட்டார்கள். அங்கேயே அவர்கள் பயணிகளின் அனுமதிப் பத்திரங்களை தணிக்கைச் செய்து, தமது ஒப்பதலை தெரிவிக்கும் வகையில் முத்திரையிடுவார்கள். நான் ஷேவிங் செய்து, குளித்து நல்ல 'சூட்' அணிந்து, தொப்பியுடன் தயாரானேன். இந்த உடைகளை சென்ற தடவை நான் ஹாம்பர்க் சென்றபோது அங்குள்ள தோழர்கள் எனக்களித்தவை. நான் அந்த வேடத்தில் ஐரோப்பியனைப் போலவே காட்சியளித்துக் கொண்டிருந்தேன். நான் 'கியூ' வரிசையிலிருந்து முன்னே சென்று, லாலின் பாஸ்போர்ட்டை அதிகாரிகளின் முன் வைத்து, "தயவு செய்து எனக்கு 'விசா' கொடுங்கள்" எனறுக் கேட்டேன். கப்பலுக்குள் நான் மிகச்சாதாரண உடைகளை அணிந்திருந்தேன். ஆனால் இப்போதோ ஐரோப்பியனைப் போன்ற என் உடைகளைக்

கண்டு தாகூரின் குழு வியப்படைந்திருக்கலாம். லாவின் சாமான்களை வெளியே அனுப்பி வைப்பதில் நான் உதவினேன். 'விசா' அதிகாரிகளின் தணிக்கை முடிந்ததும் 'கஸ்டம்' அதிகாரிகளின் சோதனை தொடரும். மேல் வகுப்புப் பயணிகள் 'கஸ்டம்' சோதனையை விரைவாக முடித்துக் கொள்ள அவ்வதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்கும் சில சைகைகள் செய் வார்கள். நானும் அப்படிப்பட்ட சைகைகளை செய்து லாவின் சாமான் களை சீக்கிரம் வெளிக் கொணரும்படிச் செய்தேன். நாங்கள் 'கஸ்டம்' அதிகாரிகளுக்கு ஐந்து 'பிராங்குகள்' தந்தோம். நாங்களிருவரும் ஒரு டாக்ஸியில் இந்திய உணவு கிடைக்கும் ஓட்டலுக்கு சென்று சாப்பிட் டோம். பிறகு ரயிலடிக்கு சென்று எனக்காக ஒரு மூன்றாம் வகுப்பு டிக்கட் வாங்கிக் கொண்ட பிறகு மீதிப் பணம் பூராவும் லாவிடம் தந்துவிட்டேன். ஒரு கோப்பை தேனீருக்கும் நான் பணம் என்னிடம் வைத்துக்கொள்ள வில்லை.

பயணத் துன்பங்களையெல்லாம் அனுபவித்து நான் ஹாம்பர்கை அடைந்தேன். அப்பொழுது அங்கே காரல் வில்லியம் 'கோமின்டார்ன்' விவகாரங்களைப் பார்த்து வந்தார். நான் சென்றபோது அவர் ஹாம்பர் கில் இல்லை. அந்நகரிலிருந்து ஜெர்மன் பாராளுமன்றத்திற்கு தோழர் வால்ட்டர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அவர் தோழர் ஜூலியஸ் என் பவரை எனக்குத் துணையாக பெர்லினுக்கு அனுப்பி வைத்தார். அங்கே 'கோமின்டார்னு'டன் தொடர்புள்ள இடத்துக்கு என்னை அழைத்துச் சென்றனர். அங்கிருந்து நான் வந்த செய்தியை 'கோமின்டார்'னுக்கு தெரிவிப்பார்கள். ஆனால் சில நாட்கள் வரை அவர்களுக்கு 'கோமின் டார்ன்' தொடர்பு கிடைக்கவில்லை. அதுவரை என்னை ஒரு ஓட்டலில் தங்க வைத்தார்கள். அங்கே என்னை ஒரு வியாபாரியாக பதிவு செய்துக் கொண்டேன். இரவும், பகலும் ஓட்டலுக்குள்ளேயே இருந்தால் யாருக் காவது சந்தேகம் தோன்றலாம். ஆகவே ஓட்டலிலிருந்து ஒரு நாள் வெளியே உலாவச் சென்றேன். ஒரு நாற்சந்தியில் நின்று அங்கிருந்த படைத் தளபதி ஒருவனின் சிலையை வேடிக்கைப் பார்த்துக் கொண்டி ருந்தேன். எல்லா சாலைகளிலிருந்தும் தொழிலாளர்கள் கும்பல் கும்ப லாக வந்து ஓரிடத்தில் குழுமிக் கொண்டிருந்தார்கள். அந்த காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியினர் நான்கு சக்கர மேடைகளை பொதுக் கூட்டங்க ளுக்கு பயன்படுத்தி வந்தார்கள். பொதுக்கூட்டம் முடிந்ததும் அந்த நான்கு சக்கர மேடையை குதிரைகளைப் பூட்டி ஓட்டிச் சென்றுவிடுவார்கள்.

எனது ரகசிய பயணங்களின்போது என்னை தெரிந்தவர்கள் எவரை யும் சந்திக்கவிடமாட்டார்கள். நான் அந்த சிலையின் எதிரிலே நின்றுக் கொண்டிருந்தபோது பின்னாலிருந்து யாரோ என் தோள்களைப் பற்றிக் கொண்டனர். திரும்பிப் பார்த்தேன். தோழர் பெர்கூஸன், அவருடன் அவரது அழகிய மனைவியும் இருந்தாள். 1928ல் நானும் தோழர் ஸம் ஸுல் ஹுதாவும் இந்தியாவுக்குத் திரும்பி வரும்போது பெர்லினிலிருந்த 'ஏகாதிபத்திய எதிர்ப்பு லீகி'ன் தலைமை அலுவலகத்திற்கு சென்றோம். அங்கிருந்து திரும்பி வரும் நாளன்று பெர்கூஸன் அங்கே வந்தார். "நமக்கு உலகம் மிகச் சிறியது. இன்னொரு நாள் சந்திப்போம்" என்றார் அவர். முதல் முறை நான் மாஸ்கோவுக்கு ரகசியமாக போய்ச் சேருவதற்கு முன் பம்பாயில் எனக்களிக்கப்பட்ட பணியை முடித்தே திரும்பினேன். அப் போது என் பயணம் பற்றி யாருக்கும் தெரியாது. ஆனால் இப்போது பெர்கூஸன் என்னைப் பார்த்துவிட்டார். நான் தங்கியிருக்கும் இடம் பற்றி விசாரித்தார். என் ஓட்டலின் முகவரியைத் தந்தேன். அங்கே

அவர்கள் என்னை வந்து பார்த்தனர். அதுவரை கம்யூனிஸ்ட் அகிலத்தைச் சேர்ந்த நபருடன் எனக்குத் தொடர்பு கிடைக்கவில்லை.

சனிக்கிழமையன்று அவர்கள் என்னை இரண்டு நாட்கள் தமது வீட்டில் இருப்பதற்காக அழைத்தனர். அவர்கள் பெர்லின் புறநகரில் தமது உறவினர் ஒருவர் வீட்டில் இருந்தனர். பெர்கூஸனின் மனைவி ஒரு இந்தியத் தோழருடன் தேனீர் அருந்த தன்னை ஒத்த அரசியல் கருத்துடையோரை அழைத்திருந்தார். அப்போது பெர்லினில் மிகச் சில மாணவர்களே இருந்தனர். ஆனால் புறநகரிலே இருக்கும் இவர்களுக்கும் அவர்களுக்கும் தொடர்பு இல்லை.

1930ல் காந்திஜீ, உப்பு சத்தியாகிரகம் துவக்கியிருந்தார். அதைப் பற்றி ஜெர்மன் பத்திரிகைகளில் நிறைய செய்திகள் வந்து கொண்டிருந்தன. அன்றைய இந்திய அரசியல் குறித்து அப்போதே இந்தியாவிலிருந்து வந்துள்ள ஒரு இந்தியனின் வாயிலாகக் கேட்கும் வாய்ப்பு அவர்களுக்கு சாதாரணமாகக் கிடைக்காது.

பெர்கூஸனுக்கு என் அரசியல் வாழ்க்கை தெரியும். அவர் என்னை அவர்களுக்கு மிக கவர்ச்சிகரமாக அறிமுகம் செய்து வைத்தார். அவர்கள் இந்திய அரசியல் சமூக நிலைமைகளைக் குறித்து பல கேள்விகள் கேட்டனர். அங்கே குழுமியவர்களில் சமூக ஜனநாயகவாதிகளே அதிகம் பேர். நானோ போராட்ட வெள்ளங்களுக்கிடையே இருந்தேன். இதனால் என்னுடைய விழிப்புணர்வு அதிகமாகவே இருந்தது. பெர்கூஸன் சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்பு லீகின் அலுவலகத்தில் பணியாற்றினார். அந்த லீகின் செயலாளர் வீரேந்திரநாத சட்டோபாத்யாயா. அதனால் பெர்கூஸன் இந்திய நிலைமைகளை நன்கு அறிவார். அவர் என்னுடைய ஆங்கிலப் பேச்சை ஜெர்மனி மொழியில் நன்றாக மொழி பெயர்த்தார்.

அங்கிருந்தவர்களில் ஒரு பெண் ஒரு வேடிக்கையான கேள்வி கேட்டாள். “இந்தியக் குழந்தைகள் பிறக்கும்போது எந்த நிறத்தில் இருப்பார்கள்?” நான் உடனே, நான் இதுவரை குழந்தையைப் பெறவில்லை, குழந்தைப் பேறின்போது பார்க்கவும் இல்லை. ஆனால் பிறக்கும்போது எல்லா குழந்தைகளுமே சிவப்பாகத்தான் இருப்பார்களென்று நினைக்கிறேன்” என்றதும் எல்லோரும் சிரித்துவிட்டனர்.

பெர்கூஸன் மனைவி ‘அலீஸ்’ தன்னுடைய போட்டோ ஆல்பத்தை காட்டினார். அதில் ஒரு புகைப்படத்திலிருந்த இளம் பெண்ணொருத்தி என்னை மிகவும் கவர்ந்துவிட்டாள். அவள் அலீசின் தங்கை. பெயர் ‘ஹெல்டா புஷ்’. அவள் ‘டிரஸ்டென்’ நகரப் பள்ளியொன்றில் ஆசிரியை. அவளை அறிமுகம் செய்து கொள்ள வேண்டுமென்றும் என் விருப்பத்தை தெரிவித்தேன். உடனே அலீஸ் என் ‘டைரி’யில் தங்கையின் முகவரியை எழுதினார்.

திங்கட்கிழமை பெர்லின் திரும்பினேன், ‘கோமின்டார்ன்’ நபரைப் பற்றி எவ்விதத் தகவலுமில்லை. அதனால் மீண்டும் நான் ஹாம்பர்க் சென்றுவிட்டேன். சில நாட்களுக்குப் பின்னர் ‘கோமின்டார்ன்’ பிரதிநிதிக்கு என்னை ரயிலில் மாஸ்கோவுக்கு அனுப்பும்படி தகவல் வந்தது. அவர் ஹாம்பர்கில் என்னுடைய நண்பர்களில் என்னைப் பற்றி விசாரித்தார். அவர்கள் என்னை பெர்லின் அழைத்து சென்றனர். என் புகைப்படத்துடன் கூடிய பிரிட்டிஷ் இந்திய பாஸ்போர்ட் ‘கோமின்டார்ன்’ பிரதிநிதியிடம் தயாராய் இருந்தது. வார்ஸா நகர வழியாக மாஸ்கோ செல்ல இரண்டாம் வகுப்பு ரயில் டிக்கட் தந்தனர். எங்கள் ரயில் காலையே வார்ஸாவை அடைந்தது. மாஸ்கோவுக்கும் இனி பிற்பகல்

தான் ரயில், நகரைச் சுற்றித் திரிய நிறைய நேரம் இருந்தது. அப்போது 'பால்ஸோஸ்கி'யின் ஆட்சி நடந்துக் கொண்டிருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்தது. அதனால் வார்ஸாவைப் பற்றி எனக்கு விசேஷ அக்கரையொன்றுமில்லை. சற்று நேரம் வார்ஸாவின் தெருக்க ளில் சுற்றிவிட்டு ரயிலேறினேன். ரயிலில் உயர் வகுப்புப் பயணிகளுக்கு சிறிய சிறிய அறைகள் இருந்தன. அவைகளின் முன்னால் சிறிய வராந் தாவும் இருந்தது. அதில் உல்லாசமாக திரிய முடியும்.

அந்த ரயிலில் என்னுடன் ஒரு ஆர்மீனியா இனத்தவரும் ஏறினார். அவர் டெஹ்ரானைச் சேர்ந்தவர். அவர் வியாபாரி. அவர் சோவியத் விசா வைத்திருந்தார். எந்த 'கேபினி'ல் அவர் இருந்தாரோ எனக்குத் தெரியாது. ரயில் சோவியத் எல்லைச் சாவடியை அடைந்தது. நாங்கள் அன்னியச் செலாவணி அல்லது ரூபிள்களை வைத்திருக்கிறோமா? என்று அங்கிருந்த பெண் அதிகாரி கேட்டார். 'இல்லை' என்றோம் நாங்கள். எங்களை சோதனையிடவில்லை. ரயில் புறப்பட்டது. ஆர்மீனியா வியா பாரி தன் பையிலிருந்து சில ரூபிள்களை எடுத்துக் காட்டினார். "வார் ஸாவில் நீங்கள் ரூபிள்களை சம்பாதித்துக் கொள்ளவில்லையா? கையில் ரூபிள் இருந்தால் மாஸ்கோவில் வசதியாயிருக்கும்" என்று மேலும் அவர் என்னிடம் கூறினார். அந்த வியாபாரியின் நம்பிக்கை துரோகம் கண்டு நான் அதிர்ச்சியடைந்தேன். அவரை சோதனையிட்டிருந்தால் உண்மை வெளிப்பட்டிருக்கும். என்னையும் சோதனை போட்டிருப்பார்கள். தொழிலாளர் அரசு வகுத்த சட்ட திட்டங்கள் மிகப் புனிதமானவை என்பதும், அவைகளை மீறுவது பெருங்குற்றம் என்பதும் என் கருத்தாகும். சோவியத் அதிகாரிகளுக்கு விஷயம் தெரிவித்தால் வியாபாரியை உடனே கைது செய்வார்கள். அதிகாரிகள் எங்கள் மேல் வைத்த நம்பிக்கையை அவர் சிதறடித்துவிட்டார். இது எனக்கு பிடிக்காவிட்டாலும் நான் வியா பாரி குறித்து சோவியத் அதிகாரிகளுக்கு தெரிவிக்க விரும்பவில்லை. காரணம், ஒரு இந்தியனால் அவருடைய 'விசா' ரத்தானால், ஈரானில் இந்தியர்கள் மேல் உள்ள நல்லெண்ணத்தை பாழாக்கிவிடும். இவ்வாறு சிந்தித்தவாறே அவ்வியாபாரியை ரஷிய மொழியில் கேட்டேன். அவருக்கு அம்மொழி நன்கு தெரியும். 'நான் யார் தெரியுமா?' 'இந்தியன்' என்றார், அவர். 'அத்துடன் கம்யூனிஸ்ட்டும் கூட' என்றேன் நான். இதைக் கேட்டதும் வியாபாரி அதிர்ச்சியடைந்தார். எந்த ஒரு கம்யூனிஸ்ட்டும் சோவியத் எதிர்ப்பு செய்கையையும் சகித்துக் கொள்ளமாட்டாரென்பது அவருக்கு தெரியும். 'திருட்டுத்தனமாக ரூபிள்களைக் கடத்தி வரும் விஷ யம் என்னிடம் நீங்கள் சொல்லி இருக்கக்கூடாது.' என்றேன் நான். அவர் பயந்து நடுங்கினார். 'இனிமேல் இப்படிப்பட்ட குற்றம் செய்ய மாட்டேன்' என்ற வாக்குறுதியை பெற்றுக்கொண்டேன். நானும் அவ ருக்கு எவ்வித தீங்கும் புரியமாட்டேன் என்று சொன்னேன். ஒரு மாதத் திற்குப் பின்னர் அவர் 'டெவர் கியா ஓலிஸ்டா' என்னுமிடத்தில் தென் பட்டு, அவரே என்னைக் கூப்பிட்டு என் கைகளைக் குலுக்கினார்.

என்னை கவனித்துக்கொள்ள 'கம்யூனிஸ்ட் அகிலம்' ஒருவரை ஏற் பாடு செய்திருந்தது. அவர் என்னை ரயிலடியில் சந்தித்தார். அவர் என்னை நகரத்தின் மத்தியப் பகுதியிலிருந்து தொலைவிலுள்ள மாஸ்கோ நதியின் அக்கரைக்கு அழைத்துச் சென்றார். அங்கே ஒரு கம்யூனிஸ்ட் குடும்பத்தில் என்னை தங்கவைத்தனர். அங்கே எனக்கு ஒரு அறையும் தந்தனர். அருகிலே ஒரு நாற்சந்தி இருந்தது. அங்கே நிறைய அச்சகங்கள் இருந்தன. அவ்வச்சகங்களில் வேலை செய்யும்தொழிலாளருக்கென்றுஒரு

உணவு விடுதியும் இருந்தது. 'கம்யூனிஸ்ட் அகிலம்' பிரதிநிதி எனக்கு கொஞ்சம் பணம் தந்து, அந்த உணவு விடுதியில் சாப்பிட்டுக்கொள்ளலா மென்ருர். மறுநாள் அந்த உணவு விடுதிக்கு சென்றேன். நீண்ட 'கியூ'வரிசை இருந்தது. பல விதமான உணவு வகைகள் தட்டுகளில் பரிமாறப் பட்டு வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. ஒரு கண்ணுடிக் கூண்டுக்குள் 'காஷியர்' பெண்மணி அமர்ந்திருந்தார். எல்லோரும் 'காஷி யரி'டம் பணம் செலுத்தி டிக்கட் பெற்றுக்கொள்வார்கள். பிறகு வேறி டத்தில் டிக்கட் தந்து உணவுத் தட்டை எடுத்துக்கொள்ளுவார்கள். 'காஷ் யர்' பெண்மணி எப்போதும் வேலை மும்முரத்திலேயே இருப்பார். கண்ணெடுத்தும் பார்க்காமல் பணம் பெற்றுக்கொள்ளுவதும், டிக்கட் தருவதும் 'தயவுசெய்து நகருங்கள்' என்று சொல்வதுமாக இருப்பார். பணம் செலுத்த 'கவுண்ட'ரில் என் கையை நுழைத்தேன். என் கருப்பு நிறக்கை அந்த பெண்மணியின் கவனத்தைக் கவர்ந்திருக்க வேண்டும். தலையை உயர்த்தி என்னைப் பார்த்தார். நான் புன்சிரிப்பை உதிர்த் தேன். அவரும் சிரித்துக்கொண்டே, "உங்களுக்கு இந்த கரு நிறம் எப்படி வந்தது?" என்றுக் கேட்டார். நான் "கிரிமியாவுக்கு சென்று வந்ததால்!" என பதிலளித்தேன். சாதாரணமாக மாஸ்கோவாசிகள் ஜூன், ஜூலை மாதங்களில் கிரிமியாவுக்கு சென்று வருவார்கள். அப்போது ஏப்ரல் மாதம் இன்னும் குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது. நான் பணம் செலுத்தி, டிக்கட் பெற்றுக்கொண்டு, வேண்டிய உணவுத்தட்டையும் பெற் றுக்கொண்டேன்.

அடுத்த நாள் காலை மீண்டும் நான் உணவு விடுதிக்குப் போன சமயத்தில் 'காஷ்யர்' பெண்மணி 'லோலியா மாட்ரஜோவா' சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்தார். நல்ல உடைகளை அணிந்து அழகாக இருந் தார். அன்று பிற்பகலுக்குப் பிறகு தான் அவருக்கு வேலையாம்! மீண்டும் நான் அவரை தமாஷாக் கேட்டேன்,"நாம் எங்கே பயணம் போகிறோம்?" "நீங்கள் எங்கே போகிறீர்களோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் மட்டும் உலாவப் போகிறேன். வருகிறீர்களா?" என்று என்னையும் அழைத்தார். "சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு வருகிறேன்" என்றேன் நான். இருவரும் சேர்ந்து உலாவத்தொடங்கினோம். 'கம்யூனிஸ்ட் அகில'த்து டன் தொடர்புடைய ரகசிய நடவடிக்கைகளுக்காக மாஸ்கோ வருபவர் கள் யாரும் தம்மைப் பற்றிய தகவல்களை யாருக்கும் தெரிவிக்கக்கூடாது. நானும் லோலியாவிடம் என் பெயர் 'ரவீந்தர்' எனக் கூறினேன். மாஸ் கோவுக்கு ஏன் வந்தேன் என்பதையும், அங்கே எத்தனை நாள் இருப்பேன் என்பதையும் தெரிவிக்கவில்லை. மாஸ்கோவிலுள்ள ஏதோ ஒரு நிறுவ னத்துடன் எனக்கு தொடர்பிருப்பதாகஅவர் கருதினுர். அவர் மிகவும் புத்திசாலி. என் தனிப்பட்ட விஷயங்களைப் பற்றி என்றுமே கேட்க வில்லை. நான் அப்பகுதியில் இருந்தவரை அந்த உணவு விடுதியிலேயே சாப்பிட்டு வந்தேன். தனக்குக் கிடைத்த ஓய்வு நேரங்களில் எல்லாம் லோலியா என்னைத் தேடி என் அறைக்கு வந்து விடுவார். நாங்கள் இருவரும் உலாவச் செல்வோம். அவர் என்னை திருமணம் செய்துக் கொள்ளவும் விரும்பினுர். என் எதிர்காலம் குறித்து எவ்விதமான முடி வும் ஆகாததால் நான் திருமண விஷயத்தை சிந்திக்கவில்லை. ஆனுல், அப்போதைய என் தனிமையான வாழ்வில் லோலியாவின் நட்பு வசந்த காலத் தென்றலை வீசச் செய்தது.

1930 - ம் ஆண்டைய 'மே தின'த்தன்று ஒரு மைதானத்தை அடைந் தேன். இதற்கு முன் நான் மாணவனாயிருந்த போது மேதினத்தன்று

நடைபெறும் சோவியத் படை வீரர்களின் அணிவகுப்பைப் பார்ப்பதற்காக செஞ்சதுக்கத்திற்கு சென்று கொண்டிருந்தேன். அப்போதெல்லாம் பிரதான படைத் தளபதி வொரோஷிலாங்,லெனின் கல்லறையின் எதிரில் நின்று படை வீரர்களின் அணிவகுப்பை ஏற்றுக்கொள்ளுவார். அங்கிருந்து திரும்பி வந்து நாங்கள் பல்கலைக்கழகத்தின் 'மேதின' ஊர்வலத்தில் கலந்துகொள்ளுவோம். ஆனால் இந்த 'மே தின'த்தன்று நான் தனியாக விடப்பட்டதுபோல் உணர்ந்தேன்.

அன்று ஒரு வாழ்த்து அட்டை வாங்கி அதன் மேல், 'அறிமுகமில்லாத தோழியே! இதை அனுப்பியது யாரோ என்று உனக்கு வியப்பு தோன்றலாம் தனக்கென்று ஒரு நாடற்ற உன் தோழன்.' என்று எழுதி என் நாட்குறிப்பில் குறிக்கப்பட்டிருந்த 'ஹெல்ட்டா புஷ்' முகவரிக்கு அதை அனுப்பிவைத்தேன். இந்த என்வாழ்த்துக் கடிதம் அங்கே போய்ச் சேர்ந்த போது பெர்கூஸனும், அவர் மனைவி அலீஸூம் கூட அங்கேயே இருந்தார்கள். அவர்கள் மாஸ்கோவிலிருந்து வந்த இந்த வாழ்த்துக்கு எவ்வளவோ மகிழ்ந்ததுடன், நான் நலமாக மாஸ்கோ போய் சேர்ந்ததையும் அறிந்து கொண்டார்கள். ஹெல்ட்டா புஷ் திருமணமாகாதவராதலால் அவரை அக்காவும், அத்திம்பேரும் கேலியும், கிண்டலும் செய்தார்கள். பெர்கூஸனும், அவரது மனைவியும் புஷ்ஷிடம் என்னைப் பற்றி நல்லபடி சொல்லி இருக்கிறார்கள்.

இறுதியில் 'கம்யூனிஸ்ட் அகிலத்'தைச் சேர்ந்த தோழர்கள் என்னை மாஸ்கோவில் ஒரு மையமான இடத்திற்கு அனுப்பி வைக்க முடிவெடுத்தார்கள். அப்போது சர்வதேச செந்தொழிலாளர் மாநாட்டுக்கு ஏற்பாடுகள் நடைபெற்று வந்ததால், பல விவாதக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. மாஸ்கோவின் மையப் பகுதியில் இருந்தால் நான் அவைகளில் எளிதாக பங்கெடுத்துக் கொள்ளலாம் என்று அவர்கள் கருதினார்கள். அத்துடன் இந்திய நிலைமை குறித்தும் விவாதம் நடைபெற்று வந்தது. அதிலும் என் பங்கேற்பு சிறப்பாக இருக்கும்.

மாஸ்கோவின் மையப் பகுதியிலும்கூட என்னை ஒரு கம்யூனிஸ்ட் குடும்பத்திலேயே தங்க வைத்தார்கள் அங்கே எனக்கொரு தனியறை தரப்பட்டது. 'புரொஃபென்டெர்ன்' மத்திய அலுவலகத்தில் கிழக்கத்தியப் பகுதியில் எனக்கொரு தனியான இடத்தை ஒதுக்கினார்கள். அங்கே தோழர் பாலாபோஷெவி எனக்கு எவ்வளவோ உதவினார். அவர் கிழக்கத்திய கல்விக் கழகத்தில் பயிற்சிப் பெற்றவர். அவருக்கு இந்தியா குறித்து நன்கு தெரியும். அவ்வலுவலகத்தில் இந்தியவிவரங்களுக்கு பொறுப்பாளர் அவர்தான்! பின்னர் அவர் ஆராய்ச்சி செய்து வரலாற்றில் 'டாக்டர்' பட்டம் பெற்றார். மாஸ்கோவில் இந்தியா, இலங்கை, நேப்பாளம் சம்பந்தப்பட்ட விஷயங்களை கவனிப்பதற்கு அவரை நியமித்தார்கள். 'புரொஃபென்டர்ன்' அலுவலகத்தில் கிழக்கத்தியப் பகுதியிலேயே 'நடாஷா' என்னும் இளம்பெண் பணியாற்றிக் கொண்டிருந்தாள். நல்ல உடற்கட்டு கொண்ட அற்புத அழகி அவள். ரஷ்ய இனத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்கினாள். சுறுசுறுப்பும் இனிய சுபாவமும் கொண்டவள். ஆங்கிலம் நன்கு பேசுவாள். சர்வ தேச செந்தொழிலாளர் மாநாட்டுத் துவக்க விழாவுக்கு என் பேச்சை இவள் தான் 'டைப்' செய்தாள். கிழக்கத்தியப் பகுதியில் பணியாற்றிய எல்லோருமே என்னிடம் நேசபூர்வமாக நடந்துக்கொண்டார்கள். அவர்களில் ஜப்பானிய கிளையில் இருந்த '[illegible]றாச்யா' என்ற பெண்பணி[illegible] [illegible]த்து சிறப்பாக குறிப்பிட வேண்டும்.

1929ம் ஆண்டில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 16வது மாநாடு மாஸ்கோவில் போல்ஷாய் தியேட்டரில் நடைபெற்றது. கம்யூனிஸ்ட் அகிலத்தின் சார்பில் தோழர் மாலட்டோவ் அறிக்கை சமர்ப்பிக்கவிருந் தார். அதற்கு நான் ஆஜராராக நடாஷாவை எனக்கு உதவியாளராக்கி அனுப்பினர்கள். அன்றைய இந்திய நிலை குறித்தும், காந்தீஜி ஆரம்பித்த சத்தியாகிரகம் குறித்தும், துணைக்கண்டத்தின் அரசியல் விளைவுகள் குறித்தும் யாருக்கும் எந்த தகவல் தேவைப்பட்டலும், கிழக்கத்தியப் பகுதியில் இருக்கும் எனக்கு 'போன்' செய்வார்கள். கூட்டங்களுக்கும் ஆஜராக வேண்டியிருக்கும். அதனல் தினந்தோறும் அலுவலகத்திற்கு வர வேண்டிருந்தது. அத்துடன் 'புரொஃபென்டர்ன்' கூட்டங்களிலும் கலந் துக்கொள்ள வேண்டிருந்தது. அங்கேயே தஸ்தாவேஜிகளும், நகல் அறிக் கைகளும்கூட தயாராயின. இவைகளையே சர்வ தேச செந்தொழிலாளர் மாநாட்டின் முன் வைத்தார்கள். இந்தியாவில் நடைப்பெற்றுவந்த வெகு ஜன சத்தியாகிரகம் பற்றி விவாதிக்கப்பட்ட பல கம்யூனிஸ்ட் அகிலத் தின் கூட்டங்களிலும் பங்கெடுத்தேன். வெகுஜன இயக்கமாக வளர்ந்து கொண்டிருந்த சத்தியாக்கிரகம் புரட்சிகரப் போராட்டமாக உருமாறு மென பலரும் கருத்து தெரிவித்தார்கள், அன்றைய நிகழ்ச்சிக்கு தோழர் குஸினின் தலைமை வகித்தார்.

' கம்யூனிஸ்ட் அகில'த்தில் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி பற்றி விவாதிக்கப்பட்டபோது, நான் அவர்களை கடுமையாக விமர்சனம் செய் தேன். பிரிட்டிஷ் கட்சியின் பிரதிநிதி மவுனம் சாதித்தார். ஆனால், மற்ற தோழர்கள் என் விமர்சனம் ஒரு தேசியவாதியின் விமர்சனம் போலி ருந்ததே அல்லாமல் ஒரு கம்யூனிஸ்ட் விமர்சனம் போலில்லை என்று கண்டித்தார்கள். நான் அமெரிக்காவில் நீக்ரோ பிரச்சனைப் பற்றி நடைப்பெற்ற விவாதத்திலும் கலந்து கொண்டேன். கிழக்கத்திய கல்லூ ரியைக்காட்டிலும் லெனின் பள்ளியில் அதிக வசதிகள் உள்ளன. செல வுக்கும் அதிகப் பணம் தருகிறார்கள். ஆனால் லெனின் பள்ளிக்கு அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி வெள்ளை நிற மாணவர்களை மட்டுமே தேர்ந்தெடுத்து அனுப்புகிறதென்று நான் விமர்சித்தேன். இந்த விமர்ச னத்திற்குப் பிறகு இரு நீக்ரோ மாணவர்களை லெனின் பள்ளிக்கு மாற்றினார்கள்.

'கம்யூனிஸ்ட் அகில'த்தில் பணிபுரியும் பணியாளர் விடுதியில் நீக்ரோ தலைவர் வரீதாவை அடிக்கடி சந்தித்துப் பேசுவேன். அவ்விடுதி யிலேயே நீக்ரோ தோழர்கள் பலரையும் சந்தித்தேன். அமெரிக்க கம்யூ னிஸ்ட் கட்சியில் நீக்ரோ தலைவரான 'போர்ட்'டை அங்கேயே சந்தித் தேன். 'டிரினிடாட்' நாட்டின் நீக்ரோ தலைவர் பாட்னோலையும், புகழ் பெற்ற எழுத்தாளரும், சரித்திரப் பேராசியருமான ரால்ப் பாக்ஸையும் வரீதாவின் அறையிலேயே சந்தித்துப் பேசினேன். அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிக்கை 'டெய்லி ஒர்க்க'ரின் பிரதிநிதியாக ஸ்பெயின் உள் நாட்டுப்போரில் பங்கெடுத்து அங்கேயே கொல்லப்பட்டார். சர்வாதி காரி ஜெனரல் பிராங்கோவின் படைகள் மாட்ரிட் நகரை நோக்கி விரைந்துகொண்டிருந்தன. புரட்சியாளர்கள் யாரும் அசையக்கூடாதென அறைக்கூவினார்கள். பாசிஸ்ட் படைகளை அவர் எதிர்த்து நின்றார். அங்கேயே அவர் காயமடைந்து இறந்து விட்டார். பிராங்கோவுக்கு மற்ற சர்வாதிகாரிகளான முசோலினி, இட்லர் ஆகியோரின் ஒத்துழைப்பு கிடைத்தது. வரீதாவின் அறையிலேயே செஞ்சேனையின் பல தளபதி களையும் சந்தித்தேன்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை லோலியா மாட்டு ஜோவாவிடமிருந்து எனக்கு ' போன்' வந்தது. தானும் உறவினர் ஷோராவும் உலாவச் செல்வதாகவும், நானும் வரவேண்டுமென்றும் அழைத்தார். நான் சம்மதம் தெரிவித்து, அவர்கள் புறப்பட்டு வரும் டிராம் வண்டியை எதிர் பார்த்து நின்றிருந்தேன். அவர்கள் வந்து தமக்காக காத்து நிற்கும் என்னைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தனர். மெள்ள ஒரு பூங்காவுக்குள் சென்று அமர்ந்தோம். இருவரும் என் இரு பக்கங்களிலும் உட்கார்ந்தனர். லோலியா ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். நான் எங்கேயோ மனசை ஓட விட்டு 'உம்' கொட்டிக்கொண்டிருந்தேன். அன்று காலை 'பிராவ்தா' பத்திரிகையில் நான் படித்த ஒரு செய்தி என்னை சிந்தனையிலாழ்த்திவிட்டிருந்தது. மகாராஷ்டிராவில் ஷோலாப்பூர் நகரின் நிர்வாகத்தை பொதுமக்களே கைப்பற்றிக் கொண்டு விட்டனர். சிவில் அதிகாரிகளும், போலீஸாரும் நகரை விட்டே ஓடிச்சென்று விட்டனர். இந்தியாவின் அனுபவம் வாய்ந்த தோழர்களெல்லோரும் மீரட் சதி வழக்கில் சிறையில் இருக்கின்றனர். போராட்ட அனுபவங்கொண்ட நான் இங்கே இருக்கிறேன். நான் மட்டும் இப்போது இந்தியாவில் இருந்திருந்தால் சூழ்நிலையை நன்கு பயன்படுத்திக் கொண்டிருப்பேன். ஷோலாப்பூர் யோசனையில் மூழ்கி நான் அவர்கள் சொல்வதெதையும் மனதில் கொள்ளாமல் எங்கோ சூனியத்தில் பார்த்துக் கொண்டே ' உம்' கொட்டிக் கொண்டிருந்தேன். லோலியாவும், ஷோராவும் ஏமாற்றமடைந்து என்னை பகல் கனவுகள் காண்பவன் எனக் கருதிவிட்டனர். லோலியா எனக்கு மிக நெருக்கமாக வந்திருக்கிறாள். நேசபூர்வமற்ற எனது போக்கு லோலியாவுக்கு பிடிக்கவில்லை. " நீ இந்த உலகத்தைச் சேர்ந்தவனல்ல, வேறு உலகத்தவன்" என்று தனது தீர்ப்பை சொல்லிவிட்டாள் என்றாலும் என்னை மணந்து கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்தை துறந்துவிடவில்லை.

மாஸ்கோவில் சர்வதேச செந்தொழிலாளர் மாநாட்டுக்கான எல்லா தயாரிப்புகளும் செய்து முடிக்கப்பட்டு விட்டன. வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் வரத் தொடங்கி விட்டனர். அந்த காலத்தில் மாஸ்கோவில் இத்தனை ஓட்டல்கள் இல்லை. பிரதிநிதிகளுக்கு பல்வேறு இடங்களிலும் விடுதிகளை ஏற்பாடு செய்துக் கொண்டிருந்தனர். என்னையும் ஒரு சிறு ஓட்டலுக்கு மாற்றினார்கள். நான் முன்பிருந்த ஓட்டலில் பாலஸ்தீன, நீக்ரோ பிரதிநிதிகளை தங்க வைத்தனர். பாலஸ்தீன பிரதிநிதிகளில் என் சகமாணவரும், நல்ல நண்பருமான கமாலைக் கண்டு சந்தோஷகரமான அதிர்ச்சியுற்றேன். 1928 வரை நாங்களிருவரும் மாஸ்கோவிலே சேர்ந்தே இருந்தோம். 1929 ல் அவர் பாலஸ்தீனாவுக்கும், நான் இந்தியாவுக்கும் திரும்பினோம். அதே ஆண்டில் பாலஸ்தீனாவில் முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்குமிடையே பயங்கர மோதல்கள் நடைபெற்றன. கமாலின் நலம் பற்றி நான் மிகவும் கலவரமடைந்தேன். மாநாட்டிலே அவரைக் கண்டு அக மகிழ்ந்தேன். பாலஸ்தீனாவில் நடந்த வகுப்புக் கலவரங்கள் குறித்து கமால் கதை கதையாகக் கூறினார். கலவரங்களின் போது முஸ்லிம் கம்யூனிஸ்டுகள் யூத மக்களையும், யூதகம்யூனிஸ்டுகள் முஸ்லிம் மக்களையும் பாதுகாத்த பல நிகழ்ச்சிகளையும் அவர் விவரித்தார்.

மாநாட்டில் என் பெயர் மிஸ்ரா. இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் சார்பில் நான் பங்கெடுத்தேன். மாநாட்டு நிர்வாகக் கமிட்டி கூட்டங்களிலும் கலந்துக்கொண்டேன். மாநாட்டின் சில குழுக்கூட்டங்களுக்கு தலைமை தாங்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைதத்து. நான் தலைமை

வகித்த ஒரு கூட்டத்தில் சொற்பொழிவாற்ற சோவியத் விஞ்ஞானிகள் வந்தனர். அவர்களை கூட்டத்தினருக்கு அறிமுகம் செய்து நான் எழுச்சி மிக்க சொற்பொழிவாற்றியது நினைவிருக்கிறது. என் தலைமையிலேயே சோவியத் தொழிற்சங்க பிரதிநிதி தோழர் ஸ்வெர்னிக் ஒரு தீர்மானத்தை முன் மொழிந்தார். அவர் பிற்காலத்தில் சோவியத் ஜனாதிபதியுமானார். பிற்காலத்தில் சீன ஜனாதிபதியான லீஷாவ்சீ அன்று 'புகாராஃபின் டெர்ன்' செயற்குழு உறுப்பினர். ஆசிய தொழிற்சங்க இயக்கம் பற்றி அவர் அறிக்கை தந்தார்.

இந்த மாநாட்டில் நான் பிரமுகர்கள் பலரையும் சந்திக்கும் வாய்ப்பு பெற்றேன். பிரடெரிக் ஏங்கல்ஸின் சமகாலத்தவரான தோழர் டாம்மான் என்னும் உயர்ந்த மனிதரை சந்தித்தேன். அவர் ஏங்கல்ஸிடமிருந்தே புரட்சிகர அரசியலை கற்றுக் கொண்டார். அவர் அப்போது பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களில் சிறுபான்மையினரின் இயக்கத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தினார்.

அக்காலத்தில் சீனத்திலுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு புரட்சிகர ஐக்கிய முன்னணி சோவியத் யூனியன் ஒத்துழைப்புடனும், கம்யூனிஸ்ட் அகிலத்தின் உதவியுடனும் நன்றாக வளர்ந்து கொண்டிருந்தது, பல வெற்றிகளையும் ஈட்டிக் கொண்டிருந்தது. பயந்துவிட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்திய பிரதிநிதிகள் சீனாவை விட்டோடிக் கொண்டிருந்தார்கள். ஆனால் சீனதேசியக் கட்சியான கோமின்டாங்கின் தலைவர் சியாங்கேஷேக்கின் துரோகத்தால் ஐக்கிய முன்னணி பிளவுண்டது. இதனால் சோவியத் யூனியனுக்கு எதிராக சதிகள் புரிவதற்கு ஏகாதிபத்திய வாதிகளுக்கு வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் சோவியத் யூனியனை ஆத்திரமூட்டும் பல்வேறு செயல்களில் ஈடுபட்டார்கள். சோவியத் நாட்டின் மீது படையெடுக்க வழி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது இந்தியாவில் நடைபெற்றுவந்த வெகுஜன சத்தியாகிரகத்தில் லட்சக் கணக்கில் மக்கள் பங்கெடுத்துக் கொண்டிருந்தனர். அதுவே முக்கியமான அம்சமாக விளங்கியது. சூழ்நிலை எவ்வளவோ உற்சாகமளிப்பதாக தோன்றியது. அன்றைய தேவைக்கேற்றார் போல நடவடிக்கைகளில் ஈடுபடவே நான் 'மீரட் சதிவழக்கி'லிருந்து தப்பித்துக் கொண்டு தலைமறைவாக இருந்து வந்தேன். அனுபவம் வாய்ந்த பல தலைவர்களும் அந்த சதி வழக்கில் சிறையிலிருந்தார்கள். இந்திய புரட்சியாளர் மீது இந்தியாவின் பல பகுதிகளிலும், பல சதி வழக்குகள் நடந்து வந்தன. சிட்டகாங்கில் பிரிட்டிஷ் ஆயுதக் கிடங்கின் மீது தாக்குதல் தொடுத்து ஆயுதங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. புரட்சி வீரர்கள் பகத்சிங், ராஜ குரு, சுகதேவ் ஆகியோர் கைது செய்யப்பட்டு, லாகூர் போலீஸ் சூப்பிரண்டென்ட் யாண்டர்ஸனைக் கொன்ற வழக்கில் தூக்கிலிட்டார்கள்.

இதற்கு முன்பு நான் மாஸ்கோவில் மாணவனாயிருந்தபோது எனது நடவடிக்கைகள் ரகசியமாக இருந்து வந்தன. ஆனால் இப்போது தேசிய சுதந்திரப் போராட்டத்திலும், குறிப்பாக தொழிற்சங்க இயக்கத்திலும், மாநாட்டுக் குழுக் கூட்டங்களிலும் மிகவும் சுறுசுறுப்பாக கலந்து கொண்டேன். அனுபவம் வாய்ந்த இந்தியத் தோழர்கள் பலரும் சிறையிலிருந்ததால் மாஸ்கோவில் நான் இருப்பது மிக அவசியமாயிற்று. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் இந்திய புரட்சி இயக்கத்தின்பால் கம்யூனிஸ்ட் அகிலத்தின் போக்கை விமர்சனம் செய்வேன்.

சர்வதேச செந்தொழிலாளர் மாநாட்டில் நான் பேசினேன்; தோழர் லாஜவிஸ்கி இந்திய புரட்சி இயக்கம் பற்றி தன் சொற்பொழிவில் எவ்வ

ளவோ நம்பிக்கையை வெளியிட்டார். ஆனால் ' கம்யூனிஸ்ட் அகி லமோ', 'புரொஃபின்டர்'னோ இந்திய தொழிலாளர் இயக்கத்திற்கு என்ன உதவி செய்தன என்று இந்த மேடையிலிருந்து நான் கேட்கிறேன். எனக்குத் தெரிந்த வரையில் அவை ஒன்றும் செய்யவில்லை. இந்தியாவில் அரசியல்நிலை கவலைக்குரியதாக இருக்கிறது. இந்த சூழ்நிலையிலேயே எங்கள் போராட்டத்தை தொடர வேண்டியுள்ளது. காகிதங்களில் எழு தப்படும் தீர்மானங்களால்! இனி நாங்கள் திருப்தி அடையமாட்டோம். எங்களுக்கு உண்மையான உதவி வேண்டும்." தோழர் லாஜவிஸ்கி உடனே சுருக்கெழுத்தாளரிடமிருந்து எனது பேச்சின் பிரதியை பெற்றுக் கொண் டார், தன்னுடைய பதிலில் என் பேச்சின் பகுதிகளை மேற்கோள் காட்டி, " இந்தியத் தோழர்கள் காகித தீர்மானங்களை மட்டுமல்லாமல், உண்மை யான உதவியும் பெறுவார்களென நான் உறுதியளிக்கிறேன்." என்றார்.

இந்தியாவில் நிகழ்ந்து வந்த நிகழ்ச்சிகளால் நான் எவ்வளவோ எழுச்சி பெற்றேன். சீனாவுக்கு உதவியதைப் போல் எங்களுக்கும் உத வியிருந்தால், ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியை அமைக்க ஒத்துழைத்திருந்தால் உப்பு சத்தியாகிரக இயக்கத்தை உண்மையான புரட் சிகர இயக்கமாக உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாக உருவாக்கிக் கொண்டிருப்போம். ஹாம்பர்க்,' ராட்டன்டாம், ஆண்ட் வேர்ஸ், வெர்ஸெயில்ஸ் முதலிய நகரங்களிலுள்ள ' ஸீமென் கிளப்'புகள் மூலமாக இந்திய மாணவர்களை சோவியத் யூனியனுக்கு பயிற்சிக்கு நான் அனுப்பிக் கொண்டிருக்கிறேன் என்றாலும், அது எவ்வளவோ கஷ்ட மான காரியமாகவே இருந்தது. மிக மெள்ள நடக்ககூடிய வேலை. ஒரு கப்பலில் வேலை சம்பாதிப்பதே கஷ்டமான வேலை. அத்துடன் பிரிட் டிஷ் பாஸ்போர்ட் பெறுவது அதைவிட கடினம்.

கிழக்கத்திய பல்கலைக் கழகத்தில் நான் மாணவனாக இருந்தபோது பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் கூட்டங்கூட்டமாக அங்கே படித்துக் கொண்டிருந்தார்கள். எடுத்துக்காட்டாக மாஸ்கோவிலிருந்த ஸன்யாட்ஸென் பல்கலைக் கழகத்தில் மட்டுமல்லாமல், கிழக்கத்திய பல் கலைக் கழகத்திலும் சீன மாணவர்கள் நிறைய பேர் படித்து வந்தனர். கோமின்டாங் கட்சியிலிருந்து வந்த மத்தியதர வகுப்பைச் சேர்ந்த் மாண வர்கள் ஸன்யாட்ஸென் பல்கலைக் கழகத்தில் பிரதானமாக இருந்தார்கள். இன்றைய தைவான் அதிபர் அன்று அங்கே மாணவர். அப்போது சீன மாணவர்கள் பலருக்கும் ராணுவப் பயிற்சி அளித்து வந்தார்கள். அவர் களுக்கு தரும் பயிற்சிகளும், அவர்களுடைய இருப்பிடங்களும் ரகசியமா கவே வைத்திருந்தார்கள். அவர்கள் நீல நிற சீருடை அணிந்தார்கள். அவர்களுக்கு சிறப்பான உணவு ஏற்பாடும் இருந்தது. அவர்கள் பொழுது போக்க எங்கள் 'கிளப்' புக்கு வந்தார்கள். அவர்களுக்கான செலவை யெல்லாம் கிழக்கத்திய பல்கலைக் கழகத்தின் மூலம் செய்தார்கள். பின் னர் சீன ஐக்கிய முன்னணியின் படைக்குத் தேவையானவர்களுக்கு பயிற்சியளிக்க சீனாவிலேயே ஒரு ராணுவக் கழகத்தை அமைத்தார்கள். அந்த காலத்தில் சீனாவைக் காட்டிலும் இந்தியாவிலேயே தொழிற்சா லைத் தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையிலே இருந்தார்கள். சீனா வுக்கு அளித்த உதவியில் ஒரு பகுதியாவது எங்களுக்குத் தந்திருந்தால் நாங்கள் எவ்வளவோ சாதித்திருப்போம். ஆனால் சீனாவில் கோமின் டாங் கட்சி ஐக்கிய முன்னணிக்கு துரோகம் செய்துவிட்டதால், கம்யூ னிஸ்ட் அகிலத்தைச் சேர்ந்தவர்கள் ஏமாற்றமடைந்தார்கள். மத்தியதர வகுப்பாரை சந்தேகக் கண்ணோடு பார்க்கவாரம்பித்தார்கள். மாஸ்கோ

வுக்கு எத்தனை மாணவர்களாயினும் அனுப்ப எனக்கு அனுமதி வழங்கப் பட்டது. ஆனால் அவர்கள் விவசாயிகள்–தொழிலாளர் வர்க்கங்களைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென வற்புறுத்தினார்கள்.

சீனா எந்த ஒரு ஏகாதிபத்திய நாட்டுக்கும் காலனி நாடல்ல. அதனால் சீன மாணவர்கள் சோவியத் யூனியனுக்கு வருவதும், போவதும் சுலபம். அவர்களுடைய பயணத்தைத் தடுப்பவர் எவருமில்லை. அதுவுமில்லாமல், அவ்விரண்டு நாடுகளுக்குமிடையேயும் நீண்ட நெடும் எல்லை உள்ளது. ஆனால் இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஒரு அடிமை நாடு. சோவியத்துடன் எவ்விதத் தொடர்பையும் பிரிட்டிஷார் தடுத்தார்கள். ஆனால் 'கம்யூனிஸ்ட் அகில'த்தில் எனக்கோர் விஷயம் தெரிய வந்தது. ஒவ்வொரு மூன்று மாதத்திற்கொரு முறை ஒரு சிறிய சோவியத் கப்பல் பாரசீக வளைகுடாவுக்கு பயணம் செய்கிறது. அது போகும்போதும், திரும்பி வரும்போதும் 'ஜெட்டா' வில் நிற்கிறது. என் கையெழுத்துடன் கடிதம் கொண்டு வருபவர்களுக்கு உதவிடுமாறு ஜெட்டாவிலுள்ள சோவியத் துணைத் தூதுவருக்கு தெரிவித்தார்கள். நான் அனுப்புபவர்களை கப்பலில் மறைத்து வைத்து, சூயஸ் கால்வாயிடம் அதிக எச்சரிக்கையாயிருந்து மாஸ்கோவுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மாஸ்கோவில் என் பணி முடிந்துவிட்டது. இந்தியாவுக்கு திரும்பிக்கொண்டிருந்தேன். இந்த விஷயத்தை லோவியா மாட்டு ஜோவாவுக்கு எப்படித் தெரிவிப்பேன்? அவளுக்கு என்னிடம் நெருக்கமிருந்தது. அவளுடைய இடத்திலிருந்து நான் எவ்வளவோ தொலைவிலிருந்தாலும், என்னைப் பார்க்க தவறாது வந்து கொண்டிருந்தாள். நான் மாநாட்டின் போது ஓட்டலில் தங்கி இருந்தபோதும், என்னைக் காண வந்தாள். என்னைத் திருமணம் செய்துகொள்ள அவள் மனப்பூர்வமாக விரும்பி முயற்சித்தாள். எனக்கும் லோவியாவிடம் பற்றுதல் தோன்றியது. அவள் சோவியத் இளம்பெண்களின் பிரதிநிதியாக விளங்கினாள். மனதில் எதையும் மறைத்துக் கொள்ளாமல் பேசுவாள். பரந்த மனமுடையவள் எப்போதும் புன்முறுவல் பூத்திருப்பாள். அவள் ஒரு தொழிலாளர் குடும்பத்தில் பிறந்தவள். அவளது நடை, உடை, பாவனைகள் மாஸ்கோ நகர நாகரீக யுவதியின் சின்னங்களாக இருந்தன.

நான் நிரந்தரமாக சோவியத் நாட்டைவிட்டே சென்றுகொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவிப்பது அவளுக்கு பேரதிர்ச்சி தரும் என்று எண்ணினேன். அதனால் ஒரு அவசர வேலையாக மாஸ்கோவை விட்டுப் போகிறேன் என்றும், என்னைத் தேடி ஓட்டலுக்கு வரவேண்டாமென்றும் லோவியாவுக்கு தெரிவித்தேன். என்னைப் பற்றி தெரிந்துக் கொள்ள விரும்பினால் பாலபோஷேவிச்சுக்கு 'போன்' செய்யலாமென்றும் கூறினேன். " நீங்கள் மீண்டும் வருவீர்களல்லவா?" என்று அவள் கேட்டாள். "எங்கள் தலைமை அலுவலகம் மாஸ்கோவில்தானே இருக்கிறது? அதனுடன் என்னுடைய தொடர்புகள் எப்போதுமே இருக்கும்" என்றேன் நான்.

பொறுப்புள்ள தோழர்கள் வந்து என்னை பெர்லினுக்கு ரயிலேற்றி அனுப்பி வைத்தனர். பயணத்தின் போது எனக்கு உறக்கமே வரவில்லை. லோவியா பற்றிய சிந்தனையே என்னை வாட்டிக்கொண்டிருந்தது. சோவியத் நாட்டில் உள்நாட்டுப் போர், புரட்சி, வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் தலையீடு போன்ற கடினமானச் சூழ்நிலையில் லோவியா மாட்டு ஜோவா உருவானவள். அவளது தந்தை 1905–1907 ஆண்டுகளில் நடைபெற்ற முதல் புரட்சி நடந்த சமயத்தில் கொல்லப்பட்டார். அவரைக் குறித்த ஞாபகமும் அவளுக்கில்லை. லோவியாவை மிகவும் கஷ்

டப்பட்டு அவளை வளர்த்து ஆளாக்கினார். பரந்த உள்ளம் படைத்த ஒருவன் லோவியாவின் வாழ்க்கைத் துணைவனாக வேண்டுமென்று அவளது தாயார் விரும்பினார். அதற்கு என்னை தகுதியுள்ளவனாகக் கருதினார். நான் ரயிலில் சுகமான இருக்கையில் உட்கார்ந்திருந்தாலும் என் சிந்தனையின் காரணமாக நிம்மதியாக பயணம் செய்ய முடியவில்லை. லோவியாவைக் குறித்த எண்ணங்களே என்னைத் தொடர்ந்து வந்தன.

1925 - ம் ஆண்டில் நான் சிகாகோவிலிருந்து நியூயார்க் சென்று கொண்டிருந்தபோது 'ஜென்னி' குறித்த சிந்தனைகளே நிறைந்திருந்தன. ஆனால் ஜென்னியுடன் என் தொடர்பு மேலோட்டமானதுதான்! ஆனால் லோவியாவுடனான தொடர்பு ஆழமானது, உணர்ச்சி வயமானது. என் காதலியிடமிருந்து நான் பிரிக்கப்பட்டுக்கொண்டிருந்தேன். இனி என்றுமே அவளை நான் பார்க்க இயலாது. அவள் எவ்வளவு வேதனையடைவாள் என்பதை நினைத்தாலே பெரும் வருத்தமாக இருந்தது. ஆனால், என்னை கடமை அழைத்துக்கொண்டிருக்கும்போது வேறு வழி இல்லை. இலட்சியத்திற்காக தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை ஒதுக்கியாகத்தான் வேண்டும். இல்லை நாம் நமது குறிக்கோளுக்கு எந்தளவு நம்மை அர்பணித்துக் கொண்டோம் என்பதை குறித்த விஷயமாகும்.

மறுநாள் காலை பெர்லினை அடைந்து முன்னேற்பாட்டின்படி அமர்த்தப்பட்ட ஓட்டலில் தங்கினேன். அங்கே ' கம்யூனிஸ்ட் அகில' த்தின் பிரதிநிதியான காரல் வில்லியம் வந்து என்னை சந்தித்தார். நான் முதலில் வெர்ஸெயில்ஸுக்குப் போக வேண்டும். அங்கிருந்து இந்தோ சீனா கடல் வழியில் பயணம் செய்யும் பிரெஞ்சுக் கப்பலில் இந்தியா சென்றடைய வேண்டும். இந்த பயணத்திற்கு முன் நான் பெர்கூஸனுக்கு 'போன்' செய்தேன். அவர் வந்து என்னை தன் வீட்டிற்கு விருந்துக்கழைத்தார். நாங்கள் இருவரும் இந்தியாவிலும், ஜெர்மனியிலும் நிலவிய அரசியல் நிலை பற்றி பேசினோம்.

இங்கிலாந்திலிருந்த கன்ஸர்வேடிவ் அரசு இந்தியாவிலுள்ள தன் அடிமை அரசுடன் சேர்ந்து 'மீரட் சதி வழக்கு' க்கு மிகப் பிரமாதமான விளம்பரம் தந்துக் கொண்டிருந்தது. தவறான நோக்கத்துடனேயே இது செய்யப்பட்டது. பெருமளவில் புரட்சி ஊழியர்கள், கைது செய்யப்பட்டனர். இதன் விளைவாக தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சி நிறைந்த பகுதியும், மத்தியதர வகுப்பைச் சேர்ந்த அறிவு ஜீவிகளும் தோன்றுகின்ற மாறுதல்களை அக்கறையுடன் கவனிக்கத் தலைப்பட்டனர். அரசியல் வகுப்புகளை நடத்தி, ஊழியர்களை உருவாக்கும் கம்யூனிஸ்ட் தொண்டர்கள் அன்று இந்தியாவில் அதிகம் பேர் இல்லை. ' கம்யூனிஸ்ட் அகில' த்தின் உத்திரவுகளை சிறைகளுக்கு வெளியே உள்ள ஊழியர்களுக்கு உடனே தெரிவிக்க வேண்டியிருந்ததால் முடிந்த அளவு விரைவாக இந்தியாவுக்கு போய்ச் சேர வேண்டுமென நான் அவசரப்பட்டேன்.

தனிப்பட்ட ஆசை அபிலாஷைகளை, வாழ்க்கை சுகங்களை கடைசியில் காதலையும்கூட துறந்து விடுவதால் புரட்சிக்கு ஏற்படும் பயன்தான் என்ன என்று யாராவது கேட்கலாம்.'மகத்தானதொரு லட்சியத்துக்கு தன் சொந்த சுகத்தை உட்படுத்துவதே மனித வாழ்க்கையின் மாபெரும் வெற்றி' என்று இதை சித்தாந்தமாக கூறலாம். நான் அமெரிக்காவை விட்டுப் புறப்படும்போது, ஒரு புதிய உலகத்தை படைக்கப்போகும் சர்வதேச புரட்சி இயக்கத்தின் ஒரு உறுப்பினனாக வேண்டுமென முடிவு செய்து கொண்டேன். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உலக

புரட்சி இயக்கத்தின் தந்திரோபாயங்கள் மாறின. சர்வதேச புரட்சி மையமாக விளங்கிய ' கம்யூனிஸ்ட் அகில'த்தை ரத்து செய்து விட்டனர். ஆனாலும் குறிக்கோள் மட்டும் பழையதே தொடர்ந்து கொண்டிருக்கிறது: மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழித்துக் கட்டுவதே அந்த குறிக்கோள்!

இந்திய துணைக் கண்டத்தில் சுதந்திர இயக்கத்திற்கும், புரட்சி இயக்கத்திற்கும் என் பங்கைஅது எவ்வளவு சிறியதாக இருந்தாலும்செலுத்தினேன். என் தாய்நாட்டின் நலன்களுக்காக அயல் நாடுகளில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டேன். அது மட்டுமல்ல; இந்தியாவுக்கு திரும்பி வந்த பிறகு என் முன் இரண்டு லட்சியங்களை வைத்துக் கொண்டேன். 1) இந்தியாவில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சமரசம் இல்லாத போராட்டம் நடத்த வேண்டும்; 2)துணைக் கண்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியை அமைக்க வேண்டும்.

மீரட் சதி வழக்கிலிருந்து தப்பித்துக் கொண்ட பிறகு இருமுறை மாஸ்கோ சென்றேன். அங்கே என் கடமைகளை முடித்துக்கொண்டு இந்தியாவுக்கு திரும்பி வந்தேன். 1930 ம் ஆண்டு டிசம்பர் 8ந் தேதியன்று மீண்டும் மாஸ்கோவிலிருந்து புறப்பட்டேன். பிரிட்டிஷ் இந்திய அதிகாரிகளின் கைகளில் சிக்கினால் நீண்டசிறைவாசம் அனுபவிக்க நேருமென்பது எனக்குத் தெரியும்.

இந்தியாவுக்கு திரும்பி வந்து என் கருத்தையொத்தவர்களுடன் சேர்ந்து பாடுபட்டேன். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தோழர்களுடன் தோளோடு தோள் நின்று செயலாற்றினேன். கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்ட பணியாற்றினேன். அத்துடன் தொழிற்சங்க இயக்கத்திலும் பங்கு கொண்டேன். தொழிலாளர் வேலை நிறுத்தங்களிலும் சுறுசுறுப்பாக இயங்கினேன்.

அன்று தொழிலாளர் நலனுக்கு விரோதமான ' தொழிற் தகராறு சட்ட' த்தை பிரிட்டிஷ் ஆட்சியாளர் கொண்டு வந்தனர். அதற்கு எதிராக தொழிலாளர் வேலை நிறுத்தத்தை முன்நின்று நடத்த நானே கட்சியின் பம்பாய் மாநிலக் கமிட்டியை வற்புறுத்தினேன். நாட்டிலேயே முதன் முதலாக பம்பாயிலேயே அந்த சட்டத்தை அமுலாக்கினார்.

இதே போல் ஏகாதிபத்திய யுத்தத்திற்குள் இந்தியாவை பிரிட்டிஷார் இழுத்துவிட்டனர். அதை எதிர்த்தும் பம்பாய் தொழிலாளர்கள் ஒரு நாள் வேலைநிறுத்தம் செய்தனர். அந்த வேலைநிறுத்த விஷயத்திலும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை ஊசலாடியது. அன்றைய கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பி.ஸி.ஜோஷி அவ்வேலை நிறுத்தத்திற்கு அவ்வளவு சாதகமாக இல்லை. நானே அவருடைய கருத்துக்கு மாறாக வேலை நிறுத்தத்திற்காதரவாக பம்பாய் கமிட்டியை வற்புறுத்தி செய்வித்தேன்.

இந்திய சுதந்திர இயக்கத்திற்கும், புரட்சி இயக்கத்திற்கும் நான் தனிநபராக செய்த பணி என்ன? அந்த காலத்தில் ஏகாதிபத்தியம் நாட்டை ஆட்சி புரிந்த காலத்தில் சோவியத் யூனியனுடன் தொடர்பேற்படுத்திக் கொள்ளவும், கடிதப் போக்குவரத்தை வைத்துக் கொள்ளவும் யாரையும் அனுமதிப்பதில்லை. 1920 ல் இந்தியாவில் 'ஹிஜாரத்' இயக்கம் நடைபெற்றது. அப்போது ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் சென்றவர்களில் சிலர் அப்படியே சோவியத் யூனியனிலுள்ள தாஷ்கண்ட் போய்ச் சேர்ந்தனர். அவர்கள் இந்தியாவுக்குத் திரும்பியதும் கைது செய்யப்பட்டு பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டனர். நான் நமது இயக்கத்திற்கும், 'கம்யூனிஸ்ட் அகில'த்துக்குமிடையே ரகசிய மொழியிலே

தொலைபேசி தொடர்பினை ஏற்படுத்தினேன். அங்கிருந்து ரகசிய அறிக்கைகளும், தடைசெய்யப்பட்ட புத்தகங்களும் இந்தியாவுக்குள் வர ஏற்பாடுகள் செய்தேன். அப்போது 'கம்யூனிஸ்ட் அகில'த்தின் பிரதிநிதி ஒருவர் இந்தியாவுக்கு வந்தார். அவருக்கும், தலைமறைவுத் தோழர்களுக்குமிடையே தொடர்புகளை ரகசியமாக ஏற்படுத்தினேன். இதை யாராலும் கண்டு கொள்ள முடியவில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்புள்ள எத்தனையோ மாணவர்கள் சோவியத் நாடு சென்று புரட்சி நடவடிக்கைகளில் பயிற்சி பெற்று வருவதற்காக பிரயாண ஏற்பாடுகளை நான் செய்தேன். அரசியல் பயிற்சி வகுப்புகளை நடத்தி பம்பாய் பஞ்சாலைகளில் வேலை செய்த முஸ்லிம் தொழிலாளருக்கு மார்க்ஸீயத்தை அறிமுகம் செய்தேன். இரண்டாம் உலகப் போரின் போது நமது கட்சி ' மக்கள் யுத்தம்' என்றும் கோஷம் தந்த காலத்தில், பம்பாயிலுள்ள நமது கட்சியின் அலுவலகத்தின் மீது பார்வர்ட் பிளாக் குண்டர்கள் தாக்குதல் தொடுத்தார்கள். அந்த நாட்களில் இந்த முஸ்லிம் பஞ்சாலைத் தொழிலாளரே கைகளில் தடிகளை ஏந்தி கட்சி அலுவலகத்தைப் பாது காத்திட முனைந்தார்கள். 1928ல் நான் பம்பாய் திரும்பிய பின்' மதன் புரா' பகுதியிலிருந்தேன். அங்கே இருந்த முஸ்லிம் தொழிலாளரே கட்சியைக் காக்க நின்றார்கள்.

நான் எளிமையாக வாழ்ந்தேன். தன்னலமில்லாமல் இருந்தேன். எவ்விதமான சொந்த ஆசை அபிலாஷைகளுக்கும் உட்படாமல் லட்சியத்திற்கு என்னை அர்பணித்துக்கொண்டு பணியாற்றினேன். சென்னை, பம்பாய் நகரங்களில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நீதிமன்றங்களில் எனது அரசியல் கருத்துக்களை தெளிவாக அறிவித்து அவற்றை பரப்ப உதவினேன். சிறைகளிலும் என் முற்போக்குக் கருத்துக்களை பரப்பத் தவறவில்லை. அங்கேயும் அரசியல் போராட்டங்களை நடத்திட பின் வாங்கவில்லை. பல்வேறு சமயங்களில், நாட்டின் பல பகுதிகளில் நடைபெற்ற கூட்டங்களில் என் எண்ணங்களை தெளிவாகவும், அச்சமின்றியும் வெளியிட்டிருக்கிறேன். என் வாழ்க்கையும், நடவடிக்கைகளும் எத்தனையோ பேரை கவர்ந்திருக்கின்றன. "புரட்சியின் பெயரைக் கேட்டு உலகம் நடுநடுங்கட்டும்! கம்யூனிஸ்டுகள் தமது எண்ணங்களை மறைத்துக் கொள்ள மாட்டார்கள். தற்போதைய சுரண்டல் அமைப்பை வன்முறையால் தகர்த்தெறிவதன் மூலமே தமது குறிக்கோள் நிறைவேறுமென்று அவர்கள் பகிரங்கமாக அறிவிப்பர்" என்னும் சித்தாந்தத்திற்கு நான் என்றும் கட்டுப்பட்டு வாழ்ந்தேன்.

1938–42 ம் வருடங்களில் நான் கட்சியின் பம்பாய் மாநிலக் கமிட்டி உறுப்பினனாக தேர்ந்தெடுக்கப்பட்டேன். எங்கள் முயற்சியின் விளைவாக மாநில காங்கிரஸ் கட்சியில் ஒரு இடதுசாரிக் குழு தோன்றியது. அக்குழு எப்போது கூட்டம் நடத்தினாலும் என்னை தலைவராகவோ, சொற்பொழிவாளனாகவோ அழைத்துக் கொண்டிருந்தது.

நான் பெர்லின்லிருந்து புறப்பட்டபோது பெர்கூஸனும், அலீஸும் என் நலன்களைத் தெரிவித்து அடிக்கடி கடிதம் எழுதச் சொன்னார்கள். அவர்கள் முகவரிக்கு கடிதம் போட்டால் அது தணிக்கையாளரின் கைகளில் விழுமென்பதால் ஹெல்டா முகவரிக்கு எழுதும்படி கோரினார்கள். நான் நலமாக பம்பாய் வந்து சேர்ந்தேன். அங்கிருந்து சென்னை வந்த விவரத்தை அடுத்த பகுதியில் கூறியுள்ளேன்.

பஞ்சாபில் பிறந்து வளர்ந்த எனக்கு தென் இந்தியாவைப் பற்றி கொஞ்சமும் தெரியாது. நான் பழைய விஷயங்களையும், சரித்திரத்தை

யும் தெரிந்து கொள்ள நூல்நிலையத்திலிருந்து பல புத்தகங்களை தரு வித்து படித்தேன். இளம் அரசியல் ஊழியர்களுடனும், அறிவு ஜீவிகளு டனும், கல்வியாளர்களுடனும், பகிங்காம் மில்லில் வேலை நிறுத்தத்தை முன் நின்று நடத்திய தொழிலாளர் தலைவர்களுடனும் நான் பேசினேன். தென் இந்தியாவின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளை ஆராய்ந்தேன். அது காந்தி-இர்வின் உடன்பாடு ஏற்பட்ட காலமாகும். அதை காங்கிரஸ் சாதித்த மிகப் பெரிய சாதனையாக வர்ணித்துக் கொண்டிருந்தார்கள். சுயநலக்காரர்களின் பிரதிநிதிகளாக விளங்கிய காங் கிரஸாரின் உண்மை சொரூபத்தையும், பணக்காரர்களின் ஆதரவாளர்க ளின் எண்ணங்களையும், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வெறியர்களின் அடிவ ருடிகளின் நடவடிக்கைகளையும் நான் புரிந்து கொண்டேன்.

தென் இந்தியாவில் சமூக, பொருளாதார நிலைமைகளை விவரித்து நான் ஒரு கட்டுரை எழுதினேன் 18 பக்கங்களில் 'டைப்' செய்யப்பட்ட அக்கட்டுரையை தோழர் ஜெயராம் மாஸ்கோ சென்றுகொண்டிருந்த போது பெர்கூஸனுக்கு அனுப்பி வைத்தேன்.

1932 மே எட்டாந்தேதி என்னை கைது செய்தனர். பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரின் முதல் நினைவு நாளன்று தமிழில் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டோம். அதற்கு ஒரு வழக்கு தொடர்ந்தனர். 1932 'மே' தினத்தன்றும் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டோம். அதற்கொரு வழக்கு! மொத்தம் மூன்று வழக்குகள் தொடர்ந்து, நீண்ட கால விசார ணைக்குப் பிறகு மூன்று ஆண்டு சிறைத் தண்டனை விதித்து என்னை சேலம் சிறைக்கனுப்பினர்.

1932-ம் ஆண்டு என்னைப் பார்க்க டாக்டர் துவாரகநாத் சேலம் சிறைக்கு வந்தார். அப்போதுதான் ஜெர்மனியில் சர்வாதிகாரி ஹிட்லர் ஆட்சிக்கு வந்திருப்பது தெரிந்தது. ஜெர்மன் மக்கள் அடைந்த இம்மா பெரும் தோல்வியைக் கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். என்னுடைய அருமை ஜெர்மன் நண்பர்கள் பெர்கூஸன், அவரது மனைவி அலீஸ், மைத்துணி ஹெல்டா ஆகியோரின் நலத்தை எண்ணி கலவரமடைந்தேன்.

பஞ்சாபில் மிகச் சிறிய கிராமமொன்றில் பிறந்தவன் நான். ஹெல்டா தொழிற்துறையிலே முன்னேறிய ஜெர்மனியில் பிறந்தவள். பெர்கூஸனின் தாயார் ஜப்பானியப் பெண்மணி. தந்தையோ டென்மார்க் நாட்டவர். சீனக் கடற்கரைத் துறைமுகங்களில் திரியும் கப்பலில் 'கேப்டன்'. அவர் களிருவரும் தம்பதி ஆயினர். பெர்கூஸன் சீனாவின் ஷாங்காய் நகரில் பிறந்து வளர்ந்தார்.

பரோடின் ஒரு வயோதிக கம்யூனிஸ்ட். அவரை சோவியத் யூனி யனிலிருந்து கோமின்டாங் கட்சியுடன் தொடர்பு கொள்ள சீனாவுக்கு அனுப்பி வைத்தனர். அவர் தன்னை மறைத்துக் கொள்ள ஷாங்காயில் ஒரு வணிக நிறுவனத்தை ஆரம்பித்தார். அதில் வேலை செய்ய ஒரு உதவியாளருக்காக பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார். பெர்கூஸன் உதவியாளராக எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர் மிகவும் நம்பிக்கை யானவராதலால் பரோடினின் அந்தரங்கச் செயலாளரானார்.

'மஞ்சு' அரசர்களின் இறுதி நாட்களில் ஏகாதிபத்தியவாதிகள் சீனாவை நிர்ப்பந்தப்படுத்தி பல அடிமை உடன்படிக்கைகளில் கையெ ழுத்திடச் செய்தனர். சீன தேசியத் தலைவர் டாக்டர் ஸன்யாட்சென் இதற்கு எதிராக போராடத் தொடங்கினார். சீனாவின் அரை காலனி யாதிக்க நிலையை ஒழித்து அதை சுதந்திர நாடாக்குவதற்காக அவர் பல்வேறு நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். 1840 ம்

ஆண்டில் நடந்த அபினி யுத்த காலத்திலிருந்து சீனா மீது திணிக்கப்பட்ட அவமானகரமான ஒப்பந்தங்களை ரத்து செய்ய அவர் முயற்சிக்கவாரம்பித்தார்.

ரஷ்யாவில் அக்டோபர் புரட்சிக்கு பின்னர் ஏகாதிபத்தியவாதிகளின் ஒத்துழைப்புடன் எதிர் புரட்சியாளர்கள் உள்நாட்டுப் போர் புரிந்தனர். பிறகு ஏகாதிபத்தியவாதிகளே நேரிடையாக தலையிட்டனர். சோவியத் யூனியன் இந்த எதிர்ப்புகளையெல்லாம் வெற்றிகரமாக சமாளித்து அமைதியை நிலைநாட்டியது. ஸன்யாட்ஸென், லெனினை சந்தித்து பேசினார். அவருடைய உதவியையும் கோரினார். தேசியம், ஜனநாயகம், சோஷலிசம் என்னும் மூன்று குறிக்கோள்களை ஸன்யாட்ஸென் முன் வைத்தார். தேசிய விடுதலைக்காக போராடவிருக்கும் சீனாவுக்குநிலப்பிரபுத்துவ, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் நடத்தவிருக்கும் சீனாவுக்கு சகல உதவியும் செய்ய லெனின் மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டார். லெனினும், ஸன்யாட்ஸென்னும் காலமான பிறகு அவர்களிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை அமலாக்க, ஸ்டாலின் பரோடினை சீனாவுக்கு அனுப்பி வைத்தார். அப்போது சோவியத் பல கஷ்டங்களை எதிர் கொண்டிருந்தது. ஆனாலும், உலக முழுவதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுக்கு உதவுவது தன் கடமையாக வைத்துக் கொண்டிருந்தது. சோவியத் யூனியன் ஏகாதிபத்திய எதிர்ப்பாளருக்கு ராணுவ பயிற்சியும் அளித்து வந்தது. ஆயுதங்களும், பல்வேறு பொருட்களும் உதவி வந்தது சீனாவின் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த ராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சியளித்திட ' மிலிடரி அகாடமி' யொன்றை நிறுவினர். கோமிண்டாங் மாணவர்களின் கல்வி வசதிக்காக மாஸ்கோவில் ' ஸன்யாட்ஸென் பல்கலைக் கழக'த்தை நிறுவியதையும் ஏற்கனவே குறிப்பிட்டேன். ஆனால் விவசாயிகள், தொழிலாளர் குடும்பங்களிலிருந்து வந்தவர்களுக்கு கிழக்கத்திய பல்கலைக் கழகத்தில் பயிற்சியளித்தனர். கோமிண்டாங் தலைவர்களிடையே பரோடினுக்கு நிறைய செல்வாக்கு இருந்தது. அவர்களுடைய ஆலோசகருங்கூட! சோவியத் யூனியன் கோமிண்டாங்குக்கு சிறப்பாக உதவி புரிந்து வந்ததால், கோமிண்டாங் படைகள் நல்ல வலிமையை பெற்றனர். அதனாலேயே வடசீனாவில் அவை யுத்த பிரபுக்களை சுலபமாக தோற்கடிக்க முடிந்தது. சௌஎன் லாய் போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்களின் தலைமையில் தொழிலாளர்கள் ஷாங்காய் நகரைக் கைப்பற்றி சியாங்கேஷேக்கிடம் ஒப்படைத்தனர்.

அப்போது ஷாங்காய் துறைமுகத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளின் பீரங்கி கப்பல்கள் இருந்தன. நகரப் போலீஸும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் போலீஸ்தான். நகரில் அவர்களுக்கொரு ஆயுதக்கிடங்கும் இருந்தது. அக்காலத்தில் பல ' கம்யூனிஸ்ட் அகில' தலைவர்களும், ' புரொஃபின்டர்ஸ்' தலைவர்களும் ஷாங்காயில் இருந்தனர். பழைய இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் எம்.என்.ராய்கூட அங்கேயே இருந்தார். ராஜா மகேந்திர பிரதாப்புடன் சென்ற ' கதர்' கட்சித் தலைவர்கள் சிலரும் ஷாங்காயில் இருந்தனர். ஐக்கிய முன்னணிப் படைகளை எதிர்க்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் ஷாங்காங்கிலிருந்து பஞ்சாப் படையைக் கொண்டு வந்தனர். சீன மக்களின் சுதந்திரம் போராட்டத்தில் தலையிட வேண்டாமென கேட்டுக்கொண்டு ' கதர்' கட்சித் தலைவர்கள் பஞ்சாபி மொழித் துண்டுப் பிரசுரங்களை பஞ்சாப் படைவீரர்களிடையே வினியோகம் செய்தனர். அவர்களில் ஒரு சீக்கிய வாலிபனைப் பிடித்து தூக்கிலிட்டனர்.

மத்திய சீனத்தின் ஒரு பெரிய நகரம் ' நான்கிங்' அது ' யாங்ட்சி' நதியின் இருக்கரைகளிலும் பரவியிருக்கிறது. ஏகாதிபத்தியவாதிகளுக்கும், ஷியாங்கேஷேக்கின் பிற்போக்காளருக்குமிடையே உடன்பாடு போன்ற தொன்று ஏற்பட்டாற்போல் தோன்றுகிறது. ஐக்கிய முன்னணிப் படைகள் நான்கிங் நகரை அடைந்ததுமே ஜப்பான், அமெரிக்க போர்க்கப்பல்கள் தாக்கத் துவங்கின. அந்த தாக்குதல் ஒரு அறிகுறி போல் இருக்கிறது. உடனே சியாங்கேஷேக்கின் படைகள் கம்யூனிஸ்டுகளையும், அவர்களின் அனுதாபிகளையும் அலட்சியமாகக் கொன்று குவிக்க வாரம்பித்தன. அதனால், 'கம்யூனிஸ்ட் அகிலம்', 'புரொஃபின்டர்ன்' ஏகாதிபத்திய எதிர்ப்ப லீகைச்' சேர்ந்த அனைவரும் கஙகள் உயிர்களைக் கைகளில் பிடித்துக்கொண்டு, நான்கிங் நகரை விட்டு ஓட வேண்டியதேற்பட்டது.

இவ்வளவு பெரிய சதி வேலை நடந்து கொண்டிருந்த போது பொரிடன் அதைத் தெரிந்துகொள்ளாமல் போனது 'கம்யூனிஸ்ட் அகிலம்' மையத்திற்கு பெரும் அதிர்ச்சியை அளித்தது. இந்த துயர நிகழ்ச்சிகள் பற்றி விசாரித்து, ஐக்கிய முன்னணி தோல்வியடைந்ததற்கான காரணங்களை தெரிந்துகொள்ள ' கம்யூனிஸ்ட் அகிலம்' ஒரு மத்திய கட்டுப்பாடு கமிஷனை அமைத்தது.

அந்த சூழ்நிலையில் சீனகம்யூனிஸ்ட் கட்சியுடன் பெர்கூஸன் பகிரங்கத் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள இயலவில்லை. அவர் பொரிடின் மூலமாகவே கோமிண்டாங்குடன் தொடர்பு கொண்டிருந்தார். ஆனால் அவர் கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்து எவ்வித ஒத்துழைப்பும் எதிர்பார்க்க முடியாது. மோசமான சூழ்நிலையில் சிக்குண்டிருக்கும் பொரிடினுக்கு அவர் இக்கட்டான நிலைமையை உண்டாக்க விரும்பவில்லை.

பெர்கூஸனும், நானும் முதன்முதலில் 1927-ம் வருடத்தில் மாஸ்கோவில் சந்தித்து நண்பர்களானோம். அவரது சகோதரி அமெரிக்காவிலிருந்தார். அதனால் அங்கே செல்ல அவர் ' கம்யூனிஸ்ட் அகில' த்தின் உதவியை நாடினார். அவர் திடீரென்று ஒரு நாள் மறைந்து விட்டார். அந்தக் காலத்தில் ரகசியப் பயணம் செய்பவர்களைப் பற்றிய விவரம் யாருக்கும் தெரிவிக்கமாட்டார்கள். ஆனால் பெர்கூஸன் எப்படியோ ஒரு கப்பலில் பிரிட்டன் வந்து சேர்ந்தார். ஆனால் சீனாவில் அவருடைய நடவடிக்கைகள் பற்றி அறிந்திருந்த பிரிட்டிஷ் துப்பறியும் நிறுவனம் அவரை ஜெர்மனிக்கு அனுப்பி வைத்தது. ஏகாதிபத்திய எதிர்ப்பு லீகுடன் அவருக்கு சற்று தொடர்பிருந்தது. அவர் நேராக 'லீகின்' அலுவலகம் சென்றார், வீரேந்திரநாத் சட்டோபாத்யாய(கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் சகோதரர்) 'லீகி'ன் செயலாளர். அவர் பெர்கூஸனை அலுவலக உதவியாளராக நியமித்தார்.

1928ல் நானும், ஸம்ஸில் ஹீதாவும் இந்தியாவுக்கு திரும்பிக் கொண்டிருந்தபோது ஜெர்மனியில் 'லீக்' அலுவலகம் சென்றோம். அங்கே பெர்கூஸன் தென்பட்டார். எனக்கு பெரிதும் வியப்பேற்பட்டது. "உலகம் மிகச் சிறியது. மீண்டும் ஒரு நாள் நாம் சந்திப்போம்" என்றார் அவர். அந்த பெர்கூஸனும், அவருடைய மனைவியும் பெர்லின் நகரில் எதிர்பாராமல் காணப்பட்டார்கள்.

பெர்கூஸனும், அவரது மனைவியும், மைத்துனி ஹெல்டா புஷ்ஷும், நானும் வெவ்வேறு சூழ்நிலைகளில் வளர்ந்ததோடு எங்கள் எல்லோரையும் ஒன்றிணைந்த அம்சம் எது? தொழிலாளி வர்க்க சர்வதேசியமே அவ்வம்சம்! பட்டாளிகள் அரசோச்சும் ஜெர்மானியிலோ, சுதந்திர இந்தியாவிலோ நாம் மீண்டும் சந்திப்போமென ஹெல்டாவுக்கு நான்

கடிதம் எழுதியிருந்தேன். இன்று ஜெர்மனியின் கிழக்குப் பகுதியில் தொழிலாளரின் ஆட்சி நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தியா முதலில் இரண்டு நாடுகளானாலும், பின்னர் மூன்றானாலும் சுதந்திரத்தை சாதித்துக் கொண்டது. இம்மூன்றிலும் கூட பாகிஸ்தான் மிகவும் மோசமான நிலைமையிலிருக்கிறது. எப்போதும் ராணுவ ஆட்சியின் கீழே அமுங்கிக் கிடக்கிறது. அங்குள்ள மக்கள் பிரஜா உரிமைகளோ, மனித உரிமைகளோ இன்றி அடிமை வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனியில் நாஜி சர்வாதிகாரம் ஆயிரக்காணக்கானவர்களை படுகொலை செய்தது.. இரண்டாம் உலகம் போரில் அது அழிக்கப்பட்டு, இன்றைக்கு ஐம்பதாண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் பெர்கூஸனும், அலீஸும் ஹெல்டாவும் என்நினைவினின்று நீங்கவில்லை. அவர்கள் என்ன ஆனார்களோ என்பதும் எனக்கு தெரியாது. அவர்கள் இன்று உயிரோடிருக்கிறுர்களோ இல்லையோ என் எஞ்சியுள்ள வாழ்நாளிலோ என்றாவதுஅவர்களை சந்திப்பேனு? அவர்களுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளும் அபூர்வ வாய்ப்பாவது கிடைக்குமா? என் வாழ்க்கை பூராவும் புரட்சி நடவடிக்கைகளிலேயே மூழ்கிக் கொண்டிருந்தேன். நானும் மனிதன்தானே! என்னுள்ளும் உணர்ச்சிகள் அலை பாயத்தான் செய்கின்றன. என் உள்ளத்திலும் மென்மையான பகுதி இருக்கத்தான் செய்கிறது. வாழ்க்கையில் என் உள்ளத்தைக் கவர்ந்தவர்கள் அனைவரும் இன்றும் என் நினைவு மாளிகையிலே உலா வந்து கொண்டுதான் இருக்கிறார்கள். கருணை உள்ளமும், பரந்த மனமும் கொண்ட மாட்ரஜோவாவிற்கும் விடை கொடுக்கத்தான் செய்தேன். அப்போது அவள் கூறிய, 'நீங்கள் இந்த உலகத்து மனிதரல்ல!' என்னும் சொற்கள் இன்றும் என் செவிகளில் எதிரொலித்துக் கொண்டு தானிருக்கின்றன.

இது 1930 லிருந்து 1932 ஏப்ரல் மாதம் நடந்தேறிய என் வாழ்க்கைக் கதையாகும்.

முதல் தடவையாக நான் 1932 'மே'மாதத்தில் சென்னையிலே கைதானேன். மீரட் சதி வழக்கிலிருந்து நான் தப்பித்துத்திரிவதை ஏற்கனவே சொல்லி யிருக்கிறேன். அவ்வழக்கு முடிவுறுந்தறுவாயில் இருந்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் அதை இன்னும் நீட்டிக்க விரும்பவில்லை போலும்; தன் எல்லைக்குள்ளேயே என் விஷயத்தை கவனிக்குமாறு மத்திய அரசு சென்னை மாநில அரசுக்குக் கூறியதாகத் தெரிகிறது.

டாக்டர் சாரி பற்றி இங்கே சற்று கூறுகிறேன். மருத்துவ மாணவர்களின் வாசகர் வட்ட உறுப்பினரவர். மருத்துவப் பட்டம் பெற்று அவர் ஜெ. ஜெ. மருத்துவமனையில் அவுஸ் சர்ஜனாக சேர்ந்தார். 'கம்யூனிஸ்ட் அகில'த்தின் பிரதிநிதிகளுக்கும், தலைமறைவுத் தோழர்களுக்கும், கட்சிக்கும் அவர் எவ்வளவோ சேவை செய்தார். ஹாம்பர்கில் நான் செய்த ஏற்பாட்டின்படி, ஜெர்மனிய கப்பல் மாலுமிகள் தடை செய்யப்பட்ட புத்தகங்களை இந்தியாவில் டாக்டர் சாரியிடம் சேர்ப்பித்தார்கள். அவர் அவற்றை கட்சியிடம் சேர்ப்பித்தார். பின்னர் அவர் அறுவை சிகிச்சையில் எம். எஸ் பட்டமும் பெற்றார். இரண்டாம் உலகப் போர் பாசிஸ்ட் போராக மாறியதும், நமது கட்சி அதனை ஆதரித்தது. அப்போது அவர் ராணுவத்தில் 'கமிஷன் ஆபிச'ராக சேர்ந்தார். போருக்குப் பின்னர் டாக்டர் சாரி ஐரோப்பா சென்றார். இப்போது அவர் உயிரோடிருக்கிறாரோ, இல்லையோ எனக்குத் தெரியாது.

# தென் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றம்

அது 1931 ம் வருடம் பிப்ரவரி மாதம். நான் சோவியத் யூனியனிலிருந்து திரும்பி வந்து பம்பாயில் இறங்கினேன். இப்போது இரண்டாம் முறை சோவியத் நாட்டிலிருந்து வந்தேன். மீரட் சதி வழக்கில் நான் ஒரு குற்றவாளி. அரசின் கைக்கு சிக்காமல் தப்பித்துக்கொண்டிருந்தேன். தலைமறைவாக இருந்து வந்தேன்.

பம்பாய் சேர்ந்ததும் டாக்டர் சாரியை சந்தித்தேன். அவர் மருத்துவக் கல்லூரி மாணவர்களின் வாசகர் வட்ட உறுப்பினர். அவர் தொழில் தொடங்கிய பிறகு எங்களுக்கெல்லாம் தொடர்பாளராக இருந்து வந்தார். கட்சி இயக்கத்திற்கு சம்பந்தப்பட்டவர்கள் வெளிநாடுகளிலிருந்து எவர் வந்தாலும் தோழர் சாரியின் மூலமாகவே தலைமறைவாக இருப்பவர்களை சந்திக்க வேண்டும்.

ஒரு நாள் இரவில் பம்பாய் 'மாதுங்கா' பகுதியில் தோழர் பி. டி. ரணதிவேயை சந்திக்க ஏற்பாடு செய்தனர். சென்ற முறை 1929 செப்டம்பரில் நான் பம்பாய் வந்திருந்த போது ரணதிவேயும், எஸ். வி. தேஷ்பாண்டேயும் என்னை ரகசியமாக சந்தித்துப் பேசினர். இம்முறை நான் வந்த சமயத்தில் பம்பாய் கட்சிக் குழுவில் கருத்து வேற்றுமைகள் நிலவுவது போல் தெரிந்தது. பி. டி. ஆர். இவ்விஷயத்தை எனக்கு தெரிவிக்கவில்லை.

சுற்றுப்புறமும் இருள் சூழ்த்திருக்க நாங்கள் ஒரு மாடி வீட்டின் பால்கனியில் அமர்ந்தோம். வெளிநாடுகளில் இருந்தபோது நான் செய்த பணிகளையெல்லாம் பி. டி. ஆருக்கு விவரித்தேன். நான் திரும்பி வரும்போது எனக்கு விடையளித்து லாஜவிஸ்கி, 'கட்சியை வளர்க்க எல்லா முயற்சியும் செய்யுங்கள். கட்சி அமைப்பில்லாமல் நீங்கள் ஒன்றுமே செய்ய முடியாது' என்று கூறியதையும் பி. டி. ஆரிடம் சொன்னேன்.

மாஸ்கோவில் கிழ் நாட்டு பல்கலைக் கழகத்தில் இந்திய மாணவர்களை அனுப்பி பயிற்சி அளிக்கச் செய்ய வேண்டுமென்பது என் விருப்பம். இவ்விஷயத்தை கவனிக்கும் 'கம்யூனிஸ்ட் அகில'த்தைச் சேர்ந்த தோழர்

களுடன் கலந்து பேசி அதற்கான ஏற்பாடுகளை செய்து முடித்தேன்.

1927ல் சீனாவில் கோமின்டாங் படை சியாங்கேஷேக் தலைமையில் புரட்சிக்கு துரோகமிழைத்து ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகளையும், ஆதரவாளர்களையும் படுகொலை செய்தது. இதற்கு பிறகு மத்தியதர வர்க்க மாணவரகளை கீழ்நாட்டு பல்கலைக் கழகத்தில் சேர்ந்துக் கொள்ளுவதில் ஆர்வம் காட்டவில்லை. இயக்க அனுபவத்துடன் தமது வர்க்க அவலட்சணங்களை விட்டொழித்தவர்களையே 'கம்யூனிஸ்ட் அகிலம்' தேர்ந்தெடுக்க வாரம்பித்தது. உழைப்பாளர்கள் வர்க்கத்திலிருந்து மட்டுமே மாணவர்களை தேர்ந்தெடுத்து அனுப்புமாறு அவர்கள் எனக்கு யோசனைக் கூறினார்கள். ஆனால் அக்காலத்தில் சாதாரண மக்களுக்கு 'பாஸ்போர்ட் ' கிடைப்பது மிகவும் கஷ்டம்.

கட்சி ஊழியர்களை தயார் செய்வதற்கு 'கம்யூனிஸ்ட் அகிலம்' போதிய உதவி இந்தியாவுக்கு செய்வதில்லை நான் குறை கூறுவேன். தாம் எம். என் ராய் மூலம் இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்க வளர்ச்சிக்கு எவ்வளவோ பணம் செலவழித்ததாக அவர்கள் கூறுவார்கள். இந்தியாவில் இயக்க வளர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை என்னையே கூறும்படி அவர்கள் சொல்வார்கள்.

எனக்கு கடல் பயணத்தில் நல்ல அனுபவம் இருக்கிறது.

பாரசீக வளைகுடாவிலிருந்து திரும்பி செல்லும் ஏதாவது சோவியத் கப்பல் 'ஜெட்டா'வுக்கு வந்து சேர்ந்ததும் எனக்கு தெரிவிக்கப்பட வேண்டும். அதற்கான சில சமிக்ஞைகள் ஏற்படுத்தப்பட்டன. 'கம்யூனிஸ்ட் அகிலத்தில் நான் சங்கேத மொழியும் கற்றுக் கொண்டேன். கப்பல் வந்து சேர்ந்த விஷயம் தெரிந்ததுமே நான் மாணவர்களை அங்கே சேர்ப்பிக்க வேண்டும். அப்பொறுப்பு என்னுடையது. அங்கிருந்து அம்மாணவர்களை சோவியத் கப்பல்களில் சோவியத் நாட்டில் கொண்டு போய் சேர்ப்பிக்க வேண்டும்.

நாங்கள் விவரங்களை விவாதித்தோம். அப்போது சூயஸ் கால்வாய் பிரிட்டிஷாரின் வசமிருந்தது. அங்கே நமது மாணவர்களின் குட்டு வெளிப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். 'ஜெட்டா'விலிருந்த சோவியத் தூதுவருக்கும் இந்த விஷயங்களை தெரிவித்தோம்.

நான் இவ்வாறு அனுப்பி வைக்கும் மாணவர்கள் மாஸ்கோவிலுள்ள கீழ்நாட்டு பல்கலைக் கழகத்தில் பயில்வார்கள்.

இந்த திட்டத்தை 'கம்யூனிஸ்ட் அகிலம்' ஆமோதித்தது. நான் வேறு சில யோசனைகளும் கூறினேன். அவற்றையும் அவர்கள் ஆமோதித்தார்கள்.

அப்போது இந்தியாவில் காந்திஜீயின் உப்பு சத்தியாகிரகம் நடைப்பெற்று வந்தது. மக்கள் கடலலைபோல் கிளர்ந்தெழுந்து கொண்டிருந்தார்கள். அந்த சூழ்நிலையை நாங்கள் பயன்படுத்திக்கொள்ளாமல் போய் விட்டோம். அதற்கான சக்திவாய்ந்த கம்யூனிஸ்ட் கட்சி நாட்டில் இல்லை. நான் அந்த சமயத்தில் மாஸ்கோவில் இருநதேன். இந்திய சுதந்திர இயக்கத்தில் 'கம்யூனிஸ்ட் அகில'மும், புரொஃபிண்டர்னும் அக்கறை காட்டுவதில்லை என்பது என் விமர்சனம். ஒரு தடவை எனது விமர்சனம் தீவிரமடைந்தபோது லாஜவிஸ்கி, "புரட்சி நடந்தேற வேண்டியது இந்தியாவில் மாஸ்கோவிலல்ல!" என்றார். இறுதியில் என்னதான் செய்ய வேண்டுமென்று என்னைக் கேட்டார்கள். முடிந்தளவு அதிக எண்ணிக்கையில்கட்சி ஊழியர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டுமென கோரினேன். அமலாக்க முடிந்த எந்த திட்டத்தையும் பரிசீலிப்ப

தாக அவர்கள் உறுதி அளித்தார்கள்.

அந்த உறுதிமொழியின் பலனே மேற்கூறிய ஏற்பாடுகள்.

இவ்விவரங்களையெல்லாம் தோழர் பி. டி. ஆரிடம் கூறினேன். மற்ற தோழர்களுக்கும் தெரிவிக்கச் சொன்னேன். மாஸ்கோவுக்கு அனுப்ப படித்த தொழிலாளர்களைத் தேர்ந்தேடுக்கும்படி கூறினேன்.

நான் பம்பாய் வந்திறங்கியபோதே கம்யூனிஸ்ட் அகிலத்தின் பிரதிநிதி ஒருவர் அங்கே இருந்தார். அவர் பெயர் லென்ட் தனடாக்காரர் என நினைக்கிறேன். அவர் என்னை பிரொஃபின்டர்ன் கூட்டங்களில் பார்த்திருக்கலாம். அதன் கூட்டங்களில் சிலவற்றுக்கு நான் தலைமை வகித்தேன். ஆனால் எனக்கு அவரைத் தெரியாது.

நான் பம்பாயிலிருப்பது நல்லதல்ல என்பது அவரது ஆலோசனை. "கான் இந்த பிராந்தியத்தில் இருந்தால் போலீஸார் அவரை வேட்டையாடுவார்கள். தலைமறைவாக இருக்கும் மற்றவர்களுக்கும் அபாயம். அதனால் அவர் சென்னையிலிருப்பது நல்லது" என்றார் அவர். இவை அவர் பம்பாய் தோழரிடமும் கூறினார்.

சென்னையில் நான் தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்ய சுஹாசினி அங்கு சென்றுவந்தார். ஸ்பென்ஸர் கம்பெனியில் வேலை செய்யும் சீனிவாசனை சந்தித்தால் அவர் எல்லா ஏற்பாடுகளும் செய்வாரென்று சுஹாசினி எனக்கு தகவல் அனுப்பினார்.

ஓட்டல் உரிமையாளர் திருமதி வாசு. அவரை அறிமுகம் செய்துக் கொண்டேன். என் உடைகளை மாற்றிக்கொண்டேன். ஐரோப்பிய கனவானைப் போல் வேடம் போட்டுக்கொண்டேன். சீனிவாசனுக்காக காஸ்மாபாலிட்டன் கிளப்புக்கு சென்றேன்.

அப்பகுதி பூராவும் பலத்த போலீஸ் காவல் இருந்தது. ஐரோப்பிய, சார்ஜென்டுகள்கூட காவல் காத்துக் கொண்டிருந்தனர்.

'கிளப்'பில் டென்னிஸ் போட்டி நடந்துக் கொண்டிருந்தது. அந்த நிகழ்ச்சிக்கு சென்னை மாநில கவர்னர் தலைமை வகிக்கவிருந்தார். அவருக்காக இந்த போலீஸ் தடபுடல் எல்லாம்! என்னுடைய உடைகள் நன்றாயிருந்தன. ஆளும் வாட்ட சாட்டமாக இருந்தேன். அதனால் என்னையும் ஒரு கனவானாகவோ, பெரிய அதிகாரியாகவோ அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம். என்னை யாரும் தடுத்து நிறுத்தவில்லை.

உள்ளே அடி எடுத்து வைத்தேன். யார் வேண்டுமென்று சேவகன் கேட்டான். சீனிவாசன் பெயரை சொன்னேன். அவர் அந்த கிளப் நிர்வாகிகளில் முக்கியமானவராக இருக்கிறார். டென்னிஸ் போட்டியின் பொறுப்பெல்லாம் அவருடையது போலவே இருந்தது. அவரை சந்தித்தேன். சுஹாசினி அவருக்கு என்னைப் பற்றி என்ன சொன்னாரோ தெரியாது.

"என்னை உங்களிடம் சுஹாசினி அனுப்பினர்" சீனிவாசனிடம் கூறினேன்.

உங்களுக்கு என்ன வேண்டும்? என்று அவர் பதிலுக்கு என்னை கடினமாகக் கேட்டார்.

என்னை குறித்து சுஹாசினி சொல்லவில்லையா? என்று நான் அவரை அமைதியாகவே கேட்டேன்.

"எனக்கொன்றும் தெரியாது" என்று சொன்ன அவருடைய குரலில் கடுகடுப்பும், கண்களில் அச்சமும் பொங்கி வழிந்துக் கொண்டிருந்தன. அவர் வியர்வையால் நனைந்துக் கொண்டிருந்தார். அவர் நிலைமையை நான் புரிந்துக் கொண்டேன். அப்பகுதி முழுவதும் போலீஸ் மயமாக

இருந்தது. கவர்னர் அங்கே வந்திருந்திருக்கிறார். அவரோ அந்த நிகழ்ச்சிக்கு ஒரு பொறுப்பாளர். அந்த நிலையிலே என்னைப் போன்ற ஒரு அபாயகரமானவன் வெளிப்பட்டால்... என்னுடன் அவருக்கு தொடர்பிருக்கிறதென்று தெரிந்தால்...? பாவம் சீனிவாசன்! அவருடைய அச்சத்தை நான் உணர்ந்தேன்.

"நீங்கள் வேலை மும்முரத்தில் இருப்பதாக தெரிகிறது. நாம் அப்புறம் சந்திப்போம்" என்றேன் நான்.

அவர் நிம்மதிப் பெருமூச்சுவிட்டார். என்னுடைய யோசனையை ஏற்றுக்கொண்டார். அடுத்த நாள் இரவு தீவுத்திடலருகே சந்திக்க வேண்டுமென்று முடிவு செய்து கொண்டோம்.

திட்டமிட்டப்படி மறுநாள் சந்தித்தோம்.

"என்னை சுஹாசினி அனுப்பி வைத்தார். சென்னையில் நான் தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வதாக நீங்கள் அவரிடம் சொன்னீர்களா?" என்று நான் சீனிவாசனை கேட்டேன். அவர் இவற்றை மறுக்கவில்லை. ஆனால் அவர், "இது ஜாதி வெறி நிறைந்த மாநிலம். இங்கே உங்கள் கொள்கைக்கு ஆதரவு கிடக்குமென நான் நினைக்கவில்லை." என்று தொடங்கி ஏதோதோ சொல்லவாரம்பித்தார்.

அவர் பின்வாங்குகிறாரா அல்லது என்னை சோதிக்கிறாரா என்பதுப் புரியவில்லை.

"இன்னும் கொஞ்ச காலம் எடுத்துக் கொண்டு சிந்தியுங்கள்!" என்றேன் நான்.

இன்னும் இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் சந்திப்போமென்று பிரிந்து சென்றோம்.

முடிவு செய்து கொண்ட நேரத்திற்கு குறிப்பிட்ட இடத்திற்கு காருடன் வந்தார் சீனிவாசன். என்னை தன் காரிலேயே ஏற்றிக் கொண்டு அதை ஓட்டியவாறே பேசலானார். எங்களை யாராவது பின் தொடர்கிறார்களா என்று கவனித்துக்கொண்டே அவர் என்னுடன் ஒரு மணிநேரம் பேசினார். தென்இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை அமைக்கும் என் யோசனையை நான் அவருடன் விவாதித்தேன்.

"இங்கே உங்கள் முயற்சி வெற்றி அடையாது. நீங்கள் பேசாமல் பம்பாய் திரும்பிப் போவது நல்லது" இதுதான் அவர் கடைசியில் எனக்கு அளித்த ஆலோசனை!

இயற்கையாகவே அவரது 'ஆலோசனை'யை நிராகரித்தேன். அவர் எவ்வித உதவியும் செய்ய இயலாதென கை விரித்து விட்டார்.

இனி நான் என்ன செய்ய வேண்டும்? நான் யாரை மலைப்போல் நம்பிக்கொண்டு வந்தேனோ, அவர் எவ்வித உதவியும் புரிய முடியாது என்று மறுத்து விட்டார். இங்கே வேறு எவரும் எனக்குத் தெரியாது. இங்கே பேசும் மொழியும் எனக்கு வராது.

நாட்டில் உப்பு சத்தியாகிரகம் பெரியளவில் நடந்து கொண்டிருந்தபோது நான் மாஸ்கோவிலிருந்தேன். தலைவர்களெல்லோரும் கைதாகிவிட்டார்கள். இயக்கம் எல்லைத் தாண்டிச் சென்றுவிட்டது. உப்பைத் தயாரித்ததுடன் மக்கள் நின்றுவிடவில்லை. பல நகரங்களில் அவர்கள் ஆட்சியாளருடன் நேரடியாக மோதினர்.

அக்காலக்கட்டத்திலேயே ஷோலாப்பூர் நகரம் மக்கள் வசமாயிற்று. வருவாய்த் துறை அதிகாரிகளும் , போலீஸ் அதிகாரிகளும் நகரை விட்டோடினர். இந்த நிகழ்ச்சிகள் என்னை உலுக்கிவிட்டன. அனால் இந்த வெற்றிகளை முன்னெடுத்துச் செல்ல தலைமை தாங்கும் புரட்சிக

ரமான கட்சி அன்றில்லை.

எது எப்படியானாலும் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்திட வேண்டுமென்றும் உறுதியுடனே நான் நாட்டிற்கு திரும்பி வந்தேன். என் இலட்சியம் என் நினைவுக்கு வந்தது. 'கம்யூனிஸ்ட் அகில'த்தைச் சேர்ந்த தோழர்கள் என்னை மாஸ்கோவிலேயே இருக்கச் சொன்னார்கள். அப்போது அங்கே இந்தியாவிலே நிகழ்ந்து வருகிற நிகழ்ச்சிகள் குறித்து விரிவாக விவாதித்து வந்தனர். நான் அங்கே சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த இந்தியத் தொழிலாள பிரதிநிதியாக இருந்தேன். அதனால் விவாதங்களில் உதவ நான் மாஸ்கோவிலேயே இருப்பது நல்லதென அவர்கள் கருதினர்.

சீனாவில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திற்கு கம்யூனிஸ்ட் அகிலமும், சோவியத் தலைவர்களும் பெருமளவுக்கு உதவி புரிந்தனர். அதனால் அங்கே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பெருஞ் சேதமடைந்தது. சியாங்கேஷேக் செய்த துரோகத்தால் ஏகாதிபத்தியநிலபிரபுத்துவ எதிர்ப்பு முன்னணி சீர் குலைந்து விட்டது. என்றாலும் பிரிட்டிஷாரின் கோபம் தணியவில்லை. 1927–க்கு பிறகு அவர்கள் சோவியத் நாட்டிற்கெதிராக ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். சோவியத் மீது படையெடுக்கவும் அவர்கள் தயாராயினர். இதனால் சோவியத் மக்களிடையே பிரிட்டிஷ் எதிர்ப்புணர்வு பொங்கிக் கொண்டிருந்தது. இந்தியாவில் நடந்து வந்த சுதந்திரப் போராட்டம் அவர்களுக்கெவ்வளவோ உற்சாகத்தையும், உத்வேகத்தையும் அளித்துக் கொண்டிருந்தது; கம்யூனிஸ்ட் அகிலத்தில் பணியாற்றி வந்த தோழர்களும் இந்தியாவில் நிகழ்ந்து கொண்டிருந்த நிகழ்ச்சி போக்குகளை மிக உன்னிப்பாக கவனித்து வந்தனர். இதன் காரணமாகவே அவர்கள் என்னை இந்திய பிரதிநிதியாக மாஸ்கோவிலேயே தங்கச் சொன்னார்கள்.

அந்நாட்களில் எந்த அந்நிய நாட்டவரையாவது எங்கேயாவது அனுப்பி வைக்க வேண்டுமானால் முன்கூட்டியே தெரிவிக்க மாட்டார்கள். கடைசி நிமிடங்களில் ' கம்யூனிஸ்ட் அகிலம்' அலுவலகத்திற்கு வரவழைத்து மட்டுமே தெரிவிப்பார்கள்.

ஆனால் நான் மட்டும் சோவியத் நாட்டுக்கு எனது போக்குவரத்தை நானே முடிவு செய்து கொள்வேனாகையால், என் பயணம் குறித்து எனக்கு முன்கூட்டியே தெரியும்.

1930 பிப்ரவரி 8-ந் தேதி நான் மாஸ்கோவிலிருந்து புறப்பட வேண்டும். முதலில் புரொஃபின்டர்னிலுள்ள என் அலுவலகத்துக்கு சென்றேன். அதன் பொதுச் செயலாளர் தோழர் லாஜிவிஸ்கி. அவர் 'கம்யூனிஸ்ட் அகில' த்தின் செயற்குழு உறுப்பினருங்கூட!

இந்தியாவுக்கு அன்று புறப்படும் விஷயத்தை அவருக்கு தெரிவித்தேன்." இந்திய கம்யூனிஸ்டுகளுக்கு ஏதாவது கூறுகிறீர்களா?" என்றும் கேட்டேன்.

" கட்சியைக் கட்டுங்கள்! கட்சி இல்லாமல் நீங்கள் ஏதும் செய்ய முடியாது." என்றார் அவர்.

மனதைக் கவரும் நகரம் மாஸ்கோ. அங்கே எங்குமே நேச மனப்பான்மை நிறைந்திருந்தது.

ஆனாலும் இந்தியாவில் கட்சியைக் கட்டவேண்டுமென்றும் உறுதியுடன் மாஸ்கோவை விட்டு இந்தியா வந்தேன். 1918 ல் பலஐரோப்பிய நாடுகளில் வீரஞ்செறிந்த போராட்டங்கள் நடைபெற்றன. ஆனால்

அவற்றை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய திறமையான கம்யூனிஸ்ட் கட்சிகள் அங்கெல்லாம் இல்லாது போனதால் அப்போராட்டங்களெல்லாம் தோல்வியில் முடிந்தன. ஜார் சக்ரவர்த்தி ஆண்ட ரஷியாவில் லெனின் தலைமையில் போல்ஷ்விக் கட்சி வழி நடத்தியதாலேயே அங்கே சோஷலிசப் புரட்சி வெற்றி அடைந்தது. சோவியத் ஆட்சியின் மூத்த தலைவர் லாஜிவிஸ்கியின் சொற்கள் என்னைக் கவர்ந்து விட்டன.

என்னால் முடிந்தளவு இந்தியாவில் கட்சிக்கு அடித்தளம் அமைக்க வேண்டுமென வந்தேன். ஆனால் உதவுவாரென்று நம்பியிருந்த சீனிவாசன் கை விரித்து விட்டார். இந்த நிலைமையில் என்ன செய்ய வேண்டுமென்னும் கேள்வியே என்முன்னால் நின்று கொண்டிருந்தது. எத்தனையோ ஆலோசனைகள் என்னை சூழ்ந்துகொண்டிருந்தன. ஓட்டலிலேயே தங்கியிருந்தேன். இங்குள்ள மக்கள் பேசும் மொழியும் எனக்கு வராது. எல்லாவற்றுக்கும் மேலாக நான் தலைமறைவு வாழ்க்கை நடத்திகொண்டிருந்தேன். என் கடமையை நான் எப்படி நிறைவேற்றுவதென தீவிரமாக சிந்தித்தேன்.

அந்த காலத்தில் ' இந்து,' 'மெயில்' ஆங்கிலப் பத்திரிகைகளை வாங்கிப் படித்தேன். நான் தங்கியிருந்த ஓட்டலிலேயே ஒரு 'டெக்னிஷி'யனும் (தொழில் நிபுணர்) இருந்து வந்தார். என்னை விட கருப்பாகவும் குள்ளமாகவும், நோஞ்சானாகவும் இருந்தார் அவர். காலையிலேயே அவர் வேலைக்கு சென்றுவிடுவார். பல்வேறு இயந்திர உறுப்புகளை ஒன்று சேர்க்கும் வேலையும், ரெயில் வேகன்களை இணைக்கும் வேலையும் செய்து வந்தார். அப்பொழுது தென் ரெயில்வே சென்னையிலிருந்து மாம்பலம் வரை மின்சார ரெயில் பாதை அமைத்துக் கொண்டிருந்தது. ' இங்கிலீஷ் எலெக்டிரிகல் கம்பெனி' அதன் கான்டிராக்டர்கள். என் ஓட்டல் நண்பர் மாலை திரும்பி வந்து, குளித்து ஒரு அழுக்கு மேசைமேல் சாப்பாடு வைத்துக் கொண்டு சாப்பிடுவார். பிறகு என்னிடமிருந்து ஆங்கில நாளேடுகளை வாங்கிப் படிப்பார். படித்து முடிந்ததும் தூங்கி விடுவார். அந்த ஓட்டலில் மூட்டைப் பூச்சித் தொல்லை மிக அதிகம்! எப்படி அவ்வளவு நன்றாகத் தூங்குகிறாரோ என்னவோ! கடவுள் பக்தருமான அவரை நான் கவனித்து வந்தேன்.

அவர் பெயர் ' மாத்யூ'

" நீங்கள் சினிமாவுக்கோ, வெறெங்கேயாவது பொழுது போக்கவோ போகமாட்டீர்களா?" என்று ஒரு நாள் பேச்சுக்கிழுத்தேன்.

அவர் தன் கதை சொல்லத் தொடங்கி விட்டார்.

அவர் தந்தை உடல் ஊனமுற்றவர், தாய் வயோதிகர். தம்பிகளும், தங்கைகளும் அனைவரும் பம்பாயில் இருந்தனர். அவர்களுக்கும் இவர் தான் சம்பாதித்து பணம் அனுப்ப வேண்டும்.

இவ்வாறு எங்களிருவரிடையே நட்பு வளர்ந்தது. மெல்ல மெல்ல அவரைக் குறித்து பல விஷயங்களும் தெரிந்து .கொண்டேன். அவர் ஏற்கனவே ஜி.ஐ.பி ரெயில்வேயில் மின்சார ரெயில்வே பாதை அமைப்பதில் அனுபவம் பெற்றிருந்தார். இப்போது இன்னும் சற்று கூடுதல் சம்பளம் கிடைக்குமெனக் கருதி ' இங்கிலீஷ் எலக்டிரிகல் கம்பெனி'யில் சேர்ந்திருக்கிறார்.

நல்ல அனுபவம் வாய்ந்த மாத்யூவின் கீழ்சில பயிற்சியாளர்களும் இருந்தனர். அவர்களில் ஆங்கிலோ– இந்தியர் சிலருமிருந்தனர். அவர்களுக்கு இவரைவிட அதிகச் சம்பளம் தந்து கொண்டிருந்தனர். ஆங்கிலோ இந்தியர்களுக்கு தனிச் சிறப்பு தருவது தெரிந்தது.

" நம்மை ஆள்பவர்கள் வெள்ளையர்கள். ஆங்கிலோஇந்தியர்களு டையது கலப்பு ரத்தம். அதனாலேயே நிறம் வெள்ளை. இந்த நிற வேற்றுமையே அவர்களுக்கு அதிகச் சம்பளம் பெற்றுத் தருகிறது." என நான் அவருக்கு விளக்கினேன்.

நாளடைவில் என்னுடைய கருத்தோட்டத்திற்கு அவரைக் கொண்டு வந்தேன்.

அந்நாட்களில் எனது பெயர்' பிரான்ஸிஸ் பெர்டினான்ட்'. கோவா வாசியைப் போல் உடை உடுத்தினேன். பிறப்பால் நான் கோவாக்கார னென சொல்லிக்கொண்டேன். என் தகப்பனர் வட இந்தியாவில் ராணு வத்திலிருந்தார். அங்கேயே நான் பிறந்து வளர்ந்ததால் கோவா மொழி எனக்குத் தெரியாது. கத்தோலிக்க கிறிஸ்துவன் நான்—இது அப்போது என்னுடைய அறிமுகம்!

" நமக்கு வெள்ளையராட்சி ஒழிய வேண்டும். நிற வேற்றுமையால் நமது வாழ்க்கை எவ்வளவு மோசமாயிருக்கிறது, பார்த்தாயா? இரு இனங்களிடையே ஏற்றத்தாழ்வு காட்டப்படுகிறதல்லவா? ஆகவே இந்த வெள்ளையராட்சி ஒழியாமல் நாம் நன்றாக வாழ முடியுமா? அவர்களது கொடுங்கோலாட்சியை ஒழித்துக் கட்ட நாம் பாடுபட வேண்டும்..." இவ்வாறு ஒவ்வொரு விஷயமாக மாத்யூவுக்கு போதிக்கத் தொடங்கி னேன். நான் அதற்காகவே பாடுபட்டுக்கொண்டிருக்கிறேன் என்றும், முற்போக்குக் கருத்துள்ளவர்களை ஒன்று திரட்ட முயற்சித்துக் கொண்டி ருக்கிறேன் என்றும், அப்படிப்பட்டவர்களை எனக்கு அறிமுகம் செய்து வையுங்களென்றும் அவரைக் கோரினேன்.

மாத்யூ முற்றாக அரசியல் வாசனை இல்லாதவரல்ல. 1930 ல் தேசீய இயக்கத்தின் எழுச்சியை கண்டவர். கிருத்துவர்களில் தேசீய எண்ணங் கொண்ட பலரையும் அவருக்குத் தெரியும்.

அவர் தன் தொழிலில் திறமையானவரானாலும், நிறவேற்றுமையி னால் அதிருப்தியுடனிருந்ததால், என் பேச்சு அவரை ஆட்கொண்டது. அபூர்வப் பொருட்களை சேகரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது என் தொழிலென்று அவரிடம் கூறினேன்.

வெங்கட்ராமன் மாத்யுவிடம் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தார். மாத்யூ அவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். வெங்கட்ராமன் பிராமணர். ஆராய்ச்சி மனப்பான்மை உள்ளவர். ஏதாவது புதியவற்றை கண்டுபிடிக்க வேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருந்தார். விஞ்ஞா னம் படிக்க வேண்டும் என்றும், சட்டைப் பைக்குள் பிடிக்கும் ரேடியோ வைத் தயாரிக்க வேண்டுமென்பதும் அவரது கோரிக்கை. அவருக்கு தந்தையுமில்லை, சொத்துமில்லை. தன் ஆராய்ச்சிக்கு முதலீடு செய்வோர் யாருமில்லை. படிக்க வேண்டுமென்னும் அவருடைய விருப்பமும் நிறை வேறவில்லை. வேலையில்லாத் திண்டாட்டமும் வெங்கட்ராமனை வாட் டிக்கொண்டிருந்தது. மாத்யூவிடம் பயிற்சி பெறுபவராக சேர்ந்து காலத்தை கழித்து வந்தார்.

திறமையான ஆராய்ச்சியாளர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டுமா னால் முதலில் நாடு சுதந்திரமுடையதாக விளங்க வேண்டும், ஆனால் நம் நாடோ பிரிட்டிஷாரின் அடிமை. அதனால்தான் வெங்கட்ராமனுக்கு எவ்வித ஊக்கமும் இல்லை. இந்த விஷயங்களை அவருக்கு நான் விளக்கினேன். மாத்யூவையும் உதாரணமாகக் கூறினேன். அவர் தகுதி யும், திறமையும் படைத்தவரென்றாலும், அவரிடம் பயிற்சி பெறும் ஆங் கிலோ இந்தியர்களை விட அவருக்கு சம்பளம் குறைவு. இந்தியா

முன்னேற வேண்டுமானால் முதலில் அடிமைத் தளையை முறித்தெறிந்தாக வேண்டும், இக்கருத்துக்களை அவர்களுடன் வேறு சில இளைஞர்களுக்கும் எடுத்துரைத்து, இந்த அநீதிகளை எதிர்த்துப் போராட சங்கம் அமைத்திட அவர்களை உற்சாகப்படுத்தினேன்.

வெங்கட்ராமன் வி.கே.நரசிம்மனை அறிமுகம் செய்துவைத்தார். அவரும் பிராமணர்தான்! நரசிம்மன் அப்போது லயோலா கல்லூரியில் பி.ஏ. (ஆனர்ஸ்) படித்துக் கொண்டிருந்தார். நல்ல அறிவாளி. அப்போதே ஜெயராமனும் அறிமுகமாயினர். இவர் முதலியார். பயிற்சி பெறுபவராக இருந்தார். இவர் மூலம் வேறு சில வாலிபர்களும் அறிமுகமானார்கள். இவர்களையும் கொண்டு ' யங் ஒர்க்கர்ஸ் லீக்' (இளந் தொழிலாளர் சங்கம்) நிறுவினேன்.

அக்காலத்தில் ' கம்யூனிஸ்ட்' என்ற சொல்லே தடை செய்யப்பட்டிருந்தது. லீகைச் சேர்ந்த நாங்கள் வாரமொரு முறை அல்லது இருமுறை சந்திப்போம். தலைமறைவாக சந்திக்கும் அவர்களுக்கு ' வாசகர் வட்டங்களை அமைத்தேன். நான் மார்க்ஸீயம் போதித்தேன். நாட்டின் அரசியல் நிலையில் ஏற்பட்டு வந்த மாற்றங்களை விவரித்து வந்தேன். நான் மட்டும் மிகவும் எச்சரிக்கையாகவே இருந்தேன்.

சென்னையில் தீவுத்திடலின் ஒரு புறம் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையும்,மறுபுறம் சாலையும் இருக்கும். அந்த சாலையில் எப்போதும் போக்கு வரத்து மிக அதிகமாக இருக்கும். ஒரு நாள் நான் அங்கே நின்றிருந்தேன்.

கவர்னரின் குதிரைப்படை பக்கத்து மைதானத்தில் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது. மைதானத்தில் ஒருவன் நினைவிழந்து விழுந்து கிடந்தான். குதிரைப் படை வீரர்கள் அவனை ஓரமாக எழுந்து செல்லுமாறு திட்டிக் கொண்டிருந்தனர்.

சாலை இருக்கும்போது மைதானத்தில் குதிரைகளை ஏன் ஓட்டிப் போக வேண்டும்? தன் நினைவிழந்து விழுந்து கிடக்கும் அந்த மனிதனை ஏன் திட்ட வேண்டும்? போன்ற கேள்விகள் என் மனதில் எழுந்து கொண்டிருந்தன. விழுந்து கிடப்பவன் பைத்தியமோ, நோயாளியோ என்னவோ! இதை எனக்கே தெரியாமல் இந்தியில் வெளியே சொல்லிவிட்டேன்.

என் பக்கத்தில் இன்னொருவரும் நின்றிருந்தார். " இவர்கள் எப்போதுமே இப்படித்தான்!" என்று தெளிவான இந்தியில் பதில் சொன்னார். சென்னையில் அத்தனை தெளிவான இந்தி மொழி பேசுபவர்கள் மிக அரிதாகையால்," உங்களுக்கு இந்த மொழி எப்படித் தெரிந்தது?" என்று கேட்டேன்." நான் பம்பாயில் ஒரு அச்சகத்தில் வேலை செய்துக் கொண்டிருந்தேன்" என்றார் அவர்.

" இப்போது என்ன செய்கிறீர்கள்?"

" இங்கேயும் அச்சகத் தொழிலாளிதான்."

" உங்களுக்கு தொழிற்சங்கம் இருக்கிறதா?"

" அதைப்பற்றி உங்களுக்கென்ன?"

" நான் வெளிநாடுகளிலிருந்தேன். அங்கே எல்லாம் தொழிலாளர்கள் சங்கம் வைத்துக்கொள்கின்றனர். ஆனாலும் தொழிற்சங்கம் என்றதும் ஏன் அப்படி ஆத்திரப்படுகிறீர்கள்?"

அவர் பம்பாயில் அச்சகத் தொழிலாளியாக இருந்தபோது அவருடைய சகோதரர் மீரட் சதி வழக்கில் ஒரு குற்றவாளியான ' ஸ்ப்ராட்டுக்கு' ஒரு கடிதம் அனுப்பினாராம்!

அவர் தன் வாக்கியத்தை முடிக்கவே இல்லை. தோழர் 'ஸ்ப்ராட்' டுடன் தொடர்புடைய நபர்! நான் ஆவலுடன் கேட்டேன்,

" உங்கள் சகோதரர் என்ன செய்கிறார்?"

" அவர் கம்யூனிஸ்ட் பத்திரிகையாசிரியர்"

அப்போது ' கம்யூனிஸ்ட்' என்னும் சொல்லே தென் இந்தியாவி லேயே புதிய சொல். காந்திஜீ சத்தியாகிரகம் நிறுத்தி விட்டார். காந்தி இர்வின் உடன்படிக்கை ஏற்பட்டது. மக்களிடையே காங்கிரஸ் கட்சிக்கு நல்ல செல்வாக்கிருந்தது. ராஜாஜி, சாம்பமூர்த்தி, பிரகாசம், சத்திய மூர்த்தி, பட்டாபி சீத்தாராமய்யா போன்றவர்கள் நல்ல செல்வாக்கு டைய தலைவர்கள். காங்கிரஸுடன் கருத்து வேற்றுமை தோன்றி சீனிவாச ஐயங்கார் வெளியேறி விட்டார். அக்காலத்தில் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து ' லீக் ஆப் யூத்' (வாலிபர் சங்கம்) அமைத்திருந்தனர். இதில் மாணவர்களே அதிக எண்ணிக்கையில் இருந்தனர். பிராமணர் களை எதிர்க்கும் ஈ.வெ.ராமசாமி பெரியாரின் அமைப்பும் இருந்தது.

காங்கிரஸிலிருந்த புதுமைவாதிகள்காந்தி–இர்வின்உடன்படிக்கையை வானளாவ புகழ்ந்துக் கொண்டிருந்தனர். கவர்னர்ஜெனரலே காந்திஜியு டன் சமரஸத்திற்கு வந்து தீர வேண்டியதாகி விட்டதென்று பெருமைய டித்துக் கொண்டனர். சத்தியமூர்த்தியின் பெருங்குரல் எதிரொலித்துக் கொண்டிருந்தது. அவ்வளவு பெரிய ஏகாதிபத்தியம் தலை கவிழ்ந்து நிற்கிறதே, இது போதாதா என்பது போல் அவருடைய சொற்பொழிவு தோரணை இருந்தது.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே ' கம்யூனிஸ்ட்' என்ற சொல்லை கேள்விப்பட்டதே என்னை பெரு வியப்பிலாழ்த்தியது. அதுவரை நான் திரட்டிய வாலிபர்களில் ஒருவருக்குமே ' கம்யூனிஸம்' என்ற சொல் இருக்கட்டும், சோவியத் நாட்டைப் பற்றியும் ஒன்றுமே தெரியாது.

என்னுடன் தீவுத்திடல் சாலையில் பேசியவர் மாணிக்க முதலியார். "என்னை உங்கள் அண்ணாவிடம் அழைத்துச் செல்கிறீர்களா?" என்று அவரைக் கேட்டேன்.

மாணிக்கம் ஒப்புக் கொண்டு என்னை அழைத்துச் சென்றார். அப் போது 'இந்து' நாளேடு ஒரு குறுகிய சந்திலிருந்து வெளி வந்து கொண் டிருந்தது. ஒரு மைல் தூரம் நடந்து சென்று ஒரு வீட்டின் முன் நின்றோம். அதை ஒரு சேரிப் பகுதி என்றே கூற வேண்டும். அந்த வீட்டில் பல ஒண்டுக் குடித்தனங்கள் இருந்தன. ஒரு அறையிலிருந்த மாணிக்கத்தின் அண்ணன் ஒரு சிறிய அச்சு இயந்திரமும் வைத்திருந்தார்.

அந்த அறையில் ஒரு பழைய நாற்காலியும், ஒரு பாயும் இருந்தன. என்னை நாற்காலியில் அமரச் செய்து, அவர் பாயில் உட்கார்ந்து கொண் டார். மாணிக்கத்தின் அண்ணா மிகவும் பலவீனமாக இருந்தார். இடுப் பில் ஒரு வேட்டி தவிர வேறெதுமில்லை. கண்களிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது, தலையில் நரை பரவிக்கொண்டிருந்தது. சருமத்தால் மூடப்பட்ட எலும்புக்கூடாக இருந்தார். அவருடைய சொந்த விஷயங்க ளையும், அரசியல் கருத்துக்களையும் கேட்டேன்.

அவர் ஆங்கிலத்தில் சொல்லத் தொடங்கினார்.

" பிரிட்டிஷார் தம் சுயநலத்திற்காக புதிய கல்விக் கொள்கையை அமல் படுத்தினர். இங்குள்ள பிராமணர்கள் அதை நன்றாக பயன்ப டுத்திக்கொண்டனர். அவர்கள் தம்மை ஆரிய சந்ததி என்று கருதிக் கொள்கின்றனர். இங்கே பிராமணர்கள் இந்தியர்களுக்கும் கிடைக்கும் அரசு வேலைகளையெல்லாம் தாமே பெற்றுக்கொண்டனர். அவர்கள்

மற்றவர்களுடன் சம்பந்தமில்லாமல் தனியாக வசிக்கின்றனர். பிராமணர்கள் மற்றவர்களையெல்லாம் தீண்டப்படாதவர்களாகவே கருதுகின்றனர். பிராமணரல்லாதார் திராவிடர்கள். அவர்கள் உடலுழைப்பு செய்து வாழ்கின்றனர். பிராமணர்கள் இவர்களையும் தீண்டத்தகாதவர்களாகவே நோக்குகின்றனர். அதேபோல் திராவிடர்களில் உயர் வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் துப்புறவுத் தொழிலாளர்களை தீண்டப்படாதவர்களாகக் கருதுகின்றனர். அவர்களை 'பறையர்'களென்கின்றனர். அவர்கள் ஊருக்கு வெளியே'சேரி' களில் வாழ்கின்றனர்."

ஜாதி முறையும், பிராமண ஆதிக்கத்தையும் மாணிக்க முதலியாரின் அண்ணன் வடிவேலு முதலியார் கடுமையாக எதிர்த்தார். 1919ல் பிரிட்டிஷ் ஆட்சியாளர் சில அரசியல் சீர்திருத்தங்களை கொண்டு வந்தனர். மாநிலங்களில் இரட்டை ஆட்சி முறை வந்தது. அக்காலத்தில் ஒரு சிலருக்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது. மாநில அரசுகளில் கல்வி, சுகாதாரம், பொதுப்பணித்துறை போன்றவற்றை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு ஒதுக்கினர். பிராமணரல்லாத நிலச் சுவாந்தர்களும், பெரிய வணிகர்களும், வட்டி வியாபாரிகளும் சேர்ந்து 'ஜஸ்டிஸ் கட்சி' யை அமைத்தனர். அவர்கள் ஒரு பத்திரிகையை ஆரம்பித்தனர். அதன் ஆசிரியர் குழுவிலே வடிவேலு முதலியார் ஒரு உறுப்பினர்.

ஜஸ்டிஸ் கட்சி ஜாதி அமைப்பைத் தகர்த்தெறியுமென்று அவர் நம்பினார். அக்கட்சி சென்னை மாநிலத்தில் ஆட்சிக்கு வந்தது. ஆனால் அவருடைய நம்பிக்கை பொய்த்து விட்டது. சமூகத்திலுள்ள குறைகளையும், மோசமான நிலைமைகளையும் ஜஸ்டிஸ் கட்சி போக்குமென அவர் எதிர்பார்த்தார். ஆனால் அதற்கான சிறு முயற்சியும் செய்யப்படவில்லை. அதற்கு மாறாக அவர்கள் தமது சுயநலத்திற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளுடன் ஒத்துழைத்தனர்.

வடிவேலு தமிழில் சிறந்த புலமை வாய்ந்தவர். ஜஸ்டிஸ் கட்சியின் பத்திரிகையிலேயே அக்கட்சிக்கு எதிராக எழுதவாரம்பித்தார் அவர்.

" என்ன இப்படி எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று முதலமைச்சர் அவரை அழைத்து கேட்டார்.

" நீங்கள் மக்களுக்கு துரோகமிழைத்தீர்கள். நான் எழுதினால் என்ன?" என்று வடிவேலு அலட்சியமாக பதிலளித்தார்.

அதனால் அவரை ஆசிரியர் குழுவிலிருந்து நீக்கிவிட்டார்கள். தவறானவைகளை எதிர்க்க வேண்டுமென அவர் முடிவு செய்துக் கொண்டார்.

அவருக்கப்போது மார்க்ஸீயம்–லெனினியம்தெரியாது தான். நம்பியதைப் பிரச்சார்ம் செய்ய ஒரு சிறிய அச்சகம் வைத்திருந்தார். அங்கேயே அவருடைய குடும்பமும் இருந்து வந்தது. வடிவேலு கையில் பணம் இருக்கும்போது காகிதமும், மையும் வாங்குவார். தனக்கு சரி என்றுபட்டதை எழுதுவார் அதைத் தானே அச்சு கோர்த்து ஒவ்வொரு காகிதமாக அச்சிடுவார். அந்த பத்திரிகைகளை சேரிகளில் தானே கொண்டு போய் விற்பனை செய்வார்.

அவர் நடத்திய பத்திரிகையின் பெயர் 'ஜன மித்திரன்'. அவருக்கு வேறெந்த வாழ்க்கை வசதியுமில்லை. அவருடைய மாமனார் ஒரு தபால்காரர். மனைவியில்லாததால் அவர் தனது மகளிடமே தன் சம்பளம் கொண்டு வந்து கொடுத்தார். வடிவேலுவின் மனைவி அதிலேயே மிகச் சிக்கனமாக குடும்பம் நடத்தி வந்தார். குழந்தைகளுக்குப் போக வடிவே

லுவுக்கு பல வேளைகளில் சோறும் கிடைக்காது. பட்டினி கிடந்து கிடந்தே அவர் எலும்புகூடாக இருந்தார்.

எங்கள் இருவரிடையே மூன்று நாட்கள் பேச்சுவார்த்தை தொடர்ந்தது. அவரது சொந்த வாழ்க்கை, அன்றைய இந்திய அரசியல் நிலைமை, தென் இந்தியாவின் சமூக, அரசியல் நிலைமைகள் போன்றவை நாங்கள் பேசினோம். வடிவேலு அநீதிக்கு எதிரி; தென் இந்தியாவில் நிலவிய ஜாதி அமைப்புக்கும், பிராமண ஆதிக்கத்துக்கும் பகைவன்.

" உங்கள் பத்திரிகையின் பெயர் ' ஜன மித்திரன்' அல்லவா? நீங்கள் மக்கள் நலனைத்தானே விரும்புகிறீர்கள்?" என்ற என் கேள்விக்கு அவரிடமிருந்து பதிலில்லை.

நான் சமூகச் சுரண்டலைப் பற்றி விவரிக்கத் துவங்கினேன். சமுதாயம் பல்வேறு பொருளாதார வர்க்கங்களாக பிரிந்துள்ளது. உற்பத்தி சாதனங்களுக்கு ஒரு சிலரே உரிமையாளர்கள். மற்றவர் உழைப்பைச் சுரண்டுவதன் மூலமே அவர்கள் சம்பாதிக்கிறார்கள். அப்படிப்பட்ட முதலாளிகளும் நிலச்சுவான்தார்களும் கூட ஜனங்கள்தானே? அவர்களைப் போலவே இங்கே பிரிட்டிஷ் ஆட்சி நடைபெற ஒத்துழைக்கும் பிராமணப் படிப்பாளிகளும் ஜனங்கள்தானே! ஆகவே எந்த ஜனங்களுக்கு நீங்கள் நண்பர் ? எனவே 'ஜனங்கள்' சொல்லே போதுமானதல்ல. சுரண்டுபவர்களுக்கும், சுரண்டலுக்கு பலியாகும் ஏழைகளுக்கும், ஒரே சமயத்தில் நாம் நண்பர்களாக எவ்வாறு இருக்க முடியும்? மக்களில் ஒரு பகுதியினருக்கு மட்டுமே நாம் நண்பர்களாக இருக்க இயலும். அந்த பகுதியினர் யார்? சுரண்டப்படும் ஏழை மக்கள். அவர்கள் அப்பாவிகள். தாம் சுரண்டப்படுகிறோமென்கிற உணர்வே இல்லாதவர்கள். சங்கரீதியாக ஒன்று திரளாதவர்கள் அவர்களுக்கு நாம் உதவிட வேண்டும். சங்கங்களில் திரட்டிட வேண்டும். இவ்வாறு பல விஷயங்களையும் வடிவேலுவுக்கு விளக்கினேன். இறுதியில் நான் சொன்னவை உங்களுக்கு பிடித்தனவா என்றும், நாம் ஒன்று சேர்ந்து வேலை செய்வோமா என்றும் அவரைக் கேட்டேன்.

இந்த விவாதமும், பரிசீலனையும் அவருக்கு புதிய உலகங்களை காட்டியது. சமூக முரண்பாடுகள் புரிந்தன. நாட்டின் அடிமை நிலையை அவர் உணர்ந்தார். என் கருத்துக்களை ஆமோதித்தார். சேர்ந்து பணியாற்றுவோமென்றார். முதலில் பத்திரிகையின் பெயரை மாற்ற வேண்டுமென்றேன் நான்.

" வேறு பெயரை நீங்களே சொல்லுங்கள்!" என்றார் வடிவேலு. எனக்கு தமிழ் தெரியாதே! எங்கள் குழுவினரோடு விவாதித்தோம் பெயர் தேடும் வேலையை வி.கே.விடம் ஒப்படைத்தோம். அவர் அகராதிகளையெல்லாம் தேடி ' முன்னேற்றம்' என்ற பெயரை வைத்தார். தமிழ் ஒரு பழமையான மொழி. புதிய நிலைமைகளுக்கு அப்பெயரே ஏற்றதென முடிவு செய்தோம்.

ரெயில்வேக்காரர்கள் தாம்பரத்தில் புதிதாக குடியிருப்புகள் கட்டினர். மாத்யூ அங்கே குடியேறினார்; நானும் அவருடனே சென்றுவிட்டேன்.

வடிவேலுவை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்து வைத்தேன். எங்கள் வாலிபர்கள் நாள்தோறும் புதிய புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சில 'வாசகர் வட்ட' கூட்டங்களில் கலந்து கொண்ட பிறகு ' யங் ஒர்க்கர்ஸ் லீகி'ல். சேர்ந்து வந்தார்கள்.

" எல்லா விஷயங்களும் வாயாலேயே சொல்வது கஷ்டம். நம் கருத்துக்களுடன் உடன்பாடு கொண்டவர்களை பெரும் எண்ணிக்கையில் ஈர்க்க வேண்டும். நமது சிந்தனையோட்டத்தை புதியவர்களிடையே பரப்ப வேண்டும். ஆகவே ' முன்னேற்றம்' பத்திரிகையை ' இளந்தொழிலாளர் லீகி'ன் சார்பில் வெளியிட வேண்டும்" என்றும் யோசனையை நான் முன் வைத்தேன்.

" ஆயிரம் பிரதிகள் அச்சிட எவ்வளவு செலவாகும் ?"

" வீட்டு வாடகை பத்து ரூபாய், காகிதமும், மையும் வேண்டும்" என்றார் வடிவேலு.

நான் என் பங்காக பத்து ரூபாய்களை அனைவர் முன் வைத்தேன் மற்றவர்களும் ஒன்றிரண்டு ரூபாய்கள் தந்தார்கள். எங்கள் குழுவிலிருந்த அச்சகத் தொழிலாளர் அச்சு கோர்க்கும் பொறுப்பை எடுத்துக் கொண்டார்கள். வழக்கறிஞரிடம் வேலை செய்யும் சுருக்கெழுத்து தெரிந்தவர் எங்களில் ஒருவர் இருந்தார் அவர் நான் சொல்லும் கட்டுரைகளை எழுதிக் கொள்வார். கம்யூனிஸ்ட் அகிலத்தின் ' பத்திரிகை' இம்பிரெகாரி' எனக்கு ரகசியமாக வந்து கொண்டிருந்தது. அதில் அன்றைய சர்வதேச நிலைமைக் குறித்த கட்டுரைகள் வெளிவந்தன. அவற்றை வி.கே.யும் ,மற்ற திறமை படைத்த தோழர்களும் மொழிப்பெயர்த்தார்கள். பத்திரிகை அச்சானதும் 'லீக்' உறுப்பினர்கள் பல்வேறு பகுதிகளிலும் விநியோகித்தார்கள்.

நாங்கள் ' முன்னேற்றம்' பத்திரிகையில் காந்தி– இர்வின் உடன்படிக்கையை கடுமையாகக் கண்டனம் செய்தோம். காந்திஜியை தயக்கமின்றி விமர்சனம் செய்தோம்.

அவர் உப்பு சத்தியாகிரகம் துவக்கினார். உப்புத் தயாரிப்பில் பிரிட்டிஷாரின் ஏகபோகத்தைத் தகர்ப்பது அந்த சத்தியாகிரகத்தின் முக்கிய நோக்கம். அதில் எல்லா துறைகளையும் சேர்ந்த இந்திய மக்கள் பங்கெடுத்தனர். காந்திஜி சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி யாத்திரை ஆரம்பித்தபோது," என் பிணம் அரபிக் கடலில் மிதந்தாலும் சரி, சுதந்திரம் பெறாமல் திரும்பி வர மாட்டேன்" என்று சூளுரைத்தார். அதனால் உத்வேகம் பெற்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள் தமது படிப்பை விட்டு சத்தியா கிரகத்திலே பங்கெடுத்து கைதாயினர். துவக்கத்திலேயே காந்திஜியும், காங்கிரஸின் மற்ற பெரிய தலைவர்களும் கைது செய்யப்பட்டு விட்டனர். இதனால் ஆத்திரமடைந்த சிலர் பனை மரங்களை வெட்டத் தொடங்கினர். வேறு சிலர் சட்ட மறுப்பில் ஈடுபட்டனர். பல இடங்களில் வன்முறை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ஷோலாப்பூர் நகர மக்கள் சர்க்கார் அலுவலகங்களையும், காவல் நிலையங்களையும் தாக்கினர். அரசு அதிகாரிகளும், போலீஸ்காரர்களும் உயிரை கையிலே பிடித்துக்கொண்டு நகரை விட்டே ஓட்டம் பிடித்தனர். நகரை பொது மக்கள் கைப்பற்றிக்கொண்டனர். பிரிட்டிஷார் ராணுவத்தை கொண்டு வந்தனர்.

அப்போது நான் மாஸ்கோவிலிருந்தேன். ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மக்கள் போராட்டங்கள் புதிய உருவங்களெடுத்துக் கொண்டிருந்தன. அதன் விளைவாக பிரிட்டிஷார் காந்திஜீயை விடுதலை செய்து அவருடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டி வந்தது. இதன் மூலம் காந்தி– இர்வின் உடன்படிக்கை ஏற்பட்டன. படிப்பை விட்டு சிறைக்கு சென்ற மாணவர்களும் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் குழப்பத்தில் மூழ்கி இருந்தனர். இனி என்ன செய்வதென்று அவர்களுக்கு புரிய

வில்லை.

தேசிய இயக்கத்திற்கு துரோகம் செய்த முதலாளித்துவ, சீர்திருத்தவா தத் தலைவர்களை நான் அரசியல் வகுப்புகளிலும், பத்திரிகைகளிலும் கடுமையாக விமர்சனம் செய்தேன். காந்தி-இர்வின் உடன்படிக்கை ஒரு மாபெரும் வெற்றி என்று தேசியப் பத்திரிகைகளெல்லாம் எழுதிக்கொண் டிருந்தன. காங்கிரஸ் தலைவர்கள் சண்டப் பிரசண்டம் செய்துக் கொண் டிருந்தனர். ஆனால் எங்கள் பத்திரிகை இதற்கு மாறாக எழுதிக் கொண் டிருந்தது. அதைப் படித்தவர்கள் வியப்பிலாழ்ந்தனர். நாடு பூராவும் காந்திஜியை தலைமேல் வைத்து கொண்டாடுகிறது. அவ்வளவு பெரிய மகாத்மாவைக் கண்டிக்கும் 'இவர்கள் யார்' என்று கேள்வி எழுப்பினர். அப்படிப்பட்டவர்களை எங்கள் இளைஞர்கள் எங்கள் கூட்டங்களுக்கு அழைத்து வந்தனர். அவர்களுக்கு நாட்டின் நிலைமையை நாங்கள் விளக்கினோம்.

" காந்திஜி போராட்ட தந்திரங்களை வகுப்பதில் வல்லவர், தனக் குள்ள செல்வாக்கைக் கொண்டு மக்களை போர்க் களத்தில் தாவச் செய்கிறார். தன்னுடைய போராட்டத்தில் சொத்துடைமையாளர்களின் நலன்களை பாதிக்காத பிரச்சினைகளையே ஏன் தேர்ந்தெடுக்கிறார்?" போன்ற கேள்விகளை நாங்கள் கேட்டோம்.

அக்கேள்விகளுக்கு நாங்களே பதிலும் சொன்னோம் காந்திஜி சொத்துரிமையாளர்களின்,முதலாளிகளின் பிரதிநிதி. அவர் உப்பு சத்தியா கிரகம் ஆரம்பித்தார். ஆனால் மக்கள் தான் வகுத்த எல்லைகளை மீறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டதும் இயக்கத்தை தன்னிச்சை யாக நிறுத்தி விட்டார். உப்பு சத்தியாகிரகம் அபாயமில்லாத போராட் டம். அது சமூக பொருளாதார மாற்றங்கள் எதையும் கோரவில்லை. ஏகாதிபத்தியவாதிகளுக்கு காங்கிரஸின் மக்கள் பலத்தை காட்ட அது போதும். தன் பலத்தை காட்டி பிரிட்டிஷாரிடமிருந்து இந்திய முதலாளி வர்க்கத்திற்கு சில சலுகைகள் பெறுவதே அதன் நோக்கமாகும். மக்கள் இயக்கம் இன்னும் தீவிரமாகும்போது ஏகாதிபத்தியம் காங்கிரஸுடன் சமரசத்திற்கு வந்துதானாக வேண்டும்.

அந்த சமரசத்திற்கு நாங்கள் அளித்த விளக்கம் அன்றைய தென் இந்திய அரசியல் சிந்தனைக்கு மாறுபட்டதாகும். இந்த புதிய விளக்கம் இளம் தோழர்களுக்கு மிகவும் உற்சாகமளித்தது. அவர்களே முன்முயற்சி எடுத்துக்கொண்டு அரசியல் குழுக்களையும், அரசியல் ஆர்வம் கொண்ட வர்களையும் சந்தித்தனர். விவாதங்களுக்கு ஏற்பாடு செய்தனர். பல் வேறு பிரச்சினைகள் பற்றி எங்கள் அணுகுமுறையை அவர்களுக்கு விளக்கினோம். அவர்களுடன் எங்கள் தொடர்புகளும் வளர்ந்தன.

தாம்பரத்தில் வீட்டு வாடகையும் செலுத்துவதுடன் பம்பாயிலுள்ள தன் குடும்பத்திற்கு அதிகமாக உதவிட வேண்டுமென்றும் மாத்யூ விரும் பினார். வாடகைச் சுமையைக் குறைக்க இன்னொரு ஆங்கிலோ இந்திய ரையும் கூட அவர் சேர்த்துக் கொண்டார். அந்த குடியிருப்பில் குழா யில்லை. தொலைவிலிருந்து தண்ணீர் கொண்டு வருவது, வீட்டை சுத்தம் செய்வது போன்ற வேலைகளை நான் செய்து வந்தேன். அவ்விதம் மிஞ்சும் வேலைக்காரி சம்பளத் தொகையை என் வாடகைப் பங்காக அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

காலையில் என் வேலை முடிந்ததும் மாத்யூவின் ரெயில் பாஸுடன் சென்னை நகரத்துக்கு வந்து விடுவேன். என் படாடோபமான உடைக ளைப் பார்த்து யாரும் என்னை ரெயிலில் டிக்கட் கேட்கமாட்டார்கள்.

என்னை ரெயில்வே குடியிருப்பிலே பார்ப்பதால், என்னை அவர்கள் ரெயில்வே ஊழியன் என்று நினைத்துக்கொள்வர்.

மாத்யூவும், ஆங்கிலோ இந்தியரும் காலையில் பாலும் ரொட்டியும் சாப்பிடுவார்கள். என்னிடமிருந்த பணம் வேகமாகக் கரைந்துக் கொண் டிருந்தது. இனியும் நான் மாத்யூவுக்கு பாரமாக இருக்க விரும்பவில்லை. அதனால் நான் காலையில் எதுவும் சாப்பிடமாட்டேன்.

ரெயில்வே ஷெட்டில் 12 ரூபாய்க்கு மாதச் சாப்பாடு தந்து கொண் டிருந்தனர். என் பங்குக்கு ஆறு ரூபாய் கொடுத்தேன். சாப்பாடு என்றால் சோறும், சாம்பாரும் மட்டும்தான்! இரண்டு வேளையும் அதையே சாப்பிடுவோம்.

கம்யூனிஸ்ட் அகிலத்தில் எனக்கு 150 டாலர்கள் தந்தனர். வழியில் பெர்லினில் தங்கினேன். பெர்லினிலிருந்து மார்ஸெல்ஸ் செல்லும் கப்பல் வரும்வரை அங்கேயே காத்திருந்தேன். என்னிடமிருந்த எஞ்சிய பணத்தை மிகச் சிக்கனமாக செலவழித்தேன். ரெயில்வே ஷெட்டிலிருந்து மோச மான உணவை வரவழைத்து சாப்பிட்டு வந்ததால் போஷாக்குக் குறைந்து எனக்குக் கண் நோயும் வந்தது.

சத்தியாகிரகத்தின்போது கைது செய்யப்பட்ட மாணவர்கள் விடுத லையாகி வந்தார்களென்று முன்பே குறிப்பிட்டேன். அவர்களில் சுறுசு றுப்பாக இயங்கும் மாணவர்களின் முகவரிகளைத் தேடி கண்டு பிடித் தோம்.

அவர்களில் ஆந்திராவைச் சேர்ந்த கே. சத்திய நாராயணா ஒருவர். அவர் அப்போது எம்.ஏ. படித்துக் கொண்டிருந்தார். பிரிட்டிஷ் கல்விக் கொள்கையை விமர்சனம் செய்து கடுமையாக ஒரு கடிதம் எழுதினார். உப்பு சத்தியாகிரகத்தில் அவரும் கைதாகி விடுதலையானார். தேசிய இயக்கம் நிறுத்தப்பட்டதால் சத்தியநாராயணா அதிருப்தியுடனிருந்தார்.

அவரை அழைத்துப் பேசினேன். பல நாட்கள் தொடர்ந்து விவா தித்தோம்.

மற்ற அடிமை நாடுகளைவிட இந்தியா பொருளாதாரத் துறையிலும், தொழில் துறையிலும் வளர்ந்த நாடாகையால், இங்கே முதலாளி வர்க்கம் புரட்சியை வெற்றி பெறச் செய்ய முடியாது. சமரசமில்லாத மக்கள் போராட்டமே புரட்சியை வெற்றியடையச் செய்யும். பூர்ஷுவா (முத லாளி) வர்க்கம் தன்னுடைய வர்க்க நலன்களை மட்டுமே பார்த்துக் கொள்ளும். இந்தியா பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சி நிலையிலே இருக் கிறது. பூர்ஷுவா வர்க்கம் புரட்சிகர வர்க்கமல்ல. அது மக்கள் எழுச்சியைப் பயன்படுத்திக் கொண்டு தனக்காக சில சலுகைகளை பெற் றுக் கொள்ளும். அதன் கண்ணோட்டமே சீர்திருத்தக் கண்ணோட்டம். இந்திய மக்களைச் சுரண்டிக் கொழுத்துக் கொண்டிருந்த ஏகாதிபத்தியச் சுரண்டலில் இந்திய முதலாளி வர்க்கம் தனக்கும் பங்கு கேட்டு பெற்றுக் கொள்ளும். உப்பு சத்தியாகிரக இயக்கத்தில் நடந்தது இதுதான்! காங் கிரஸார் தமது குறுகிய நலன்கள் நிறைவேறியதுமே இயக்கத்தை திடீரென நிறுத்திவிட்டார்கள்.

ஆகவே, அந்நிய ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து இந்தியாவுக்கு முழு சுதந்திரம் விரும்புபவர்கள் உழைப்பாளி மக்களை ஒன்று திரட்டி அவர் களை போராட்டத்திற்கு தயார் செய்ய வேண்டும்.

தற்போதைய புரட்சி நிலையில் விவசாயிகளின் நண்பரான தொழி லாளி வர்க்கம் வழி காட்டும் சக்தியாகத் திகழும். பூர்ஷுவா வர்க்கத்தைத் தனிமைப்படுத்தி ஏகாதிபத்தியத்திற்கும், நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிராக

போராட வேண்டும். புரட்சியின் முதல் நிலை பூர்த்தியானால், அப் புரட்சிப் போராட்டத்துக்கு தொழிலாளி வர்க்கம் தலைமை தாங்க முடிந்தால், அது சோஷலிஸ்ட் புரட்சியாக வளர்ச்சி பெறும். அன்று 'கம்யூனிஸ்ட் அகில' த்தின் கொள்கை இதுவே!

இந்தியாவின் மற்ற மாநிலங்களில் நமது தோழர்கள் விவசாயிகளிடையேயும், தொழிலாளரிடையேயும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் கட்சியின் அமைப்பே இல்லை. எனக்கு தென் இந்திய மொழிகள் வராது, என்றாலும் என்னால் முடிந்தளவு கட்சியை அமைத்திட பாடுபட்டு வருகிறேன். இங்கே நமக்கு பணக்கார அனுதாபிகள் இல்லாவிட்டாலும், நாளுக்கு நாள் நிலை பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

சத்திய நாராயணாவுக்கு நான் கூறிய விஷயங்கள் இவை! அவருடைய சந்தேகங்களையெல்லாம் தீர்த்து வைத்தேன். மார்க்சிய தத்துவ இயலில் அவருக்கு ஆர்வம் ஏற்படச் செய்தேன். நாங்கள் செய்து வந்த பணியில் ஒத்துழைக்குமாறு கோரினேன்; அவரும் ஒப்புக்கொண்டார்.

ஒரு வாரத்திற்குப் பின் அவர் அப்போது மண முடித்த தன் மனைவியை அழைத்து வந்து சென்னையில் பிராமணரல்லாதார் ஒருவர் வீட்டில் குடியேறினார். அந்த வீடு தோழர் ஜெயராம் விதவை சகோதரியின் வீடு. ஜெயராமின் சகோதரி அப்போது சிவசமுத்திரத்தில் இருந்தார். அவ்வீட்டின் மற்ற பகுதிகளில் குடியிருந்தவர்கள் மீனும், இறைச்சியும் சமைத்து சாப்பிடுபவர்கள். சத்திய நாராயணாவின் மனைவி சனாதன பிராமணக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். சுத்த சைவம். மற்றவர்களின் சமையல் வாசனை பாவம், அவருக்கு பிடிக்காது. நாங்கள் அவரை சமாதானப்படுத்தினோம். அவருடைய மற்ற சந்தேகங்களையும் தீர்த்து வைத்தோம்.

நாள்தோறும் எங்கள் தொடர்புகள் பெருகத் தொடங்கின. 'இளந் தொழிலாளர் சங்க'த்தின் கொள்கை அறிக்கையை வெளியிட விரும்பினோம். வி.கே.நரசிம்மன் நான் சொன்னதை எழுதிக்கொண்டார். எங்களுடன் ஒரு பொறியியல் மாணவரும் இருந்தார். அவர் எங்கிருந்தோ ஒரு பழைய தட்டெழுத்து இயந்திரம் கொண்டு வந்தார். எங்கள் 'கொள்கை அறிக்கை' யை ' டைப்' செய்தோம்.

ரவீந்திரரின் 'சாந்தி நிகேத'னில்நகைதர்'போஷ்என்பவரை சந்தித்து கேட்டபோது, அவர் ஒரு 'சைக்ளோ மிஷின்' வாங்கித் தந்தார். அதனால் எங்கள் ' கொள்கை அறிக்கை'யை பலருக்கும் தர முடிந்தது.

'கம்யூனிஸ்ட் அறிக்கை', 'அரசாங்க அமைப்பும் புரட்சியும்' என்னும் புத்தகங்களை எப்படியோ சம்பாதித்தேன். 'கார்ல் மார்க்ஸ் வாழ்க்கையும், போதனைகளும்' என்ற புத்தகமும் இருந்ததாக ஞாபகம். இவையனைத்தும் ஆங்கிலத்திலிருந்தன. மெல்ல மெல்ல எங்கள் குழுவினரின் அரசியல் விழிப்பை வளர்த்தோம். அவர்கள் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி கம்யூனிஸ்ட் கண்ணோட்டத்தை புரிந்து கொள்ள பித்தனர்.

நாங்கள் சிறு சிறு குழுக்களாக பல்வேறு இடங்களில் கூடுவோம். மார்க்ஸீய அடிப்படை தத்துவங்களிலிருந்து ஒவ்வொரு 'பாரா' படிப்போம். அவரவர் புரிந்துக் கொண்டதை கூறுவார்கள். தேவையானால் நான் விளக்கம் தருவேன். அப்போது எங்களைச் சூழ்ந்திருக்கும் உலக சம்பந்தப்பட்ட எடுத்துக்காட்டுகளை கூறுவேன். தென் இந்திய சமூக வாழ்விலிருந்து உதாரணங்களை எடுத்துச் சொல்வேன். மாதிரிக்கு, 'ஒரு வர்க்கத்தை மற்றொரு வர்க்கம் அடக்கியாள்வதற்கு சாதனமாக இருப்பது

அரசியலமைப்பு' என்றார் லெனின். இதை விளக்க வேண்டும். உதாரணமாக நிலச்சுவான்தாரையே எடுத்துக் கொள்வோம். அவரிடம் பல குத்தகைதாரர்களும், விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் வேலை செய்கின்றனர். அவரோ ஒருவர்; இவர்களோ பலர். இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எதிர்த்தால் அவரால் என்ன செய்ய முடியும்? ஆனால் அவரைப் பாதுகாக்க போலீஸ் வரும். அவருக்கு உதவிட அரசு இயந்திரம் முழுவதுமே கிளம்பி வரும், இப்படிப்பட்ட உதாரணங்களைச் சொல்லி நான் விளக்குவேன்.

அச்சமயத்தில் தீவுத்திடலில் ஏழைகள் நிறைய பேர் வசித்து வந்தனர். அவர்கள் ஒதுங்கி இருக்க கூரையும் கிடையாது. திருடுவதற்கு அவர்களிடம் என்ன இருக்கிறது? அதனால் போலீஸ் அவர்களுக்கு ஏன்?

அப்போது மைலாப்பூர், மாம்பலம் ஆகிய பகுதிகளில் முழுக்க முழுக்க பிராமணர்களே வாழ்ந்து வந்தனர். தாழ்த்தப்பட்டோர் போன்றோரை அங்கெல்லாம் இருக்க விடுவதில்லை. அப்படிப்பட்டவர்கள் அனைவரும் நகருக்கு வெளியே சேரிகளில் வாழ்ந்தனர்.

"முதலாளிகள் பெரிய தொழிற்சாலைகள் அமைக்கின்றனர். சிதறிக் கிடக்கும் பாட்டாளிகள் அந்த தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்காக ஓரிடத்திலே ஒருங்கு சேருகின்றனர். அவர்கள் எல்லோரும் சேர்ந்தே வருகின்றனர். சேர்ந்தே வேலை செய்கின்றனர். இயந்திரத்தோடு இயந்திரமாக இணைந்து போய் உழைக்கின்றனர். ஒரே விதமான வாழ்க்கை அனுபவங்கள் கிடைக்கின்றன. அவர்களின் வேலை முறை அவர்களுக்கு கட்டுப்பாடு கற்றுத் தருகிறது. சேர்ந்து வாழ்வதால் ஒருங்கிணைந்த சமுதாய வாழ்க்கையை அவர்களுக்கு பயிற்றுவிக்கிறது. ஒரே விதமான வாழ்க்கை ஒரே விதமான எண்ணங்களை அவர்களுள் உண்டாக்குகிறது. அவர்களிடையே கூட்டு மனப்பான்மை வளர்கிறது. முதலாளி கூட்டுப் பகைவனாகிறான். கூட்டாக போராடும் மனப்பான்மை தோன்றுகிறது. இவ்வாறு முதலாளித்துவ அமைப்பே தனக்கு சமாதி கட்டுபவர்களை படைக்கிறது". – இவைதான் மார்க்ஸ் 'கம்யூனிஸ்ட் அறிக்கை'யில் வெளியிட்ட கருத்துக்கள்!

ஆனால், இவை அனைத்தும் 'இளந்தொழிலாளர் சங்க' உறுப்பினர்களுக்கு காகிதங்களில் உள்ள எழுத்துக்கள் மட்டுமே! அப்போது நம் நாடு தொழில்துறையில் பின்னடைந்த நாடு. தொழிற்சாலைகள் மிகக் குறைவாகவே இருந்தன. அதனால் அவர்கள் ஒரு தொழிற்சாலையோ, அங்கே வேலை செய்யும் தொழிலாளரின் வாழ்க்கை முறையோ பார்த்திருக்கவில்லை. மார்க்ஸ் தன் சித்தாந்தங்களுக்கு தொழிலாளரையே அடிப்படையாகக் கொண்டார். இவர்களுக்கோ அவர்களைப் பற்றி ஒன்றுமே தொரியாது. ஆகவே மார்க்ஸின் போதனைகளை இவர்களுக்கு புரிந்துகொள்வது கடினமாக இருந்தது.

புதிய தொழிற்சாலை வாழ்க்கையுடன் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதற்காக அவர்களை அடிக்கடி நான் 'பி அண்ட் சி' மில்லுக்கு அழைத்துச் செல்வேன். தொழிற்சாலைக்கு சற்று தூரத்தில் நாங்கள் நின்றிருப்போம். சங்கு ஊதியதும் எட்டாயிரம் பத்தாயிரம் தொழிலாளர்கள் வேலை முடிந்து களைத்து சாரை சாரையாக வெளியே வருவார்கள். அப்போது என்னுடன் நின்றிருக்கும் தோழர்களுக்கு தொழிலாளரின் கட்டுப்பாட்டைப் பற்றியும், அவர்களின் வர்க்க உணர்வு பற்றியும் மார்க்ஸ் கூறியவற்றை நினைவுப்படுத்துவேன். தொழிலாளருடன் எவ்வாறு தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும், அவர்களுக்கு

ஆர்வம் உள்ள விஷயங்களுளில் எவ்வாறு பேச வேண்டும் என்பதை அவர்களுக்கு விளக்குவேன். மெல்ல மெல்ல இளந்தோழர்களின் தத்துவ அறிவு வளரத் தொடங்கியது. அவர்களின் கம்யூனிஸ ஞானம் பெருகி யது. அவர்கள் அரசியல் பிரச்சினைகளை புரிந்து கொள்ளவாரம்பித் தார்கள். சங்க சந்தாப்பணம் தவறாமல் செலுத்தினார்கள். அப்போது மாதச் சந்தா இரண்டணுக்கள் (பன்னிரெண்டு காசுகள்). சிலர் அதிகமா கவும் தந்தார்கள். கடினமாக உழைத்துப் பணியாற்றும் என் வாழ்க்கையை அவர்கள் கவனித்துவந்தார்கள். மத்தியதர பிரிவைச் சேர்ந்த மாணவர் களுக்கு அவர்கள் வீட்டில் பிற்பகல் சிற்றுண்டிக்கென ஆறணாக்கள் தருவார்கள். அதை அவர்கள் அப்படியே எங்கள் 'இளந்தொழிலாளர் சங்கத்திற்கு' நன்கொடையளித்து விடுவார்கள். அந்த பணத்தைக் கொண்டு பத்திரிக்கையை நடத்தினோம். துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டோம். இவ்வாறு அம்மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும்போதே அவர்களிலே திறமையானவர்களை அடையாளங்கண்டு முக்கிய தோழர்களாக சேர்ந்துக் கொள்வோம். தோழர்கள் ஜெயராமன், வி. கே. நரசிம்மன், கே. சத்திய நாராயணா, இஞ்சினிரிங் மாணவர் இவர்களெல்லோரும் தம்மை திறமை யானவர்களென் நிரூபித்துக்கொண்டார்கள். அலுமினியத் தொழிற்சாலை யைச் சேர்ந்த தொழிலாளர் சிலரும், வடிவேலுவும், அவரது சகோதரர் மாணிக்கமும்கூட திறமையானவர்களே! தோழர் வி. கே. நரசிம்மன் எங்கள் சங்க செயலாளர். அரைப் பட்டினியுடன் நான் செய்த பணி யைக் கண்டு அவர் மிகவும் எழுச்சிகொண்டார். அவருடைய ஒன்றுவிட்ட சகோதரியின் கணவன் டாக்டர் வரதாச்சாரி என்பவர். சென்னை கிருத்துவக் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராக இருந்தார். அவருடன் பேசி நாம் அவரை ஈர்த்துக் கொண்டால் அவர் நமக்கு எவ்வளவோ உதவுவாரென நரசிம்மன் கூறினார். அப்படியே சந்திக்க ஏற்பாடு செய்யுங் கள் எறேன்.

டாக்டர் வரதாச்சாரி பிராமணர். நீண்ட நெடிய உருவம். கவர்ச் சிகாரமானவர். அவரை சந்திக்கும் கூட்டத்திற்கு வி. கே. 25, 30 வாலிபர் களையும் அழைத்திருந்தார். அத்தனை படித்த இளைஞர்களை அங்கே கண்டதும் வரதாச்சாரிக்கு உற்சாகம் பொங்கியது. அவர் தத்துவ இயல் பற்றி ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியிருந்தார். இளைஞர்கள் முன் தன் சித்தாந்தம் விவரிக்கவாரம்பித்து விட்டார். அவர் மிகக் 'குஷி' யாக சண்டப் பிரசங்கமாக பேசிக் கொண்டிருந்தார்.

ஒவ்வொருவரிலும் ஒரு அற்புத சக்தி இருக்குமென்றும், அதை வளர்த்துக் கொண்டால்—மிக உன்னத நிலையை அடையலாமென்றும் அவர் சொல்லிக் கொண்டிருந்தார். எனக்கு சிரிப்பு வந்துவிட்டது. என் புன்சிரிப்பை அவர் பார்த்துவிட்டார். அவருக்கு கோபம் வந்துவிட்டது. "நீங்கள் உங்கள் சொந்த கருத்துக்களை எவ்வளவு உயர்வானவையாக எண்ணுகிறீர்களோ, அதேபோல் மற்றவர்களுக்கும் அவர்களுடைய கருத் துக்கள் உன்னதமானவை. இப்படி சிரித்து அவமானப்படுத்துவது பண் பாடல்ல" என்றார் அவர்.

உங்கள் தத்துவ இயலைக் கேட்டு நான் சிரிக்கவில்லை. யாரானா லும் உயர்ந்த நிலையை அடையலாமென்று நீங்கள் சொன்னதும், எனக்கு பம்பாயின் சேரிப் பகுதிகள் நினைவுக்கு வந்துவிட்டன. அங்கே தாய் மார்கள் வேலைக்கு போக வேண்டுமானால் குழந்தைகளைத் தூங்கச் செய்ய வேண்டும். அதற்காக அவர்கள் தம் குழந்தைகளுக்கு அபினி தந்து தூங்க வைத்துப் போய்விடுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை

யில் வளரும் குழந்தைகள் பெரியவர்களாக வளர்ந்து உயர்ந்த நிலையை அடைய முடியுமா? வாழ்க்கை உங்களுக்கு எல்லா வசதிகளும் தந்தது. அதனால் நீங்கள் படித்துத் தேர்ந்து தத்துவப் பேராசிரியரானீர்கள். ஒரு புதிய சித்தாந்தத்தையே படைத்திருக்கிறீர்கள். இதேபோல் பசியும், பட்டினியும் இல்லாவிட்டால் யாரானாலும் உன்னத நிலையை அடையலாம். ஆனால், இன்றைக்கு நம் மக்களுக்கு வயிறு நிறைய உணவு இல்லை; உடை இல்லை; அப்படிப்பட்டவர்கள் தத்துவ இயல் பற்றி என்ன சிந்திக்க முடியும்? எப்படி உயர்ந்த நிலையை அடைய முடியும்? என்றேன் நான்.

"இந்த விஷயத்தில் நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்கிறேன்" என்றார் வரதாச்சாரி. இறுதியாக நான், "எங்களுடன் சேர்ந்து பணியாற்றுங்கள். அனைவரும் உன்னத நிலையை அடையக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவோம்" என்றேன்.

அவர் ஒரு நாள் வேறு நான்கு பேராசிரியர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர்களுடன் பல மணி நேரம் அரசியல், தத்துவம் இன்ன பிற விஷயங்களை விவாதித்தோம். இவ்வாறு எல்லா தரப்பு மக்களுடனும் எங்கள் தொடர்புகள் பெருகின.

திரு சீனிவாச ஐயங்கார் அகில இந்திய காங்கிரஸ் தலைவராகவும் ஒரு காலத்திலிருந்தார். அவர் 'சைமன் கமிஷ'னுக்கு எதிராக சென்னையில் 'அர்த்தால்' நடத்தினார். அதற்கு தன்னுடைய சொந்த பணத்தையும் நிறையவே செலவழித்ததாக பேசிக் கொண்டனர். அவர் மத்திய சட்ட சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1930ம் வருடம் சட்டசபை பதவிகளுக்கு ராஜினாமா செய்யுமாறு காந்திஜியின் கட்டளையை அவர் எதிர்த்தாலும், ராஜினாமா செய்துவிட்டார். அவர் காங்கிரஸிற்காக எவ்வளவோ உழைத்தார். மாபெரும் தேசியவாதியாயினும் காந்தியின் நடைமுறையை எதிர்த்து வந்தார். டாக்டர் வரதாச்சாரியும், வி.கே.நரசிம்மனும் அவருக்கு 'இளந்தொழிலாளர் லீகி'ன் திட்ட அறிக்கையை தந்தனர்.

அப்போதே கே.பாஷ்யம் என்பவரின் அறிமுகமும் கிடைத்தது. அவர் யோகாப்பியாசம் செய்பவர். சென்ற காலத்தில் தனி நபர் வன்முறையிலே நம்பிக்கைக் கொண்டிருந்தார். அவருடைய ஒரு நண்பருக்கு இதற்காக பத்தாண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. பாஷ்யமும் சில தீவிரச் செயல்களில் ஈடுபட்டார். சென்னை உயர்நீதி மன்றத்தின் எதிரில் ஒரு உயரமான 'வயர்லெஸ்' கோபுரமிருந்தது. இரவு நேரத்தில் அவ்வளவு உயரத்தில் ஏறி மூவண்ணக் கொடியைப் பறக்கவிட்டார். அந்நியத்துணிகளை விற்பனை செய்த சில ஜவுளிக் கடைகளையும் தீ வைத்துக் கொளுத்தினார்.

பாஷ்யத்துடன் புரட்சி லட்சியத்தையும், கம்யூனிஸ்ட் செயல்முறையையும் விவாதித்தோம். அவரும் எங்களுடன் சேர்ந்தார்.

மின்சார ரயிலுக்கு நிரந்தர ஊழியர்களை நியமனம் செய்தபோது மாத்யூவுக்கு மறுபடியும் அநீதி இழைக்கப்பட்டது. அவரிடம் பயிற்சி பெற்ற ஆங்கிலோஇந்தியர்களுக்கு அவரை விட உயர்ந்த வேலையும், அதிக சம்பளமும் கொடுக்கப்பட்டன. அதனால் அவர் தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டார். அதற்கு முன்பு அவர் தன் உறவினர் ஒருவருக்கு அஞ்சல் இலாகாவில் இன்ஸ்பெக்டராக வேலை வாங்கித் தந்தார். அவர்கள் இருவருக்குமிடையே நெருக்கமான நட்பிருந்தது. ஐரோப்பாவுக்கு வாரத்திற்கொரு முறை பம்பாயிலிருந்து கப்பலில் தபால்

அனுப்பி வந்தனர். மாத்யூவின் உறவினர் சென்னையிலிருந்து தபால் களை வாரத்திற்கொரு தடவை பம்பாய்க்கு கொண்டு சென்றார். இவர் பம்பாய்க்கு ரகசியச் செய்திகள் அனுப்ப எங்களுக்கு பின்னாளில் எவ்வ ளவோ உதவினார்.

மாத்யூ அறிமுகம் செய்து வைத்த வெங்கட்ராமனின் தம்பி மத்திய அஞ்சல் அலுவலகத்தில் 'ஸார்ட்டராக' வேலை செய்து வந்தார். அவர் மூலம் வேறு சில தபால் ஊழியர்களின் தொடர்பும் கிடைத்தது. அவர் களிடமிருந்து சி.ஐ.டி.க்கள் தபால்களை எவ்வாறு தணிக்கை செய்கின்ற னர் என்பதைத் தெரிந்து கொண்டோம்.

சி.ஐ.டி.க்கள் தாம் தணிக்கை செய்ய விரும்புபவர்களின் விலாசங் களை 'ஸார்ட்டர்க'ளுக்கு தருவார்கள். 'ஸார்ட்டர்கள்' அந்த கடிதங் களை சி.ஐ.டி.க்களுக்குக் கொடுத்துவிடுவார்கள். பிறகு சி.ஐ.டி.க்கள் கடிதங்களைப் பிரித்துப் பார்த்தோ, நகல் செய்து கொண்டோ திருப்பித் தருவார்கள். "நீங்கள் பிழைப்புக்காக அடிமை வாழ்க்கை வாழ்ந்து கொண் டிருக்கிறீர்கள். அரசுக்கு எதிரான இயக்கத்துக்கு துரோகமிழைத்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்று 'ஸார்ட்டர்க'ளுக்கு அறிவுறுத்தினேன். அவர்களை ஒன்று கூட்டி சி.ஐ.டி.க்களை ஏமாற்றுங்களென்று போதித் தேன். ஆனால், அவர்களை நேரிடையாக எதிர்க்காமல், அவர்களின் நம்பிக்கைக்குரியவர்கள் போல் நடித்துக் கொண்டே அரசியல் ஊழியர் களின் கடிதங்களைச் சி.ஐ.டி.க்களின் கண்களில் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றேன்.

அவர்கள் இவ்வேலையை உண்மையிலேயே திறம்படச் செய்தனர்.

மாத்யூ ராஜினாமாவுக்குப் பிறகு நான் நகரத்திற்கே குடி வந்துவிட் டேன். போலீசாரிடமிருந்து தப்பிக்க இருப்பிடங்களை மாற்றிக் கொண்டே இருந்தேன்.

எங்கள் செயல்பாடுகள் அதிகரிக்க, அதிகரிக்க யாரோ வெளியிலி ருந்து சென்னைக்கு வந்து, அரசியல் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டி ருக்கின்றனர் என்ற சந்தேகம் போலீசாருக்கு ஏற்பட்டது.

'முன்னேற்றம்' பத்திரிகை தவறாமல் வெளிவருவதும், அது உழைக் கும் மக்கள் வாழும் பகுதிகளில் விற்பனை செய்யப்படுவதும் இதற்கோர் காரணம்!

ஒரு நாள் வடிவேலுவை சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத் திற்கு அழைத்தனர்.

எலும்பும், தோலுமாக, சரியான உடையுமின்றி ஒண்டி வேட்டியு டன் தன் எதிரிலே நின்ற வடிவேலுவைப் பார்த்து போலீஸ் கமிஷனர் வியப்படைவது இயற்கையே!

"நீ தான் 'முன்னேற்றம்' பத்திரிகை ஆசிரியரா?"

"ஆமாம்".

"பத்திரிகையில் வெளியிடும் செய்திகள் உனக்கெப்படி தெரிகின் றன? அதில் வரும் கட்டுரைகள் உனக்கு எங்கிருந்து கிடைக்கின்றன?"

"நூல் நிலையங்களைச் சுற்றித் திரிகிறேன். வெளிநாட்டுப் பத்தி ரிகைகளைத் தேடுகிறேன்."

கமிஷனருக்கு ஒன்றும் தோன்றவில்லை. "நீ போகலாம்" என்று வடிவேலுவை அனுப்பிவிட்டார்.

எம்.எஸ்.எம். ரெயில்வேயில் தானாகவே தொழிலாளரின் ஒரு

வேலை நிறுத்தம் நடைபெற்றது. மற்ற தோழர்களுடன் சேர்ந்து அங்கே போனேன். வேலை நிறுத்தக்காரர்களை சந்தித்தோம். அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தோம். 'உங்களைச் சுற்றியுள்ள சீர்திருத்த தொழிற்சங்கத் தலைவர்களின் பேச்சைக் கேட்காதீர்கள்!' என்றோம். நாங்கள் இப்படி தொழிலாளருடன் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை யறிந்த அவர்களின் தலைவர் வந்து, "நீங்கள் யார்? இங்கே ஏன் வந்தீர்கள்?" என்று எங்களை கடுமையாகக் கேட்டார். "நாங்கள் மனிதர்கள். போராடும் தொழிலாளருக்கு எங்கள் ஆதரவைத் தெரிவிக்க வந்தோம்" என்றோம். "நீங்கள் இங்கிருந்து போய்விடுங்கள்!" எனச் சீறினார்.

நான் தலைமறைவாக இருந்து வந்ததால், இனியும் பேச்சைத் தொடர்ந்தால் அபாயமென எண்ணி வந்துவிட்டேன்.

1931ல் தொழிற்சங்க இயக்கம் பிளவுபட்டது. பிரிந்தவர்கள் வேறொரு சங்கத்தை அமைத்துக் கொண்டனர். அதன் தலைவர் சிவ ராவ். பிரிந்ததற்கான காரணங்களை விவரிக்க சென்னையில் தொழிலாளர் பொதுக்கூட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்தார். கூட்டத்தில் எங்கள் தோழர்கள் அவரை பல கேள்விகள் கேட்டு மடக்கினர். கூட்டத்தை முடிக்காமலேயே அவர் எழுந்து போய்விட்டார்.

எங்கள் தோழர்கள் 'மீரட் சதி வழக்கில்' கைதான பிறகு இளம் தோழர்களிடையே இடதுசாரி தீவிரவாதம் தலைதூக்கியது. அவர்கள் தம்முடைய சக தொழிற்சங்கத் தலைவர்களை கொடுமைப்படுத்தவாரம்பித்தார்கள். தொழிலாளரிடையே இடதுசாரிப் போக்கு தென்படவே பழைய தொழிற்சங்கத் தலைவர்கள் கலவரமடைந்தார்கள். அலுமினியத் தொழிலாளர் சங்கமும், வேறு சில சிறிய தொழிற்சங்கங்களும் எங்கள் பக்கம் வந்தன. அக்காலத்தில் சென்னையில் 'டிரேட் யூனியன் லேபர் போர்டு' என்னும் பெயரில் தொழிற்சங்க இணைப்புக் கமிட்டி ஒன்றிருந்தது. அதிலே உள்ளூர் பிரச்சினைகளே விவாதித்தார்கள். ஆனால் அதன் தலைவர்கள் சீர்திருத்தவாதத் தலைவர்கள்.

முதல் உலகப் போர் முடிவு பெற்றதுமே முதலாளிகள் தொழிலாளருக்கு கொடுத்து வந்த பஞ்சப்படியை நிறுத்திவிட்டார்கள். இதை எதிர்த்து 'பி அண்ட் சி' மில் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்கள் கருங்காலிகளை மில்லுக்குள் போகவிடாமல் செய்வதற்காக சாலையின் இருமருங்கிலும் நிற்பார்கள். யாராவது கருங்காலிகள் வந்தால் கற்களை வீசுவார்கள். போலீஸார் வந்ததும் தப்பித்துச் சென்றுவிடுவார்கள். வெளி உதவி இன்றியே வேலைநிறுத்தம் நீண்டகாலம் நடைபெற்றது. அதிகாரிகள் தொழிலாளரை பேச்சு வார்த்தைக்கு அழைத்தாலும், கைது செய்யப்படுவோமென அஞ்சி அவர்கள் பேச்சு வார்த்தைக்கு போகவில்லை. பசியை பொறுக்க முடியாமல் அவர்கள் கொள்ளைகளிலும், சூறையாடல்களிலும் ஈடுபட்டார்கள். இறுதியில் அன்றைய சென்னை கவர்னர் வெலிங்டன் சமூக சேவகர்கள், பிரம்ம ஞான சபை உறுப்பினர் சிலர் துணையுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

நான் அப்போதைய வேலை நிறுத்த தலைவர்கள் சிலரை சந்தித்தேன். "நான் பம்பாய் தொழிற்சங்க இயக்கத்தில் பணியாற்றுகிறேன். சென்னையில் தொழிற்சங்கம் அமைக்க வந்திருக்கிறேன். உதவுங்கள்" என அவர்களைக் கேட்டுக் கொண்டேன். முதலில் சம்மதித்த அவர்கள் பிறகு என்னை கொஞ்சம் பொருளுதவி புரியுமாறு கோரினர். நானே

அரைப் பட்டினியுடன் நாட்களை ஓட்டுவது அவர்களுக்கெப்படித் தெரியும்?

"என்னிடம் பணமில்லை. தொழிற்சங்கம் கட்ட எனக்கு உதவினால் என் பம்பாய் தோழர்களை அறிமுகம் செய்து வைப்பதாகக் கூறினேன். பண விஷயம் அவர்களிடம் பேசலா"மென்றேன். அவ்வளவு தான்! பின்னர் அவர்கள் எனக்கு தென்படவே இல்லை.

தென் இந்திய ரெயில்வேயில் 1930ல் ஒரு வேலை நிறுத்தம் நடைபெற்றது. ஓடும் ரெயில்களை நிறுத்திவிட்டனர். தொலைபேசி, தந்திக் கம்பிகளை அறுத்தெறிந்தனர். ரெயில்வே சொத்துக்கும் சேதம் விளைவித்தனர். அதற்காக தொழிலாளர் பலருக்கும் நீண்ட கால தண்டனைகள் விதிக்கப்பட்டன. முகுந்தலால் சர்க்கார் என்றும் வங்காளித் தலைவருக்கு இருபதாண்டு கடுங்காவல் விதித்தனர்.

நான் போலீஸாரிடமிருந்து தப்பித் திரிந்து வந்தேன். நான் தனி நபர்களைச் சந்திப்பதும், அபாயகரமானதுதான்! என்றாலும், தென் இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் அமைப்பதில் உதவக்கூடியவர்கள் எனக் கருதப்பட்ட அனைவரையும் சந்தித்து வந்தேன். கைது செய்யப்படும் அபாயத்தைத் தவிர்க்க நான் இரவில் தூங்கும் இடங்களை மாற்றிக் கொண்டே இருப்பேன். நான் அன்று எங்கே உறங்குவேன் என்பது வி.கே.நரசிம்மன் போன்ற ஓரிருவருக்கு மட்டுமே தெரியும். வி.கே.நரசிம்மன் மாம்பலத்தில் ஒரு வீட்டில் குடியிருந்தார். அடுத்த பகுதியில் வீட்டுச் சொந்தக்காரர் இருந்தார். சென்னையில் அப்பகுதி பூராவும் பிராமணர்கள் குடியிருக்கும் பகுதியாகும். மிகவும் அவசியமான போதெல்லாம் நான் வி.கே.யைத் தேடிப் போனேன். வேற்று மனிதர்களை அப்பகுதிக்குள் வரவிடமாட்டார்கள். வி.கே.யின் வீட்டுச் சொந்தக்காரர் "இவர் யார்?" என்று என்னைப் பற்றி கேட்டிருக்கிறார்.

"அவர் பெயர் சங்கர். வடநாட்டு பிராமணர்" என்று சொல்லியிருக்கிறார் வி.கே.யின் தம்பி.

அதனால் என் பெயர் 'சங்கர்' ஆக மாறிவிட்டது. தென் இந்திய பிராமணர்கள் போலவே பூணூல் போட்டுக் கொண்டேன். மொட்டையடித்து சின்ன குடுமி வைத்துக் கொண்டேன். செருப்புப் போடுவதை விட்டுவிட்டேன். அந்த கடுமையான வெயிலில் இது மிகவும் கஷ்டமாக இருந்தது. தார் போட்ட சாலைகளில் நடக்கும்போது சூடான தார் உருகி கால்களில் ஒட்டிக்கொள்ளும். கால்களிலெல்லாம் கொப்புளங்கள் தோன்றும். ஒட்டிக் கொண்ட தாரைப் போக்க குளிக்கும்போது கால்களை செங்கல்லால் அழுத்தித் தேய்க்க வேண்டிவரும்.

புதிய தோழர்கள் மிக சுறுசுறுப்பாக இயங்கினர். புதிய புதிய அறிமுகங்களைக் கொண்டு வந்தனர்.

ஒரு தடவை என்னை சுப்பாராவ் என்னும் தோழர் ஒரு குழுக் கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார். அதில் அச்சமாம்பாள் என்ற இளம் பெண்ணும் இருந்தார். அவர் பிறகு கட்சியின் உறுப்பினருமானார். எங்கள் அரசியல் கண்ணோட்டம் விளக்கும்போது, நான் காங்கிரஸ் கட்சியை கடுமையாக விமர்சித்தேன். அங்கே மேனன் என்னும் கேரளத்தவர் இருந்தார். அவர் ஒரு டாக்டர். ஏகாதிபத்தியத்திற்கு ஊழியம் செய்யமாட்டேன் என சபதம் செய்து, மெடிக்கல் சர்வீஸிலிருந்து ராஜினாமா செய்துவிட்டவர். என்னுடைய விமர்சனம் அவரால் பொறுக்க முடியவில்லை. "நீ போல்ஷ்விக் ஏஜெண்ட்!" என்று என்னைப் பார்த்து கத்தினார் மேனன். "நான் யாருக்கும் ஏஜெண்டல்ல. நானே போல்ஷ்

வித்!" எனக் கூறிவிட்டேன். அப்போதைக்கு ஏற்பட்ட இயக்க வளர்ச்சி எனக்கு அந்தத் துணிவைத் தந்தது.

என் அரசியலும், வேலை முறையும் பாஷ்யத்துக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டன. பல வாலிபர்களை அவர் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர்களுடன் அரசியல் விவாதம் நடத்துவோம். அவர்களின் சந்தேகங்களைத் தீர்த்து வைப்போம். அவர்கள் சம்மதித்தால் எங்களுடன் சேர்ந்து பணியாற்றுமாறு கோருவோம்.

பாஷ்யத்தை பாண்டிச்சேரிக்கு அனுப்பி வைத்தேன். அங்குள்ள அரசியல் ஊழியர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சித்தோம். "எந்த ஐரோப்பா நாடும் தன் மண்ணில் அந்நிய நாட்டுக்கொடி பறக்க சம்மதிக்காது. இந்திய மண்ணில் மட்டும் வேற்று நாட்டுக் கொடிகள் ஏன் பறக்க வேண்டும்?" என்ற வாதத்தை நாங்கள் அவர்கள் முன்வைத்தோம். அப்போது பாண்டி பிரெஞ்சுக் காலனியாகவும், கோவா போர்த்துகீசியக் காலனியாகவும் இருந்தன. எந்த நாட்டின் காலனியாக இருந்தாலும், இந்திய மக்கள் அனைவரின் போராட்டம் ஒன்றே என்றும், நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டுமென்றும் கூறினோம்.

ஜெயராம் மின்சார டெக்னிஷியன். நல்ல அறிவுக்கூர்மை உள்ளவர். அவருக்கு தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு மொழிகள் தெரியும். சென்னையில் வசித்த அவருக்கு ஒரு ஒன்றுவிட்ட விதவை சகோதரியும் இருந்தார். அவர் தம்பி ஒரு அமைச்சரின் கார் டிரைவர். அந்த சகோதரியின் வீட்டிலேயே எங்கள் கூட்டங்கள் அதிகமாக நடக்கும். அவருக்கு எங்கள் வருகை மிகுந்த மகிழ்ச்சியளிக்கும். அவர் எங்களுக்கெல்லாம் சிற்றுண்டியும் காப்பியும் தருவார். நாங்கள் அனைவரும் அவரை "அக்கா!"வென்றே அழைப்போம். அந்த அமைச்சர் கார் டிரைவருடன் ஜெயராமின் உறவை அறிந்ததும் நாங்கள் ஒரு திட்டம் வகுத்தோம்.

ஜெயராம் மேற்படிப்புக்கென்று ஜெர்மனி செல்ல பாஸ்போர்ட் சம்பாதிக்க வேண்டும். அதற்காக அவர் இங்கிலீஷ் எலெக்டிரிக் கம்பெனியின் சீஃப் இன்ஜீனியரிடமிருந்து சிபாரிசுக் கடிதம் கொண்டு வர வேண்டும். பாஸ்போர்ட் இலாகா சூப்பிரண்டெண்ட் கார் டிரைவருக்கு நன்றாகத் தெரியும். டிரைவர் அதைப் பயன்படுத்தி ஜெயராமுக்கு பாஸ்போர்ட் வாங்கித் தர வேண்டும்.

எங்கள் திட்டம் வெற்றி பெற்றது. ஒரே நாளில் பாஸ்போர்ட் கிடைத்துவிட்டது.

நான் தென் இந்தியாவைச் சேர்ந்தவனல்ல. தலைமறைவாக வாழ்பவன். ஆகவே நான் போதியளவு ஊழியர்களைத் தயார் செய்ய வேண்டும். அவர்கள் மாநிலம் பூராவிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்தை ஒன்று திரட்டி, வலுவான கம்யூனிஸ்ட் இயக்கத்தை அமைத்திட வேண்டுமென்பது என் திட்டம்!

அதற்காகவே ஜெயராமை மாஸ்கோவிலிருந்த கிழக்கத்திய பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க விரும்பினேன். அதற்காகவே பாஸ்போர்ட்டுக்கு முயற்சித்தோம்.

"ஆங்கிலமும், கணிதமும் நான் கற்க விரும்பினால் எனக்கு நீங்கள் தான் ஆசான்கள்! ஆனால் கட்சி அமைப்பைப் பற்றி மட்டும் நீங்கள் என்னிடம்தான் கற்றுக் கொள்ள வேண்டும்". என்று என் குழுவினரிடம் தெளிவாக கூறுவேன். "மெள்ள மெள்ள நீங்கள் உங்கள் மாநிலத்திலேயே அரசியல் போராட்டங்களை சுயமாக நடத்தக் கூடிய அளவுக்கு

வளர்வீர்கள். மொழிக்கூட தெரியாத இங்கே நான் நீண்ட காலம் இருக்க முடியாதல்லவா!" என்று அவர்களை விரைவாக சிறந்த ஊழியர்களாக உருவாகும்படி கோரினேன்.

அமைதியாக இருந்த சென்னை மாநிலத்தின் அரசியலில் ஒரு புதிய போக்கு தோன்றிக் கொண்டிருக்கிறதென்றும், அதற்கு வெளியாள் யாரோ காரணமென்றும் போலீஸார் சந்தேகித்து, அதிகமாகக் கண்கா ணிக்கத் தொடங்கினர். நான் அடிக்கடி என் தங்குமிடங்களை மாற்றிக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் நானும், மற்றொரு மாணவரும், ஒரு புதிய நபருடன் பேசச் சென்றோம். திரும்பி வரும்போது ஒரு மலிவான ஓட்டலில் சாப்பிட்டு வருகிறேன் என்று சொல்லி அம்மாணவரை என் அறைக்கு அனுப்பிவிட் டேன். அவர் அங்கே சென்றதும் என் அறைக்கு போலீஸார் எனக்காக வந்து போனது தெரிந்தது. அவர் ஓட்டலுக்கு ஓடி வந்து செய்தியைக் கூறினார். போலீஸ் அதிகாரிகள் அங்கிருந்து சென்றுவிட்டாலும், ஒரு போலீஸ்காரரை 'மப்டி'யில் கண்காணிக்க அங்கேயே விட்டுச் சென்ற னர். உடனே என் இருப்பிடத்தை மாற்றிவிட்டேன். சில நாட்கள் கூடுதல் எச்சரிக்கையுடன் மறைவாக இருந்தேன்.

## பி. சுந்தரய்யா

எனக்கு சுந்தரய்யாவைப் பற்றி தெரியும். அவர் கம்பீரமான இளைஞர். 1930ல் சிறைக்கும் போனார். சிறையிலும் அவர் மிகத் தீவிரவாதியாகவே இருந்தார். அரசியல் சூழ்நிலையிலிருந்து அவரை தூரமாக வைக்க வேண்டுமென்று அவருடைய உறவினர்கள் சுந்தரய் யாவை பெங்களூருக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். அங்கே அவரு டைய அத்திம்பேர் செஷன்ஸ் நீதிபதியாக இருந்தார். சுந்தரய்யாவை அங்கே கல்லூரியில் சேர்த்தார்கள்.

"நேரு, சுபாஷ் போன்ற பெரிய தலைவர்களெல்லாம் தமது படிப்பு முடித்துக் கொண்டுதான் அரசியலில் ஈடுபட்டார்கள். நீயும் குறைந்தபட் சம் பட்டப் படிப்பாவது முடித்த பிறகு வேண்டுமானால் அரசியலில் இறங்கலா"மென அவருடைய அத்திம்பேர் கூறினார்.

இந்த விஷயங்கள் அறிந்த பிறகு நான் அவரை சந்திக்க முடிவு செய்தேன்.

ஜெயராம் சொந்த ஊரும் பெங்களூர்தான்! அங்கே அவரது அண்ணாவும், தம்பியும் ஒரு பெரிய அச்சகம் நடத்தி வந்தார்கள். நாங் கள் 'அக்கா' என்றழைத்துக் கொண்டிருந்த சகோதரி அப்போது கர்நா டகாவிலுள்ள சிவசமுத்திரம் சென்றார். அங்கேயே காவேரி நதிக் கரை யிலே மின் உற்பத்தி நிலையம் இருந்தது. அதில் 'அக்கா'வின் சகோதரர் வேலை செய்தார். அக்கா ஜெயராமையும் அழைத்திருந்தார். மைசூரில் தசரா விழா மிகவும் சிறப்பானது. ஜெயராமை அவருடைய உறவினர் கள் மைசூர் வருமாறு அழைத்திருந்தார்கள்.

சுந்தரய்யாவை சந்திக்க நான் மிக்க ஆவலாக இருந்தேன். ஒரு இரவு பூராவும் ரெயிலில் பயணம் செய்து பெங்களூர் போய்ச் சேர்ந்தோம். அங்கே ஜெயராம் சகோதரியின் வீட்டில் தங்கினோம்.

சுந்தரய்யாவை சந்திக்க செஷன்ஸ் நீதிபதியின் இல்லத்திற்கு சென் றோம். அப்போது அவர் கல்லூரியிலிருந்து திரும்பவில்லை. அவருக்காக வழியில் காத்திருந்தோம். நாங்கள் அதுவரை சுந்தரய்யாவை பார்த்திருக்க வில்லை. ஆனால் அவருடைய வாட்ட சாட்டமான உருவத்தைப் பற்றிக்

கேள்விப்பட்டிருந்தோம். அதனால் அப்படிப்பட்ட வாலிபர் தென்பட்டதும், "சுந்தரய்யா நீங்கள் தானா?" என்று ஜெயராம் கேட்டார்.

"ஆமாம்" என்றார் அவர்.

சுந்தரய்யா கதர் பைஜாமாவும், அரைக் கைச் சட்டையும் அணிந்திருந்தார். கைகளிலே புத்தகங்கள். காலில் செருப்புகள்.

தனி நபர் பழக்க வழக்கங்களிலும் புனிதமாக இருக்க வேண்டுமென்றும் காந்திஜீயின் போதனையைத் தவறாமல் பின்பற்றிக் கொணடிருந்தார் அவர்.

அவரைப் பற்றி எங்களுக்கு சொன்ன நண்பரின் பெயரை சுந்தரய்யாவிடம் கூறினோம். அவருடன் அரசியல் விஷயங்கள் பேச வந்திருக்கிறோமென்றும் சொன்னோம்.

"நான் வீட்டுப் பாடம் எழுத வேண்டும். சாப்பிடும் நேரமுமாகிவிட்டது. இப்போது முடியாது" என்று கறராகக் கூறிவிட்டார் அவர். கட்டுப்பாடான வாழ்க்கை அவருடையது. கண்டிப்பாக பேசுவது அவரது சுபாவம்.

"உங்களோடு பேச வேண்டுமென்றே நாங்கள் சென்னையிலிருந்து வந்திருக்கிறோம். வேறிடத்தில் நேரத்தை குறித்துக் கொண்டு நாம் சந்திக்கலாமே!" என்றோம் நாங்கள்.

அடுத்த நாள் மாலை நாங்கள் அவரைப் பூங்காவில் சந்திக்க முடிவு செய்து கொண்டோம். நாங்கள் பூங்காவுக்குள் சென்ற போதே சுந்தரய்யா முன்னமேயே அங்கே வந்திருந்தார். நான் அவரை சந்திக்கும் காரணத்தை விவரித்து நானே பேச்சை ஆரம்பித்தேன். காந்திஜியின் இயக்கத்தை எங்கள் கண்ணோட்டத்தில் விளக்கினேன். அதில் பொதிந்துள்ள சுதேசி முதலாளிகளின் வர்க்க நலன்களைத் தெரிவித்தேன்.

சீனாவில் தேசிய இயக்கத் தலைவர் சியாங்கேஷேக்கின் துரோகத்திற்குப் பிறகு, 'கம்யூனிஸ்ட் அகில'த்தில் அதிதீவிரவாதப் போக்கு தலையெடுத்தது. அங்கே ஏகாதிபத்தியத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஐக்கிய முன்னணியை சியாங் நாசமாக்கிவிட்டார். அதற்குப் பிறகும் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்தேறின. அவையனைத்தும் என் மணக்கண் முன்னால் சுழன்றன.

சுதந்திர இயக்கத்தை திடீரென்று நிறுத்திவிட்டு துரோகம் புரிந்த இந்திய முதலாளி வர்க்கத்தின் மீது மிகுந்த கோபத்துடன் இருந்தேன். அதனால் காங்கிரஸ் பற்றிய எனது விமர்சனம் மிக கடுமையாக இருந்தது. விவசாயிகளுடன் நட்புறவு கொண்ட தொழிலாளர் வர்க்கம் மட்டுமே இந்திய தேசிய இயக்கத்தை பூர்த்தி செய்யுமென்று விளக்கினேன்.

அதற்காக தொழிலாளர் கட்சியை அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினேன். நாட்டில் பல இடங்களிலும் கட்சி தோன்றி வேலை செய்து வருவதை எடுத்துக் கூறினேன். தென் இந்தியாவிலும் கம்யூனிஸ்ட் சக்திகள் இருப்பதாகவும், அவர்கள் கட்சியை அமைக்கவும், தொழிலாளர் வர்க்கத்தை ஒன்று திரட்டவும் முயற்சித்து வருகின்றனர் என்பதையும் தெரிவித்தேன். இங்கே உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதில் ஏற்படும் சிரமங்களையும் விவரித்தேன்.

" எனக்கு தென் இந்தியாவின் பிராந்திய மொழிகள் வராது. உள்ளூர் அரசியல் ஊழியர்களும் தெரியாது. ஆனுலும் புதியவர்களை தேடிப்பிடித்து அவர்களைக் கொண்டு சென்னையில் 'இளந்தொழிலாளர் லீக்' அமைப்பை நிறுவினேன். அந்த வாலிபர்களெல்லோரும் அனுபவமில்லாதவர்கள். அனுபவமும், ஈடுபாடும் கொண்ட வாலிபர்

களை தேடிக்கொண்டிருக்கிறேன். அவர்கள் இப்பகுதியிலுள்ள பாட்டாளிகளை ஒன்று திரட்டும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறுதான் உண்மையான புரட்சிகர தொழிலாளர் கட்சியை அமைக்க முடியும்." என்று நான் சுந்தரய்யாவுக்கு எடுத்துக் கூறினேன். ' இளந்தொழிலாளர் லீகி'ன் திட்டம் அவரிடம் தந்து, எங்களுடன் சேர்ந்து வேலை செய்யுங்கள் என்று கோரினேன்.

"முதலில் நான் என் படிப்பை முடிக்க வேண்டும். எனக்கு நேரமாகிவிட்டது. புறப்படுகிறேன்" என்று சொல்லி எழுந்தார் அவர். திட்டமிட்ட வாழ்க்கை அவருடையது. குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட வேலையை செய்து தீரவேண்டுமென்பது அவரது பழக்கம்.

சில நாட்களுக்குப் பிறகு சுந்தரய்யாவின் செஷன்ஸ் நீதிபதி அத்திம்பேரின் இல்லத்தில் ஒரு திருமணம் வைபவமாக நடைபெற்றது. அவரது இல்லம் கன்டோன்மென்ட் பகுதியில் இருந்தது. அங்கே பிரிட்டிஷ் ராணுவமும் இருந்தது. திருமண விழாவில் பிரிட்டிஷாரின் தேசியக் கொடியான ' யூனியன் ஜாக்' கையும் ஏற்றினர். அதற்கு ஆட்சேபம் தெரிவித்தார். 'யூனியன் ஜாக்' கை பறக்க விட்டுத்தானாக வேண்டுமென்பது உறவினர்களின் கூற்று. அந்நியக்கொடி பறக்கும் வீட்டில் இருக்க மாட்டேன் என்று சுந்தரய்யா தன் சொந்த கிராமத்திற்கு புறப்பட்டு விட்டார். வழியில் சென்னையில் இறங்கி சில புத்தகங்களை வாங்கினார். கே.சத்திய நாராயணா போன்ற சில நண்பர்களையும் சந்தித்தார்.

அவர் சென்னை வந்திருக்கும் செய்தி கிடைத்ததுமே நான் ' சென்டிரல்' ரெயில் நிலையத்திற்கு ஓடினேன். நான் உள்ளே நுழைந்த போது வண்டி புறப்பட்டுவிட்டது. நாங்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம்.

மைசூர் செல்லும் வழியில் ஜெயராமின் சகோதரியும், உறவினர்களும் ஸ்ரீரங்கப் பட்டினம் போனார்கள். அங்கே திப்பு சுல்தானின் கோட்டை இருக்கிறது. இப்போது அது காட்சியமாக இருக்கிறது. கோட்டை மத்தியில் ஒரு இந்து கோயிலும் உண்டு. இதற்கோர் தனி சிறப்பு இருக்கும் போலிருக்கிறது. வழிபடுவதற்காக அவர்கள் கோயிலுக்குள் சென்றனர். நானும் அவர்கள் பின்னாலேயே சென்றேன். நான் பிறப்பால் முஸ்லிம் என்பது தெரிந்தால் என்னாகியிருக்குமோ! அங்கேயிருந்து எல்லோரும் தசரா விழாவிற்காக மைசூர் சென்றனர். நானும், ஜெயராமும் சிவசமுத்திரம் போனோம். அக்காவின் வீட்டில் தங்கி நீர் மின் நிலையம் வேலை செய்வதைக் கண்டோம். நான் சென்னை திரும்பி விட்டேன். ஜெயராம் கோலார் சென்று அங்கே சிலரின் அறிமுகங்களைப் பெற்றார். என்னையும் கோலாருக்கு வரும்படி அவர் கடிதம் எழுதினாலும், உடல் நலமில்லாததால் நான் போகவில்லை.

சில கடிதங்கள் தந்து நான் ஜெய்ராமை பம்பாய் அனுப்பி வைத்தேன். அங்கே அவர் சுஹாசினியையும், மற்ற சிலரையும் பார்க்க வேண்டும். மாத்யூவுக்கு ' விக்டோரியா டெர்மினஸ்' ரெயில் நிலையத்தில் வேலை. அவருடைய தபால் இலாகா நண்பர் வாரத்திற்கொரு முறை கடிதங்களை எடுத்துக் கொண்டு பம்பாய் சென்று வந்ததை ஏற்கனவே குறிப்பிட்டேன். அவர் எங்களுக்கு பெரிதும் உதவினார். நாங்கள் பம்பாய்க்கு அனுப்ப வேண்டிய கடிதங்களை சென்னை மத்திய தபால் அலுவலகத்திலுள்ள ' சார்ட்டர்கள்' கையில் தருவோம். அவர்கள் அந்த பம்பாய் செல்லும் தபால் இன்ஸ்பெக்டரிடம் கொடுப்பார்கள். அவர்

தனக்குத் தெரியாமலேயே அக்கடிதங்களை பம்பாயில் உரியவர்களிடம் சேர்ப்பித்து விடுவார். அப்பாவித்தனமாகவே அவர் வெகு அபாயகர மான பணியை நிறைவேற்றிக் கொண்டிருந்தார். எங்கள் ரகசிய கடிதப் போக்குவரத்துக்கு இது எவ்வளவோ பயனுள்ளதாக இருந்தது.

நமது பம்பாய் தோழர்களிடையே கடுமையான கருத்து மோதல்கள் நிலவி வந்தன. அவற்றைக் கண்டு ஜெயராம் ஏமாற்றத்துடன் சென்னை திரும்பி விட்டார். இது விஷயமாக நான் பம்பாயிலிருந்த ' கம்யூனிஸ்ட் அகிலம்' பிரதிநிதியை தீவிரமாக விமர்சித்து கடிதம் எழுதினேன். அவர் மிகவும் வேதனையடைந்தாலும், நான் பொருட்படுத்தவில்லை. நான் சென்னையிலே எத்தனையோ கஷ்டங்களுக்கும், இன்னல்களுக்குமிடை யேயும் உறுதியாக பணியாற்றிக் கொண்டிருக்கும்போது, நான் யாருக்கு ஏன் அஞ்ச வேண்டும்?

## ஜெயராமின் பயணம்

ஜெயராமை ஐரோப்பா பயணத்திற்கு தயாராயிருக்கும்படி சொன் னேன். மார்செல்ஸ் வரை பயணத்துக்கான பணத்தை எப்படியோ சம்பாதித்தேன். அங்கிருந்து ஹாம்பர்க் ரெயிலில் செல்ல வேண்டும். அங்கேயுள்ள ஜெர்மனித் தோழர்களுடன் எனக்கு தொடர்பிருந்தது. நான் இங்கிருந்து அனுப்பி வைக்கும் தோழர்களின் பொறுப்பு அவர்களு டையதே! மாஸ்கோவுக்கு அந்த தோழர்களை அவர்கள் சேர்ப்பிக்க வேண்டும். ஜெயராம் நலமாக மாஸ்கோ போய்ச் சேர்ந்தார். அங்கே அவர் படித்துக் கொண்டிருந்த போது, அவருக்கு வயிற்றில் கட்டி உருவாயிற்று. அறுவை சிகிச்சை செய்தும் பலனில்லாமல் அங்கேயே அவர் காலமானார். இவ்விஷயத்தை இக்பால் சிங் எனக்கு தெரிவித்தார்.

நாங்கள் சென்னையில் கடற்கரைகளிலும், பூங்கா மூலைகளிலும் எங்கள் வாசகர் வட்ட கூட்டங்களை நடத்தினோம். முடிந்தளவு திறமை யான ஊழியர்களைத் தயார் செய்வது எனது வேலையாக்கிக் கொண் டேன். அஞ்சல் அலுவலகத்தில் வேலை செய்யும் வெங்கட்ராமின் தம்பி மிகவும் நம்பிக்கையானவர். அவர் எங்கள் செய்தித் தொடர்பினை திறமையாக நடத்தி வந்தார். அவரை நான் மாஸ்கோவுக்கு அனுப்ப விரும்பினேன். எப்படியோ அவஸ்தைப் பட்டு அவருக்கு ' பாஸ் போர்ட்'டும் சம்பாதித்தோம்.

## பகத்சிங்கும் தோழர்களும்

1931- ம் ஆண்டு மார்ச் இறுதியில் பகத்சிங்கையும், அவரது தோழர்களான ராஜகுரு, சுகதேவையும் லாகூர் சிறையிலே தூக்கிலிட்ட செய்தி இந்தியா முழுவதும் காட்டுத்தீ போல் பரவியது. இந்நிகழ்ச்சி அரசியல் ஊழியர்களின் மனதை கவ்விப் பிடித்தது. இந்திய இளைஞர் களின் புதிய சக்திகளாக விளங்கிய அவர்கள் மீது வழக்கு நடந்தபோது நான் இந்தியாவில் இல்லை. அந்த வழக்கு விவரங்கள் எனக்கு தெரியா விட்டாலும், அவர்கள் விஷயத்தில் இந்திய வாலிபர்கள் எவ்வளவு உணர்ச்சி வசபப்பட்டனரோ நானறிவேன். பகத்சிங்கின், அவரது தோழர்களின் சிந்தனை, தத்துவம், அரசியல் கண்ணோட்டம் ஆகிய வைகளை விவரித்து, வி.கே.நரசிம்மனுக்கு ஒரு கட்டுரை சொன்னேன். அதில் அவர்களின் மகத்தான தியாகங்களைப் புகழ்ந்து பாராட்டிய அதே சமயத்தில் தனிநபர் வன்முறை ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிக்க இயலாது என்பதையும் சுட்டிக் காட்டினேன். ஆகவே வெகுஜன வீரப் போராட்

போராட்டங்கள் அவசியமென்பதை வலியுறுத்தினேன். வெளிநாட்டு ஆட்சியாளரின் கொள்கைகளைக் கடுமையாக கண்டித்தேன். அந்த கட்டுரையை பெங்களூரிலுள்ள ஜெயராமின் தம்பிக்கு அனுப்பி வைத்தோம். அச்சகத்தின் சாவி அவரிடமே இருந்ததால், ஒரு ஞாயிறன்று ஒரு 'லைனோ ஆப்பரேட்டர்' உதவியுடன் துண்டுப் பிரசுரங்களாக அச்சடித்தார். அவற்றை ரெயிலில் சிற்றுண்டி அறையில் வேலை செய்யும் ஒருவர் மூலமாக சென்னை க்கு அனுப்பி வைத்தார். நாங்கள் அவற்றை 1932 மார்ச் மாதத்தில் பகத்சிங்கையும், அவர்களது தோழர்களையும் தூக்கி விட்ட இரண்டாவது நினைவு நாளன்று தொழிற்சாலை வாசல்களிலும், தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளிலும் பரவலாக வினியோகித்தோம். அவை கிடைக்கப் பெற்ற செல்வந்தர்கள் அவற்றைபோலீஸாரிடம் ஒப்படைத்தனர். அத்துண்டுப் பிரசுரம் ராஜத்துரோக வெளியீடாகும். அது வரை தென் இந்தியாவில் அப்படிப்பட்ட பிரசுரம் வெளிவந்ததே இல்லை. ஆகவே போலீஸார் முதலில் அதிர்ச்சியடைந்து, பின்னர் மிகுந்த எச்சரிக்கையாயினர்.

நான் இந்தியாவுக்கு திரும்பி வருவதற்கு முன்பே வெளிநாடுகளில் சில தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு வந்திருந்தேன். அவர்களில் 'ஸீ மென் கிளப்பு'டன் சம்பந்தப்பட்ட ஒரு தோழரும் இருந்தார். அவர் 'கம்யூனிஸ்ட் அகில'த்தின் சார்பில் பல திட்டங்களை நிறைவேற்ற வந்தவர். மற்றொருவர் என் நண்பர் ஹான் பெர்கூஸன். அவர் 'ஏகாதிபத்திய எதிர்ப்பு லீக்' அலுவலகத்தில் பணியாற்றி வந்தார். அதன் செயலாளர் வீரேந்திரநாத் சட்டோபாத்தியாயா (கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் சகோதரர்). பெர்கூஸன் 'டிரஸ்டென்' நகரிலிருந்த தன் மைத்துனி ஹெல்ட்டா புஷ்ஷின் முகவரியை எனக்கு தந்தார்.

ஹான் பெர்கூஸன் சீனாவில் 'கம்யூனிஸ்ட் அகில'த்தின் பிரதிநிதி பொரீடனுடன் சேர்ந்து வேலை செய்தார். அங்கே கோமிண்டாங்கின் துரோகத்திற்குப் பிறகு சோவியத் யூனியன் வந்து விட்டார். அவர் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தவர். அவருடைய மைத்துனிக்கு நான் கடிதங்கள் எழுத நேரும்போதெல்லாம் "நான் அறியாத சகியே!" என்று எழுதி வந்தேன். அவளும் எனக்கு மிகவும் நேசமுடன் பதில்கள் எழுதுவாள். அவைகளை பெர்கூஸன் எனக்கு மொழிபெயர்த்து கூறுவார்.

அந்த நாட்களில் ஜெர்மனியில் இட்லரின் 'பிரவுன் ஷர்ட்கள்' எனப்படும் குண்டர்களுக்கும், ' கம்யூனிஸ்ட் முன்னணி' ஊழியர்களுக்கு மிடையே அடிக்கடி மோதல்கள் நடைபெற்று வந்தன. அவற்றைக் குறித்து எனக்கு ஹெல்ட்டா புஷ் எழுதி வந்தாள். தாங்கள் இறுதிப் போராட்டத்தில் இறங்கப் போவதாகவும், வரலாறு தங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கவிருப்பதாகவும் அவள் எழுதுவாள். வருங்காலத்தின் மீது கம்யூனிஸ்டுகளின் நம்பிக்கை அக்கடிதங்களில் வெளிப்படும்.

ஹெல்ட்டா ஒரு கடிதத்தில் தான் தன் அத்திம்பேர் மூலமாக என்னைப் பற்றி எவ்வளவோ விஷயங்கள் கேள்விப்பட்டதாகவும், இன்னும் தெரிந்துகொள்ள விரும்புவதாகவும், தற்போது நான் இருக்கும் பகுதியைப் பற்றி தெரிந்துகொள்ள விரும்புவதாகவும், இன்னும் என்னன்னவோ அன்பொழுக எழுதியிருந்தாள். சுற்றிலும் எத்தனையோ இன்னல்களுக்கும், போராட்டங்களுக்குமிடையே அவதிப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு பெரிதும் ஆறுதல் அளிப்பவையாக ஹெல்ட்டாவின் கடிதங்கள் இருந்தன.

தொழிலாளர் ஆட்சி செய்யும் ஜெர்மனியிலோ, சுதந்திர இந்தியாவிலோ நாம் சந்திப்போமென்று நான் அவளுக்கு கடிதம் எழுதினேன். நான் தற்போது இருக்கும் தென் இந்தியா நாட்டின் மற்ற பகுதிகளைப் போலில்லை என்றும், இது தனிச் சிறப்புடன் விளங்குகிறதென்றும்,

இங்குள்ள சமூக அமைப்பும், ஜாதிப் பிரிவினைகளும் தனித் தன்மையுடன் விளங்குகின்றன என்றும் ஹெல்ட்டாவுக்கு தெரிவித்தேன். இந்த கடிதத்தின் கையெழுத்துப் பிரதி என்னிடமே இருந்தது. பின்னர் மற்ற காகிதங்களுடன் இதுவும் போலீஸாரின் கைகளில் கிடைத்தது. இக்கடிதம் தென் இந்திய நிலைமையைப் பற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரைப் போன்றது. ஒரு வெளி ஆள் தென் இந்தியா குறித்து இவ்வளவு ஆழமாக எழுதியிருப்பதைக் கண்டு போலீஸ் அதிகாரிகள் வியந்தனர்.

அந்நாட்களிலேயே காலனி நாட்டுப்பிரச்சினைகளில் எம்.என்.ராய் கருத்துக்களை விமர்சித்து நான் ஒரு கட்டுரை எழுதினேன். அது 'இம்பிரெகார்' பத்திரிகையில் வெளிவந்தது.

கைது செய்யப்படுவதிலிருந்து தப்பிக்க நான் அடிக்கடி என் இருப்பிடத்தை மாற்றிக் கொண்டிருந்தேன். அப்படி நான் ஒரு அறையில் குடியிருந்தபோது, அதே வீட்டின் மற்றொரு அறையில் ஒரு விசித்திரமான கிழவர் இருந்து வருவதாக தெரியவந்தது. அவரை பற்றி விசாரித்தேன். அவர் பெயர் உலஸ்க் தத்தா, வங்காளி. 1905ல் நடந்த வங்கப்பிரிவினைக்கெதிராக அவர் வன்முறை நடவடிக்கைகளில் பங்கெடுத்தார். அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு அந்தமான் சிறைக்கு அனுப்பப்பட்டார். அங்கே மனநோய்க்கு ஆளாகி மனநோய் மருத்துவ மனையிலும் சில காலமிருந்தார்.

மருத்துவ மனையிலிருந்து வந்த பிறகு மனநிலை சரியாக இருக்கும் போதெல்லாம் சைக்கிளில் பல்வேறு நகரங்களுக்கும் பயணம் தொடங்கி விடுவார். சைக்கிளிலேயே 'ஸ்டவ்'வும், சமையல் பாத்திரங்களும் வைத்திருப்பார். அவர் ஒருநாள் தான் சமைத்த உணவு கொஞ்சம் எனக்கு தந்தார். நான் சாப்பிட்டுவிட்டேன் மற்ற நண்பர்கள் அதை அவருக்குத் தெரியாமல் எறிந்து விட்டனர். ஒரு பிராமணன் சமைத்த உணவை மற்றொரு பிராமணன் சாப்பிடக்கூடாதாம்! தத்தா காட்சியகங்களையும் இதர முக்கிய இடங்களையும் பார்ப்பார். அவற்றைப் பற்றி கட்டுரைகள் எழுதுவார். ஒரு புத்தகமும் வெளியிட்டார்.

ஒருமுறை நாங்கள் சில கடிதங்களும், துண்டு பிரசுரங்களும் பம்பாய்க்கு தபால் இன்ஸ்பெக்டர் மூலம் மாத்யூவுக்கு அனுப்பினோம். அவற்றை அவர் 'பாலன்' என்னும் தொழிலாளியிடம் தந்தார். பாலன் பம்பாயிலுள்ள 'கம்யூனிஸ்ட் அகிலத்தின்பிரதிநிதியிடம் அவைகளை ஒப்படைக்க 'டாக்ஸி'யில் ஏறினார். போலீஸார் சந்தேகங்கொண்டு பாலனைக் கைது செய்து கடிதங்களும், துண்டு பிரசுரங்களும் கைப்பற்றிக் கொண்டனர். பம்பாய் போலீஸார் சென்னை போலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர். தம்மைக் கலவரப்படுத்திக்கொண்டிருந்த வெளியாள் யாரென்பது அவர்களுக்குத் தெரிந்து விட்டது.

பாலன் 'தாழ்த்தப்பட்ட' வகுப்பைச் சேர்ந்தவர். 1928 ல் பம்பாயில் 'ஜெனரல் மோட்டாஸி'ல் என்னிடம் பயிற்சிப் பெறுபவராக வேலை செய்து வந்தார். அவரை நான் பயிற்சிக்காக மாஸ்கோவுக்கு அனுப்பி வைத்தேன். அங்கிருந்து திரும்பி வந்த பாலன் பம்பாயில் தேஷ்பாண்டே குழுவில் பணியாற்றிக்கொண்டிருந்தார். அவரிடமிருந்து ரகசியங்களை கறக்க போலீஸார் அவரை கொடூரமாக சித்திரவதை செய்தும், அவரிடமிருந்து ஒரு தகவலும் தெரிந்துக் கொள்ள முடியவில்லை. ஆனால் அப்போது கிடைத்த உள் அடிகளால் பின்னர் அகால மரணமடைந்து பாலன் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்காக தன் உயிரையே அர்ப்பணித்தவரானார்.

அதற்கு முன் நான் புரசைவாக்கத்தில் ரங்காவுடன் சேர்ந்து இருந்து வந்தேன். அவர் மரம்பவும் மின்சார நிலைய ஊழியர். வங்க

வீட்டின் தரைப்பகுதியில் இரண்டு பகுதிகள் இருந்தன. ஒன்றில் ரங்கா ராவும், மற்றதில் கேரள மாணவர்களும் இருந்து வந்தனர். மாடியிலே 'பிள்ளை' என்ற வீட்டு சொந்தக்காரர் இருந்தார். சென்னை நகர உதவி போலீஸ் கமிஷனரின் உறவினர். இந்த வீட்டில் வெளியாள் ஒருவர் இருப்பதை சி.ஐ.டி.கள் எப்படியோ தெரிந்துகொண்டனர். ஒரு நாள் விசாரிப்பதற்காக அவர்கள் மாடிக்கு சென்று பிள்ளையைக் கேட்டனர். அப்பொழுது அவர் வீட்டிலில்லை. குதிரைப் பந்தயங்களுக்காக ' கிண்டி' சென்றிருந்தார். அவர் ஒரு குதிரைப் பைத்தியம்! சி.ஐ.டி.கள் நேராக கிண்டி சென்று பிள்ளையைத் தேடிப் பிடித்து 'வெளியாளை'ப் பற்றி விசாரிக்கவாரம்பித்தனர். அவர் பநதயம் முடிந்ததுமே வீட்டுக்கு போக லாமெனச் சொல்லி, சி.ஐ.டி.களை ஏமாற்றிவிட்டு எப்படியோ வீடு வந்து சேர்ந்துவிட்டார். அப்போது ரங்காராவ் வீட்டில் நான் மட்டுமே இருந்தேன். அவர் நடந்த விஷயத்தை படபடப்புடன் கூறி உடனே அங்கிருந்து தப்பித்து சென்றுவிடுமாறு கோரினார். நானும் பிள்ளைக்கு நன்றி தெரிவித்து, உடனே அங்கிருந்து புறப்பட்டு விட்டேன்.

நான் அந்நியபிரதேசத்தில் இருந்து வருகிறேன். செய்துவந்ததோ அபாயகரமான வேலை! அதனால், எங்கே இருந்தாலும் அக்கம் பக்கத் திலுள்ளவர்களுக்கு தொல்லை வராமல் பார்த்துக்கொண்டேண். அவர் களுக்கு என் மேல் வெறுப்பேற்பட்டால் என் நடவடிக்கைகளுக்கு தடங் கல் அல்லவா!

அன்று சந்திரகிரகணம், நாங்கள் இரவுப்பூராவும் வாசகர் வட்ட கூட்டம் நட்த்திவிட்டு உறங்கினோம். ஜெயராம் விட்டிலே ஒரு டிராம் கண்டக்டர் இருந்தார். விடிந்ததும் அவர் வீடெல்லாம் பசு மூத்திரம் தெளித்துக் கொண்டிருந்தார். வேறு வழியில்லாமல் நாங்கள் சும்மா இருந்து விட்டோம்.

எங்கள் நடவடிக்கைகள் சிறப்பாக நடந்துக் கொண்டிருந்தாலும், பணத்திற்கு ரொம்பவும் கஷ்டமாகவே இருந்தது. அப்போது வி.கே.யின் திருமணம் நடைபெற்றது. அவரது மாமனார் மாப்பிள்ளைக்கு தங்க செயினோடு கடியாரமொன்றை பரிசளித்திருந்தார். வி.கே. அந்த கடி யாரம் என்னிடம் தந்து, அதை விற்று செலவுக்கு வைத்துக்கொள்ளுமாறு கோரினார். ஆனால் நான் பெற்றுக்கொள்ள மறுத்து விட்டேன். வி.கே.யின் உறவினர்களுக்கு உண்மை தெரிந்தால், அவர்கள் என்னை ஒரு மோசக்காரனாக எண்ணிக்கொள்ளலாம்.

வி.கே.யின் பக்கத்து வீட்டுக்காரரும் பிராமணரே! அவர் மருத்து வக்கல்லூரி மாணவரும் கூட! அவர் வி.கே.யின் கடியாரத்தை ஒருநா ளுக்காக வாங்கிக் கொண்டு குதிரைப் பந்தய மைதானத்திற்கு சென்றார். அவரும் ஒரு குதிரைப் பந்தய பைத்தியம்தான்! பந்தய பணத்துக்காக அந்த கடியாரத்தை விற்றுவிட்டார். பலநாள் இந்த விஷயத்தை மறைத்தும் விட்டார். உண்மை வெளிப்பட்டபோது, வி.கே.யின் தாயார் என்னை ஒரு நல்ல நண்பனென வாழ்த்தினார்.

பம்பாயிலே என் கடிதங்கள் கைப்பற்றப்பட்டதுமே சுஹாசினி என்னை எச்சரித்தார். அப்போதே எனக்கு முதல் தடவையாக முன்னூறு ரூபாய் அனுப்பினார்கள். நாங்கள் ஒரு ரகசிய அச்சகம் அமைக்க வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந்ததால், அந்த முன்னூறு ரூபாயை அச்சக ஏற்பாடுகளுக்காக வி.கே.யிடம் தந்து விட்டேன்.

மீரட் சதி வழக்கிலிருந்து நான் தப்பித்துக் கொண்டதிலிருந்து அந்த சதி வழக்குக்கு வெளிநாட்டு ஆதரவை திரட்டுவது, எங்கள் இயக்கத்தை ' கம்யூனிஸ்ட் அகில'த்துடன் இணைப்பது, அங்கிருந்தும், வெளிநாடுக ளிலிருந்தும் எங்கள் இயக்கத்துடன் தொடர்புக் கொள்ள வரும் தோழர் களுக்கு அறிமுகங்கள் சம்பாதித்து தருவது, அவர்கள் சந்திக்கும் இடங்

களை ஏற்பாடு செய்வது, எங்கள் மாணவர்களின் போக்குவரத்தை கவனிப்பது முதலியன என்னுடைய பொறுப்புகளாக ஏற்றுக்கொண் டேன். இவையனைத்தும் மிக ரகசியமாக நடந்தேற வேண்டும்.

நான் அயல்நாடுகளில் இருந்தபோது இப்படிப்பட்ட பல பொறுப் புகளை நிறைவேற்றவேண்டி வந்தது. கடைசியில் தென்னிந்தியாவில் மார்க்ஸீயத்தை தோற்றுவிக்க செய்யவேண்டுமென்றும், கம்யூனிஸ்ட் ஊழியர்களை உருவாக்க வேண்டுமென்றும் முடிவு செய்தேன். இம்முயற் சியில் நான் ஓரளவுக்கு வெற்றிபெற்றேன் என்றே கருதுகிறேன்.

வெங்கட்ராமனின் தம்பியை மாஸ்கோவுக்கு அனுப்பிவைக்க எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்தேன். நாட்டின் அரசியல் நிலை குறித்த பல அறிக்கைகளை 'டைப்' செய்வித்தேன். ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட வேண்டிய பல கடிதங்களும் தயாராயின. சில தமிழ் துண்டு பிரசுரங்க ளும் தயாரித்தேன். இந்தோசீனாவிலிருந்து சென்னை வந்து திரும்பிப் போகும் ஒரு பிரெஞ்சுக் கப்பலை எதிர்பார்த்திருந்தோம். அவ்வாலி பனை அனுப்பிய பிறகு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி சிந்தித்தேன். இனி சென்னையில் இருப்பது நல்லதல்ல என்று தோன்றி யது.

## கைது

ஒருநாள் காலை வேளையில் என்னைக் கைது செய்தார்கள். உடல் நலமில்லாததால் நான் வீட்டிலேயே இருந்தேன். சாதாரணமாக வேலை ஏதுமில்லாவிட்டால், நான் வெளியே கிளம்புவதில்லை.

அன்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டிருந்தேன். லுங்கி கட்டியிருந்தேன். சட்டையுமில்லை போலீஸார் வீட்டினுள் நுழைந்து என்னைப் பிடித்துக் கொண்டார்கள். என்னுடன் தொடர்பு கொண்டி ருந்த வேறு சில வாலிபர்களையும் கைது செய்தார்கள். அவர்களில் வி.கே.நரசிம்மன், டிராம் கண்டக்டர் புருஷோத்தம் நாராயணன், வெங் கட்ராமனின் தம்பி ஆகியோர் இருந்தார்கள். பிரெஞ்சுக் கப்பல் வந்த தும் கடைசி இளைஞர் சோவியத் யூனியன் புறப்பட வேண்டியிருந்தது. முதலில் எங்களையெல்லாம் ஒரு சேரக் கொண்டு போய் போலீஸ் கமிஷனர் அலுவலக வராந்தாவில் உட்கார வைத்தார்கள். பிறகு ஒவ் வொருவராக விசாரிக்கத் தொடங்கினார்கள். என் பெயரைத் தவிர வேறெதையும் என்னைக் கேட்கவில்லை.

" என் பெயர் உங்களுக்கு தெரிந்திருந்தும் என்னைக் கேட்பா னேன்?" என்றேன் நான்.

" உன் பெயர் தெரியாது".

" தெரியாவிட்டால் என்னை ஏன் கைது செய்தீர்கள்?" "யாரோ வெளியாள் இங்கிருப்பதாக எங்களுக்கு தகவல் கிடைத்தது. விசாரிக்கத் தான் கைது செய்தோம்."

" அப்படியானால் நான் தெரியாதவனாகவே இருக்கட்டும். நான் ஏதும் சொல்லமாட்டேன்".

அன்று மாலை வரை எங்களை வராந்தாவிலேயே வைத்திருந்தார் கள். குடிக்கத்தண்ணீரும் தரவில்லை. மாலை என்னையும், 'புர்ஷ் வார்ட்டன்' என்பவரையும் இணைத்து போலீஸ் லாக்கப்பில் வைத்தார் கள். அந்த லாக்கப் அறை மிக மோசமாக இருந்தது. மற்றவர்கள் என்ன ஆனார்களோ தெரியாது. அடுத்த நாள் எங்களை சென்னை மத்திய

சிறைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கே என்னை ஒரு தனிக் கொட்டடியில் அடைத்தார்கள். வார்ட்டனின் கதியும் எனக்குத் தெரியாது. அவருக்கு மனைவியும் குழந்தையும் இருந்தார்கள். போலீஸார் பல இடங்களிலும் சோதனை போடத் துவங்கினார்கள்.

போலீஸார் வெங்கட்ராமன் வீட்டிற்கு சென்றபோது அவருடைய அக்கா, "நான் குளித்துக் கொண்டிருக்கிறேன்; சற்று பொறுங்கள்!" என்று அவர்களை ஏமாற்றி, நான் பம்பாய்க்கு அனுப்பவிருந்த காகிதங்களையெல்லாம் மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்தி விட்டார். அதனால் அங்கே போலீஸாருக்கு எதுவும் கிடைக்கவில்லை. புருஷோத்தம் மனைவி காகித மூட்டையை பக்கத்து வீட்டிற்குள் வீசியெறிவதை ஒரு போலீஸ்காரர் பார்த்து விட்டார். அவர்கள் அதனை கைப்பற்றிக் கொண்டார்கள். அதிலே எங்கள் துண்டு பிரசுரத்தின் கையெழுத்து பிரதியும் இருந்தது. அதன் உதவியால் வி.கே. நரசிம்மனைக் கைது செய்து 126ஏ செக்ஷன் கீழ் வழக்கு தொடர்ந்தார்கள். அவருக்கு சிறையில் 'பி' வகுப்பு தந்து,என்னை தொலைவில் வைத்தார்கள். புருஷோத்தமை போலீஸ் சாட்சியாக்க முயற்சித்தார்கள். என் காகிதங்களையெல்லாம் 'டைப்' செய்தது அவர்தான்! என் நடவடிக்கைகள் அனைத்தும் அவர் அறிவார். சங்கருக்கு (எனக்கு) எதிராக புருஷோத்தம் சாட்சி சொல்லப் போவதாக பாஷ்யத்துக்கு தெரிந்தது. அப்படிச் சொன்னால் கழுத்தை நெறித்து கொன்று விடுவேனென்று பாஷ்யம் புருஷோத்தமை அச்சுறுத்தினார். அதை புருஷோத்தம் போலீஸுக்கு தெரிவிக்கவே, சர்க்கார் சாட்சியை பயமுறுத்தினாரென்று பாஷ்யத்தை கைது செய்தார்கள்.

சிறையிலே எனக்கு 'சி' வகுப்பு தந்தனர். தனிமை அறையில் அடைத்தனர். அதிகாரிகளுடன் எவ்வாறு நடந்துக் கொள்வதென்று சிந்திக்கத் தொடங்கினேன். முதலில் அவர்களுடன் பேசவே கூடாதென எண்ணினேன்; பின்னர் அவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்களென்பது தெரிய வேண்டுமானால், அது சரியான முறையல்ல என்று கருதினேன்.

1929 மார்ச் 20ல் 'மீரட் சதி வழக்கு' ஆரம்பமாயிற்று. என்னைக் கைது செய்ததை அறிந்ததுமே அந்த சதிவழக்கின் மற்றொரு குற்றவாளியான தோழர் மிராஜ்கர் என்னையும் மீரட்டுக்கு கொண்டுவர வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டார். அப்போதைக்கே வழக்கு துவங்கி மூன்றாண்டுகளாகி விட்டிருந்தன. என்னை அங்கே கொண்டு போனால் அது இன்னும் நீடிக்கும். மீரட் சதி வழக்குக்கு எவ்வளவோ பிரச்சாரம் கிடைத்தது. 1929ல் பிரிட்டனில் நடந்த பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியின் சில தலைவர்கள் வெற்றி பெறுவதற்காக ஜோடிக்கப்பட்ட வழக்காகும் அது! ஆனாலும் அக்கட்சி தோற்று, லேபர் கட்சி அங்கே ஆட்சிக்கு வந்தது.

மத்திய அரசு என்னை மீரட்டுக்கு கொண்டு செல்வதாகத் தெரியவில்லை. சென்னையிலேயே என் மீது வழக்குகளைத் தொடருமாறு மாநில அரசிடம் சொன்னதாகத் தெரிகிறது. அதனால் என்னை மீரட்டுக்கு கொண்டு போகவில்லை.

எனக்கோர் திடமான நம்பிக்கை இருக்கிறது. நான் கூறவிரும்பாததை என்னிடமிருந்து போலீசார் தெரிந்துகொள்ளமுடியாது. ஆகவே, அவர்கள் என்னை விசாரனை செய்யும் போதே, என்ன செய்ய வேண்டுமென்பதை முடிவு செய்து கொள்ளலாமென்று இருந்து விட்டேன்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு என்னை மீண்டும் போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்குக் கொண்டு போயினர். அங்கே பம்பாய் சி.ஐ.டி.

நிபுணர் வந்திருப்பதாகத் தெரிந்தது.

நான் அறையில் அடியெடுத்து வைத்ததுமே, "ஹலோ, கான் சாகிப், நன்றாயிருக்கிறீர்களா?" என்று அவர் எழுந்து நின்று என்னை வரவேற்றார்.

"உறலோ சவுதரி அவர்களே, நீங்களும் நலம்தானே?" என்று நானும் நலம் விசாரித்தேன்.

"உட்காருங்கள்" என்று எனக்கு நாற்காலியைக் காட்டினார். அறையிலிருந்த மற்றவர்களை போய்விடுமாறு கூறினார் சவுதரி. மேஜைக்கு எதிரும் புதிருமாக நாங்களிருவரும் அமர்ந்தோம்.

சி.ஐ.டி. சவுதரி என் உடல் நலம் விசாரித்தார். நீண்டகால அறிமுகமுள்ளவரைப் போல மிக நேச பாவமுடன் பேசவாரம்பித்தார். "நீங்கள் சென்னை போலீஸாருடன் பேச மறுத்து விட்டீர்களாம்! நாம் இருவரும் ஒரே மாநிலத்தைச் சோந்தவர்கள். அவர்கள் முன்னால் உங்களுடன் பேசி உங்களுக்கு தலைக்குனிவு ஏற்படுத்துவேனா?" என்று தொடங்கினுர் சவுதரி. தன் அம்புப் பொதியிலிருந்து ஒவ்வொரு அம்பாக எடுத்து எய்யத் துவங்கிவிட்டார் சவுதரி. இதற்குள் தேனீர் வந்தது. தேனீர் அருந்த சென்னை போலீஸ் அதிகாரிகளும் அறைக்குள் வந்தனர். 'டீ' குடித்தவாறே ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர். அவ்வாறு எச்சரிக்கையில்லாமலிருக்கும் சமயத்தில் திடீரென்று ஒரு கேள்வி கேட்பது அவர்கள் வழக்கம், ஆனாலும் நான் மிக எச்சரிக்கையாகவே இருந்தேன். எதிர்பாரா விதமாக போலீஸ் சூப்பிரடெண்ட் வைத்தியநாத முதலியார் "பம்பாயிலிருந்து பணத்தை என்ன செய்தீர்கள்?" என்று என்னை கேட்டார்.

பம்பாயிலிருந்து பணத்தை ரகசிய அச்சகம் நிறுவுவதற்காக வி.கே.நரசிம்மனிடம் கொடுத்துவிட்டதை ஏற்கனவே வாசகர்களிடம் கூறியுள்ளேன். என்னை சோதனையிட்டபோது அந்தபணம் அவர்கள் கைக்குக் கிடைக்கவில்லை. அதுதான் அவர்களுக்கு எரிச்சலாக இருக்கிறது.

"உங்கள் பணத்தை நீங்கள் என்ன செய்கிறீர்களோ சொல்லுங்கள்! பிறகு என் பணத்தை என்ன செய்தேனோ நான் சொல்கிறேன்." என்று நான் கூறியதும் அனைவரும் சிரித்தனர். டீ குடித்து முடித்ததும் சொல்லி வைத்தாற்போல் எல்லோரும் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

சி.ஐ.டி. சவுதரி தன் வீரதீர பிரதாபங்களை அவிழ்த்துவிட ஆரம்பித்தார். "உங்கள் 'லிண்' டை (பம்பாயில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் பிரதிநிதி) நான்தான் கைது செய்தேன் தெரியுமோ?" என்றார் அவர். 'ஜுஹு'கடற்கரையில்'பம்பாய் தோழர்களுடன் இருந்தபோது அவர் கைது செய்யப்பட்டார். பிறகு 'லிண்ட்' நாடும் கடத்தப்பட்டார்,

எனக்கு இன்னோர் விஷயமும் நினைவுக்கு வந்தது.

1928ல் சோவியத் யூனியனிலிருந்து நான் இந்தியாவுக்குத் திரும்பி வந்த போது, அயல்நாடுகளிலிருந்து வரும் கடிதங்கள், தோழர்களின் போக்கு வரத்து ஆகிய பொறுப்புகளை தோழர் காட்டே எனக்கு ஒப்படைத்தார். அதனால், நான் பல்வேறு அரங்கங்களில் பகிரங்கமாக பணியாற்றும் தோழர்களுடன் வெளிப்படையாக தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை. ஆகவே ரகசியமாக வாழ்வதற்காக செலவுக்கு பணத்திற்காக சுவேரியிலுள்ள ஜெனரல் மோட்டார்ஸில் வேலைக்கு சேர்ந்தேன். மதன் புராவல் தொழிலாளர் குடியிருப்புப் பகுதியிலேயே ஒரு அறையில் இருந்து

வந்தேன்.

1929 மார்ச் 20ந் தேதியன்று நாடு முழுதும் கம்யூனிஸ்டுகளை வேட்டையாடியபோது பம்பாய் போலீஸார் என் அறையையும் சோதனை போட்டனர். பல காகிதங்களும், கடிதங்களும் அவர்கள் கைக்கு கிடைத்தன. மொத்தம் 109 அயிட்டங்கள் அவர்களிடம் சிக்கின.

எவ்வளவோ எச்சரிக்கையாக இருக்கும் என்னுடைய அறை போலீஸுக்கு எப்படித் தெரிந்ததென்று நான் ஆச்சரியப்பட்டேன். சி.ஐ.டி. அதிகாரி சவுதரி இப்போது அந்த விஷயத்தை கூறினார்.

குலாம் உசேன் என்பவர் 'ஹிஜரத்' இயக்கத்தில் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் சென்று, அங்கிருந்து சோவியத் நாட்டிற்கும்போய் வந்தார். அவருக்கு சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் ஒருவர் உறவினர். குலாம் உசேன் இந்தியாவுக்குத் திரும்பி வந்து, தன் உறவினர் வீட்டுக்கு சென்றிருக்கிறார், அந்த சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் வீட்டில் பம்பாய் சி.ஐ.டி, அதிகாரி சவுதரியும் நட்பு முறையிலே இருந்திருக்கிறுர், அவர் உசேனை, "மாஸ்கோவிலிருந்து எப்படித் திரும்பி வந்தாய்?" எனக் கேட்டிருக்கிறுர். "பம்பாய் வழியாக!" என்று கூறினார் உசேன். "பம்பாயில் எங்கே இருந்தாய்?" என்ற கேள்விக்கு என்னைப் பற்றி சொல்லிவிட்டார் உசேன். அவ்வாறு என் இருப்பிடமும், நடவடிக்கைகளும் வெளிப்பட்டுவிட்டன.

சென்னையில் என் நடவடிக்கைகளைப் பாராட்ட ஆரம்பித்தார் சவுதரி. எப்படியாவது என்னைத் தன் வலையில் சிக்க வைக்க வேண்டுமென்பது அவரது திட்டம்!

நான் வெளிநாட்டில் இருந்தபோது உசேனைத் திட்டி ஒரு கடிதம் எழுதியிருந்தேன். " வெளிநாட்டிலிருந்து எப்போது வந்தாய்?" என்று கேட்டார், "வெளிநாட்டில் கடிதம் தபாலில் சேர்க்க வேண்டுமானால் எழுதியவரே அங்கே போகவேண்டுமா என்ன? வேறு யாரிடமாவது அனுப்பலாமில்லையா?" என்று நான் பதிலளித்தேன்.

சம்ஷுல் ஹுதா தவிர என்னுடன் வேறு யார் யார் மாஸ்கோவுக்கு வந்தார்களென்று கேட்டார் அவர். " எனக்குத் தெரிந்தாலும் நான் சொல்லமாட்டேன்." என மறுத்து விட்டேன்.

இனி என்னை விசாரிப்பதால் பயனில்லை எனக் கருதி என்னை நீதி மன்றத்துக்கு அனுப்பிவிட்டனர்.

அச்சக சட்டத்தின் கீழ் மூன்றுவழக்குகள் பதிவு செய்தனர். 1932 'மே' தின விழாவின் போது ஒரு ஆங்கில, இரண்டு தமிழ் துண்டு பிரசுரங்கள் வெளியிட்டது 'குற்ற'மாம்!

என்னுடன் ஜெனரல் மோட்டர்ஸில் வேலை செய்த எம்.என். மிஸ்ரா கம்யூனிஸ்டல்ல; ஒரு நல்ல நண்பர். பம்பாயில் நான் இருக்க வேண்டி நேரும்போதெல்லாம், அவரே எனக்கு தலைமறைவாக இருப்பதற்கு ஏற்பாடு செய்பவர். என் மூலம் தோழர் தேஷ்பாண்டேவுக்கு அறிமுகமானார். பின்னர் தேஷ்பாண்டேயின் தங்கையை திருமணமும் செய்துகொண்டார். நான் கைதானதை அறிந்ததும் தேஷ்பாண்டே எனக்கு உதவிட மிஸ்ராவை சென்னை அனுப்பி வைத்தார். ஆனால் அவர் நகரில் காலடி வைத்ததுமே சென்னை போலீஸார் கைது செய்து பம்பாய்க்கு திருப்பியனுப்பிவிட்டனர்.

என் வழக்குக்கு ஏற்பாடுகள் செய்வதற்காக தோழர்கள் பி.டி.ரணதிவேயும், சுஹாசினியும், அவருடைய சகோதரி சட்டோபாத்யாயாவும் சென்னை வந்தார்கள்.

எங்கள் வழக்கறிஞர் திரு இ.எல். அய்யர், பார்அட்லா. அவர் மாணவராயிருந்தபோது அனிபெசன்டின் 'ஹோம் ரூல்' இயக்கத்தில் பணி யாற்றியவர், அரசியலில் தாராள மனப்பாண்மை கொண்டவர்.

என் மேல் குற்றங்களை சுமத்தினார்கள். ஏதோ விசாரணை என்று ஒன்று நடைபெறப்போகிறது. அப்போது சுபாஷ்போஸும், அவர் சகோ தரர் சரத் சந்திர போஸும் ஜபல்பூர் சிறையிலே அடைக்கப்பட்டிருந்தார் கள். மருத்துவப் பரிசோதனைக்காக சுபாஷ் போஸை சென்னைக்குக் கொண்டு வந்தார்கள். என் தரப்பு சாட்சியாக சுபாஷையும் நீதி மன்றத் துக்கு அழைக்க வேண்டுமென்று நான் கோரினேன். என் சார்பாக சுபாஷ் போஸ் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை; ஆனல் ஏதோ ஒரு குழப்பம் உண்டாக்க வேண்டும்.

சென்னை மத்திய சிறையில் சுபாஷையும், முகுந்தலால் சர்க்காரையும் ஐரோப்பிய வார்டில் வைத்திருந்தனர். நான் அவர்களை சந்திக்க இயல வில்லை.

காந்திஜியின் தனி நபர் சத்தியாகிரகம் நடந்து வந்த நாட்கள் அவை. அதிலே கைதானவர்களை சிறையில் த்னியாக வைத்தார்கள். சிறைக்குள் சிறை அலை. தேசிய புரட்சியாளர்களை மற்றொரு பகுதியில் அடைத்து வந்தார்கள். மற்ற அரசியல் கைதிகளைப் பற்றிய தகவல்களை முகுந்த லால், சுபாஷ் போஸுக்கு தெரிவித்துக் கொண்டிருந்தார் .

அன்றைக்கு தென் இந்தியாவில் நான்தான் கம்யூனிஸ்ட் கைதி! ஓய்வில்லாத விசாரைணயில் அச்சகச் சட்டத்தின் கீழ் என்னை தண்டித்து, பிறகு போதிய அவகாசம் எடுத்துக்கொண்டு 124-ஏ செக்ஷன் கீழ் என் மீது ராஜ துரோகக் குற்றம் சுமத்த வேண்டுமென்பது சர்க்காரின் யோசனை.

ஒரு பணக்காரரான செட்டியாரும்,அவருடைய மகனும் எங்கள் செல்'லுக்கு அடுத்து 'செல்'லில் அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களின் காரை யாரோ திருடிச்சென்று எங்கேயோ கொள்ளையடித்துவிட்டு காரை பாதையோரத்திலே விட்டுப்போய்விட்டார்கள். அவ்வளவுதான்! காரின் சொந்தக்காரரான செட்டியாரையும், அவர் மகனையும் போலீ ஸார் கைது செய்துவிட்டார்கள். அவர்கள் 'சி' வகுப்புக் கைதிகள். அவர்களுக்கு தரப்பட்ட சாப்பாடு அவர்களால் சாப்பிட முடியவில்லை. மகனுடைய பசியை தந்தையால் பார்த்து சகிக்க முடியவில்லை.

நான் 'பி' வகுப்புக் கைதி. ஆதலால், எனக்கு அளவுக்கதிகமாகவே சாப்பாடு அனுப்பிக்கொண்டிருந்தார்கள். நான் சாதாரணமாகவே சண் டைக்காரனுக இருந்ததால் நல்ல உணவையே தந்துக்கொண்டிருந்தார்கள். எனக்கு காப்பியும், சிற்றுண்டியும்கூட உண்டு. என் சாப்பாட்டில் பெரும் பகுதியை அவர்களுக்கு ரகசியமாக தந்துக்கொண்டிருந்தேன். அவர்கள் தம் உறவினர்களுடன் தொடர்பு கொள்ள உதவி வந்தேன். அவர்கள் பரோலில் விடுதலையடைய சில காலம் பிடித்தது.

ஒருநாள் என்னை நீதிமன்றத்திற்கு கொண்டு போனார்கள். நாள் தோறும் என்னை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவேண்டுமென்று நீதிபதி உத்தரவிட்டார். விரைவாக விசாரைணயை முடித்துவிடவேண்டுமென்பது அவர்கள் நோக்கம். ஆனால் நான் முடிந்தளவு தாமதப்படுத்த வேண்டு மென விரும்பினேன். அதனுல் பம்பாயிலுள்ள என் தரப்பு சாட்சிகளை இங்கே வரவழைக்க அவகாசம் கேட்டேன். ஆனால் பம்பாய்காரர்களுக்கு 'சம்மன்களை' அனுப்பும் அதிகாரம் தனக்கில்லை என்று நீதிபதி கூறினார்.

சுபாஷ் போஸுக்கு 'சம்மன்களை' சிறைக்கே அனுப்பினர்கள். நான் வழக்கு விசாரைணக்கு தயாரான பிறகே, எல்லா ஏற்பாடுகளும் செய்துக் கொண்ட பிறகே வழக்கை நடத்த வேண்டுமென்று நீதிபதியிடம் தெளிவாகக் கூறினேன். நாளைக்குள் சிறை உடுப்பு அணியச்செய்கிறேன் என்பது சர்க்கார் வக்கீலின் எச்சரிக்கை (தண்டனைக் கைதிகள் சிறை உடுப்பை உடுத்திக்கொள்ளவேண்டும்). என் வழக்கில் சுபாஷ் போஸ் சொல்லவேண்டிய சாட்சியமெதுவும் இல்லை என்று எனக்குத் தெரியும்.

ஆனல் சென்னையில் விசாரண செய்யப்படும் முதல் கம்யூனிஸ்ட் நான்!

என் வழக்கு விசாரைண சம்பந்தப்பட்ட செய்திகள் சென்னைப் பத்திரிகைகளில் விரிவாக வரவேண்டுமென்பது என் அவா. வெலிங்டன் துரை வெளியிட்ட அச்சக அவசர சட்டத்தின் கீழ் என்மேல் வழக்கு தொடரப்பட்டது. அந்த அவசர சட்டமும் காலாவதியாகும் நிலையிலிருந்தது. மீண்டும் அது புதுப்பிக்கப்பட்டால்தான் என் மீது வழக்கு தொடர முடியும்.

போலீஸ் காவலுடன் கோர்ட்டுக்கு வரும்போது தெருக்களில் சுதந்திரமாக சுற்றித்திரியும் மக்கள் தென்படுவார்கள். பல காட்சிகள் கண்களில் படும். இருட்டறையில் தனிமையான வாழ்வுக்கு அவையெல்லாம் இதமளிக்கும்.

அன்று அரசாங்க வழக்கறிஞருக்கு சவால் வீசினேன். அடுத்தநாளே எனக்கு சிறை உடுப்பு அணிவிக்கச் செய்கிறேன் என்று அவர் சூளுரைக்க, நான் விரும்பாத வரை வழக்கை நடத்தவிடமாட்டேன் என்று நான் சவால் வீசினேன். இதே சிந்தனையுடன் சிறைக்குள் வந்தேன். செட்டியார் என்ன விஷயமென்று விசாரித்தார். நடந்ததை சொன்னேன். அவர் ஒரு யோசனை கூறினார். என் வழக்கை வேறொரு நீதிமன்றத்திற்கு மாற்றும்படி கோரப்போகிறேன் என்று வழக்கை ஒத்திப்போடுமாறு நீதிபதியைக் கேட்கச் சொன்னார். இதனல் இரண்டு வாரம் அவகாசம் கிடைக்குமென்றார். குற்றவியலில் அதற்கான விதியையும் கூறினர்.

மறுநாள் நீதிமன்றம் வக்கீலுடன் நிரம்பி வழிந்தது. நான் வழக்கை ஒத்திப்போடுவதற்கான காரணங்களை விளக்கி அறிக்கை சமர்ப்பித்தேன். நீதிபதி வழக்கை ஒத்திப் போட்டார். நான் சர்க்கார் வக்கீலை வெற்றிப் புன்னகையுடன் பார்த்தேன். அவருடைய கைகளை குலுக்கி, "நீங்கள் நல்ல மனிதர். ஏகாதிபத்தியவாதிகளின் ஏஜெண்டாக ஏன் இந்த வேலை செய்கிறீர்கள்?" என்றேன். அவர் பதிலேதும் பேசவில்லை. ஆனால் சுற்றியிருந்தவர்கள் சிரித்தனர்.

அந்த சமயத்தில் சென்னை மாநிலத்தில் நீதிமன்றங்கள் என்றால் மக்களுக்கு மிகுந்த பக்தி. அவை நீதிதேவனின் இருப்பிடங்களென்று அவர்கள் எண்ணினர். ஆனால் என் கண்ணோட்டத்தில் ஏகாதிபத்திய ஆட்சியில் சட்டம், நீதிமன்றங்கள், வழக்கறிஞர்கள் எல்லாமே ஏமாற்று வித்தைகள், பொய் நாடகங்கள்! அப்போது தனிநபர் சத்தியாகிரகம் செய்தவர்களை கைது செய்து நீதிமனறங்களுக்கு கொண்டுவருவார்கள். அவர்கள் பதிலேதும் பேசாமல் தம் குற்றத்தை ஒப்புக்கொள்வார்கள். நீதிபதியும் உடனே ஏதோ ஒரு தண்டனை விதித்துப் போய்விடுவார். என் விஷயம் அப்படியல்ல. நான் நீதிமன்றத்திற்கு வரும்போதெல்லாம் ஏதாவதொரு குழப்பம் உண்டாக்குவேன். அதனால் என்னை தனி போலீஸ் வண்டியில் பலத்த போலீஸ் காவலுடன் நீதிமன்றத்திற்கு கொண்டுவரு

வார்கள்.

என் வழக்கை வேறொரு நீதி 'மன்றத்திற்கு மாற்ற வேண்டுமென்னும்' என் விண்ணப்பத்தை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. சுபாஷ் போஸ் சாட்சியமளிக்கவேண்டுமென சம்மன்கள் அனுப்பப்பட்டன. சிறைக்கைதிகள் விதிகளின்படி ஒரு கைதியை சிறைக்கு வெளியே கொண்டுபோகும் அதிகாரம் தனக்கில்லை என்று சிறை சூப்பிரண்டெண்ட் சொல்லிவிட்டார். ஆனல் மாஜிஸ்திரேட் விரும்பினால் சிறைக்குள்ளேயே சுபாஷ் போஸின் சாட்சியம் பதிவு செய்யலாமெனக் கூறினார். நீதிமன்றம் சம்பந்தப்பட்ட அனைவரும் சிறைக்குள் வந்தனர். கீழ் மாடியில் சிறை அதிகாரியின் அலுவலகம் நீதிமன்றமாக மாறியது.

அரசியல் கைதிகளை தனிக்கொட்டடிகளில் அடைத்து வைத்தனர். கொலைகாரர்களும், கொள்ளைக்காரர்களும், மற்ற குற்றவாளிகளும் தாராளமாக ஒன்று சேர்ந்திருக்க அனுமதியளித்தனர். சத்தியாகிரகிகளை சிறையில் மனிதத்தன்மையற்ற முறையில் நடத்தினர். இவற்றை எதிர்த்து நான் உண்ணுவிரதம் தொடங்கினேன்.

உண்ணுவிரதம் இருப்பவர்கள் முதலில் தங்கள் வயிற்றிலிருக்கும் உணவுப் பொருள்களின் மிச்சசொச்சங்கள் கெட்டு, நச்சு வாயுக்களை உண்டாக்குமென்று விளக்கெண்ய் குடிப்பர். சாதாரண மனிதர்களே விளக்கெண்ய் குடித்தால் மிகவும் தொய்ந்து போய்விடுவர். விசாரணை அன்றைக்கு நான் எட்டு நாட்களாக உண்ணா நோன்பிலே ஈடுபட்டிருக்கிறேன். பச்சைத் தண்ணீர் தவிர வேறெதையும் நான் தொடவில்லை.

சுபாஷ் போஸை போலீஸ் காவலுடன் சாட்சியாகக் கொண்டு வந்தனர். அவர் வர மறுக்கவில்லை. பத்திரிகைகளில் இச்செய்தி வந்தால் பிரச்சாரம் கிடைக்கிறது. நீதிமன்றத்தில் பலரையும் சந்தித்து பேசலாம். ஆனல் சிறைக்குள் இயங்கும் நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பது போஸுக்கு பிடிவில்லை. அதுவும் தவிர, அவருக்கு என்னைக் குறித்து ஒன்றுமே தெரியாது.

மாஜிஸ்திரேட்டுக்கு அது ஒரு புதிய அனுபவம். மாபெரும் தேசியத் தலைவர் ஒருவரின் சாட்சியத்தைப் பதிவு செய்வது அவருக்கு மிகப் பெருமையாக இருக்கிறது. அதனால்தான் அவர் சிறைக்குள் விசாரணை நடத்துவதை பெருமையாக சொல்லிக்கொண்டார்.

எட்டு நாட்களாக உண்ணா நோன்பால் நான் மிகவும் பலவீனமாக இருந்தாலும், சிறைக்குள் விசாரணை நடத்துவது சட்டவிரோதமென வாதிட்டேன். அரசாங்க வக்கீல்கள் பெரிய பெரிய சட்ட நூல்களைப் புரட்டத் தொடங்கினர். அவர்கள் ஒருமித்த குரலில் மாஜிஸ்திரேட் எங்கு விசாரணை செய்தால் அதுவே நீதிமன்றமாகிவிடும் என்பதற்கு பல தீர்ப்புகளை ஆதாரமாகக் காட்டவாரம்பித்தனர்.

"தங்களுக்கு இந்த நீதிமன்றத்தில் முழு அதிகாரம் இருக்கிறதா?" என்று மாஜிஸ்திரேட்டை நான் கேட்டேன். "இருக்கிறது" என்றார் அவர். "அப்படியானால் இன்று விசாரைணயை ஒத்திப்போட்டுவிட்டு, குறிப்பிட்ட நாளன்று சிறைக்குள் விசாரைண நடைபெறுமென்றும், பொதுமக்களும் பார்வையாளர்களாகக் கலந்துக்கொள்ளலாமென்றும் அறிவியுங்கள்!" என்றேன் நான். "அதெப்படி முடியும்? சிறைக்குள் ஒருவரை அனுமதிப்பது சிறை சூப்பிரெண்டென்டுதானே!" என்று அவர் அவசரமாக பதிலளித்தார்.

"ஆகவே, இங்கே தங்களையும் சேர்த்து எல்லோருமே கைதிகள் தான்! சூப்பிரெண்டென்ட் சிறையின் வாசலைத் திறந்தால்தான் நாமெல்

லோரும் உள்ளேயோ வெளியேயோ போகமுடியும். அரசாங்கம் பொது மக்களின் நலனைப் பாதுகாக்கவே என் மீது வழக்கு தொடருவதாகக் கூறுகிறது. எனவே தாங்கள் விசாரைணயைப் பார்க்க பொதுமக்களையும் அனுமதிக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் நான் அவர்களின் நலனுக்கு எதிராக இருக்கிறேனா அல்லது சாதகமாக இருக்கிறேனா என்பதைப் புரிந்துக் கொள்வார்கள். எந்த நிலைமையிலும் சுபாஷ் போஸ் அவர்களை சிறையிலே வைத்து விசாரிப்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்" என்று சொல்லி, என் சார்பில் சுபாஷ் போஸின் சாட்சியத்தை வாபஸ் பெற்றுக்கொண்டேன்.

சுபாஷ் போஸ் என் போக்கால் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். இது அவரைகவர்ந்தது. நான் அவரை என் சாட்சியாக வாபஸ் பெற்றுக்கொண்டாலும் நீதிமன்றம் அவரைத் தன்னுடைய சாட்சியாக விசாரித்திருக்கலாம். அப்போது சாட்சியமளிக்க அவர் மறுத்தால், அது நீதிமன்றத்தை அவமதித்த குற்றமாகி இருக்கும். இந்த விசாரணையின் சாக்கில் போஸைக் காண்பதற்காக பல வக்கீல்கள் 'சிறைக்கு' வந்தனர்.

உண்ணா நோன்பின் காரணமாக என் நாடித் துடிப்பு குறையத் தொடங்கியது. ஒரு நாள் எனக்கு பலவந்தமாக உணவை செலுத்த ஜூனியர் டாக்டர் தன் சிப்பந்தியுடன் வந்தார். அவர்கள் என்னுடைய 'செல்'லுக்குள் வருவதற்குள் நான் மூலையில் வைக்கப்பட்டிருந்த குடத்திலிருந்து தண்ணீரை வயிறு நிறைய குடித்துவிட்டேன். டாக்டர் என்னைக் கீழே தள்ளி மூக்கின் வழியாக வயிற்றுக்குள் ரப்பர்குழாய் செலுத்தி கொஞ்சம் பால் ஊற்றினர். அப்போதைக்கு வயிறு நிறைய தண்ணீர் நிரம்பி இருந்தது. அவர்கள் என் மேலிருந்து எழுந்ததுமே தண்ணீருடன் பாலையும் வாந்தி எடுத்துவிட்டேன். பாவம், அந்த டாக்டரின் பட்டுச் சட்டை எல்லாம் பாழாகிவிட்டது. இன்னொருமுறை பலவந்தமாக உணவு செலுத்த வந்து கொண்டிருந்தனர். ஏற்கனவே மிகவும் சக்தியற்று இருந்தாலும், வாசலின் குறுக்கே நின்று தடுத்தேன். "இங்கிருந்து போய் விடுங்கள்! என்னை தொடாதீர்கள்!" என்று கத்தினேன். அச்சமயம் குளிக்கப்போய்க் கொண்டிருந்த பாஷ்யம் என் கூக்குரலைக் கேட்டு ஓடோடியும் வந்து, டாக்டர்களை பிடித்து தூரத்தள்ளி விட்டார். பின்னர் எல்லோருமாகச் சோந்து பாஷ்யத்தை கெட்டியாகப் பிடித்து தள்ளிக் கொண்டுபோய் இருட்டுக் கொட்டடியிலே அடைத்துவிட்டனர். குளியலுக்கு மட்டுமே அவரை வெளியே விட்டனர். அன்று பாஷ்யம் எதிர்பாரத விதமாகவே எனக்கு உதவியாக வந்தார்.

அவர்கள் இன்னொரு தடவை முயற்சித்தனர். பலாத்காரமாக என்னைக் கீழே தள்ளி மூக்கில் ரப்பர் குழாய் செலுத்தும்போது நான் இருமினேன். அது வயிற்றுக்குள் போகாமல், வாய்க்குள் வந்துவிட்டது. உடனே நான் அதை உறுதியாக பற்களால் அழுத்திப் பிடித்துக்கொண்டேன். டாக்டர் என் மூக்கைப் பிடித்துக்கொண்டாற்போல் இருக்கிறது. நான் சுவாசிக்க வாய் திறந்தபோது, பலாத்காரமாக உணவு செலுத்தினார் போல் இருக்கிறது. இதனால் பலவீனமாயிருந்த நான் மிகவும் களைத்துப் போய்விட்டேன். சுயநினைவை இழந்து கொண்டிருந்தேன்.

மற்றொரு முறையும் மூக்கை அடைத்து சுவாசிக்க வாய் திறந்தபோது வயிற்றுக்குள் நேராக பால் வார்த்துவிட்டனர்.

இது மிகவும் அபாயகரமானது. எது எப்படியானால் அரசியல் கைதிகளின் வசதிகளுக்காகவும், நாள் பூராவும் தனிக்கொட்டடிகளில் அடைத்து வைப்பதற்கு எதிராகவும் போராடத்தான் வேண்டியிருந்தது.

சென்னை மத்திய சிறை நகரத்தின் மத்தியிலேயே இருந்தது. என் சங்கதி அனைத்தும் செய்திப் பத்திரிகைகளில் வெளியாயிற்று. அப்போது சுபாஷ் போஸூம் அதே சிறையில் இருந்ததால்வெளியிலிருந்ததேசியவாதிகள் சிறைக்குள் என்ன நடக்கிறதென்பதை கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

சிறை சூப்பிரெண்டெண்ட் தினமும் சுபாஷை சந்தித்தார். அப்போதெல்லாம் போஸ், "சங்கரும், அவரது தோழரும் எப்படி இருக்கின்றனர்?" என்று கேட்டு வந்தார். எஙகே யார் உண்ணாவிரதம் இருக்கின்றனரோ, அந்த விவரங்களையெல்லாம் முகுந்தலால் சர்க்கார் சேகரித்து போஸூக்கு தெரிவித்து வந்தார். சூப்பிரெண்டெண்ட்க்கு எங்களிடம் வெறுப்பேற்பட்டுவிட்டது. நாங்கள் ரவுடித்தனமாக நடந்துக்கொள்கிறோமென்றும், எவ்வளவு சமாதானப்படுத்தினாலும் கேட்பதில்லை என்றும் அவர் சுபாஷிடம் சொன்னாராம். "நீங்களே அவர்களை அப்படித் தயார் செய்தது!" என்றாராம் போஸ்.

"அதெப்படி?" என்று சூப்பிரெண்டெண்ட் கேட்க, "அவர்கள் படித்தவர்கள். அவர்களை இரவும் பகலும் இருட்டறையில் அடைத்துவைத்து, படிக்க பத்திரிகையும் தராவிட்டால் ஏன் அப்படி தயாராக மாட்டார்கள்?" என்று கூறினாராம் சுபாஷ்.

அந்த காலத்தில் 'பி'வகுப்பு கைதிகளுக்கு 'இந்து' வாரப்பத்திரிகை தவிர, வேறெந்த பத்திரிகையும் தருவதில்லை. அதிலும் ஏதாவது அரசியல் செய்தி இருந்தால், அதை வெட்டிவிட்டுத் தருவார்கள்.

எங்கள் உண்ணாவிரதங்களை நிறுத்தச் செய்ய சிறை சூப்பிரெண்டென்ட் சுபாஷ் போஸை யோசனை கேட்டபோது "அவர்களை சிறைக்குள் சுற்றித்திரிய அனுமதியுங்கள். ஒருவரோடு ஒருவர் பேச விடுங்கள்!" என்று அவர் சொன்னார்.

1929ம் வருடமோ, 1930ம் வருடமோ லாகூர் சிறையில் உண்ணாநோன்பால் ஜதீந்திர தாஸ் அமரரானார். அதனால் அந்த சிறை அதிகாரியை இடமாற்றம் செய்துவிட்டனர். அப்படிப்பட்ட நிகழ்ச்சி இங்கும் நடக்குமோவென்று அதிகாரிகள் அஞ்சத் தொடங்கினர். அவர்கள் எங்கள் நடவடிக்கைகளால் ஓய்ந்துபோய் விட்டனர். இறுதியில் சுபாஷின் முன் முயற்சியினால் எங்கள் உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது. என்னையும் பாஷ்யத்தையும் வசதிகள் நிரம்பிய ஐரோப்பியர் வார்டுக்கு மாற்றிவிட்டனர். நாங்கள் பகல்பூராவும் சேர்ந்தே இருந்தோம். அரசியல் பற்றியும், ஊர் உலக நடப்புகள் பற்றியும் பேசிக்கொள்வோம். சுபாஷ் போஸ் தனக்கு தரப்படும் 'அலவென்ஸ்' பணத்துடன் கொஞ்சம் சொந்த பணத்தையும் போட்டு மிட்டாய்கள், பழங்கள், சிகிரெட்டுகள் போன்றவற்றை வரவழைத்தார். இவைகளை ஞாயிறன்று 'சி' வகுப்புக்கைதிகளுக்குக் கொடுத்தார். அன்று அவர்களை ஐரோப்பிய வார்டுக்குள் கொண்டு வருவார்கள்.

அரசியல் பற்றி தீவிரமாக சிந்திக்கும் சிலர் என்னையும், சுபாஷையும் கேள்விகள் கேட்பார்கள். எங்களுக்கு தெரிந்தவரை பதில் சொல்வோம். காந்திஜீயின் அகிம்சை தத்துவங்களை நான் கடுமையாக விமர்சிப்பேன். "காந்திஜீ தன் சிந்தனைக்குள்ள குறுகிய எல்லைகளாலேயே தேசிய இயக்கம் வளராதபடி தடுத்து விட்டார். தனி நபர் சத்தியாகிரகம் வேறு வழியில்லாமல் பெயரளவுக்கு மட்டுமே செய்யப்படும்போராட்டமாகும். அதனால் எவ்வித பலனுமிருக்காது" என்பேன். ஆந்திராவிலுள்ள ராஜமகேந்திரத்தைச் சேர்ந்த காந்தி ஆசிரமவாசி ஒருவர் 'பி' வகுப்பிலே

இருந்தார். காந்திஜீயை நான் தாக்கி பேசும்போது அவர் எரிந்து விழு வார், "இவ்வளவு பெரிய காங்கிரஸ் தலைவர் (சுபாஷ்) எதிரிலேயே காந்திஜீயைத் தாக்கிப் பேச உனக்கு என்ன தைரியம்?" என்று சீறுவார். போஸ் ஒன்றும் சொல்லமாட்டார். சில நாட்களுக்குப் பிறகு அந்த ஆசிரமவாசியை வேறு சிறைக்கு மாற்றிவிட்டனர்.

என்னை 'பரோலி'ல் வெளியே கொண்டுவர முயற்சித்தனர். ஒரு குற்றத்திற்கு முப்பதாயிரம் வீதம் மொத்தம் தொண்ணூறு ஆயிரம் ரூபாய் ஜாமீன் தருமாறு மாஜிஸ்திரேட் பணித்தார். என் னுடன் சிறையிலிருந்த செட்டியார் விடுதலையானார். அவர் எனக்காக ஜாமீன் தர முன் வந்தார்.

இதற்குள் அரசு என்மீது பகத்சிங் பற்றி நான் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்திற்காக 124- ஏ செக்ஷன் படி வழக்கு தொடர்ந்தது. இந்த செக்ஷனுக்கு அக்காலத்தில் 'பரோல்' தரப்படுவதில்லை.

தோழர் வி.கே. நரசிம்மனின் தாய் மாமன் ஒரு சிவில் நீதிபதி பி.ஏ. (ஆனர்ஸ்) தேர்வு வெளிவந்ததுமே வி.கே.யை 'பார் அட்லா' படிப்பதற்காக இங்கிலாந்து அனுப்ப வேண்டுமென்பது நீதிபதியின் எண்ணம். அப்போ தைக்கு வி.கே-வுக்கு 19 அல்லது 20 வயதிருக்கலாம். நீதிபதி தன் செல்வாக் கைப் பயன்படுத்தி வி.கே-வுக்கு 'பரோல்'வாங்கி விட்டார்.

முதலில் நான் இந்த குற்றம் பூராவையும் என் மீதே போட்டுக் கொள்ளலாமென நினைத்தேன். நீண்ட காலத் தேடலுக்குப் பின் நான் அதிகாரிகளின் கைகளில் சிக்கியிருக்கிறேன். ஆகவே, அவர்கள் எப்படியும் என்னை விடுதலை செய்யமாட்டார்கள். ஏதாவதொரு வழக்கிலே சிக்க வைத்துக் கொண்டே இருப்பார்கள். என் எண்ணத்தை சுபாஷ் போஸுக் கும், முகுந்தலால் சர்க்காருக்கும் தெரிவித்தேன். உனக்கு அகிம்சையில் நம்பிக்கை இல்லையாதலால் குற்றத்தை காங்கிரஸாரைப் போல் ஒப்புக் கொண்டு விடுவது சரியல்ல. நீ அரசியல் தொண்டன். வழக்கும் அரசியல் சம்பந்தப்பட்டது. ஆகவே நீ நீதிமன்றத்தை பிரச்சாரத்திற்கு முழுமையாக பயன்படுத்திக் கொள்!" என்று அவர்களிருவரும் யோசனை கூறினர். அத்துடன் வழக்கு நீண்ட காலம் தொடர்ந்தால் எல்லோரும் சேர்ந்திருக் கலாம் என்று கூட அவர்கள் விரும்பியதாக தெரிகிறது.

இது விஷயமாக என் வக்கீலைக் கேட்டபோது, " இது நிலப்பிரபுக் கள் ஆட்சி புரியும் காலமல்ல, ஒருவர் குற்றத்தை மற்றவர் தலையில் போட்டுகொண்டு தண்டனை அனுபவிக்க! தவிர, இப்போது அப்படிப் பட்ட வாய்ப்புமில்லை," என அவர் கண்டிப்புடன் கூறிவிட்டார்.

சங்கர் (நான்) பொறுப்பு முழுவதையும் தன் மேல் போட்டுக்கொண் டால் வி.கே. விடுதலையாகலாமென அரசு அதிகாரிகள் அவர் குடும்பத் தாருக்கு சொன்னார்கள். மறுபுறம் நான் குற்றம் ஏற்றுக்கொள்வதும், வி.கே.யின் பொறுப்பை தலையில் சுமப்பதும் சரியல்லவென்று அரசியல் ரீதியாக யோசனை கூறப்பட்டது. நான் நீண்டநேரம் சிந்தித்து அரசியலே முக்கியமென்றும், இந்த வழக்கை பிரிட்டிஷாரின் வண்டவாளத்தை அம் பலமாக்க பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் முடிவுசெய்துகொண் டேன்.

தலைமை ராஜதானி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் விசாரணை ஆரம்பமாயிற்று. நீதி மன்றம் ஐரோப்பிய, இந்திய போலீஸாருடனும், வழக்கறிஞர்களுடனும் நிரம்பி வழிந்தது. என் சார்பு வக்கீல்களாக இ.எல். அய்யரும், மற்றொரு முஸ்லீம் வழக்கறிஞரும் இருந்தார்கள்,

சர்க்கார் வக்கீலும், போலீஸ் அதிகாரிகளும்கூட அட்டகாசமாக வீற்றிருந்தார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது எனக்கு சிரிப்பு வந்தது. இதுவெல்லாம் ஒரு அபத்தமான நாடகம் தவிர வேறல்ல, அது கோடைக் காலம், மாஜிஸ்திரேட்டுக்கும், இரு தரப்பு வக்கீல்களுக்கும் மின் விசிறிகள் இருந்தன, ஆனால் குற்றவாளிக் கூண்டினருகே, "குற்றஞ்சாட்டப்படுபவர்களின் செலவிலே இந்த ஆட்சி நடக்கிறது. எங்களுக்கும் மின் விசிறி வேண்டும்" என்று நான் கத்தினேன். பழுது பட்ட மின் விசிறியை உடனே பழுது பார்க்கும் படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். அதற்குள் சர்க்கார் தரப்பைச் சேர்ந்த ஒருவர், "உங்கள் வக்கீல்கள் உங்களுக்கு மின் விசிறி தருவார்கள்" என்று கிண்டலாகக் கூறினார். நான் உடனே பக்கத்தில் இருந்த நாற்காலியை அவர் மீது வீசியெறிய எடுத்துக்கொண்டேன். என் பக்கத்திலேயே நின்றிருந்த காவல்காரர் அதைப் பறித்துக்கொண்டார். இந்த விசாரணை என்றால் எனக்கு பயமில்லை என்பதையும், இந்த நீதிமன்றத்தை பொருட்படுத்தவில்லை என்பதைக் காட்டவே இப்படியெல்லாம் நடந்து கொண்டேன். என் மீதுள்ள குற்றச்சாட்டை படித்துக் காட்டினார்கள். வி.கே.யும், அவரது உறவினர்களும் எதிர்பார்த்தவாறு நான் குற்றச்சாட்டை ஒப்புக்கொள்ளவில்லை. இதனால் வி,கே.வுக்கு என் மீது மனத்தாங்கல் ஏற்பட்டது. நான் அவருக்கு துரோகமிழைத்தேன் என்று அவருடைய உறவினர்கள் அவருக்கு சொன்னார்கள். ஒரே வளாகத்திலிருந்த இரண்டு நீதிமன்றங்களில் எங்கள் வழக்குகள் நடைபெற்று வந்தன. பெங்களூரிலிருந்து சாட்சிகளை கொண்டு வரவேண்டுமெனக் கூறி போலீஸார் என் மேல் நடந்து வந்த ராஜதுரோக வழக்கை ஒத்தி போடச் செய்தனர்.

இதைக் கேள்விப்பட்டு சிறையிலிருந்த சுபாஷ் போஸும், சர்க்காரும் மிகவும் மகிழ்ந்தனர். நாங்கள் அனைவரும் இன்னும் சில காலம் சேர்ந்திருக்கலாமென்பது அவர்களின் மகிழ்ச்சிக்குக் காரணம். எங்களை இரவு நேரங்களில் மட்டுமே 'செல்'களில் அடைத்தனர். பகலில் எல்லோரும் போஸின் கட்டிலைச் சுற்றிலும் அமர்ந்து, தேனீர் அருந்தியவாறே அரசியல் விஷயங்களை விவாதிப்போம்.

"உங்களுடன் ஒத்துப்போகாதவர்களை திட்டவேண்டுமென்று மாஸ்கோவில் கற்றுத்தந்தார்களா?" என்று ஒரு நாள் சுபாஷ் என்னைக் கேட்டார், "அப்படி ஒன்றுமில்லை, நம் கருத்துக்கு எதிராக யாராவது ஆத்திரப்பட்டாலும் கூச்சலிட்டாலும், 'இப்படி நடந்து கொள்வது கம்யூனிஸ்டுகளுக்கு அழகல்ல' என்று அறிவுறுத்துவார்கள். அவ்வளவுதான்! ஆத்திரப்பட்டவர் அடங்கிப்போய்விடுவார்" என்றேன் நான்.

1931 –லோ அல்லது 1932 –லோ தேசியவாதிகள் சுபாஷ் போஸை அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் தலைவர் பதவிக்கு முன்மொழிந்தனர். அப்போது "பாசிஸ்ட் சுபாஷ் ஒழிக!" என்று கம்யூனிஸ்டுகள் கோஷமிட்டனர். அவர் எங்கோ இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினியைப் பாராட்டிப் பேசினாராம்! அதற்கெதிராக அந்த கோஷம் எழுப்பப்பட்டது. 1928/29ல் கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டின் தொண்டர் படைத்தலைவர் சுபாஷ். அவரை படைத்தளபதியின் உடைகளை அணியச் செய்தனர். இவை அனைத்தும் இடதுசாரி வாலிபர்களின் நினைவிலிருந்தன. சுபாஷ் போஸும் இவைகளை எண்ணியே மேற்படி கேள்வியைக் கேட்டார்.

அன்றிலிருந்து நாங்களிருவரும் தேசிய, சர்வ தேசிய அரசியலை

நேசபூர்வமாக விவாதிக்கத் தொடங்கினோம். ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முயற்சித்தோம். அவர் வங்கத்திலும், இந்தியிலும் பெரிய காங் கிரஸ் தலைவரானாலும், அவருக்கு சர்வதேசிய அரசியல் விவகாரங்கள் அவ்வளவாகத் தெரியாது. எடுத்துக் காட்டாக, சுதந்திர இந்தியா அயர் லாந்தை போல் முன்னேறுமென அவர் கூறுவார். நான் அதை ஒப்புக் கொள்ளவில்லை, அயர்லாந்து ஒரு சிறிய நாடு. இந்தியாவோ ஒரு உப கண்டம். காலனி, அரைக்காலனி நாடுகளைவிட வளர்ச்சி பெற்றநாடு. பெரும் எண்ணிக்கையில் தொழிலாளி வர்க்கம் இருக்கிறது. அரசியல் விழிப்படைய மத்தியதர வர்க்கமும் இருக்கிறது, சுயேச்சையான பொரு ளாதார வளர்ச்சியின் மூலம் இவர்கள் அனைவரின் தேவைகளையும் பூர்த்தி செய்வது கடினம், நிலப்பிரபுத்துவ முறையை ஒழித்து, முதலாளித் துவ தேசிய ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றிட வேண்டும். தொழி லாளி வர்க்கம் விவசாயிகளுடனும், மற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பாளருட னும் நட்புறவை வளர்த்துக் கொண்டால் அந்த புரட்சி சோஷலிஸ்ட் புரட்சியாக வளர்ச்சிபெறும்.

நான் ஐரோப்பிய 'வார்டு'க்கு வருவதற்கு முன்பே ராஜமகேந்திர வரம் சிறையிலிருந்து 'சவுதலே ராம்' என்பவரை மருத்துவப் பரிசோத னைக்கு சென்னைக்குக் கொண்டு வந்தனர். அவர் தன்னுடன் சில மார்க் ஸீய நூல்களையும் கொண்டு வந்தார் அவர்.

அவர் சுபாஷ் போஸுக்கு சில நூல்களைத் தந்து விட்டு சென்றார்.' அவற்றில் சோவியத் புரட்சி பற்றி டிராட்ஸ்கி எழுதிய ஒரு பெரிய புத்தகமும் இருந்தது. அது அவருக்கு மிகவும் பிடித்து போய் விட்டது. "டிராட்ஸ்கியை சோவியத்யூனியனிலிருந்து ஏன் நாடு கடத்தி விட்டார்கள்?" எனக் கேட்டார். டிராட்ஸ்கியை சோவியத் கம்யூ னிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேற்றிய போது நான் அங்கேயே இருந்தேன். சுபாஷ் சில மார்க்ஸீய நூல்களைப் படித்து, என்னுடன் விவாதங்கள் நடத்தி பிறகு 'சுதந்திர இந்தியாவின் வளர்ச்சி' பற்றி ஒரு புத்தகம் எழுதவாரம்பித்தார். சுபாஷ் போஷுக்கு அரசாங்கம் ஒரு தட்டெழுத்து இயந்திரம் வைத்துகொள்ள அனுமதியளித்திருந்தது. அதில் போஸ் எழுதி யதை சர்க்கார் 'டைப்' செய்து வந்தார். அந்த காகிதங்களை நாங்கள் ரகசியமாக வெளியே அனுப்பிவந் தோம். வெளியில் ஒரு ரகசிய அச்சகத் தில் அந்த புத்தகம் அச்சாகிக்கொண்டிருந்தது. 1934ம் வருடம் நான் சேலம் சிறையிலிருந்து விடுதலையானபோது திவாகர் என்பவர் அப்புத்தகத்தை எனக்களித்தார். ஆனால் மற்றவேலைகளின் நெருக்குதலால் நான் அதை படிக்கஇயலாமல் போயிற்று .

பாஷ்யத்திற்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதித்து பெல்லாரி மத்திய சிறைக்கனுப்பி வைத்தனர். அவரை தனிமைச் சிறையில் வைக்க வேண்டுமென்றும், இல்லாவிட்டால் குழப்பம் விளைவித்துக் கொண்டிருப் பாரென்றும் கூடவே தகவலும் அனுப்பட்டது.

பெல்லாரி சிறையில் சதி வழக்கிலே இருபதாண்டு சிறைத் தண்டனை பெற்ற இரண்டு இளைஞர்கள் இருந்தனர். அவர்கள் சிறை விதிகளின் படி, மொட்டையடித்துக் கொண்டு சிவப்பு குல்லாய் அணிய வேண்டும். அந்த கால இளைஞர்களில் ஒரு பகுதியினர் கற்பனா உலகில் சஞ்சரித்த னர். அவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை மனதார வெறுத்தனர். அதனால் சர்க்காருக்கெதிரான சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். கைதாகி சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் சிறை விதிகளின் படி நடந்து கொள்ளும் மனநிலையில் அவர்கள் இருக்கவில்லை.

அதற்கு முன்பிருந்த சிறை சூப்பிரெண்டென்ட் அரசியல் கைதிகளை உடலுழைப்பு செய்யுமாறு கட்டாயப்படுத்தவில்லை. அவர்களிடம் மெத்தானமாகவே நடந்துகொண்டார். ஆனால் புதிய சிறை அதிகாரி இவர்களை கல்லுடைக்கும்படி பணித்தார். மேற்சொன்ன வாலிபர்களிருவரும் தலை வாரிகொண்டு வார்டிலே திரிந்ததை புதிய அதிகாரி பார்த்துவிட்டு, அவர்களுக்கு மொட்டையடித்து 'செல்' லில் போட ஆணையிட்டார். அவர்கள் வார்டர்களை எதிர்த்து நின்றனர். பலாத்காரமாக அவர்களை உள்ளே அடைத்தனர்.

அந்த புதிய சிறை சூப்பிரெண்டெட் ஒரு ஆங்கிலோ இந்தியர். அவர் சர்வ அதிகாரமும் தன்னுடையதே என்பது போல இந்தியர்களை, குறிப்பாக அரசியல் கைதிகளை வெறுத்து வந்தார்.

எதிர்த்து நின்ற இரு வாலிபர்களுக்கும் தலா முப்பது தடியடிகள் கொடுக்கும்படி அடுத்த நாள் உத்தரவிட்டார் அவர். கைதிகள் எல்லோரையும் வரிசையாக உட்கார வைத்து அந்த அரக்கத்தனமான கொடூரச் செயலை பார்க்கச் செய்ய வேண்டுமெனவும் ஆணையிட்டார். அங்கே பாஷ்யத்தையும் கொண்டுவர வேண்டுமென பணித்தார். பாஷ்யம் எப்போதாவது எதிர்த்து நின்றால் எப்படிப்பட்ட தண்டனை அனுபவிக்க வேண்டிவருமென்பதைக் காட்டவே சூப்பிரண்டென்ட் இந்த ஏற்பாடு செய்தார். பாஷ்யத்தை இரண்டு வார்டர்கள் அங்கே கொண்டு வந்து நிறுத்தினர்.

தடியடிகள் கொடுக்க எல்லாம் தயார்! அந்த சிறை சூப்பிரெண்டென்ட் ராணுவத்தில் மருத்துவ அதிகாரியுங்கூட!

இரு வாலிபர்களையும் தடி கொண்டு அடிக்கவாரம்பித்தனர். அவர்கள் உடலெல்லாம் அடி பட்டு ரத்தம் கொட்டத்தொடங்கியது. சிறை அதிகாரி வாலிபர்களை அடித்தவர்களை இன்னும் பலமாக அடிக்கும்படி தூண்டிக்கொண்டிருந்தார். பார்த்துக்கொண்டிருந்தகைதிகள் வாயடைத்துப் போய்விட்டனர். மூச்சு விடுவதையும் மறந்து அக்கொடுமையை பார்த்துக் கொண்டிருந்தனர். பாஷ்யத்தை மீண்டும் 'செல்' லில் அடைத்தனர். அவருடைய நீண்ட கால்களுக்குச் சரியான செருப்புகள் சிறையிலில்லாததால், தன் சொந்த செருப்புகளை வைத்துக்கொள்ள அனுமதித்திருந்தனர். அவற்றுக்கு இரும்பு லாடங்களும் பதிக்கபட்டிருந்தன.

அன்று சிறையில் நடைபெற்ற கொடுமையால் பாஷ்யத்திற்கு உறக்கம் பிடிக்கவில்லை. அவருடைய மனது மிகவும் மிருதுவானது. அது பலமாக தாக்கப்பட்டுவிட்டது. வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென அவர் மனம் கொந்தளித்தது. ஆனால் அதற்கு அங்கே எந்த விதமான வழியும் இல்லை.

வாரத்திற்கொருமுறை. சிறை சூப்பிரெண்டென்ட் கைதிகளைப் பரிசோதிக்க வருவார். அவருடன் ஜூனியர் டாக்டரும் வருவார். கைதிகளை சிறைக்குள் அனுமதிப்பதற்கு முன் அவர்களை சில நாட்கள் (குவாரைண்டன்) தனியிடத்தில் வைத்திருப்பார்கள். அங்கே கைதிகளுக்கு எந்த விதமான தொத்து நோயும் இல்லை என்று முடிவு செய்துகொண்ட பிறகு, அவர்களின் உடலிலுள்ள மச்சங்களைப் பதிவு செய்துகொண்ட பின்னர் கைதிகளை சிறைக்குள் அனுமதிப்பார்கள். வாரந்தோறும் நடைபெறும் இதை பாஷ்யம் கவனித்தார்.

ஒரு வாரம் பாஷ்யம் தனக்கு வயிற்றுப் போக்காக இருக்கிறதென்றும், சிறைக் கதவுக்கு வெளித் தாழ்ப்பாள் போட வேண்டாமென்றும் வார்டர்களை கேட்டுக்கொண்டார். பாஷ்யம் அவர்களுடன் நேசமுடன் பழகி வந்ததால் அவர் பேச்சை வார்டர்கள் தட்டமாட்டார்கள்.

சூப்பிரெண்டென்ட் வந்து நாற்காலியில் அமர்ந்தார். தலையிலிருந்த தொப்பியை எடுத்து மேசைமீது வைத்தார். அவ்வளவுதான்! பாஷ்யம் கூட்டிலிருந்து வெளிவந்த சிறுத்தையைப் போல் பாய்ந்து வந்து, அவர் தலையில், லாடம் பதித்த தன் செருப்பால் அடிக்கத் தொடங்கினார். சூப்பிரெண்டென்ட் சுற்றிலும் அவருடைய சிப்பந்தி இருந்தாலும், பாஷ்யத்தின் திடீர்த்தாக்குதலால் அவர்கள் திணறிப்போனார்கள். அவர்கள் தன்னுணர்வு பெற்று பாஷ்யத்தைத் தடுப்பதற்குள் அதிகாரியின் தலை பூராவும் ரத்தக் களறியாகி மூர்ச்சையடைந்து விழுந்து விட்டார்.

இப்போது வார்டர்களின் முறை. அவர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு பாஷ்யத்தை இரும்புத் தடிகளால் அடித்து நொறுக்கி அவர் தன் நினைவிழந்து விட்ட பிறகு 'செல்' லில் இழுத்துப் போட்டு மூடிவிட்டார்கள்.

பாஷ்யம் 'பி' வகுப்புக் கைதியாதலால் அவருக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் அவர்களுக்கில்லை. அதனால் அவர்கள் சர்க்காருக்கு எழுதி அவரை 'சி' வகுப்புக் கைதியாக்கி, இரும்புக் கிராதிகளிடையே அவரைப் பிணைத்து, தங்கள் கைகள் நோகும் வரை அடித்து நொறுக்கினார்கள். சிறை சூப்பிரெண்டென்ட் எதிரிலேயே இருந்து தாக்கச் செய்து தன் வஞ்சம் தீர்த்துக் கொண்டார். காயங்கள் பட்டு ரத்தம் கொட்டிக் கொண்டிருந்த பாஷ்யத்தின் நினைவு தப்பிய உடலை 'செல்' லில் வீசி எறிந்தார்கள்.

ஒரு நாள் அவ்வதிகாரி பாஷ்யம் 'செல்' அருகே வந்து, "இப்போது எப்படி இருக்கிறது?" என்று ஏளனமாகக் கேட்டார். "எதுவானாலும் உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்" என்று துணிவுடன் கூறினார் பாஷ்யம்.

பாஷ்யத்திற்கு அளிக்கப்பட்ட தண்டனை மீது உயர் நீதி மன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டது. இதனால் சிறைக்குள் அவர் மேல் நிகழ்த்தப்பட்ட கொடுமை வெளியுலகுக்கு தெரியவந்தது. சென்னை சட்டமன்றத்திலும் இது குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. பெல்லாரி சிறை சூப்பிரெண்டென்ட் தந்தி உத்திரவின் பேரில் உடனே இட மாறுதல் செய்யப்பட்டுவிட்டார். உயர்நீதி மன்றம் பாஷ்யத்தை நிரபராதி எனக்கருதி, அவருக்களிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்து விட்டது.

தன் செருப்புகளை திருப்பித்தந்தால் தான் சிறையிலிருந்து வெளியேறுவேன் என்று பாஷ்யம் முரண்டு பிடித்தார். அன்றைய கோபத்தில் சிறை ஊழியர்கள் அவற்றைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டனர். கடைசியில் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் அவரை சென்னைக்கு அனுப்பிவிட்டனர்.

அப்போதைக்கு நான் சென்னை சிறையில் விசாரைணக் கைதியாகவே இருந்தேன். பாஷ்யம் என்னைக் காண வந்து, தன் காயங்களைக் காட்டினார். சிறைக்குள் நிராயுத பாணியான ஒரு கைதியைத் தாக்குவது வீரமல்ல; ஆனால் அதைப் பார்த்து உள்ளங்கொதித்து, வீறு கொண்டெழுந்துதன்னந்தனியனாக தைரியமாக அந்த சிறை அதிகாரியை செமத்தியாக செருப்பாலடிப்பது சாதாரண விஷயமல்ல; அவ்வாறு வஞ்சம் தீர்த்துக் கொண்ட பாஷ்யத்தின் கதை, எத்தனையோ வாலிபர்களை துணிவு கொள்ளச் செய்தது. பல்வேறு சதி வழக்குகளில் சிக்க வைக்கப்பட்டிருந்த வாலிபர்கள் பல்வேறு சிறைகளில் முதலில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் அவர்களெல்லோரும் அந்தமான் சிறைக்கனுப்பட்ட

னர். அங்கே பாஷ்யத்தின் கதையும் பரவிற்று. சங்கரின் (என்) தோழர்தான் இந்த வீரரென்று எல்லோரும் பேசிக்கொண்டனர். இவ்வாறு சங்கரின் (என்) பெயர் அந்தமானிலும் பரவியது.

அதிகார சார்பற்ற சில பெரிய மனிதர்களை அரசு சிறைக் கைதிகளைப் பார்வையிடுவதற்காக நியமிக்கும். அப்படிப்பட்ட குழு ஒன்று ஒரு முறை சிறைக்கு வந்தது. அவர்கள் என் 'செல்' அருகே வந்தனர். நான் உள்ளே கூண்டில் அடைபட்ட புலி போலிருந்தேன். "உனக்கேதாவது குறை இருக்கிறதா?" எனக் கேட்டனர். "என் குறையைப் பற்றி கேட்க வேண்டாம். அதை உங்களாலும் தீர்க்க முடியாது. விசாரணைக் கைதிகளென்ற அந்த அதிர்ஷ்டக் கட்டைகளை கொஞ்சம் கவனியுங்கள்! அவர்களுக்கு தண்ணீர் குடிக்கவும், குழம்பு வைத்துக் கொள்ளவும் மண் கலயங்களாவது வாங்கித் தாருங்கள்!" என்றேன் நான்.

சிறை அதிகாரிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்து விட்டது. "மற்றவர்களைப் பற்றி உனக்கேன் கவலை? உன் விஷயம் ஏதாவதிருந்தால் சொல்லிக்கொள்!" என்றார்.

"இந்த சிறைக்குள் நான் எனக்காக வரவில்லை" என்றேன் நான்.

மற்ற கைதிகளுக்காக இந்தக் காலம் முழுவதும் நான் சிறைக்குள் போராடி கொண்டே இருந்தேன். ஒரு முறை இன்றைய பாகிஸ்தானைச் சேர்ந்த சிந்தி மொழியினர் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைக்குக் கொண்டு வரப்பட்னர். அவர்களுக்கு தென்னிந்திய அரிசி உணவு பிடிக்கவில்லை. அவர்களுக்கு கோதுமை உணவு தரச்சொல்லி நான் என் சோற்றுத் தட்டை வீசி எறிந்தேன். சிறை சூப்பிரெண்டென்ட் விஷயம் தெரிந்து அவர்களுக்கு கோதுமை உணவு ஏற்பாடு செய்தார். எங்கே அநீதி தென்பட்டாலும், யாருக்காகவும் சங்கர் போராடுவாரென்னும் கருத்து எங்கும் நிலவியது.

இதேபோல் அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் சென்னை கவர்னர்'நைலி'ன் சிலையை உடைத்தெறிந்த தேசபக்தர்களுக்கு மாவரைக்கும் கடின தண்டனை அளித்தார் ஒரு ஆங்கிலோ இந்திய ஜெயிலர். நானும் சுபாஷும் அவருடன் சண்டைபோட்டு அவர்களுக்கு அந்த கடுமையான உழைப்பிலிருந்து விடுதலை அளித்தோம்.

வெங்கட்ராமனின் தம்பி எங்களுடன் சேர்ந்து வேலை செய்தார் என்பதற்காக அவரை ரெயில்வேப் பணியிலிருந்து வேலை நீக்கம் செய்து விட்டனர். அப்போது நானும் பாஷ்யமும் தனிமைச் சிறையில் அடைபட்டுக் கிடந்தோம். கைதிகளுக்கு வசதிகள் செய்து தரவேண்டுமென்பதற்காக உண்ணாவிரதத்திலும் ஈடுபட்டிருந்தோம். வெங்கட்ராமன் எங்களுக்காக ஒரு கூடை மாம்பழங்கள் அனுப்பியிருந்தார். நாங்கள் அவற்றை தண்டனைக் கைதியான ராமசாமி அய்யருக்கு தந்துவிட்டோம். அவர் மேல் ஒரு அரசியல் கொள்ளைக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. எங்களுடன் அவர் தொடர்பு கொண்டிருந்ததால் அவரை ராஜமகேந்திரவரம் சிறைக்கு மாற்றிவிட்டனர். 'சர்க்காரை' மருத்துவர் யோசனையின் பேரில் விடுதலை செய்து விட்டனர்.

ஒரு தடவை நீதிமன்ற விசாரணைக்கிடையே வழக்கறிஞர்கள் சிலர் என்னிடம் வந்தனர். எலலோரும் தேனீர் அருந்திக் கொண்டிருந்தோம். சென்னை மாநிலத்தில் கம்யூனிஸ்டாக விசாரிக்கப்படும் முதல் கம்யூனிஸ்ட் நான்தான்! நீதிமன்றங்களைப் பற்றி என் கருத்தும் தனித்தன்மையுடையதாக இருந்தது. இதனால் நான் பலரையும் கவர்ந்தேன். அதன் விளைவாகவே இப்படிப்பட்ட 'தேனீர் விருந்துகள்' நடைபெற்றன. 'டீ'

குடித்துக்கொண்டே நடைபெறும் விவாதங்களின்போது ஒரு முறை, "வக் கீல்கள் என்றால் புத்திசாலிகளான விபச்சாரிகள்" என்றேன். இயற்கையா கவே அவர்கள் என் மீது கோபித்துக் கொண்டனர். அவர்களை சமாதா னப்படுத்தி என் கருத்தினை விளக்கினேன்.

"நான் உங்களுக்கோர் வழக்கை தந்தேன் என்று வைத்துக் கொள் ளுங்கள். அது உண்மையா, பொய்யா என்பதைத் தெரிந்து கொள்ளாமலே நீங்கள் உங்கள் கட்சிக்காரரைப் பாதுகாக்கும் முயற்சிகளில் ஈடுபடுகிறீர் கள், அவர்கள் குற்றவாளிகளாயிருந்தாலும், அவர்களை நிரபராதிக ளென்று நிரூபிப்பதற்காக பாடுபடுகிறீர்கள். அது உங்கள் தொழில் தர்ம மாகக் கருதி மறைமுகமாக உதவுகிறீர்கள். ஒரு விபச்சாரி ஒருவனை மட்டுமே கெடுக்க முடியும். நீங்களோ சமுதாயம் பூராவின் சிந்தனைப் போக்கையே கெடுக்கிறீர்கள்."

என் கருத்துக்கள் அவர்களுக்கு பிடிக்கவில்லை என்றாலும், அவர் கள் தம் தொழிலின் மீது கொண்டிருந்த கர்வத்தைத் தகர்க்கவே அவ்வாறு பேசினேன்.

பெங்களூரிலிருந்து ஜெயராமனின் தம்பியையும், டைப்பிஸ்ட் புரு ஷோத்தையும் எங்களுக்கு எதிராக சாட்சியமளிக்க போலீஸார் அழைத்து வந்தனர். வடிவேலுவின் தம்பி ஒரு அச்சகத் தொழிலாளி. அவர் 'முன் னேற்றம்' பத்திரிகையின் அச்சு கோர்க்கும் வேலையை இலவசமாக செய்பவர்களில் ஒருவர். அவரை சர்க்கார் வக்கீல் மணிக் கணக்கில் கூண்டில் நிறுத்தி வைத்து, குறுக்கு விசாரணை செய்துகொண்டிருந்தார். ஆனாலும் வடிவேலுவின் தம்பி சற்றும் தடுமாறாமல் பதில்கள் சொல்லிக் கொண்டிருந்தார்.

"இவ்வளவு பெரிய சட்டப் புத்தகங்களையெல்லாம் காட்டினால் அவர் பயப்படுவாரா? அவற்றிலுள்ள விஷயத்தை எல்லாம் அவர் 26 ஆங்கில எழுத்துக்களில் கோர்த்தது தான்!" என்று வி. கே. யின் வழக்க றிஞர் சர்க்கார் வழக்கறிஞரை கேலி செய்தார்.

விசாரணை முடிவடைந்தது.

"இவர் பிறந்து வளர்ந்த விவரங்களெல்லாம் எங்களுக்கு தெரியாது. இவர் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர். கம்யூனிஸ்ட் என்று தோன் றுகிறது. கம்யூனிசம் காலத்திற்கு ஒவ்வாத அறிவீனமான சித்தாந்தம். அதைப் படித்தால் அபாயமெதுவுமில்லை. ஆனால் கம்யூனிசத்தை அன் றாட அரசியல் நடவடிக்கைகளில் பயன்படுத்துவதுதான் அபாயகரமா னதாகும். ஜெர்மனியில் நடந்து வருவதைப் பாருங்கள்!" என்று ஆரம் பித்து சர்க்கார் வக்கில் கம்யூனிச தத்துவத்தின் மேல் அவதூறு பொழிந் தார். அவற்றையெல்லாம் அடுத்த நாள் 'இந்து' பத்திரிகையில் வெளியிட் டார்கள்.

மறுநாள் மாஜிஸ்திரேட், "நீங்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறீர் களா?" என்று என்னை கேட்டார். "அரசியல் மட்டும் பேசாதீர்கள்" என்றும் கூறினார்.

"சர்க்கார் தரப்பு வழக்கறிஞர் என் மேல் குற்றச்சாட்டுகள் சுமத்திய தோடு நிறுத்திக்கொள்ளவில்லை. அவருடைய வாதங்களுக்கு பதில் சொல் வதைத் தவிர நான் அதிகம் ஒன்றும் பேசமாட்டேன்" என்றேன் நான்.

"தொழில் துறையில் ஜெர்மனி சிறப்பாக வளர்ந்து பொருளாதாரத் தில் முன்னேறியது. ஆனால் அது காலனியாதிக்கக் கொள்ளைக்காரர்கள் வரிசையில் கடைசியில் சேர்ந்து கொண்டது. ஜெர்மனிக்கு முன்னதாகவே வளர்ந்திருந்த தொழில் வள நாடுகள் வளர்ச்சியடையாத நாடுகளைத்

தமது அடிமை நாடுகளாக்கிக் கொண்டு விட்டன. உலகக் கடல் மார்க் கங்களில் முக்கியமானவையெல்லாம் இங்கிலாந்தின் பிடியிலிருக்கின்றன. அது விரும்பினால் ஜெர்மனியின் கடல் வழிகளையெல்லாம் மூடிவிட முடியும். இந்த அபாயத்திலிருந்து மீள்வதற்காகத்தான் ஜெர்மனி துருக்கி யின் ஒத்துழைப்புடன் கான்ஸ்டன்ட்நோப்பிள்பாக்தாத் ரெயில் பாதையை அமைத்துக் கொண்டிருக்கிறது. அது தன் விஸ்தரிப்புக்குஅவசியமெனக் கருதுகிறது. சுருக்கமாக, முதலாளித்துவ பொருளாதார அமைப்பும், அத னிடையே உள்ள முரண்பாடுகளே முதல் உலகப் போருக்குக் காரணங்க ளாகும். போருக்குப் பிறகு பிற ஏகாதிபத்தியமுதலாளித்துவ நாடுகள் ஜெர்மனியின் பொருளாதார அமைப்பினை சீர்குலைத்துவிட்டன. அத னால்தான் ஜெர்மனி நாட்டில் இன்று நெருக்கடியான நிலை நிலவுகிறது. நமது 'அதி மேதாவிகளான' ஆட்சியாளரைப் பற்றி சற்று சொல்கிறேன். ஒருமுறை தீவுத்திடலின் மீது உங்கள் பார்வையை செலுத்துங்கள். இருக்க வீடுமில்லாமல் அவதிப்படும் அந்த அனாதைகளுக்கு குடிக்க தண்ணீரும் இல்லை. உடுத்தத் துணியுமில்லை. இப்படிப்பட்ட 'மாண்புமிகு' அர சைப் பாதுகாக்கவே மன்னரின் வழக்கறிஞர் இந்த வழக்கை நடத்திக் கொண்டிருக்கிறார். கம்யூனிஸ்ட் அமைப்பிலே இப்படிப்பட்ட மோச மான நிலைமையை அனுமதிக்கமாட்டார்கள்."

இவ்வாறு முன் தயாரிப்பில்லாமலேயே அரை மணி நேரம் நீதி மன்றத்திலே பேசினேன்.

ஏகாதிபத்தியவாதிகளின் நீதி மன்றத்திலேயே, அவர்களுக்கு எதி ராக, அவர்களை சவால் செய்து பகிரங்கமாக குற்றஞ்சாட்டியதை எவரும் அதற்கு முன்பு கேட்டதுமில்லை; கண்டதுமில்லை அதனால் திடுக்கிட்டுப் போனார்கள்.

அச்சக சட்டத்தின் கீழ் என்னை விசாரித்துக்கொண்டிருந்த நீதிமன் றங்களிலும்கூட அந்நிய நாட்டு ஆதிக்கவாதிகளை கடுமையாகக் கண்டித் துப் பேசினேன். நீதிமன்றங்கள், விசாரணைகள் எல்லாம் பொய்யான நாடகங்களென்று விளக்கினேன்.

ஒரு வாரத்திற்குப் பின் என்னை மீண்டும் நீதிமன்றத்திற்கு கொண் டுவந்தார்கள். எனக்கு ஒன்றரையாண்டு சிறைத் தண்டனை விதித்தார்கள். வயது, இதர காரணங்களை முன்னிட்டு வி.கே.வுக்கு ஐநூறு ரூபாய் அபராதம் மட்டும் விதித்தார்கள். எனக்கு ராஜதுரோகத்தின் கீழ் மூன்று வழக்குகளுக்கும் சேர்த்து ஒன்றறை வருடம் சிறைத்தண்டனை விதித்து அடுத்த நாள் சேலம் மத்திய சிறைக்கு மாற்றினார்கள்.

ஐரோப்பிய வார்டில் சிறையிலே எங்களுடனிருந்த தனி நபர் சத்தியாகிரகிகள் சிலர் காந்திஜீயின் கொள்கைகளில் நம்பிக்கை இழந்து விட்டதாகத் தெரிந்தது. அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு புரட்சிகர கட்சியை அமைக்க முடிவு செய்து கொண்டதாகவும் தெரிய வந்தது. இதையறிந்த அரசு, அவர்களை வழக்குகளில் சிக்க வைத்தது. அவர்களின் மேல் 'சென்னை சதி வழக்கு' ஜோடித்தார்கள். குற்றஞ்சாட் டப்பட்டவர்களின் சார்பில் பின்னால் சென்னை முதலமைச்சரான டி. பிரகாசம் முக்கிய வழக்கறிஞராக வாதிட்டார்.

தினந்தோறும் அவர்களை விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு கொண்டுபோனார்கள். ஒரு நாள் அவர்களை சிறைக்கு திருப்பிக்கொண்டு வருவது தாமதமாயிற்று. அவர்களுடைய சாப்பாடு 'செல்'லுக்குள் வைத் துவிட்டார்கள். உரிய நேரம் மிஞ்சிவிட்டதால் கைதிகள் 'லாக்கப்'புக்குள்

னார்கள்.

மறுநாள் அவர்கள் 'செல்'லிலிருந்து வெளி வரவும் மறுத்துவிட்டதால், வார்டர்கள் வன்முறையைப் பயன்படுத்தி அவர்களை 'வேனு'க்குள் ஏற்றினார்கள். நீதிமன்றத்தில் கைதிகள், நடந்ததை வக்கீலிடம் சொன்னார்கள்.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விசாரணையில் பங்கெடுக்கும் நிலையில் இல்லையாதலால், வழக்கை ஒத்திப்போட வேண்டுமென வக்கீல்கள் நீதிபதியை கோரினார்கள். போலீஸ் டாக்டரை வரவழைத்து பரிசோதனை செய்வித்தார்கள். அவர்கள் உடலில் எவ்வித காயமில்லாததால், அவர்களால் விசாரணையில் பங்கெடுக்க முடியுமென்று அவர் சொன்னார்.

"இந்த அரசு எங்கள் மீது வழக்கு நடத்துகிறது. இந்த டாக்டர் அரசு பணியாளர். அவர் பாரபட்சம் காட்டாமல் இருப்பாரா?" என்று கைதிகள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். டாக்டர் ரங்காச்சாரியை அழைத்து தம்மை பரிசோதிக்குமாறு அவர்கள் கோரினார்கள்.

அந்த காலத்தில் சென்னை நகரில் டாக்டர் ரங்காச்சாரி புகழ் பெற்ற டாக்டர். தேசிய எண்ணம் கொண்டவர். அவர் நடந்ததைத் தெரிந்து கொண்டார். தன் கருத்து சொல்வதற்கு சாட்சி கூண்டில் ஏறினார்.

நீதிபதி: விசாரணையில் பங்கெடுக்கும் நிலையில் குற்றவாளிகள் இருக்கிறார்களா டாக்டர்?.

டாக்டர்: இல்லை.

நீதிபதி: போலீஸ் டாக்டர் அவர்கள் நல்ல நிலையில் இருப்பதாக கூறினாரே!.

டாக்டர்: போலீஸ் டாக்டர் ஒரு முட்டாள். அவர்கள் சிறை வார்டர்களுடன் இரண்டு முறைமோதியிருக்கின்றனர். அதனால் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு இருக்கின்றனர். மானசீகமாக அவர்கள் நல்ல நிலையில் இல்லை. உடலில் காயங்கள் இல்லாவிட்டாலும், மனத்தளவில் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நீதிபதி, டாக்டர் ரங்காச்சாரியின் சாட்சியத்தை அங்கீகரித்து வழக்கை ஒத்திப்போட்டார்.

போலீசாரின் அடிகளைப் பொறுக்கமுடியாமல் சிலர் அப்ரூவர்களாக மாறி விட்டனர். போஸ், சங்கர் என்பவர்களுடன் ஞாயிறுதோறும் அரசியல் விவாதம் நடத்தினோம் என்றும், அதன் விளைவாக சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டோமென்றும் அவர்கள் கூறினர். நீதிபதி அந்த வார்டை நேரில் பார்வையிட்டார். சிறை சூப்பிரெண்டெண்ட் காண்டிராக்டரின் பதவி உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டது. 1938ல் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த பிறகு இவர் சிறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆனார்.

சேலம் மத்திய சிறை 1862ல் கட்டப்பட்டது. அங்கே முரட்டுக்கைதிகளையும், நீண்டகால சிறைத் தண்டனை பெற்றவர்களையும் வைத்திருந்தனர். 56 ஆண்டுகள் தண்டனை அடைந்த கைதி ஒருவரும் அங்கே இருந்தார். வேறு சிறைகளில் கட்டுப்பாட்டுடன் இல்லாதவர்களை சேலம் சிறைக்கு அனுப்பி விடுவார்கள். மத்திய சிறையில் இளங்குற்றவாளிகளுக்கு 'போர்ஸ்டர்' சிறையும் இருந்தது.

இரவு ரெயிலில் சேலம் போய்ச் சேர்ந்தேன். சிறையில் சேர்த்துக் கொண்டதுமே எனது துணிமணிகளையும், பொருட்களையும் பறித்துக்

கொண்டு, தண்டனைக் கைதிகளின உடைகளைத் தந்தனர். நான் அங்கே வருவதற்க்குள் இவையெல்லாம் தயாராக எடுத்து வைத்திருந்தனர். அங்கே ஏற்கனவே ஆங்கிலோ இந்தியர் ஒருவரும், நீக்ரோ ஒருவரும் 'டி' வகுப்பில் இருந்தனர். அவர்கள் இருவரும் பழக்கப்பட்ட குற்றவாளிகள். அவர்களை காலையில் பட்டறைக்கு அழைத்துப்போய்க் கொண்டிருந்தனர். எனக்கு நூல் நூற்க ஒரு தக்ளியும், பஞ்சும் கொடுத்தனர். அது பெரிய கஷ்டமான வேலை அல்ல, ஆனால் சக கைதிகளால் துன்பமாகவே இருந்தது. நீக்ரோ ஒரு மன நோயாளி. திடீரென கத்தி கலாட்டா செய்து கொண்டிருந்தார்.

எங்கள் சமையலுக்காக ஒரு கைதியை அமர்த்தினர். அவன் உணவுப் பொருட்களை திருடி சாராயத்துக்காக விற்றுக் கொண்டிருந்தான். அவனுடைய திருட்டைப் பற்றி மற்றவர்களும், ஜெயிலரும் என்னிடம் பலமுறை கூறினர். ஆனால், எனக்கு மட்டும் அவனது திருட்டை கண்டுபிடிப்பதில் விருப்பமில்லை.

ஒருநாள் நடுப்பகல் ஒரு வார்டர் சில கைதிகளை கழிப்பிடத்திற்கு அழைத்துப் போய்க்கொண்டிருந்தார். நான் ஒரு கைதியை நோக்கி அனிச்சையாகவே கையசைத்தேன். அவனும் என் பக்கம் திரும்பிப் பார்த்தான். வார்டர் உடனே அந்த கைதியை அடிக்கத் துவங்கிவிட்டான்.

"அடிப்பதை நிறுத்து!"என்று கத்தினேன், ஆனால், வார்டர் நிறுத்தவில்லை. அப்போது தோட்டத்திலிருந்ததால் பக்கத்திலிருந்த செங்கற்களை கையிலெடுத்துக்கொண்டேன்.

இது சிறை சூப்பிரெண்டென்டுக்கு தெரிந்தது. அவர் பெயர் 'மேட்டர் கிளமெண்ட்'. ஓய்வு பெற்ற ரணுவ அதிகாரி.

"நீங்கள் குழப்பம் உண்டாக்கினீர்களாமே!" என்று அவர் என்னைக் கேட்டார்.

"அந்த நிகழ்ச்சிக்கு நீங்கள் என்ன பெயர் வைப்பீர்களோ, எனக்கு தெரியாது. இன்று வண்டிக்காரன் வாயில்லா குதிரையைப் போட்டு அடித்துக்கொண்டிருந்தால்கூட போலீசார் வழக்கு தொடரலாம். மிருகங்களைக் கொடுமைப் படுத்துவதுகூட குற்றம் என்கிற அளவுக்கு மனித உணர்வுகள் வளர்ந்துள்ளன. இந்த நிலையில் ஒரு கைதியை–அவன் ஒரு மனிதனும் கூட–நிறுத்தாமல் அடித்துக் கொண்டிருந்தால் என்னால் எப்படி சகித்துக்கொள்ள முடியும்? நான் அருகிலே இருந்திருந்தால் வார்டரின் கையைப் பிடித்து நிறுத்தியிருப்பேன். ஆனால் தோட்டத்தில் தொலைவாக இருந்தேன். செங்கல் எடுத்து பயமுறுத்துவது தவிர வேறு வழியில்லை. வார்டர் அவனை அடிப்பதை நிறுத்தியதுமே நானும் செங்கல்லை கீழே போட்டுவிட்டேன்" என்று விவரித்தேன்.

"தவறு நடந்தால் நான்தான் சரி செய்யவேண்டும், நீயல்ல!" என்றார் அவர்.

"இருக்கலாம். ஆனால் அப்போது நீங்கள் அலுவலகத்தில் இருந்தீர்கள். அந்த நிகழ்ச்சி என் கண்முன்னலேயே நடந்துக் கொண்டிருந்தது. இனிமேல் என் கண்ணெதிரே யாரையும் அடிக்கமாட்டார்களென்று சொல்லுங்கள் !" எனக் கேட்டேன்.

அதன்பிறகு கைதிகளை வேறு வழியில் கொண்டுபோக ஆரம்பித்தனர்.

சிறையில் பலவிதமான கைதிகள் இருந்தனர். சிலர் மற்றவர்களின் பொருட்களைத் திருடினர். என் நோட்டுப் புத்தகங்களில் காகிதங்களைக் ... பல தொல்லைகள் அனுபவிக்கவேண்டியிருந்

தது.

'சி' வகுப்பு அரசியல் கைதிகள் வேதனை அனுபவிக்க வேண்டியிருந் தது. அதைப்பற்றி கேள்விப்படும் போதெல்லாம் பெரும் வருத்தமே ஏற்படும். பசியும் மறைந்து விடும். அக்கைதிகளுடன் சேர்ந்திருப்பது அசாத்தியமானதாக தோன்றும்.

'சி' வகுப்பு அரசியல் கைதிகளுடன் சேர்ந்திருந்து அவர்களின் தொல்லைகளில் பங்குபெற விரும்பினேன். என் 'டி' வகுப்பை துறந்து அவர்களுடன் இருக்க அனுமதிக்குமாறு சூப்பிரெண்டென்ட் கோரினேன். ஆனால், அவர் மறுத்துவிட்டார்.

கடைசியில் நம்பியார் என்னும் அரசியல் தொண்டர் உண்ணாவிர தம் இருக்கத் தொடங்கினார். அது 28 நாட்கள் தொடர்ந்தது. மருத்துவ அதிகாரிகூட அவருக்கு பலவந்தமாக உணவு செலுத்த மறுத்துவிட்டார்.

1933ம் ஆண்டு துவக்கத்தில் டாக்டர் துவாரகநாத்தும், அவர் மனை வியும் என்னைக் காண வந்தனர். ஜெர்மனியில் சர்வாதிகாரி இட்லர் ஆட்சிக்கு வந்துள்ள செய்தி தெரிவித்தனர். எனக்கு மிக வருத்தமாக இருந்தது. ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்திற்கு துன்பங்கள் ஆரம்பமாயின.

ஜெர்மன் கம்யூனிஸ்ட் தோழர்கள் என் நினைவிலேயே நிழலாடினர். இந்தியாவிற்குள் கம்யூனிஸ்ட் நூல்களை அனுப்பி வைப்பதற்கு அவர்கள் எவ்வளவோ உதவினர். மாஸ்கோவிலிருந்த கிழக்கத்திய பல்கலைக் கழகத் திற்கு இந்திய மாணவர்களை அனுப்பிவைக்க ஜெர்மன் தோழர்கள் ஒத்து ழைத்தனர். நான் இருமுறை நாட்டைவிட்டுச் சென்றபோது அவர்கள் காட்டிய அன்பை வார்த்தைகளில்தான் வர்ணிக்கமுடியுமா? தற்போது அவர்கள் எப்படியிருக்கின்றனரோ! என் உள்ளம் வேதனையால் நிறைந் தது.

'பி' வகுப்பு கைதிகளுக்கு அவர்கள் செலவில் 'இந்து' பத்திரிகையைத் தந்தனர். ஆனால் அரசியல் செய்திகளையெல்லாம் கத்தரித்து விடுவார் கள். அரசியல் செய்தி எதுவும் தெரியாமல் அவஸ்தையாக இருந்தது. சுற்றுப்புறமெல்லாம் பல்வேறு கெட்ட விஷயங்களுக்கு பழக்கப்பட்ட கைதிகள்! மானசீகமாக நான் குழம்பிப்போய்விட்டேன்.

ஒரு முறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் 'மெக்கானிக்' சிறையைப் பார்வையிட வந்தார். இவர் ஒரு சமயம் அந்தமான் கைதிகளின் விவகா ரங்களை கவனித்து வந்தார். 'மெக்கானிக்' இந்திய விரோதி. எனக்கு தண்டனை அளிப்பதற்கு முன்பே என்னை சேலம் சிறையிலே வைக்க வேண்டுமென உத்தரவிட்டார். இந்த விஷயம் ஒரு வார்டர் எனக்கு சொன்னார்.

அவர் முன்னால் என்னை கைதி வேடமிட்டு நிறுத்தி வைத்தனர்.

"எனக்கு தண்டனை அளிப்பதற்கு முன்னரே என்னை எந்த சிறை யிலே வைக்க வேண்டும் என்று முடிவு செய்யும் அதிகாரம் உனக்கேது?" என்று நான் அவரைக் கேட்டேன்.

"நீ ஒரு குழப்பம் உண்டாக்குபவன்..." என்று ஏதோ சொல்லப் போனார். எனக்கு ஆவேசம் வந்துவிட்டது.

"நீங்கள் உங்கள் உரிமைகளுக்காகவும், உங்கள் நாட்டுக்காகவும் போராடுவது சரியானது. ஆனால் நான் என் நாட்டுக்காக போராடி னால் தவறா?" என்று கேட்டேன்.

அவர் அங்கிருந்து எழுந்து சென்று விட்டார்.

சரியான மனித சினேகம் இல்லாமல் 1932, 1933- களில் நான் எவ்வளவோ வேதனை அனுபவித்தேன். 1933 கடைசியிலோ, 1934 ஆரம் பத்திலோ தோழர் பி.சீனிவாசராவை மற்றொரு சிறையிலிருந்து இந்த சிறைக்கு மாற்றினர். சென்னையில் நாங்கள் இருவரும் சில காலம் சேர்ந்திருந்தோம்.

அதன் பின்னர் அன்னபூர்ணய்யா வந்தார். அவர் ஒரு சிறைப்ப றவை. தெலுங்கில் ஒரு வார இதழை நடத்திக் கொண்டிருந்தார். ராஜ மகேந்திரவரத்தில் ஒரு ஆசிரமத்தில் இருந்து வந்தார். 1920-21 காந்திஜீ விதேசிக் கல்வியை விட்டொழிக்கச் சொன்னபோது, ஆந்திராவில் கல்லூ ரியை விட்டு வெளியேறிய முதல் மாணவர் தானே என்று அவர் பெருமையாகக் கூறிக்கொள்வார். பிறகு ஆந்திராவிலிருந்தே மற்றொரு சத்தியாகிரகியும் வந்தார். நாங்கள் நால்வரும் எவ்வளவோ நட்புறவுடன் இருந்தோம். முதலில் சீனிவாச ராவை விடுதலை செய்தனர் என்று ஞாபகம். 1934 ஜூலையில் என்னையும விடுதலை செய்தனர்.

விடுதலைப் பெற்று நான் வெளியே வந்ததும், இந்தியாவை விட்டு இங்கிலாந்து சென்ற பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் பிராட் லியின் கடிதத்தை ஒரு வார்டர் என்னிடம் தந்தார். 'திவாகர்' என்பவரும் என்னை சந்தித்தார். அவரும் அரசியல் கைதிகளின் ஞாயிற்றுக்கிழமை கூட்டங்களில் கலந்துக்கொண்டவர். அவரே சுபாஷ் எழுதிய புத்தகத்தை எனக்களித்தார். இன்னும் சில அனுதாபிகளும் என்னைக் காண வந்தார் கள்.

சேலத்தில் மாலை ரயிலேறி மறுநாள் காலை சென்னை அடைந் தேன். சென்னையில் எங்கே தங்குவது என்ற பிரச்சனை இரவு முழுவதும் என்னை அலைக் கழித்தது. அந்த காலத்தில் ஒரு ஜாதியினர் இன்னொரு ஜாதியினருடன் சோந்து வசிப்பதில்லை. ஐயங்கார் பிராமணர்கள், ஐயர் பிராமணர்கள் சமைத்த உணவை சாப்பிட மாட்டார்கள். நான் தலைம றைவாக வாழ்ந்துக் கொண்டிருந்தபோது என் ஜாதி யாருக்கும் தெரியாது. அதனால் எல்லோரும் என்னுடன் சுமுகமாய் பழகினார்கள். இப்போது அவர்கள் எப்படி நடந்துக் கொள்வார்களோ! நான் எப்படி இருக்க வேண்டுமோ!

சென்னை ரயில் நிலையத்தில் நான் இறங்கியதுமே வாலிபர்கள் பலர் என்னை வரவேற்றார்கள். தோழர் வடிவேலுவும் இருந்தார். மலர் மாலைகள் அணிவித்தார்கள். கை குலுக்கினார்கள். அங்கேயே ஒரு கூட் டமும் நடத்தினார்கள்.

பாஷ்யம் தான் தங்கியிருந்த ஒட்டலுக்கு என்னைக் கூட்டிப்போ னார்.

நான் இல்லாதபோது ஒட்டல் முதலாளி என்னைப் பற்றி கேட்டா ராம். "அவர் ஒரு அரசியல் சாமியார்" என்று பாஷ்யம் சொன்னாராம். அதன் பிறகு அவர்கள் ஒன்றும் கேட்கவில்லை. நானும் பாஷ்யமும் சேர்ந்தே சாப்பிட்டு வந்தோம். நான் கதரை உடுத்தினேன். அந்த காலத்தில் அரசியல் ஊழியர்கள் கதர்தான் அணிந்துவந்தார்கள்.

தோழர் பி. சுந்தரய்யாவும் வேறு சிலரும் என்னை சந்திக்க விரும்பி னார்கள். ஒரு நாள் இரவு ரகசிய இடத்தில் சந்திக்க நிச்சயித்துக் கொண் டோம். ஆனால், எப்போதும் என்னை சி.ஐ.டி-கள் பின் தொடர்ந்து கொண்டிருந்தார்கள்.

அன்று மாலை என் வழக்கை எடுத்து நடத்திய இ.எல்.ஐயரை சந்தித்தோம். பிறகு சினிமாவுக்கு சென்றோம். படம் துவங்குவதற்

விளக்குகள் அணைந்ததுமே, வேறு வழியாக கூட்டம் நடக்கும் இடத்தை அடைந்தோம். இது பூராவும் பாஷ்யம் வகுத்த திட்டம். சந்துபொந்துகளில் திரிந்து அடையாறில் உள்ள திவ்ய ஞான சபைக்கு வந்து சேர்ந்தோம். இது சென்னை புறநகர் பகுதியில் 5 மைல் தொலைவிலிருக்கிறது. அங்கிருந்த பெசன்ட் உயர்நிலைப் பள்ளியில் நாராயணன் என்ற ஆசிரியர் வேலை செய்து வந்தார். அவரையும் என்னைக் கைது செய்தபோதே கைது செய்தார்கள். ஆனால், அவரிடம் எவ்விதமான ஆட்சேபகரமானவைகள் கைப்பற்றப் படாததால் அவரை விடுதலை செய்துவிட்டார்கள். நாராயணன் அண்மையில்தான் எம்.ஏ.கூட முடித்திருந்தார். அவருக்கு அங்கேயே ஒரு வீடுகூட தரப்பட்டிருந்தது.

நாங்கள் அங்குபோய் சேர்ந்தபோது அவருடைய குடும்பத்தார் அங்கே இல்லை. இந்த கூட்டத்திற்காகவே அவர்களை எங்கேயோ அனுப்பிவைத்திருந்தார் நாராயணன்.

நாங்கள் சென்றதுமே விளக்கை போட்டார்கள். தரையில் சிலர் அமர்ந்து இருந்தார்கள். அவர்களில் தோழர் சுந்தரய்யா மட்டுமே எனக்கு தெரிந்தவராக இருந்தார்.

அரசியல் நிலைமை பற்றி கொஞ்சம் விவாதித்தோம். ஆனால், பிரதானமாக ரகசியக் கூட்டங்களைப் பற்றியே பேசிக்கொண்டோம். பொழுது விடியும் நேரத்தில் பாஷ்யம் என்னை நகரத்தில் கொண்டுவிட்டார். அடுத்தநாள் சீனிவாசராவ் வந்தார். 'இளந்தொழிலாளர் லீக்' உறுப்பினர் சிலரும் சந்தித்தார்கள்.

மறுநாளே பம்பாய் புறப்பட்டு வரும்படி தோழர் மிராஜ்கர் தந்தி அனுப்பியிருந்தார். அங்கே சென்று நிலைமைகளை புரிந்துக்கொண்டு தென்னிந்தியாவில் கட்சி இயக்கத்திற்கு என்ன செய்யவேண்டும் என்பதை தெரிவிப்பதாகக்கூறி பம்பாய் புறப்பட்டேன். கல்யாண் ரயில் நிலையத்தில் என்னை யாரோ சந்தித்தார். அவரே என்னை மாதுங்காவுக்கு அழைத்துப்போனார். தாதரில் மற்றொரு வீட்டுக்கும் அழைத்துச் சென்றார். சி.ஐ.டி-கள் டாக்சியில் எங்களை பின்தொடர்ந்துக் கொண்டே இருந்தனர். அன்றிரவு தலைமறைவாய் இருந்த தோழர் ஜோக்லேக்கரை சந்தித்தேன். அடுத்தநாள் தோழர்கள் காட்டே, மிராஜ்கர் முதலியவர்களுடன் பேசினேன்.

அன்றிரவு சுஹாசினியின் வீட்டில் சாப்பிட நினைத்தேன். அன்று பிற்பகலே அரசியல் நிலைமையில் பெரும் மாற்றம் நிகழ்ந்தது. காட்டே, மிராஜ்கர் போன்றோர் மீரட் சதி வழக்கிலிருந்து விடுதலையாயினர்.

பம்பாயில் அப்போது ஒரு துணி ஆலையில் வேலைநிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தொழிலாளர்கள் போலீசாருடன் நேரடியாக மோதினர். ஒரு சந்தர்ப்பத்தில் அவர்கள் போலீசாரின் துப்பாக்கிகளையும் பறித்துக்கொண்டு விட்டனர். அதிகாரிகள் இதை மிகக் கடுமையான விஷயமாக கருதினர். நம் தோழர்கள் பலரையும் கைதுசெய்து வழக்குகள் தொடுத்தனர். இன்னும் பலரை பம்பாயிலிருந்து வெள்யேற்றவிருப்பதாக தெரிந்தது. நமது அலுவலகங்களையும் மூடிவிடவிருக்கின்றனர். நமது சங்கங்கள் சிலவற்றை சட்டவிரோதமானவை என்றும் அறிவித்துவிட்டனர்.

போலீஸ் அதிகாரிகள் வலை போட்டு கைது செய்வதற்கு முன்பாகவே பம்பாயை விட்டுப் போய் விடுமாறு தோழர்கள் வற்புறுத்தவே, நான் பூனாவுக்கு தப்பிச் சென்று, அங்கிருந்து ஷோலாப்பூர் அடைந்

தேன். அதே சமயத்தில் தோழர்கள் காட்டே, மிராஜ்கர், டாக்டர் அதிகாரி முதலியோரை பம்பாயிலிருந்து வெறியேற்றிவிட்டனர்.

நான் நலமாக சென்னை அடைந்தேன். ரெயில் நிலையமெல்லாம் சி.ஐ.டி.கள் இருந்தனர். அவர்களை ஏமாற்றி அடையாறில் தோழர் நாராயணன் வீடு சேர்ந்தேன். அவர் எப்போதுமே உதவி செய்து வந்தார். எனக்கு திவ்விய ஞான சபையைச் சேர்ந்தவனைப் போல் உடை அணி வித்து, அங்குள்ள புத்தக விற்பனை நிலையத்திலே வைத்தனர். நான் வந்துள்ள விஷயத்தை அறிந்து தோழர்கள் சிலர் ரகசியமாக என்னைப் பார்க்க அன்றிரவு வந்தனர்.

ஆனால் அங்கே என்னை சிலர் சந்தேகப்பட்டு நாராயணனை கேள்விகள் கேட்டுத் துளைத்தெடுத்துவிட்டனர். அவர் உடனே இந்த விஷயம் வெங்கட்ராமனுக்கும், பாஷ்யத்துக்கும் சொல்லி அனுப்பினார். அங்கிருந்து என்னை வேறு ஒரு அறைக்கு மாற்றினர். அவ்வறையில் வெங்கட்ராமன் மின்சார மோட்டார்களை ரிப்பேர் செய்துவந்தார். மின்சார மோட்டாரில் ஒயர் மாற்றி பிறகு, தார் பூசுவார். அறை பூராவும் தாரே நிரம்பி வழிந்தது. வெங்கட்ராமன் ரெயில்வே பணி இழந்த பிறகு சிறிய சிறிய மின்சார வேலைகளை செய்துகொண்டிருந்தார். அந்த சிறிய அறைக்குள் காற்றோட்டமே இல்லை. தார் நெடி மூக்கை துளைத்துக் கொண்டிருந்தது. ஒண்ணுக்கு இருப்பதற்கு மட்டும் உள்ளே ஒரு பக்கெட் வைத்தனர், ஒரு மின்சார விசிறியும் இருந்தது. அவ்வறை பாதுகாப்பான பகுதியிலிருந்தது. என்னை உள்ளே வைத்து வெளியில் பூட்டிக்கொண்டு போய்விட்டனர். அடுத்த நாள் இரவு வரை அங்கேயே கழித்தேன். தற்காலிகமாக இன்னோர் இடத்திற்கு என்னை மாற்றினர். தோழர்கள் ரகசியமாக என்னை சந்தித்து பேசிச் சென்றனர்.

இரண்டு, மூன்று வாரங்களுக்குப் பின்னர் பம்பாய் செல்ல நினைத் தேன்.

பம்பாயிலிருந்து நான் கிளம்பிய போது, தென் இந்தியப் பிரதிநிதி யாக ஒருவரை பம்பாய் குழுவிற்கு நியமித்தால் நல்லதென்று தோழர் மிராஜ்கர் கூறினார்.

தோழர் சுந்தரய்யாவுடன் பேசினேன். "தற்போது நான் பம்பாய் புறப்பட்டுக்கொண்டிருக்கிறேன். எனக்கேதாவது ஆபத்து நேர்ந்தால் நீதான் தென் இந்திய இயக்கத்திற்கு பிரதிநிதித்துவம் வகிக்க வேண் டும்.''என்று அவரிடம் சொன்னேன்.

கம்யூனிஸ்ட் கட்சியின் பம்பாய் குழுவில் யார் யார் எந்தெந்த மாநிலங்களுக்கு பிரதிநிதிகள் என்பது எனக்குத் தெரியாது. அதைத் தெரிந்து கொள்வதற்குள் நான் பம்பாய் விட்டுச் சென்று விட நேர்ந்தது.

வெங்கட்ராமனும், மற்ற வாலிபர்களும் என்னை வழியனுப்ப ரெயில் நிலையத்துக்கு வந்திருந்தார்கள். நான் ரெயிலில் ஏறியதும் சி.ஐ.டி.கள் என்னைப் பிடித்துக்கொண்டு விட்டார்கள். வண்டியிலிருந்து என் பையுடன் என்னை இறக்கிவிட்டார்கள்.

ஸ்டேஷனில் இருந்த காவல் நிலையத்திற்கு என்னை இழுத்துப் போனார்கள். அங்கேயிருந்த போலீஸ் அதிகாரி என் பையிலிருந்தவற்றை தாறுமாறாக கீழே வீசத் துவங்கினார். அப்படி அலட்சியமாக வீசி எறிந்ததில் என்னுடைய சில முக்கியமான காகிதங்களும் கிழிந்து போயின. நான் நிதானமாக தணிக்கை செய்யும்படி அவருக்கு சொன்னேன். ஆனால் அவர் தன் போக்கை மாற்றிக்கொள்ளவில்லை. அத்துடன் நான் சொல்லச்

சொல்ல அவர் என் மீதே எரிந்து விழ ஆரம்பித்தார். என்னுடன் கைது செய்யப் பட்டவர்கள் என்ன நடக்குமோ என கலவரத்துடன் நின்று கொண்டிருந்தார்கள். நான் போலீஸ் அதிகாரிக்கு பயப்படுகிறேன் என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாகக்கூடாதென விரும்பினேன்.

அதனால் இனி அவர் ஏதாவது கத்தினால், சுவறில் அலங்காரத்துக் காக செருகி வைக்கப்பட்டிருந்த ஒரு வாளை உருவிக்கொண்டு, அதால் அவ்வதிகாரியை ஒரு போடு போட வேண்டுமென்று முடிவு செய்துகொண் டேன். நான் அவரை நோக்கி, "இதோ பார் ராசா! உன் வீராப்பெல்லாம் என்னிடம் காட்ட வேண்டாம். இதுவரை பொறுமையாக இருந்தேன். இனி உன் ஆர்ப்பாட்டத்தைக் காட்டினால், என் கை வரிசையும் காட் டுவேன் ஜாக்கிரதை!"என்று கத்தினேன்.

அவர் என்ன நினைத்துக்கொண்டாரோ, அதற்குப் பிறகு அவர் குரல் அடங்கிப் போய்விட்டது.

"என்ன சங்கர், இப்போது என்ன நடந்து விட்டது?" என்று அன்பொழுக பேசினார்.

அன்றிரவு என்னையும், இதர தோழர்களையும் அங்கேயே வைத்தி ருந்தார்கள். மறு நாள் என்னை மீண்டும் சிறைக்கு அனுப்பி வைத்தார்கள், மற்றெரு சிறைப் பயணம் துவங்கியது.

என் விஷயத்தில் என்ன செய்ய வேண்டுமென்பது குறித்து மத்திய மாநில அரசுகளிடையே பேச்சுவார்தை நடைபெற்றதாகத் தெரிகிறது. ஒரு வாரத்திற்குப் பின்னர் என்னை போலீஸ் கமிஷனரிடம் கொண்டு போனார்கள். 1919 ம் ஆண்டு ரெகுலேஷன்படி தடுப்புக் காவல் உத்தரவை அவர் எனக்கு படித்துக் காட்டினார்.

"நான் ஒரு கேள்வி கேட்கலாமா?" என்றேன் கமிஷனரை.

"சென்னை மாகாணத்திலே ஏழு கோடி மக்கள் இருக்கிறார்கள். மற்ற மாகாணங்களை விட இங்குள்ளவர்களில் அதிகம் பேர் படித்தவர்கள். அவர்கள் புரட்சியைக் கொண்டுவராவிட்டால், என் ஒருவனால் மட்டுமே புரட்சியை கொண்டுவந்துவிட முடியுமா?"

"விஷம் கொஞ்சம் தானென்றாலும் எவ்வளவு பெரிய உடலையும் சாகடிக்குமல்லவா?" என்பது அவருடைய பதில்.

"பிரிட்டிஷ் அரசுக்கு நான் விஷமானதற்காக பெருமைப்படுகிறேன். நான் விதை விதைத்திருக்கிறேன். அவை வளர்ந்து மலர்களை மலர்விக் கும். அவற்றை உங்களால் அழிக்க முடியாது" என்று நம்பிக்கை வெளி யிட்டேன்.

அன்றிரவே என்னை கோவை சிறைக்கு அனுப்பிவிட்டார்கள்.

அது ஒரு பெரிய சிறை. அதற்குள் ஒரு துணியாலையும் இருந்தது. மாநில அரசின் ஜவுளித் தேவைகளை அந்த துணியாலை பூர்த்தி செய்தது. அங்கே என்னை வைத்திருந்த வார்டிலே அதற்கு முன் மத்திய பாராளு மன்ற சபாநாயகர் விட்டல்பாய் பட்டேலை வைத்திருந்தனர். அவரை சிகிச்சைக்காக ஐரோப்பாவுக்கு அனுப்பி வைத்தார்கள். அவ்வார்டிலேயே ராஜாஜிகூட வைக்கப்பட்டிருந்தாராம். அங்கே உயர்வகுப்பு தண்டனைக் கைதிகளையும், பாதுகாப்புக் கைதிகளையும் மட்டுமே வைத்திருந்தார்கள். நான் மாநிலக் கைதியானாலும் பாதுகாப்புக் கைதி. 'அவருடன் நெருங்கி இருப்பவர்கள் அவருடைய அனுதாபத்தைப் பெற்றுவிடுவார்கள். ஜாக்கி ரதை!'என்று என்னைக் குறித்து சிறை அதிகாரிகளுக்கு முன்னதாகவே செய்தி அனுப்பியிருக்கிறார்கள். நான் என்னுடைய கருத்துக்களை மற்ற வர்களால் அங்கீகரிக்கச் செய்யும் திறமை உள்ளவனென்றும் தெரிவித்தி

ருக்கிறார்கள். அதனால் யாரும் என்னை நெருங்க விடாமல் பார்த்துக் கொண்டார்கள்.r. வார்டரை தினந்தோறும் மாற்றிக்கொண்டிருந்தார்கள். என் வார்டில் இருக்கும் வார்டரையும் கண்காணித்து வந்தார்கள். கோபுரத்தின் மீது இருக்கும் காவல்காரருக்கு தனி எச்சரிக்கைகள் செய்தார்கள். வேலியின் மேலிருந்தே சாப்பாடு கொடுத்து வந்தார்கள்.

நான் 'செல்'லில் இல்லாதபோது எனது பொருட்களையெல்லாம் தணிக்கை செய்தார்கள் எனக்கு காகிதமும், பேனாவும் கொடுப்பதில்லை. காகிதம் தந்தால் வெளியில் உள்ளவர்களுக்கு கடிதம் எழுதுவேன் என்று அவர்கள் பயம்.

கோவை சிறை சூப்பிரண்டெண்ட் 'கிரீன் உட்' தூக்கிலிடுவதில் பெயர் பெற்றவர். கேரளத்தைச் சேர்ந்த 'மாப்ளா' புரட்சி வீரர்களை நாள் தோறும் தூக்கிலிட்டு வந்தார்கள். ஜெயிலரும், துணை ஜெயிலரும் இருவரும் ஆங்கிலோ இந்தியர்கள். என்னைப் போன்ற அரசியல் கைதிகள் மீது அவர்களுக்கு சொல்லொனா வெறுப்பு. அவர்கள் எங்களைப் பகைவர்களாகக் கருதினார்கள். எங்களுக்கு ஆத்திரமூட்டுவார்கள்.

எனக்கெதிரே இருந்த 'பாரக்'ஸில் தூக்குத் தண்டனை பெற்ற கைதிகள் இருந்தார்கள். அவர்களைப் பார்க்க அவர்களது மனைவி, மக்கள் வருவார்கள், அவர்களின் அழுகுரல்களால் காது செவிடு படும். நெஞ்சைசுக்கு நூறாக்கும்.அந்தவேதனைக்குரல்களை தினமும் கேட்க நேர்ந்தது. உள்ளத்தைப் பிழிந்தெடுக்கும் அந்த சோக நிகழ்ச்சிகளை நாளும் பார்க்க நேரிட்டது.

இவற்றையெல்லாம் என்னால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. எனக்கு சாப்பாடு சகிக்கவில்லை. தூக்கம் வரவில்லை.

அந்நாட்களில் எனக்கு கண் நோய் வந்தது. என்னை மாவட்ட தலைமை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்த கண் வைத்திய நிபுணர் ஒரு மருந்து போட்டார். சிறைக்குள் சென்ற பிறகு வேறு ஒரு மருந்து போடச் சொன்னார், ஆனால் சிறை டாக்டர் பழைய மருந்தே போட்டதால், என் நோய் இன்னும் அதிகரித்துவிட்டது. வாரத்திற்கு இரண்டு,மூன்று தூக்குத் தண்டனைகள நிறைவேற்றிக் கொண்டிருந்தனர். மறுநாள் காலை தூக்கிலிடப்படும் மரண தண்டனைக் கைதி இரவு பூராவும் அழுது புலம்பிக்கொண்டிருப்பான். இவையெல்லாம் என்னுள் மாறுதலை ஏற்படுத்தின.

நிராசையால் தோன்றிய மனத்தளர்ச்சியுடன் பாஷ்யத்துக்கு ஒரு கடிதம் எழுதினேன். என்னைப் போன்றவன் அப்படி கடிதம் எழுதக்கூடாதென்று கடிந்துகொண்டு அவர் பதில் எழுதினார். நான் துயரங்களிலும், துன்பங்களிலும் சிக்கிக் கொண்டிருப்பதாக எண்ணி அவர் என்னைக் காண்பதற்கு எப்படியோ அனுமதி பெற்றுக்கொண்டார்.

எங்கள் இருவரிடையேயும் சி.ஐ.டி. அதிகாரி இருந்தார். அதனால் நான் பாஷ்யத்துடன் மனந்திறந்து பேசும் மானசீக நிலையிலில்லை. தவிர, அவர் என்னைக் காண அன்று வருவது எனக்கு முன்னதாக தெரியாது. சிறைக்குள் எனக்களிக்கப்படும் துன்பங்களுக்கு எதிராக சிறை சூப்பிரெண்டென்டை அடித்து நொறுக்க வேண்டுமென்னும் எண்ணமும் என்னுள் தோன்றும். ஆனால் அதற்கு எந்த ஆயுதமும் கிடைக்கவில்லை. சூப்பிரெண்டென்ட் தணிக்கை செய்ய வரும்போதெல்லாம், அவர் கேட்கும் எந்த ஒரு கேள்விக்கும் பதிலே சொல்வதில்லை, அவ்வாறு அவரை அவமதித்து என் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வேன்.

என்னுடைய போக்கு சிறை அதிகாரிகளால் பொறுத்துக் கொள்ள

முடியாத நிலைக்கு வந்துவிட்டது. அத்துடன் பாதுகாப்புக் கைதிகளுக்கான வசதிகளையும், சவுகரியங்களையும் குறைத்து விடத் தொடங்கினர். இதனால் நான் மேலும் ஆத்திரமடைந்தேன். சிறை அதிகாரிகள் யாரும் என்னிடம் வருவதே இல்லை. சிறை டாக்டர் ஒருவர் மட்டும் என் 'செல்'லுக்குள் வந்து, என் கட்டிலில் அமர்ந்து, "என்ன போல்ஷ்விக்! நமது தோழர்களெல்லாம் நலந்தானா?" என்று ஆரம்பித்து தமாஷாகப் பேசி, என்னை மாற்ற முயற்சிப்பார். துன்பங்கள்தான் என் முரட்டுத்தனமான நடத்தைக்குக் காரணமென்று அவர் கருதிக் கொண்டிருந்தார்.

நித்தியானந்தம் எனும் வாலிபனும், மற்றொரு சீக்கிய இளைஞனும் கூட அங்கே பாதுகாப்புக் கைதிகளாக இருந்தனர். அவர்களிருவரும் ஊட்டியில் ஒரு வங்கியைக் கொள்ளையடித்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள். சீக்கிய இளைஞன் பிறகு அந்தமானுக்கு அனுப்பப்பட்டான். ஆனால், நித்தியானந்தம் பணக்காரப் பிள்ளையாக இருந்ததால் அந்தமானுக்கு அனுப்பப்படவில்லை. நித்தியானந்தம் மட்டுமே எனக்கு தொலைவிலிருந்தாவது தென்படும் அரசியல் கைதி! 'பங்கூரா ஆச்சார்யா' என்ற தேசியப் புரட்சியாளர் ஒருவரும் இருந்தார். ஆனால் அவருடைய 'செல்'லுக்கும், என்னுடைய 'செல்'லுக்கும் ரொம்ப தூரம் இருந்தது. நான் அவரைப் பார்க்கக்கூடாதென்று தடையும் விதித்திருந்தனர். ஆனாலும் அவர்கள் சமையல்காரனின் மூலம் என்னுடன் தொடர்பு வைத்துக் கொண்டனர்.

அவர்களுக்கு எழுதுவதற்கு காகிதம் கொடுக்கப்படுவதில்லை. அதனால் அவர்கள் எனக்கொரு ரகசிய எழுத்து முறையும், ஒரு பென்சிலும் கொடுத்தனுப்பினர். நூலகப் புத்தகங்களின் ஓரங்களைக் கிழித்து அவர்கள் எனக்கு ஏதாவது செய்தி எழுதி அனுப்புவார்கள். அவற்றை சமையல் கைதி என் 'செல்' லுக்குள் வீசியெறிவான். அவர்கள் சிறையிலிருந்து தப்பிச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அதற்காக சாதாரண உடைகளை என்னை அனுப்பச் சொன்னார்கள். அவர்களின் 'லாக்கப்' அறைக்கு பக்கத்திலிருந்த கழிப்பறையின் கம்பிகளைத் தளர்த்திவிட்டிருந்தனர். ஆனால் வார்டர் முன்னதாகவே கண்டுகொண்டதால் அவர்களின் முயற்சி வெற்றி பெறவில்லை.

சிறை டாக்டரின் சிபாரிசின் பேரிலோ அல்லது வெளியிலிருந்த தோழர்களின் முயற்சியினாலோ என்னை ராஜமகேந்திரவரம் மத்திய சிறைக்கு மாற்றிவிட்டனர். அங்கே பிரொதுல் பட்டாச்சார்யா , தாஸ் என்னும் வங்க பாதுகாப்புக் கைதிகள் இருவர் இருந்தனர்.

முதலில் என்னை ஒருவனை மட்டுமே 'செல்'லில் வைத்தனர். மற்ற கைதிகளைப் போலவே என்னையும் சீக்கிரமாகவே 'லாக்கப்'பில் அடைத்தனர். பிரொதுல் என்னுடன் நெருங்கிப் பழகினார். அவர் 'காங்கிரஸ் சோஷலிஸ்டுகள் என்னும் சில வாலிபர்களுடன் தொடர்பு வைத்திருந்தார். தாஸ் சத்துணவு பற்றிய புத்தகங்களை நிறைய படித்துக் கொண்டிருந்தார்.

ஆத்திரங்கொள்ளும் பழைய மனப்பான்மையை மறக்க கற்பனை உலகத்தில் சஞ்சரிப்பதை பழக்கப்படுத்திக் கொண்டேன். அதனால் பிரொதுல் என்னுடன் பல முறை பேச முயற்சித்தும் முடியவில்லை. அவர் சொன்னது எனக்கு நினைவே இருப்பதில்லை. சீட்டாட முயற்சிப்போம்; ஆனால் அதிலும் என்னால் மனசை ஈடுபடுத்த முடியவில்லை. இதனால் என்னைக் கண்டால் தாஸுக்குப் பிடிக்காது. ஆனால் பிரொதுல் என் நிலையைப் புரிந்துகொண்டார். அவர்களிருவரின் நட்பால் என் மன

நிலை ஓரளவுக்கு சரியாயிற்று. கொஞ்ச காலத்திற்குப் பிறகு அவர்களை வேலூர் சிறைக்கு மாற்றிவிட்டனர். மீண்டும் என்னை தனிமை வாட்டத் தொடங்கியது. அங்கே காங்கிரஸ் சோஷலிஸ்டுகள் இருந்து வந்தனர். அவர்களில் ஒருவர் பெயர் ராமய்யா. அவர்கள் சோவியத் அரசியல் பற்றி கேட்டு அடிக்கடி சீட்டுகள் எழுதி அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

வெளியிலிருந்த நமது தோழர்கள் என் நிலைமைக் குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர் சத்திய மூர்த்திக்கு சொன்னதாகத் தெரிகிறது. அவர் மத்திய சட்ட மன்றத்தில் என்னைப் பற்றி ஒரு கேள்வி கேட்டார். அப்போது சென்னை சட்டசபையில் சி.ஆர்.ரெட்டி எதிர்க்கட்சித் தலைவர். அவரும் என் உடல் நலம் பற்றி அங்கே கேள்வி எழுப்பினார். பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலும் கட்யூனிஸ்ட் எம்.பி. தோழர் கால்சாரும், ரெவரெண்ட் ஸோலிஸன்னும் என் சம்பந்தமாக கேள்விகள் கேட்டார்கள். அக்காலத்தில் இந்தியாவிலிருந்து தபால் விமானத்தில் போவது கிடையாது. நான் சேலம் சிறையிலிருந்தபோது இந்தியாவை விட்டுச் சென்ற தோழர் பிராட்லி மூலம் என் விஷயம் இங்கிலாந்துக்கு எட்டியிருக்கலாம். அவர் இங்கிருந்து சென்ற பிறகு பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியின் காலனி நாட்டுப் பகுதிக்கு பொறுப்பாளராக இருந்தார். செய்திப் பத்திரிகைகளின் வழியாக அவருக்கு என் விஷயம் தெரியவந்திருக்கக்கூடும்.

மருத்துவப் பரிசோதனைக்காக என்னை சென்னைக்கு கொண்டு சென்றார்கள். சென்னை பொது மருத்துவமனையின் தலைமை டாக்டர் மேஜர் மேக்ராபிட்டைச் சேர்த்து ஒரு மருத்துவப் பரிசோதனைக் கமிட்டியை அமைத்தார்கள். அது தன் வேலையை ஆரம்பிக்கு முன்னரே எனக்குக் கடுமையான 'புளூ' காய்ச்சல் வந்தது. 'எக்ஸ்ரே' போன்றவற்றுக்காக என்னை மருத்துவ மனைக்குக் கொண்டு போனார்கள்.

"உன் உடல் நலம் சீரடைய வேண்டுமானால் நீ கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்" என்றார் மேஜர் ராபிட். நான் சிறையிலிருந்து விடுதலையான பிறகுகூட எனக்கெப்போதும் திருமணச் சிந்தனை ஏற்பட்டதில்லை. மருத்துவ மனையிலிருந்த போது தோழர் வடிவேலு தன் குழந்தையை கொண்டு வந்து காட்டினார்.

மீண்டும் ராஜமகேந்திரவரம் திரும்பி வந்தேன்.

வங்கக் கைதிகள் சென்று விட்டிருந்தார்கள் மீண்டும் தனிமை வாசம்! ஆனால் சிறை அரசியலுடன் தொடர்பேற்பட்டது. நாங்கள் மாம்பழங்கள் அனுப்பி வைத்த ராமசாமி அய்யர் ராஜமகேந்திர வரத்துக்கு மாற்றப்பட்டு முதலில் துன்பப்பட்டாலும், பின்னர் சமாளித்துக் கொண்டுவிட்டார். அவருடன் நட்பை வளர்த்துக் கொள்ள விரும்பினேன். ஆனால் அவர் முன் வரவில்லை. அப்போதைக்கு அரசாங்கம் எனக்கு மாதாமாதம் கொஞ்சம் பணம் தந்துகொண்டிருந்தது. அதில் கொஞ்சம் அவருக்கு தர விரும்பினேன். அவர் ஒரே ஒரு தடவை என் வார்டுக்குள் வந்தார். சில பழங்களும், சோப்பும் தந்து அனுப்பினேன்.

வெளியிலிருந்த தோழர்களிடமிருந்து எந்த விதமான கடிதமோ செய்தியோ இல்லை.

சுஹாசினிக்கு ஒரு கடிதம் எழுதினேன். என்னைப் போன்ற சூழ்நிலையில் இருப்பவர்கள் நிலைமையை அனுசரித்து நடந்துகொள்வார்கள் என்றும், ஆனால் நான் மட்டும் சுய மரியாதையுடனும், அகம்பாவத்துடனும் இருப்பதாகவும் அவர் பதில் எழுதினார்.

சிறைச்சாலை மிக மோசமான காரியங்களுக்கும் சட்டபூர்வமான திரை போட்டு விடுகிறதென்பது என் கருத்து. அந்த அக்கிரமங்கள்

வெளியே நடைபெற்றால் நாம் எதிர்க்கிறோம்; போராடுகிறோம். ஆனால் சிறைக்குள் நமக்கு அந்த சுதந்திரமில்லை. பரம அயோக்கியத்தனங்கள் கண் முன் நடத்து கொண்டிருக்கும் போது கைகட்டி ஏன் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்பது என்னுடைய எண்ணம். அதனால் தான் சிறை அதிகாரிகளின் அரக்கத்தனங்களுக்கும், கொடுமைகளுக்கும் என்னால் தலை வணங்க முடியவில்லை.

நான் படுத்த படுக்கையாக இருந்தேன். சிறை சூப்பிரெண்டென்ட் அவசர அவசரமாக வந்து, "உனக்கோர் நல்ல செய்தி! நான் சொன்னபடி இரண்டு வரி எழுதிக்கொடுத்தால் உன்னை விடுதலை செய்து விடுவார்கள்" என்றார்.

அவருடைய கையில் அரசுக் கடிதம் ஒன்றிருந்தது. என் நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டு, சென்னை மாகாணத்தை விட்டுப் போக சம்மதித்தால் என்னை விடுதலை செய்து விடுவதாக அரசு அதிகாரிகள் தகவல் அனுப்பியிருந்தார்கள். சிறை சூப்பிரெண்டென்டின் பெயர் கிசின்ஸன். நான் எழுத வேண்டியதை அவரே எழுதுவதாகக் கூறினார். ஆனால் நான், "கிசின்ஸன்! நீ இங்கிலீஷ்காரன், நல்ல ஆங்கிலம் எழுதுவாய்! ஆனால் என் விஷயம் நானே எழுதினால் நன்றாக இருக்கும்" என்றேன்.

கிசின்சன் தான் சொல்வதை எழுதுமாறு வற்புறுத்தினார். "என் வாழ்க்கையின் லட்சியப்பயணம் ஒன்றே! அதில் எந்த வித மாற்றமும் இருக்காது" என்று பதிலளித்தேன்.

"வாழ்க்கை வாழ்வதற்கே! ஆனால் அது சிறைக்குள் அல்ல; வெளியில்!" என்றார் அவர்.

நான் எழுதவாரம்பித்தேன்:

"ஆயிரக்கணக்கான மைல் தூரத்திற்கப்பாலிருந்து வந்து நீங்கள் எங்களை அடக்கியாண்டு கொண்டிருக்கிறீர்கள். இது என்னுடைய நாடு! இந்தியாவில் எந்த மாநிலமானாலும், பஞ்சாப், பம்பாய், ஆகியவைப் போலவே சென்னையும் எனக்கு! நான் வாழ்வதற்காக என் தாய்நாட்டின் ஒரு அங்குல பரப்பளவில் கூட நான் என் உரிமையை விட்டுக் கொடுக்கமாட்டேன். என் நடவடிக்கைகளைப் பற்றி கேட்கிறீர்களா? அவை என் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளது. நான் உயிரோடிருக்கும் வரை அவையும் உயிர்த்துடிப்புடனேயே இயங்கிக் கொண்டிருக்கும். என்னை ஆயுள் பூராவும் சிறையிலேயே வைத்தாலும், எவ்வித நிபந்தனைகளையும் ஏற்றுக்கோள்ளமாட்டேன்."

நான் நிபந்தனைகளை ஒப்புக்கொள்ள மறுத்த விஷயத்தை சென்னை அரசு மத்திய அரசுக்கு தெரிவித்தாற் போல் இருக்கிறது. சென்னை அரசு அதிகாரிகள் என் விஷயத்தில் மிகவும் வெறுத்துப்போய் விட்டார்கள். எந்த சிறையிலே வைத்தாலும் நான் அவர்களுக்கு தொல்லை கொடுத்து வந்தேன்.

இரு அரசாங்கங்களும் கலந்து பேசி என்னை சென்னை மாகாணத்திலிருந்து வெளியேற்றிவிட நினைத்தன.

எங்கே என்றுகூட தெரிவிக்காமல் என்னை சிறையிலிருந்து கொண்டு போனார்கள்.

என் விருப்பத்தின் படி அல்லாமல், நிர்பந்தத்தின் காரணமாக தென் இந்தியாவின் பிரிட்டிஷ் சிறைகளில் வேதனை நிறைந்த என் துயரக் கதைக்கு முற்றுப் பள்ளி வைத்தேன்.

சென்னை
புக்ஸ்